**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 1-4-2013 Issued : 1-4-2013

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, நவம்பர் 1, 2012—தொகுதி 36—எண் 1**

**Thursday, the 1st November 2012—Volume 36—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

# 1–11–2012

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | ஆளுநரும் அமைச்சரவையும் | vii-xii |
| | Governor and Council of Ministers | xiii-xvii |
| | பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xix-xxii |
| | பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxiii-xxxiii |
| **1.** | **வினாக்கள்–விடைகள்—** | |
| | (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-43 |
| | (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 முதல் 4 வரை) | 44-334 |
| **2.** | **அறிவிப்புகள்—** | |
| | (அ) கைப்பேசிகளை புறாக் கூண்டு அறையில் வைத்துவிட்டு உறுப்பினர்கள் அவைக்குள் வருதல் | 334 |
| | (ஆ) முதலமைச்சரைச் சந்திக்க அனுமதி கோரி தே.மு.தி.க. உறுப்பினர்கள் நால்வர் பத்திரிகையாளர்களுடன் முதல்வர் அலுவலகம் சென்ற பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல் | 341-344 |
| | (இ) முதலமைச்சரைச் சந்திக்க அனுமதி பெற்றுத் தரக் கோரி தே.மு.தி.க உறுப்பினர்கள் பேரவைத் தலைவரைச் சந்தித்தது—முனைவர் செ.கு. தமிழரசன் அளித்த கடிதத்தை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல் | 344-346 |

பக்கங்கள்


**2. அறிவிப்புகள்**—தொடர்ச்சி

(ஈ) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்த தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல் 368

**3. தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்** 334-336

**4. தகவல் கோரல்**—

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 336-338, 346

(ஆ) தென் மாவட்டங்களில் அமைதியை நிலைநாட்டுதல் 338-341

*திரு. அ. சவுந்தரராசன் 338

திரு. எம். ஆறுமுகம் 339

செல்வி கே. பாலபாரதி 339

*திரு. பி.வி. கதிரவன் 340

திரு. சு. குணசேகரன் 340

டாக்டர் க. கிருஷ்ணசாமி 340-341

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 365-368

**5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்**—

(அ) சட்டமன்றப் பேரவையின் வைர விழாவில் பங்கேற்க மேதகு குடியரசுத் தலைவர், ஆளுநர் இசைவு தெரிவித்துள்ளது குறித்த முதலமைச்சரின் அறிக்கை 346-347




பக்கங்கள்


**5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்**—தொடர்ச்சி

(ஆ) 25 ஆண்டுகள் அப்பழுக்கற்ற பணி முடித்த அரசு ஊழியர்களுக்கு ரொக்கப் பரிசு — சான்றிதழ் வழங்குதல் மற்றும் பண்டிகை முன்பணத்தை உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 348-349

(இ) தொழில் முதலீட்டை அதிகரிக்க புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட இருப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை 349-353

**6. சட்டமன்றப் பேரவை வைர விழா, அரசு ஊழியர்களுக்கு ரொக்கப் பரிசு–சான்றிதழ், பண்டிகை முன் பணம் உயர்த்துதல், புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடுதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி**— 353-364

முனைவர் செ.கு. தமிழரசன் 353-355

திரு. உ. தனியரசு 355-357

திரு. பி.வி. கதிரவன் 357-358

திரு. ஆ. நாராயணன் 358-359

திருமதி எஸ். விஜயதரணி 359-360

திரு. சு. குணசேகரன் 360-361

மாண்புமிகு திரு. பி. தங்கமணி 361-363

**7. அறிக்கை அளித்தல்**—

சட்ட விதிகள் ஆய்வுக் குழு 368-369

**8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—

(அ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 369-370

பக்கங்கள்


**8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** தொடர்ச்சி

(ஆ) சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2012 ... 370

(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 ... 371

(ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 ... 371-372

(உ) தமிழ்நாடு நகர்–ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 ... 372-373

(ஊ) அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 ... 373-374

(எ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 ... 374-375

(ஏ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 ... 375

(ஐ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 ... 375-376

(ஒ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 ... 376-377

(ஓ) தமிழ்நாடு மீன் வள பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 ... 377-378

(ஔ) தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 ... 378-379

(அஅ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 ... 379




பக்கங்கள்


**9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—**தொடர்ச்சி ... 380-491

*டாக்டர் சி. விஜயபாஸ்கர் ... 380-387

முனைவர் செ.கு. தமிழரசன் ... 387-395, 397, 400-401

*மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி ... 395-397, 399-400,431, 442-443

திரு. சு. குணசேகரன் ... 397-398, 468-469, 471-472

செல்வி கே. பாலபாரதி ... 398, 426

*திரு. பி.வி. கதிரவன் ... 401-403

டாக்டர் க. கிருஷ்ணசாமி ... 404-417,466

மாண்புமிகு திரு. பி. தங்கமணி ... 405,409-411, 467-468, 470-471, 472-473, 480-482

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி ... 405-407,409, 412,414-415, 448-449,487

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் ... 407-408, 433-434, 482, 487

*மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா ... 413

திரு. அ. அஸ்லம் பாஷா ... 417-425

*மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் ... 417

| | பக்கங்கள் |
|---|---|
| **9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்* | 419-420, 424-425, 426-427, 428-429, 440-441, 444-445, 460-461, 490-491 |
| **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி* | 422 |
| **திரு. எல். வெங்கடேசன்* | 425,429-435 |
| **திரு. க. பாலகிருஷ்ணன்* | 427-428, 447,469-470 |
| *திரு. ம. கலை அரசு* | 434-436, 438-439, 442-443 |
| *மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்* | 436-439, 464-465,466 |
| *திருமதி எஸ். விஜயதரணி* | 444, 446-457, 486 |
| *மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்* | 446-447 |
| *திரு. எம். ஆறுமுகம்* | 451,457-459, 461-467, 473-474,480 |
| **மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்* | 462, 484 |
| **மாண்புமிகு திரு. சி.த. செல்லபாண்டியன்* | 462-463, 477-479 |
| **திரு. அ. சவுந்தரராசன்* | 474-479,481, 483-491 |
| *மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி* | 474-476, 488-489 |
| **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு* | 482 |
| *திரு. ஜே.ஜி. பிரின்ஸ்* | 485 |
| **10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 491-492 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் – முனைவர் கே. ரோசய்யா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| **1. முதலமைச்சர்** | .. | **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**<br>பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை |
| **2. நிதி அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**<br>நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள் |
| **3.மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**<br>மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு |
| **4. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:**<br>நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல் |
| **5. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**<br>வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் |

**6. ஊரகத் தொழில் துறை.. அமைச்சர்** — **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**7. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

**9. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**10. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்



**11. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:**

வனம்

**12. நெடுஞ்சாலை மற்றும்.. சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** — **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

**13. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**14. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**15. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

**16. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

**17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:**

*கால்நடை பராமரிப்பு*

**18. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*

**19. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:**

*கைத்தறி மற்றும் துணிநூல்*

**20. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:**

*கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்*

**21. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*

**22. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:**

*வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்*

**23. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:**

*ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*



**24. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:**

*போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்*

**25. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:**

*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*

**26. பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:**

*பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல், விளையாட்டுகள், இளைஞர் நலன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு*

**27. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:**

*தகவல் தொழில்நுட்பம்*

**28. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்*

**29. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

**30. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**31. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்

**32. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**33. வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – Dr. K. ROSAIAH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home

**2. Minister for Finance** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Finance, Planning, Legislative Assembly, Elections and Passports

**3. Minister for Electricity & Prohibition and Excise** .. **The Hon. Thiru Natham R. Viswanathan:**

Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses

**4. Minister for Municipal Administration & Rural Development** .. **The Hon. Thiru K.P. Munusamy:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

| | | |
|---|---|---|
| **6. Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru P. Mohan:**<br>Rural Industries including Cottage Industries and Small Industries |
| **7. Minister for Social Welfare and Nutritious Noon Meal Programme** | .. | **The Hon. Tmt. B. Valarmathi:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms and Nutritious Noon Meal Programme |
| **8. Minister for Higher Education** | .. | **The Hon. Thiru P. Palaniappan:**<br>Higher Education including Technical Education, Electronics, Science and Technology |
| **9. Minister for Agriculture** | .. | **The Hon. Thiru S. Damodaran:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development |
| **10. Minister for Co-operation** | .. | **The Hon. Thiru Sellur K. Raju:**<br>Co-operation, Statistics and Ex-Servicemen Welfare |
| **11. Minister for Forests** | .. | **The Hon. Thiru K.T. Patchaimal:**<br>Forests |

-



| | | |
|---|---|---|
| **12. Minister for Highways & Minor Ports** | .. | **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**<br>Highways & Minor Ports |
| **13. Minister for Food** | .. | **The Hon. Thiru R. Kamaraj:**<br>Food, Civil Supplies, Consumer Protection and Price Control |
| **14. Minister for Milk and Dairy Development** | .. | **The Hon. Thiru V. Moorthy:**<br>Milk and Dairy Development |
| **15. Minister for Environment** | .. | **The Hon. Thiru M.C. Sampath:**<br>Environment and Pollution Control |
| **16. Minister for Public Works** | .. | **The Hon. Thiru K.V. Ramalingam:**<br>Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works |
| **17. Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru T.K.M. Chinnayya:**<br>Animal Husbandry |
| **18. Minister for Industries** | .. | **The Hon. Thiru P. Thangamani:**<br>Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives |
| **19. Minister for Handlooms & Textiles** | .. | **The Hon. Dr. S. Sundararaj:**<br>Handlooms & Textiles |
| **20. Minister for Khadi and Village Industries** | .. | **The Hon. Thiru P. Chendur Pandian:**<br>Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan |

**21. Minister for Tourism ..** **The Hon. Tmt. S. Gokula Indira:**

Tourism, Tourism Development Corporation

**22. Minister for Commercial Taxes & Registration ..** **The Hon. Thiru B.V. Ramanaa:**

Commercial Taxes & Registration and Stamp Act

**23. Minister for Adi Dravidar & Tribal Welfare ..** **The Hon. Thiru N. Subramanian:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

**24. Minister for Transport ..** **The Hon. Thiru V. Senthil Balaji:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act

**25. Minister for Fisheries ..** **The Hon. Thiru K.A. Jayapal:**

Fisheries and Fisheries Development Corporation

**26. Minister for School Education and Sports & Youth Welfare, Law, Courts and Prisons ..** **The Hon. Thiru N.R. Sivapathi:**

School Education and Archaeology, Sports and Youth Welfare, Tamil Official Language and Tamil Culture, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption

**27. Minister for Information Technology ..** **The Hon. Thiru N. Subramanian:**

Information Technology



**28. Minister for Information and Special Programmes Implementation ..** **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:**

Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto

**29. Minister for Labour ..** **The Hon. Thiru S.T. Chellapandian:**

Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment

**30. Minister for Health ..** **The Hon. Dr. V.S. Vijay:**

Health, Medical Education and Family Welfare

**31. Minister for Backward Classes and Minorities Welfare ..** **The Hon. Thiru A. Mohammedjan:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf

**32. Minister for Hindu Religious and Charitable Endowments ..** **The Hon. Thiru M.S.M. Anandan:**

Hindu Religious and Charitable Endowments

**33. Minister for Revenue ..** **The Hon. Thiru N.D. Venkatachalam:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. ப. தனபால்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்*

## மாற்றுத் தலைவர்கள்#

*திரு. அ. பாப்பா சுந்தரம்*

*திரு. தங்க. தமிழ்ச்செல்வன்*

*திரு. கே.பி. அன்பழகன்*

*திரு. ஆர். சின்னசாமி*

*திரு. பி.ஜி. நாராயணன்*

*திரு. சு. குணசேகரன்*

## செயலாளர்

*திரு. அ.மு.பி. ஜமாலுதீன்*

---

*# 29-10-2012 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. கூடுதல் செயலாளர்

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர்

திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர்

திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். .. குழு அலுவலர்

திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். .. குழு அலுவலர்



திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திருமதி கோ.மு. வனஜா, எம்.ஏ .. தலைமை நிருபர்

திரு. வே. ரவிசங்கர், பி.எஸ்சி., எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. கி. சீனிவாசன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.ஜி.எல்., சி.எல்.ஐ.எஸ். .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர்

திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. ப. மனோகரன், எம்.ஏ., பி.எட்., .. சார்புச் செயலாளர்

திருமதி க. செந்தாமரை, பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. இரா. விஜயகுமார், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. .. தலைமை நிருபர்

திரு. கு. தண்டபாணி, பி.காம். .. செயலாளரின் தனிச் செயலர்

திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

| | | |
|---|---|---|
| திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. சுரேஷ்குமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. பா. சுப்பிரமணியன், பி.காம்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.பில்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.பில்., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. | .. | கலசப்பாக்கம் |
| 2. | அசோக், திரு. எம்.கே. | .. | வேளச்சேரி |
| 3. | அண்ணாதுரை, திரு. இரா. | .. | மதுரை தெற்கு |
| 4. | அப்துல் ரஹீம், திரு. எஸ். | .. | ஆவடி |
| 5. | அரங்கநாதன், திரு. ஆ.க. | .. | கீழ்பெண்ணாத்தூர் |
| 6. | அருண் சுப்பிரமணியன், திரு. மு. | .. | திருத்தணி |
| 7. | அருண் பாண்டியன், திரு. செ. | .. | பேராவூரணி |
| 8. | அருள்செல்வன், திரு. ஆர். | .. | மயிலாடுதுறை |
| 9. | அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. | .. | சேலம் வடக்கு |
| 10. | அழகுவேலு, திருமதி க. | .. | கள்ளக்குறிச்சி (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. க. | .. | கும்பகோணம் |
| 13. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 14. | அன்பழகன், திரு. ஜெ. | .. | சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி |
| 15. | அஸ்லம் பாஷா, திரு. அ. | .. | ஆம்பூர் |
| 16. | ஆறுக்குட்டி, திரு. வி.சி. | .. | கவுண்டம்பாளையம் |
| 17. | ஆறுமுகம், திரு. எம். | .. | வால்பாறை (செ.வ.) |
| 18. | ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.. | .. | திருப்பூர் வடக்கு |
| 19. | இந்திராகாந்தி, திருமதி த. | .. | துறையூர் (செ.வ.) |

20. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. ச. .. ஆலந்தூர்
22. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
23. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு
24. இராஜி, திரு. வி.எஸ். .. செய்யூர் (செ.வ.)
25. இராஜேந்திரன், திரு. இரா. .. குறிஞ்சிப்பாடி
26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
27. உதயகுமார், திரு. ஆர்.பி. .. சாத்தூர்
28. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. .. எடப்பாடி
30. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி
31. கனிதா சம்பத், திருமதி எஸ். .. மதுராந்தகம் (செ.வ.)
32. கணேசன், திரு. பா. .. உத்திரமேரூர்
33. கணேஷ்குமார், திரு. அ. .. செஞ்சி
34. கதிரவன், திரு. பி.வி. .. உசிலம்பட்டி
35. கந்தன், திரு. கே.பி. .. சோழிங்கநல்லூர்
36. கருணாநிதி, திரு. மு. .. திருவாரூர்
37. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. .. அவினாசி (செ.வ.)
38. கருப்பையா, திரு. பழ. .. துறைமுகம்
39. கருப்பையா, திரு. மு.வீ. .. சோழவந்தான் (செ.வ.)
40. கலை அரசு, திரு. ம. .. அணைக்கட்டு
41. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
42. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்



43. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்
44. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
45. கார்த்திக் தொண்டைமான், திரு... புதுக்கோட்டை
46. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி
47. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
48. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.எ. .. பர்கூர்
49. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி
50. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்
51. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)
52. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
53. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
54. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்
55. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை
56. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்
57. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்
58. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்
59. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
60. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
61. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)
62. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
63. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்
64. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்
65. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு

66. சந்திரசேகர், திரு. ஆர். .. மணப்பாறை
67. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்
68. சம்பத்குமார், திரு. கோவி. .. வாணியம்பாடி
69. சம்பத்குமார், திரு. ப. .. திருச்செங்கோடு
70. சரத்குமார், திரு. ரா. .. தென்காசி
71. சவுந்தரராசன், திரு. அ. .. பெரம்பூர்
72. சாந்தி, திருமதி ஆர். .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
73. சாமி, திரு. ஆர். .. மேலூர்
74. சிவக்கொழுந்து, திரு. ப. .. பண்ருட்டி
75. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
76. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். .. நெய்வேலி
77. சிவபதி, திரு. என்.ஆர். .. முசிறி
78. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்
79. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
80. சின்னையா, திரு. டி.கே.எம். .. தாம்பரம்
81. சீனிவாசன், திரு. ஆர். .. ஆற்காடு
82. சுந்தரம், திரு. பி.எல். .. பவானிசாகர் (செ.வ.)
83. சுந்தரராஜ், டாக்டர் ச. .. பரமக்குடி (செ.வ.)
84. சுந்தர்ராஜன், திரு. ஆர். .. மதுரை மத்தி
85. சுபா, திருமதி ர. .. கெங்கவல்லி (செ.வ.)
86. சுப்பிரமணியன், திரு. ந. .. செய்யாறு
87. சுப்பையா, திரு. இ. .. அம்பாசமுத்திரம்
88. சுப்ரமணியன், திரு. ந. .. கந்தர்வகோட்டை (செ.வ.)



89. சுரேஷ்குமார், திரு. டி. .. செங்கம் (செ.வ.)
90. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி
91. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
92. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
93. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்
94. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்
95. செந்தூர் பாண்டியன், திரு. பூ. .. கடையநல்லூர்
96. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி
97. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு
98. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
99. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு
100. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி
101. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
102. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி
103. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்
104. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி
105. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
106. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
107. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
108. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
109. தங்கவேலன், திரு. சுப. .. திருவாடானை
110. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு
111. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு

112. தமிழரசன், முனைவர் செ.கு. .. கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.)
113. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)
114. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)
115. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி
116. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)
117. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்
118. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்
119. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
120. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)
121. தினகரன், திரு. க. .. சூலூர்
122. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
123. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு
124. துரைமுருகன், திரு. .. காட்பாடி
125. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
126. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்
127. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்
128. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
129. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
130. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)
131. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்
132. நாகைமாலி, திரு. வீ.பி. .. கீழ்வேளூர் (செ.வ.)
133. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்
134. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி



135. நாராயணன், திரு. பி.ஜி. .. பவானி
136. நீலகண்டன், திரு. வ. .. திரு.வி.க. நகர் (செ.வ.)
137. பச்சைமால், திரு. கே.டி. .. கன்னியாகுமரி
138. பரஞ்ஜோதி, திரு. மு. .. திருச்சிராப்பள்ளி மேற்கு
139. பரமசிவம், திரு. கே.பி. .. பல்லடம்
140. பவுன்ராஜ், திரு. சு. .. பூம்புகார்
141. பழனிசாமி, திரு. கே.சி. .. அரவக்குறிச்சி
142. பழனிச்சாமி, திரு. ச. .. வேடசந்தூர்
143. பழனியப்பன், திரு. பி. .. பாப்பிரெட்டிப்பட்டி
144. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
145. பாண்டியராஜன், திரு. க. .. விருதுநகர்
146. பாபு முருகவேல், திரு. ர.ம. .. ஆரணி
147. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
148. பார்த்தசாரதி, திரு. ப. .. விருகம்பாக்கம்
149. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். .. மேட்டூர்
150. பாலகிருஷ்ணன், திரு. க. .. சிதம்பரம்
151. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
152. பாஸ்கர், திரு. அ. .. தருமபுரி
153. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்
154. பிரபாகர், திரு. ஜே.சி.டி. .. வில்லிவாக்கம்
155. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
156. பீம்ராவ், திரு. க. .. மதுரவாயல்
157. புத்திசந்திரன், திரு. .. உதகமண்டலம்

158. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்

159. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்

160. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

162. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

163. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ஆ.வா.)

164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை

165. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)

166. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

167. போஸ், திரு. ஏ.கே. .. மதுரை வடக்கு

168. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)

169. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்

170. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு

171. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

172. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்

173. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்

174. மனோரஞ்சிதம், திருமதி .. ஊத்தங்கரை (செ.வ.)

175. மாதேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)

176. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்

177. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி

178. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்



179. முத்துசெல்வி, திருமதி ச. .. சங்கரன்கோவில் (செ.வ.)

180. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

181. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்

182. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

183. முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு

184. முனுசாமி, திரு. கே.பி. .. கிருஷ்ணகிரி

185. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை

186. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்

187. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்

188. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

189. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்

190. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்

191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்

192. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்

193. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

194. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)

195. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்

196. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி

197. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி

198. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்

199. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்

200. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

201. ராஜா, திரு. பொன். .. பொன்னேரி (செ.வ.)

202. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

203. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

204. ரெங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

205. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு

206. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (செ.வ.)

207. லிங்கமுத்து, திரு. கு. .. குடியாத்தம் (செ.வ.)

208. வளர்மதி, திருமதி பா. .. ஆயிரம் விளக்கு

209. விஜயகாந்த், திரு. .. ரிஷிவந்தியம்

210. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

211. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

212. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. .. சங்கரி

213. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்

214. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

215. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

216. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

217. வெங்கடேசன், திரு. எல். .. திருக்கோவிலூர்

218. வெற்றிவேல், திரு. பு. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

219. வேணுகோபாலு, திரு. கேஎஸ்.என். .. பழனி

220. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்

221. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்



223. வைகைச்செல்வன், முனைவர் .. அருப்புக்கோட்டை

224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

225. வைரமுத்து, திரு. பி.கே. .. திருமயம்

226. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. இராமநாதபுரம்

227. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்

228. ஜானகிராமன், திரு. ஐ. .. வானூர் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

230. ஜெயசுதா, திருமதி எல். .. போளூர்

231. ஜெயபால், திரு. கே.ஏ. .. நாகப்பட்டினம்

232. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஸ்ரீரங்கம்

233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

234. ஹரிதாஸ், டாக்டர் த. .. திண்டிவனம் (செ.வ.)

235. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஏ. நவநீதகிருஷ்ணன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043 - ஐப்பசி 16

## 2012 நவம்பர் 1, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

குடிமக்களை அன்புடன் நன்கு பாதுகாத்து நீதிநெறி தவறாது நல்லாட்சி செய்யும் அரசருடைய அடிகளைப் பொருந்தி உலகம் நடக்கும்.

### 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**11—**

### சொந்தக் கட்டடம்

***14664—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலுள்ள மின் வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2012 நவம்பர் 1

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேலூர் நகர்ப் பகுதிக்கான மின் வாரிய அலுவலகம் மின் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் நகரில் இயங்கிவரும் மின் வாரிய அலுவலகம் மிக நெரிசலான இடத்திலே, கடைகள் அதிகமாக இருக்கின்ற பகுதியில், வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றது. அந்தப் பகுதிக்கு பொதுமக்கள் வந்து செல்வதற்கு மிகவும் சிரமமாக இருக்கிற காரணத்தினால், தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்ற மின் வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் தனியாகக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் இப்பொழுது நான் சொன்னேன். நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேலூர் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற மின் வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம், நிதிநிலைமை படிப்படியாக சீரடைந்தவுடன், மிக விரைவிலே சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது மேலூர் நகரிலே, உதவி செயற்பொறியாளர் அலுவலகம் வடக்கு, மேலூர் தெற்கு, மேலூர் டவுன் மற்றும் கிழக்கு ஆகிய 4 அலுவலகங்களும் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அந்த நான்கு கட்டடங்களுக்கும் இப்பொழுது மாத வாடகை ரூ.14,600/- கொடுக்கப்பட்டு வருகிறது. சொந்தக் கட்டடம் கட்டினால் அந்த வாடகை கொடுப்பது அரசுக்கு மிச்சமாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் நியாயமான கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக, தாயுள்ளத்தோடு பரிவுடன் பரிசீலித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உறுதியாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2012 நவம்பர் 1]

அதேபோல, மின்சார வாரியத்தில் உதவிப் பொறியாளர் அலுவலகம், செயற்பொறியாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இருந்தாலும்கூட, உதவிப் பொறியாளர் அலுவலகம் மேற்கும், உதவிப் பொறியாளர் அலுவலகம் தெற்கும் இன்றைக்குச் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன. அந்தக் கட்டடங்கள்கூட 12,600 சதுர அடியிலே, 29 சென்ட் நிலப்பரப்பிலே இருந்தாலும் கூட, அதுவும் 8,000 சதுர அடியிலே அந்தக் கட்டடம் இருந்தாலும்கூட, அந்தக் கட்டடம் 40 ஆண்டுகளாக பாழடைந்த நிலையிலே இருப்பதால், சொந்தக் கட்டடத்திலே இருக்கின்ற உதவிப் பொறியாளர் அலுவலகம் மேற்கு மற்றும் தெற்கு இந்த அலுவலகங்களையும் சேர்த்து அங்கே அனைத்து அலுவலகங்களும் ஒரே இடத்திலே இடம் பெறுகின்ற வகையிலே, அனைத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலூர் நகரில் மொத்தம் 5 அலுவலகங்களும் ஒரே கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அதற்குக் காரணம் A.D. அலுவலகம் தெற்கு, A.D. அலுவலகம் வடக்கு, A.D. நகர், A.D. அலுவலகம் கிழக்கு உள்ளிட்ட பல்வேறு அலுவலகங்களும் ஒரே கட்டடத்தில் இயங்கி வருகின்ற காரணத்தால், மின் வாரிய அலுவலகத்திற்குப் பல்வேறு கிராமங்களிலிருந்து வருகின்ற விவசாயப் பெருமக்கள் எல்லாம் வண்டி நிறுத்தக்கூட இடமில்லாத காரணத்தினால் சிரமப்படுகிறார்கள். குறிப்பாக, கொட்டாம்பட்டி பகுதியில் இருக்கின்ற A.D. அலுவலகமும் இந்தக் கட்டடத்திலேயே

செயல்பட்டு வருகிறது. ஆகையால், கொட்டாம்பட்டி ஒன்றியப் பகுதிக்குட்பட்ட பகுதியில் A.D. அலுவலகத்தைக் கட்டினால், அந்தப் பகுதி விவசாயிகளும், பொதுமக்களும் வந்து செல்வதற்கு வசதியாக இருக்கும். ஆகையால், 5 அலுவலகங்களும் ஒரே கட்டடத்திலே இயங்கி வருகின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனித் தனியாக அந்த அந்தப் பகுதிகளுக்கென்று பிரித்து, தனியே கட்டடம் கட்டித்தர முன்வருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து அலுவலகங்களையும் ஒரே இடத்திலே கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதிலே கொட்டாம்பட்டி பகுதிக்கு அந்தப் பகுதி மக்களுக்கு பயன்படுகின்ற வகையிலே A.D. அலுவலகத்தை தனியாகப் பிரித்து, மக்கள் பயன்படுத்துகின்ற வகையிலே தனியாகப் பிரித்து கட்டடம் கட்டித்தரப்படுமா என்று உறுப்பினர் கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலித்து, நிதிநிலைக்கேற்ப உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரத்திலுள்ள உதவி செயற் பொறியாளர் அலுவலகம் இதுவரை 8 இடங்களில் மாறி மாறி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே மின் கட்டணம் செலுத்தக்கூடியவர்கள் சுமார் 20 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அங்கே வந்து நிற்பதற்குக்கூட போதிய வசதி இல்லாத காரணத்தினாலே, அந்த மின் வாரிய அலுவலகத்திற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியில் மட்டுமல்ல; எங்கெங்கெல்லாம் மின்சார வாரிய அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவோ, அந்த இடங்களில் எல்லாம், மின் வாரியத்திற்குச் சொந்தமான இடத்திலே, அதற்காகச் சொந்தக் கட்டடங்களைப் படிப்படியாகக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில், மின் வாரியத்தினுடைய நிதி நிலைமை சீரடையச் சீரடைய, நிதி நிலைமைக்கேற்ப, வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அனைத்து மின் வாரிய அலுவலகங்களுக்கும், சொந்தக் கட்டடங்கள் படிப்படியாகக் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**12—**

## பரிசோதனைக் கூடம்

***3948—திரு. ஆர். சந்திரசேகர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தொகுதியில் மண்டல குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் அனைத்து 31 மாவட்டங்களிலும், மாவட்ட அளவிலான குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் மாவட்டத் தலைமையிடத்தில் இயங்கி வருகிறது. அதுபோன்று, திருச்சியிலும் ஓர் ஆய்வகம் பொதுமக்கள் பயன்பெறும்வகையில் இயங்கி வருகிறது. மேலும், மத்திய அரசின் உதவியுடன் தேசிய ஊரகக் குடிநீர் தர மேலாண்மை மற்றும் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ், 51 உபகோட்ட அளவிலான குடிநீர் தரப் பரிசோதனைக் கூடங்களும் இயங்கி வருகின்றன. அதன்படி, மணப்பாறை தொகுதியிலும் உபகோட்ட அளவிலான குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் 2010-லிருந்து அந்தத் தொகுதியில் வழங்கப்படும் குடிநீர் மற்றும் நீராதாரங்களின் தரக் கண்காணிப்பு மற்றும் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.

**திரு. ஆர். சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" - இதுதான் தன்னுடைய இலட்சியம் என வாழ்ந்துகொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பொது மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்பதற்காக, இந்த ஆண்டில் 2.46 இலட்சம் ஊரகக் குடிநீர் ஆதாரங்களின் குடிநீர் மாதிரிகளை தரப் பரிசோதனை செய்ய ஆணையிட்டதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில், எனது மணப்பாறை தொகுதி, மணப்பாறையில் மண்டலக் குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் ஒரு பரிசோதனைக் கூடமும், உப கோட்ட அளவில் மத்திய அரசு உதவியுடன் ஒரு பரிசோதனைக் கூடமும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதனடிப்படையிலே, மணப்பாறை உப கோட்டத்தில் மத்திய





அரசின் உதவியுடன், நீர் பரிசோதனை செய்வதற்கென ஓர் அமைப்பு இருக்கிறது. அதுவே போதுமானது என்று கருதிய காரணத்தினால், அதை வைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.

**திரு. ஆர். சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

### சாலை வசதி

***20827—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள முந்திரித் தோட்டங்களில் உள்ள கிராமங்களை இணைக்கும் வகையில் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் வியாபார நோக்கம் கொண்ட நிறுவனமாதலால், பொதுமக்களின் உபயோகத்திற்காக சாலை வசதி போன்ற பணிகள் செய்ய எந்தவொரு திட்டமும் இல்லை. மேலும், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளிடமிருந்து சாலை வசதி கோரி எந்தவொரு கருத்துருவும் பெறப்படவில்லை. அவ்வாறு கருத்துரு ஏதும் கிடைக்கப்பெற்றால், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்கீழ், சாலை

[2012 நவம்பர் 1

வசதி ஏற்படுத்த அரசின் ஒப்புதல் பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திற்குச் சொந்தமாக சுமார் 5 ஆயிரம் எக்டேர் முந்திரிக் காடுகள் இருக்கின்றன. இந்தப் பகுதியில், சுமார் 10-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்குச் சாலைகள் அமைத்துத் தரவேண்டுமென்று இங்குள்ள மக்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-10

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'தானே' புயல் ஏற்பட்ட நேரத்தில், தாயாக வந்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும், அங்கே இருக்கின்ற அனைவருக்கும் நிவாரணங்களை வழங்கினார்கள். அங்கே பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளினுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற வகையில் ஒவ்வொரு எக்டேருக்கும் ரூபாய் ஒன்பதாயிரத்தையும், அதற்கு அடுத்தபடியாக வெட்டி எடுப்பதற்கு ஒரு எக்டேருக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாயும், முந்திரிக் கன்றுகள், ஊடு பயிர்கள், உரங்களைக் கொடுத்து வாழ்விழந்த அந்த மக்களுடைய வாட்டத்தைப் போக்கினார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான முந்திரித் தோட்டங்களில் உள்ள கிராமங்களை இணைக்கும் வகையில் சாலைகளை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் எடுத்துக்கூறி அமைத்துத் தருமாறு கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன நிலங்களை வனப் பயன்பாடன்றி, மற்ற பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கு மத்திய அரசினுடைய



2012 நவம்பர் 1]

வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன்படியும், உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படியும், மத்திய வன உயிரின ஆணையத்தின் அனுமதியின்பேரிலும், முன்னனுமதியுடன்தான் மேற்கொள்ள முடியும். வன நிலங்களை வனப் பயன்பாடன்றி மற்ற பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கு, சில பணிகளுக்கு, அதாவது குடிநீர் குழாய் அமைத்தல், மின்சாரக் கம்பி அமைத்தல், காவல் துறை வயர்லஸ், மருத்துவம் சம்பந்தப்பட்ட பணிகள் போன்ற பொதுநலப் பணிகளுக்கு ஒரு எக்டேருக்கு மிகாமல் மாநில அரசால் வன நிலங்களை மற்ற பணிகளுக்கு மாற்றித்தர அதிகாரம் உண்டு. சாலைகள் அமைக்கும் பணிகளைப் பொறுத்தவரையில் மாநில அரசுக்கு ஒரு எக்டேருக்குக் குறைவாக இருந்தாலும் அனுமதி வழங்க அதிகாரம் இல்லை. மற்றபடி, மத்திய அரசினுடைய முன்னனுமதி பெற்றேதான் வன நிலங்களில் பணிகளை மேற்கொள்ள இயலும். வன நிலங்கள் தேவைப்படும் அரசுத் துறைகள், முறையான படிவங்களில் பூர்த்தி செய்து, தேவைப்படும் வன நிலங்களுக்கு இரண்டு மடங்கு நிலங்களை வனத் துறைக்கு அளிக்கும் நிபந்தனையைப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்கும்பட்சத்தில் மத்திய அரசினுடைய உரிய அனுமதிக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஊராட்சியிலிருந்து எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை. அவ்வாறு கோரிக்கை வரும்பட்சத்தில் அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட, தமிழ்நாடு அரசினர் தேயிலைத் தோட்டக் கழகத்திற்குச் சொந்தமான சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் இல்லத்திற்கே செல்ல முடியாத அளவிற்கு நெருக்கடியும், சிக்கலும் ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், கிட்டத்தட்ட 7 கி.மீ. தூரத்திற்கு பழுதடைந்துள்ள சாலைகளைச்

[2012 நவம்பர் 1

சரிசெய்து செப்பனிடுவதற்கான முறையில் அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 2011-2012 ஆம் ஆண்டில் 156.30 கி.மீ. வனச் சாலைகளைச் சீரமைக்க, 16.79 கோடி ரூபாய் செலவில் திட்டங்கள் தீட்டப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை வனத் துறையால் சீர் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி சிட்டிலிங் பஞ்சாயத்திலிருந்து, சேலம் மாவட்டத்தை இணைக்கின்ற இரண்டே இரண்டு கிலோ மீட்டர் தூரத்தை, கருமந்துறையை இணைப்பதற்கான சாலை வசதி செய்து தருவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வனத் துறை அனுமதியில்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு எக்டேர் வரை அனுமதி வழங்குவதற்கு மாவட்ட அலுவலருக்கு அனுமதி உண்டு என நான் கருதுகிறேன். கருமந்துறை செல்ல வேண்டுமானால், 40 கி.மீ. தூரம் உள்ள தும்பல் சென்று, பின்பு கருமந்துறையை சென்றடைய வேண்டிய நிலை உள்ளது. இரண்டே கிலோ மீட்டர் தூரம் சாலை அமைக்க வனத் துறை அனுமதியளிக்குமானால், அடுத்த 5-வது கி.மீ. தூரத்தில் கருமந்துறையை சென்று அடைந்துவிடலாம். அடுத்த மாவட்டத்தைச் சென்றடைய முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இருக்கக்கூடிய விதியைத் தளர்த்தி, இதனைச் சிறப்பு நிகழ்வாகக் கருதி, இப்பேர்ப்பட்ட பகுதிகளுக்கு சாலை வசதி செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.



2012 நவம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையைப் பொறுத்தவரையில், அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் மட்டும்தான் சாலைகள் அமைக்க முடியும். மற்ற இடங்களில் அனுமதிக்க வேண்டுமானால் மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று சாலைகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பகுதி அனுமதி அளிக்கப்பட்ட இடமா என்பதை ஆராய்ந்து உடனடியாக சாலைகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட விராலிபட்டி கிராமத்திலிருந்து, 1 கி.மீ. தொலைவிலுள்ள சிறுமலை பகுதியிலுள்ள புதூர் கிராமத்திற்குச் செல்ல வேண்டுமானால் 5, 6 கி.மீ. தூரம் சுற்றி வரக்கூடிய நிலைமை உள்ளது. அந்தப் பகுதி மக்களுடைய கஷ்டத்தைப் போக்கக்கூடிய வகையில், 1 கி.மீ. தூரத்திலுள்ள சிறுமலை பகுதி புதூர் கிராமம் செல்வதற்கு விராலிபட்டி ஊராட்சிக்குச் சொந்தமான சாலையைப் புதுப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் சாலை அமைக்க வேண்டுமென்றால், அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் மட்டும்தான் சாலை அமைப்பதற்கு அனுமதி வழங்க இயலும். புதிதாக ஒரு சாலையை அமைக்க வேண்டுமென்றால், எந்தத் துறை சாலை அமைக்க முன்வருகின்றதோ, குறிப்பாக, ஒரு எக்டேர் நிலம் அதற்குத் தேவைப்படுகிறது என்றால், வெளி இடத்திலே இரண்டு எக்டேர் நிலம் கொடுப்பதற்கு அந்தத் துறை தயாராக

[2012 நவம்பர் 1

இருந்தால், முறைப்படி விண்ணப்பித்தால், மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்ட மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகின்ற மிகவும் அவசர அத்தியாவசியம் கருதி, இராஜபாளையம்-தேனிக்குச் செல்கின்ற வருஷநாட்டு மலைப் பாதை நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகின்றது. இதே அவையில் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் அது சம்பந்தமாகப் பேசி இருக்கின்றார்கள். கடந்த ஆட்சியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக சொல்லப்பட்டது. ஆனால் அந்தப் பணி இதுவரை நடைபெறவில்லை. நம்முடைய ஆட்சியாவது இந்தப் பணிக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே, தேனி-வருஷநாட்டிற்கு அந்த மலைப் பாதைத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலை அமைப்பதற்கு நெடுஞ்சாலைத் துறையோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளோ முறைப்படியாக விண்ணப்பித்தால், மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று, அந்தச் சாலையை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது பகுதியிலே உடுமலைப்பேட்டையிலேயிருந்து சின்னாறு வழியாக மூணாறு செல்லும் சாலையானது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. நெடுஞ்சாலைத் துறைக்கு சம்பந்தப்பட்ட அந்தச் சாலையை விரிவாக்கம் செய்ய அனுமதி



2012 நவம்பர் 1]

பெறுவதற்கு, வழிவகை செய்வதற்கு அந்தத் துறையின் மூலமாக முறையாக விண்ணப்பம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு அனுமதியோடு அந்த சாலையைப் புனரமைப்பு செய்யக்கூடிய வகையிலே widening செய்து, அந்தத் தார்ச் சாலையைப் புதுப்பிப்பதற்கு நம்முடைய வனத் துறை அனுமதி கொடுக்கக்கூடிய வகையிலே வனத் துறையும், நெடுஞ்சாலைத் துறையும் ஒருங்கிணைந்து அந்தச் சாலை அமைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் செய்ய பலமுறை கேட்டும், அந்தப் பணி நடைபெறாமல் உள்ளது. அதை உடனடியாகச் செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நெடுஞ்சாலைத் துறையுடன் கலந்தாலோசித்து அந்தச் சாலையை விரிவாக்கம் செய்திட வனத் துறை உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உசிலம்பட்டி தொகுதியில் ஏற்கெனவே மலைப் பாதைகளில் தார்ச் சாலை அமைக்கப்பட்டு, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக மீண்டும் விரிவாக்கம் செய்யப்படும்போது, வனத் துறையினர் அதைத் தடுத்து வருகிறார்கள். நீண்ட காலமாக நெடுஞ்சாலைத் துறையிலிருந்து பொறியாளர்கள் அதற்கு அனுமதி கேட்டும் இன்னும் கிடைக்கப் பெறவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் சாலை

அமைக்கின்றபொழுது எந்த அளவு, சிறிய அளவு நிலம் தேவைப்பட்டால்கூட தமிழக அரசால் ஒதுக்குவதற்கு இயலாது. மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் அதற்கான நிலத்தை ஒதுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்து மத்திய அரசினுடைய அனுமதி பெற்று சாலை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, மேகமலை ஊராட்சியில் மலைக் கிராமங்களில் 10-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. 100 ஆண்டுகளுக்கு மேல் அந்தப் பகுதியில் மக்கள் வசித்து வருகிறார்கள். அந்தப் பகுதிக்கு சாலை அமைப்பதற்கு மிகவும் சிரமமான ஒரு சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசு அனுமதி இருந்தால்தான், உச்ச நீதிமன்றம் அனுமதி தந்தால்தான் அமைக்க முடியும் என்ற ஒரு கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குள் நான் செல்லவில்லை. ஊராட்சிகளில் manual workers-ஐ வைத்து செய்யக்கூடிய 100 நாள் வேலையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள மலைக் கிராமங்களில் மண்ரோட்டைச் சீரமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவொரு திட்டமாக இருந்தாலும் சரி, வனத் துறையில் அதனைச் செயல்படுத்துவதற்கும், இப்படிப்பட்ட சாலைகள் அமைக்கின்ற பணிகளுக்கும் மத்திய அரசினுடைய அனுமதி தேவைப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல், ஊராட்சிகளில் 100 நாட்கள் வேலைத் திட்டத்தின்கீழ் அந்தப் பணிகளைச் செய்வதற்கு, ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதி என்று சொன்னால் அது இரண்டு வகையாகக் கருதப்படுகிறது. ஒன்று, மலைகளில் இருக்கக்கூடிய, வன விலங்குகள் இருக்கக்கூடிய அடர்ந்த காட்டுப் பகுதி. மற்றொன்று, சிவகங்கை மாவட்டம் போன்ற பகுதிகளில் சமூக நலக் காடுதான் வனப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கே வன விலங்குகளோ, காடுகளோ எதுவும் கிடையாது. ஆனாலும், இதே நிபந்தனைகள்தான் அங்கேயும், அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்களுக்கு சாலைகளை அமைப்பதற்கு தடையாக இருக்கின்றது. எனவே, நாங்கள் அவர்களிடம் முறையிட்டாலும்கூட, அவர்கள் கருத்துருக்களை அனுப்ப மறுக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சரே இப்படிப்பட்ட சாலைகள் அமைக்கக்கூடிய பகுதிகளை ஆய்வு செய்து, மத்திய அரசிடம் அனுமதியைப் பெற்றுச் சாலைகளை அமைப்பதற்கு வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில், சாலைகள் அமைப்பதற்கு பல்வேறு துறைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற இடத்தில், பொது மக்களின் நலன் கருதி, புதிய சாலைகள் அமைக்க வேண்டுமென்று, உள்ளாட்சி மன்ற நிர்வாகமோ அல்லது நெடுஞ்சாலைத் துறையோ முறைப்படி வனத் துறையிடம் விண்ணப்பிக்குமேயானால், நாங்கள் மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்று துரிதமாக அந்தப் பணிகளைச் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் ஜென்மம் எஸ்டேட் ஒழிப்பு பிரிவு 17-ன்கீழ்

[2012 நவம்பர் 1

வருகின்ற பூமிகளில் சாலைகள் அமைப்பதற்கு எந்தவொரு முகாந்திரமுமின்றி வனத் துறை அனுமதி மறுக்கிறது. இதனால் எந்த வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, அந்தச் சாலைகளை அமைப்பதற்கு முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதி தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வருகின்ற பகுதியாதலால், அங்கே சாலைகள் அமைப்பதற்கு, வனத் துறையினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் சாலைகள் அமைக்க வேண்டும். இப்போது பல்வேறு சாலைகள் அமைப்பதற்கு வனத் துறை அனுமதி வழங்கியுள்ளது. அதனால்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனியார் காடுகள் திட்டத்தின்கீழ் ஏழை விவசாயிகள், பொது மக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு, அதனை ஆய்வு செய்வதற்கு ஒரு கமிட்டியை அமைத்துள்ளார்கள். அந்தக் கமிட்டி, நாளையதினம் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆய்வுக் கூட்டத்தைத் தொடங்க இருக்கின்றது. விரைவில் அந்த ஆய்வுக் கூட்டத்தை நீலகிரி மாவட்டத்திலும் தொடங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், பேரையூர் தாலுகாவிற்குட்பட்ட என்னுடைய திருமங்கலம் தொகுதி சந்தையூரிலிருந்தும், உசிலம்பட்டி தொகுதிக்குட்பட்ட சாட்டூரிலிருந்தும் செல்லக்கூடிய சாலையில் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக இருபுறமும் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. அதில் 3¼ கிலோ மீட்டர் தூரம் வனத் துறைக்கு சொந்தமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கு சாலைகள் போடுவதற்கு வனத் துறை முன் வராமல் இருக்கின்றது. இந்தச் சாலைகளைப் போட்டுவிட்டால், அந்தப் பகுதி மக்கள் இரு ஊர்களுக்குச் சென்று வருவதற்கும் 20 கிலோ மீட்டர் தூரத்தை மிச்சப்படுத்தும் சூழ்நிலை இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் நேரடியாக சிறப்பு கவனம் செலுத்தி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலும் இதை வலியுறுத்தி, சாட்டூர்-சந்தையூர் சாலையை, மலைப்பகுதியில் இருக்கின்ற அந்த 3¼ கிலோ மீட்டர் தூரத்திற்கு கான்கிரீட் சாலை போடவேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த கான்கிரீட் சாலை போடுவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.



2012 நவம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் எந்தவொரு துறையாவது சாலை அமைக்க வேண்டுமென்றால், அவர்களுக்குத் தேவைப்படும் நிலங்களுக்கு இரு மடங்கான நிலங்களை வனத் துறையிடம் ஒப்படைக்க வேண்டுமென மத்திய அரசிடம் ஒரு விதியுள்ளது. அந்த விதிக்குட்பட்டு சாலைகளை அமைக்க எந்தத் துறை முன் வந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, விரைவிலே அந்தச் சாலைகள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்திலிருந்து போளூர் வழியாக கேரட்டி செல்லும் சாலை, வனத் துறையின் மூலமாக 12 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட சாலையாகும். பெங்களூரு, மைசூர் போன்ற முக்கிய நகரங்களோடு இணைக்கப்படுகின்ற இந்தச் சாலையில் ஒரே மழையில் அனைத்து பாலங்களும் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்ட நிலையில், அந்தப் பாலங்களை அமைத்து, போக்குவரத்திற்கு வழிவகை செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 நவம்பர் 1

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையால் பணிகள் செய்யப்பட்ட அந்தச் சாலை, பாலங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாகச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைப் பகுதிகளிலே சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசாங்கத்திடம் உரிய அனுமதி பெற்றுத்தான் அங்கே சாலை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், நான் அறிந்தவரையில் மத்திய அரசாங்கத்தாலே நிறைவேற்றப்பட்டிருக்கிற வன உரிமைச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு, அந்தச் சட்டம் அமலாகிற பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களுக்கு, சாலைகளை அமைத்துக்கொள்வதற்கு அனுமதி இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் அந்தச் சட்டம் இன்னும் அமலாக்கப்படாத காரணத்தினால் நம்மாலே நம்முடைய வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. எனவே, அந்த வன உரிமைச் சட்டத்தை தமிழகத்தில் அமலாக்குகிற நிலைமை ஏற்படுமென்று சொன்னால், இந்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு வழி கிடைக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வன உரிமைச் சட்டத்தை, இந்தியா முழுவதும் அமலாகிக் கொண்டிருக்கிற வன உரிமைச் சட்டத்தை தமிழ்நாட்டிலே அமலாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன உரிமைச் சட்டப்படி மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் சில அத்தியாவசிய சாலைகளை அமைப்பதற்கு இப்போதுகூட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. வன உரிமைச் சட்டத்தைப் பொறுத்தவரை, அந்த மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, இப்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடன் உடனடியாக நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.*



2012 நவம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**14—**

### நியாய விலைக் கடை

***2908—திரு. டி. செங்குட்டுவன்:**

*மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சின்ன உள்ளுகுறுக்கை கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, சின்ன உள்ளுகுறுக்கை கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

**முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதியிலுள்ள சின்ன உள்ளுகுறுக்கை கிராமத்தில் பகுதிநேர*

[2012 நவம்பர் 1

நியாய விலைக் கடைத் திறக்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான், 'ஆவன செய்யப்படும்' என்கிற பதிலைத்தான் முதலிலே இங்கே தெரிவித்தேன். கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, சின்ன உள்ளுகுறுக்கை கிராமத்தில் 95 குடும்ப அட்டைகள், பாவாடரப்பட்டி கிராமத்தில் 45 குடும்ப அட்டைகள் மற்றும் அய்யக்கம் கிராமத்தில் 14 குடும்ப அட்டைகள், ஆக மொத்தம் 154 குடும்ப அட்டைகள் உள்ளன. இவற்றில் தாய்க்கடையான உள்ளுகுறுக்கை நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து சின்ன உள்ளுகுறுக்கை கிராமத்தில் புதிய பகுதி நேரக் கடை அமைக்க கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மண்டல இணைப் பதிவாளரால் முன்மொழிவு அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள். (குறுக்கீடு) முனைவர் கோவி. செழியன், ஒரு கேள்விதான், நீங்கள் மூலக்கேள்வி கேட்கவில்லை. (குறுக்கீடு) மூலக்கேள்வி கேட்ட உறுப்பினர் இல்லாததால்தான் உங்களைக் கூப்பிட்டேன். ஒரு கேள்விதான், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, அதியமான்கோட்டை ஊராட்சியில் ஏலகிரியான்கொட்டாயிலிருந்து ஜீவா நகருக்கு பகுதிநேரக் கடையைப் பிரித்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை



2012 நவம்பர் 1]

பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

**திரு. கா.கோ. ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய பொற்பாதங்களை வணங்கி, எனது திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னகந்திலி, அனுவம்பட்டி, நத்தம்காலனி, ஜல்லியூர், மாடப்பள்ளி போன்ற இடங்களில் பகுதிநேரக் கடை வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நியாய விலைக் கடைகள், பகுதிநேரக் கடைகளை அமைக்க வேண்டுமென்று சொன்னால் அதற்குப் பல்வேறு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகள் இதற்கு முன்னால் புத்தகமாக நம்முடைய அவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கடைகள் எல்லாம் அந்த விதிகளுக்குட்பட்டு வந்தால், அந்த விதிகளின் அடிப்படையில் அவர்களுக்கு அந்தக் கடைகள் பிரித்துத் தரப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

*முற்பகல் 10-30*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதி, முளகுமூடு பேரூராட்சிப் பகுதியிலே, கோடியூர் பகுதிவாழ் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான ஒரு பகுதி நேர நியாய விலைக்

[2012 நவம்பர் 1

கடை ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பது என்பது தாய்க் கடையிலிருந்து பிரித்து பகுதிநேர கடைகள் அமைப்பதற்கு தாய்க் கடையில் பிரிக்கப்பட்டதற்குப் பின்னால் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிப்பதற்கு 150 குடும்ப அட்டைகள் தேவை. தாய்க் கடைக்கும் பகுதிநேர கடைக்கும் இடைப்பட்ட தூரம் ஒன்றரை கிலோ மீட்டர் ஆக இருக்க வேண்டும். இந்த விதிகளுக்குட்பட்டு வருமாயின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்த அந்த நியாய விலைக் கடை நிச்சயமாகத் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரத்தில் 36-வது வார்டில் நியாய விலைக் கடை 1,330 கார்டுகளுடன் செயல்படுகின்றது. இங்கு பயனாளிகள் நெரிசல் அதிகமாக உள்ளதால், 36-வது வார்டு கடையை இரண்டாகப் பிரித்து அதனைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து இன்றைக்கு வரை முழுநேரக் கடைகள், அதாவது 225 முழுநேரக் கடைகளும், 458 பகுதிநேரக் கடைகளும் மக்கள் நலன் கருதி திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட



2012 நவம்பர் 1]

பகுதியில் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வின் அடிப்படையில் விதிகள் எல்லாம் பூர்த்தியாகும் எனில், அவருடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**15—**

## ஆவின் பால்

***4891—திரு. ஆர். சுந்தர்ராஜன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் உள்ள ஆவின் பால் பற்றாக்குறையைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மக்கள் அனைவருக்கும் பற்றாக்குறையின்றி தரமான பால் தாராளமாகக் கிடைக்க வேண்டும், பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்த பல சீரிய திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் மாபெரும் சிறப்புத் திட்டமான விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நாளொன்றுக்கு 22 இலட்சம் லிட்டர் என்ற அளவிலேயே, பால் கொள்முதல் செய்யப்பட்ட நிலையினை மாற்றி, . . . (குறுக்கீடுகள்)

[2012 நவம்பர் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 27 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்த்தி நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் பால் அதிகமாகக் கொள்முதல் செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சாதனை புரிந்து வருகிறது. அதுமட்டுமின்றி, கிராம அளவில் சங்கங்களின்மூலம் தினசரி 4 இலட்சம் லிட்டர் வீதம் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஆக மொத்தம், நாளொன்றுக்கு 31 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்திருக்கின்ற இலக்கை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற சில மாதங்களிலே அடைந்து ஆவின் வரலாற்றில் புதிய சரித்திர சாதனை புரிந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் கொள்முதல் செய்யப்படும் 27 இலட்சம் லிட்டர் பாலில் சென்னையில் மட்டும் 1,224 விற்பனை நிலையங்கள்மூலம் நாளொன்றுக்கு 11 இலட்சம் லிட்டர் பாலும், மேலும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாக நாளொன்றுக்கு 10 இலட்சம் லிட்டர் பாலும் விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள 6 இலட்சம் லிட்டர் பாலானது பால் பொருட்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இதுபோக, பொதுமக்களிடமிருந்து பால் தேவைக்கான கோரிக்கை பெறப்பட்டவுடன் தேவைப்படும் இடங்களில் பாலகங்கள் அமைத்தும், ஏஜென்ட் உரிமை வழங்கியும் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மற்றும் பொதுமக்களுக்கு பால் மற்றும் பால் பொருட்கள் தேவையிருப்பின் ஆவின் நிருவாகத்தின் 16 மண்டலங்கள் மூலமும் தொலைபேசி எண் மூலமும் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்குத் தேவையான பால் அவர்களின் இல்லத்திற்கே சென்று விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில் பால் தேவைக்கான கோரிக்கை மனு அளித்தால் மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்குக் கொண்டு சென்று, ஆணை பெற்று தங்களுக்குத் தேவைப்படும் இடங்களில் பால் விற்பனை ஏஜென்ட் உரிமம் மற்றும் பாலகங்கள் அமைத்துக் கொடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 நவம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

முற்பகல் 10-35

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நிறுவனத்தில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே நிரந்தரம் இல்லாத 24,000 பணியாளர்களை பணி நியமனம் செய்வதற்காகக் கமிட்டி அமைக்கப்படும் என்று தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த அவையிலே தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலே கமிட்டி அமைக்கப்பட்டு, அவர்களை எப்படி பணியில் அமர்த்தலாம் என்பது ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் தமிழகத்தில் விற்கப்படுகிற தனியார் பால்களில் நம்முடைய குலை நடுங்கச் செய்கிற அளவுக்கு ஏராளமான கலப்படங்கள், இரசாயனப் பொருட்கள் உள்பட கலக்கப்படுகின்றன என்ற தகவல் வந்தது. அவற்றை ஒழிப்பதோடு, மைசூர் பாகு, ஐஸ்கிரீம், யோகர்ட் போன்ற பால் உணவுப் பொருட்களை ஆவின் நிறுவனம் போதுமான அளவிற்கு உற்பத்தி செய்து தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்வதை உறுதிப்படுத்துவாரா என்பதையும் தங்கள் வாயிலாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** பால் கலப்படத்தைத் தடுக்க, அதாவது புதியதாக பால் பண்ணையினைப் பதிவு செய்யவும்

தனியார் பால் பண்ணையினை ஆய்வு செய்யவும், பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை M.M.P.O. சட்டத்தின்படி பால்வளத் துறையின் ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி பாலின் விற்பனைத் தரம் குறித்து ஆய்வு செய்து, தரமற்ற பால் விற்பனை செய்யும் நிறுவனத்தின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது.

2006 ஆம் ஆண்டு மத்திய அரசு கொண்டு வந்த உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி 2011 இறுதியில், இந்தப் பணிகள் சுகாதாரத் துறையின் ஆணையரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. அந்த அதிகாரத்தை மீண்டும் பால் வளத் துறை ஆணையருக்கு முழுமையாக வழங்க வேண்டி கோரிக்கையை சுகாதாரத் துறைச் செயலாளருக்கும், மத்திய அரசு செயலாளருக்கும் அனுப்பப்பட்டு அது நடவடிக்கையில் உள்ளது. தற்போது பால் கலப்படம் குறித்து சுகாதாரத் துறை உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, ஆவின் நிறுவனத்தால் தயாரிக்கப்படுகின்ற பால் பொருட்கள் அத்தனையும் ஆங்காங்கே பார்லர்கள் மூலமாகவும் மற்றும் அவர்களின் விருப்பத்தின் பேரிலும், கோரிக்கையின் பேரிலும் அவர்களுக்கு எவ்வளவு தேவையோ அதை அவர்களுக்கு விநியோகம் செய்கின்ற ஒரு நடவடிக்கையை ஆவின் நிர்வாகம் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கேள்வியும் பாலில் கலப்படம் அதிகமாக இருக்கிறது, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பது குறித்துதான். ஏற்கெனவே இதற்கான பதிலை அமைச்சர் அளித்துவிட்டார். எனவே கேள்வி எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.



**16—**

## கால்நடை மருத்துவமனை

***6288—திரு. மு. ரெத்தினசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளியிலுள்ள கால்நடை மருத்துவமனையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கால்நடை மருந்தகம், மருத்துவமனை என்று சொன்னாலே பழைய கட்டடத்தில்தான் இயங்கும் என்ற நிலையெல்லாம் தற்போது மாறி கடந்த 2011-2012 ஆம் நிதியாண்டில் அம்மா அவர்கள் ரூ.122 கோடியை ஒதுக்கினார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய திருவையாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கேட்ட திருக்காட்டுப்பள்ளி கால்நடை மருத்துவமனைக்கு ரூபாய் 26.66 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு தற்போது அங்கே கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வெகு விரைவிலே அந்தப் பணி முடிவடையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.

**திரு. மு. ரெத்தினசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை சீரோடும், சிறப்போடும் ஆட்சி செய்து, ஏழையெளிய நடுத்தர மக்களுடைய பொருளாதார உயர்வுக்கும், அமைதிக்காகவும் வாழ்ந்துகொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளியிலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு நான் கேள்வி கேட்டு 10 நாட்களிலேயே அந்தப் பணி சிறப்பாகத் தொடங்கி முடிவடைகிற நிலையில் உள்ளது. அதற்கு மாண்புமிகு

[2012 நவம்பர் 1

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்ளுக்கு நன்றியை கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**17—**

**சுற்றுலா மையம்**

*__4573—திரு. அ. பாப்பா சுந்தரம்:__

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதி, ஐயர்மலை அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் பகுதியைச் சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் மாவட்டம், குளித்தலை தொகுதி, ஐயர்மலை அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் சுற்றுலாத் துறைமூலம் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மலை அடிவாரத்தில் நிலச்சீரமைப்பு, பக்தர்கள் ஓய்வறை, கண்காட்சி மையம், வரவேற்பறை, யோகா-தியான மையம், சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு, கடந்த 27-9-2012 ஆம் நாளன்று, உலக சுற்றுலா தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் காணொலி காட்சிமூலம் திறந்து வைக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகவும் உபயோகத்திற்காவும் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 நவம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு குளித்தலை தொகுதி மக்களின் சார்பாகவும், ஐயர்மலை அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் பக்தகோடிகள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஐயர்மலை அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் ஆலயம் மலை பகுதி உச்சியில் இருப்பதால், கிட்டத்தட்ட சுமார் 1,500 அடி உயரத்திற்கு மேலே செல்லவேண்டியிருப்பதால் அந்த மலையின் உச்சியில் செல்வதற்கு அங்கு ரோப் கார் வசதி செய்துதர வேண்டும் என்று அப்பகுதி பக்தர்கள்மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டு, பக்தர்கள் தங்களுடைய அன்பளிப்பாக ரூபாய் 2 கோடியே 37 இலட்சம் தற்போது வங்கியில் டெபாசிட் செய்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணத்தோடு சுற்றுலாத் துறை கூடுதலாக நிதியினை செலவிட்டு ரோப் கார் வசதி அல்லது மலைப் பாதையினை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், குளித்தலை தொகுதி, ஐயர்மலை அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலுக்குச் செல்வதற்கு 1,017 படிகள் கடந்து மேலே செல்லவேண்டியுள்ளது. அப்பகுதிக்கு ஆய்வுக்கு செல்லும்போதே அங்கு ரோப் கார் வசதி செய்துதர வேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கை ஒன்று இருந்தது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் இதனை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியோடு இதற்கான ஆயத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.

[2012 நவம்பர் 1

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயர்மலை அருள்மிகு ரெத்தினகிரீஸ்வரர் மலை பகுதிக்கு ரோப் கார் அமைப்பதற்கு நிறைய செலவாகும் என்பதாலும், அது அடிக்கடி பழுதானால் அதனைப் பராமரிப்பதற்கு அதிக செலவாகும் என்கிற காரணத்தினாலும் ரோப் கார் வசதிக்குப் பதில் திருச்செங்கோடு மலைக்குச் செல்ல பாதை அமைத்திருப்பதுபோல் இங்கும் மலைப் பாதை ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் சொல்லி அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆய்வு செய்து அங்குள்ள பக்தர்களின் வசதிக்கு என்ன செய்ய வேண்டுமோ அதனை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில், மேச்சேரி பேரூராட்சியில் அமைந்திருக்கின்ற ஸ்ரீ பத்ரகாளி அம்மன் திருக்கோயில் திருப்பணிகள் கடந்த 12 ஆண்டுகளாக நடைபெற்று, சுமார் 13 கோடி ரூபாயில் அந்தப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேச்சேரி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்தெல்லாம் ஏராளமான பக்தர்கள் இக்கோயிலுக்கு தினமும் வந்துசெல்கின்றார்கள். திருவிழா போன்ற சிறப்பு நாட்களில் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்துசெல்கின்ற மேச்சேரி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்பது அந்த மக்களின் நீண்டநாள் கோரிக்கை. அக்கோரிக்கையை ஏற்று அரசு அறிவிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2012 நவம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஏற்கெனவே மேட்டூர் பகுதியில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக தங்கும் விடுதி அங்கே இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற ஸ்ரீ பத்ரகாளிஅம்மன் திருக்கோயிலுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து அங்கு சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான அடிப்படை வசதிகளைச் செய்யக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. புத்திசந்திரன் அவர்கள்.

**திரு. புத்திசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த மக்களின் காவல் தெய்வமாக விளங்கிக்கொண்டிருக்கும் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி, எனது தொகுதியான ஊட்டியிலே சுற்றுலா பயணிகளுடைய வருகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. வருகின்ற பயணிகளுடைய குறைகளைப் போக்குகின்ற வகையிலே அங்கே இயற்கை எழில் சூழ்ந்த பகுதிகளான பென்ஸ்டாக், அப்பர் பவானி, அவலாஞ்சி, பங்கிதபால் போன்ற பகுதிகளை அம்மா அவர்களின் அரசு சுற்றுலாத் தலங்களாக அறிவிக்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, இது ஒரு முக்கியமான துறை என்பதை மனதிலே வைத்துத்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஊட்டியிலே உள்ள ஏரியைத் தூர் வாரி, சுற்றுலாப் பயணிகள் இன்பமாக படகு சவாரி செய்ய

[2012 நவம்பர் 1

வேண்டுமென்பதற்காக 5.89 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. (மேசையைத தட்டும் ஒலி) முதற்கட்டப் பணிக்காக உடனடியாக ஒரு கோடி ரூபாயை சுற்றுலாத் துறைக்கு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஒதுக்கீடு செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவலாஞ்சி பகுதியிலே ஏற்கெனவே ட்ரெக்கிங் வசதி செய்யவேண்டுமென்று அதிகமான சுற்றுலாப் பயணிகள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதற்காக அது ஆய்விலே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களையும் அழைத்து, நேரடியாக ஆய்வு செய்து அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய மேலான ஆணைக்குட்பட்டு நாட்டுமக்கள் பலராலும் சின்னதிருப்பதி என்று அழைக்கப்படுகின்ற குறிஞ்சிப்பாடி தொகுதிக்குட்பட்ட திருவந்திபுரம் தேவநாதசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திருக்கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவித்தும், அதனுடைய சுற்றுப் பகுதிகளிலே மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி சுற்றுலாத் தலம் என்று அறிவிப்பதைவிட அதிகமாக எங்கெங்கெல்லாம் சுற்றுலாப் பயணிகள் வருகின்றார்களோ அவர்களுக்குரிய முறையிலே அடிப்படை வசதிகளைச்



2012 நவம்பர் 1]

செய்துகொடுக்கக்கூடிய பணிகளை சுற்றுலாத் துறை செய்து வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவநாதசுவாமி கோயில் பகுதியிலே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களோடு நேரடியாகச் சென்று, அதிகாரிகளோடு ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு பெறப்பட்டு, அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்யும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராகவும், எதிர்கால இந்தியாவை நிர்ணயிக்கப்போகின்ற வல்லமையாகவும் விளங்குகின்ற மாட்சிமைப் பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பொற்பாதங்களை பணிவோடு வணங்கி, கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு பூவராகசுவாமி திருக்கோயில் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் கோரிக்கை வந்த காரணத்தினால் ஸ்ரீமுஷ்ணம் திருக்கோயிலுக்குச் சென்று, அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவரோடு சென்று ஆய்வு செய்திருக்கிறார்கள். கருத்துருவும் பெறப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று நிதியொதுக்கீடு செய்யப்பட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 நவம்பர் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**18—**

## குளிர்சாதனப் பேருந்து

*__8006—திரு. க. பாலகிருஷ்ணன்:__*

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கு தினசரி 5 பேருந்துகள்மூலம் 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் விழுப்புரம்மூலம் சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கு 31 பேருந்துகள் மூலம் 45 நடைகள் இயக்கப்படுகின்றன. சிதம்பரத்திலிருந்து சென்னைக்குச் செல்கின்ற பயணிகளுக்குத் தேவையான இருக்கைகள் தற்போது உள்ளன. கூடுதல் பயணிகளுக்குண்டான வசதிகள் தேவைப்படுகின்றபோது நிச்சயம் சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கு குளிர்சாதனப் பேருந்துகள் இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சருடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*



2012 நவம்பர் 1]

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் சற்றேறக்குறைய இருபத்தைந்தாயிரம் மாணவர்கள் படிக்கக்கூடிய அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், கோடைக்காலங்களில் மிக அதிகமாக சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிற பிச்சாவரம் சுற்றுலா மையமும், நடராஜப் பெருமாளுடைய ஆலயம் என்கிற அந்த வழிபாட்டுத் தலமும் இருக்கக்கூடிய அந்த நகரத்திற்கு நம்முடைய மாநிலத்திலிருந்து மட்டுமல்லாமல் வெளி மாநிலத்திலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும்கூட ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயில்கின்ற மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பல ஆயிரம் பேர் சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கு வந்து செல்கிறார்கள். எனவே, அவர்கள் வந்து செல்கிற வசதிகளுக்காகத்தான் சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கு குளிர்சாதனப் பேருந்தை இயக்கவேண்டுமென்கிற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலிருந்தும் சென்னைக்கு குளிர்சாதன வால்வோ பேருந்துகள் இயக்கப்படவேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி முதல் கட்டமாக கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்துகள் இயக்குவதற்குண்டான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய உத்தரவைப்பெற்று, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வழித் தடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளுடைய அடர்வுகளுக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய ஆட்சியில் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

[2012 நவம்பர் 1

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு இயங்கிக்கொண்டிருந்த குளிர்சாதனப் பேருந்து கடந்த நான்கு மாத காலமாக இயக்கப்படவில்லை. இதனால், வணிகர்களும், பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அந்தப் பேருந்துகள் மீண்டும் இயக்கப்படுமா என்பதையும், அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைப் பற்றியும், அதேபோல என்னுடைய தொகுதி திருத்தலமாக விளங்குகின்ற கும்பகோணத்தையும் திருப்பதியையும் இணைக்கின்ற விதமாக குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாவட்டங்களினுடைய தலைநகரங்களிலிருந்தும் சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். படிப்படியாக அனைத்து மாவட்டத் தலைநகரங்களுக்கும்—முதல் கட்டமாக கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் அந்தப் பேருந்துகளை இயக்குவதற்குண்டான நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. படிப்படியாக மற்ற அனைத்து மாவட்டத்தினுடைய தலைநகரங்களிலிருந்தும் இயக்குவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதன்படி நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகப்பேர் கிழக்குப் பகுதி சென்னை நகரில் விரிவடைந்து வரக்கூடிய பகுதி. எனவே, அந்தப் பகுதியிலிருந்து Parrys Corner-க்கு கூடுதல் பேருந்து வசதிகள் வேண்டும். ஏற்கெனவே இருக்கக்கூடிய பேருந்துகள் ஒன்றிரண்டு தான் உள்ளன. அவையும் மாலை நேரங்களில் நிறுத்தப்படுகின்றன. எனவே, peak hours-இல் Parrys Corner-க்கு கூடுதலாகப் பேருந்து இயக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2012 நவம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய சட்டமன்றத்தினுடைய வரலாற்றில், அரசினுடைய வரலாற்றில் அரசு போக்குவரத்துக் கழகத்தினுடைய இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை இருபதாயிரமாக உயர்த்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இன்றைக்கு 20,214 பேருந்துகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுடைய திருக்கரங்களால் (மேசையைத் தட்டும் ஒலி) கொடியசைத்து துவக்கி வைத்து, அவை இன்று மக்களுடைய பயன்பாட்டிற்கு இயக்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மக்களுடைய போக்குவரத்து வசதியையும் மேம்படுத்தப்படவேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறுகிய பாதைகள், குறுகிய சாலைகள் உள்ள வழித்தடங்களில் 100 மினி பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, இந்தத் துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற செய்தியைச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வழித்தடத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு புதிய கூடுதல் பேருந்து வசதிகள் ஏற்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் தற்போது அகல இரயில் பாதை பணி நடைபெற்று கொண்டிருக்கக்கூடிய காரணத்தாலே அங்கிருந்து சென்னைக்கு இரயில் போக்குவரத்து வசதி கிடையாது. எனவே, அதைக் கருத்தில்கொண்டு, தற்போது சென்னைக்கு பட்டுக்கோட்டையிலிருந்து வரக்கூடிய பேருந்துகளுடைய எண்ணிக்கையை அதிகரிக்கவும், குறிப்பாக வரக்கூடிய தீபாவளி மற்றும் பொங்கல் நாட்களிலே முன்பதிவுக்கு ஏற்றாற்போல் அதிக அளவிலே பேருந்துகளை விட்டு பயணிகளின் துயர் துடைக்க

அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீபாவளி போன்ற பண்டிகை தினங்களில் சென்னையிலிருந்து வெளியூர்களுக்கும், வெளியூர்களிலிருந்து சென்னைக்கும் பயணிக்கின்ற பயணிகளுடைய வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஆன்லைன் டிக்கெட் புக்கிங் திட்டத்தை சென்னை கோட்டையிலே தொடங்கி வைத்து, மற்ற மாநிலங்களைவிட மிகப் பெரிய ஒரு வரவேற்பை இன்று தமிழகத்திலே இருக்கின்ற மக்களிடத்திலே பெற்றிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாதம் ஒன்றுக்கு சராசரியாகப் பார்க்கின்ற பொழுது மொத்த பயணச் சீட்டு முன்பதிவில் 27 சதவீதம் அளவிற்கு ஆன்லைன் டிக்கெட் புக்கிங்கை மட்டும் இன்று பயணிகள் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றனர். அதன்படி, இயக்கப்படுகின்ற பேருந்துகளுக்கு பண்டிகைக் காலங்களில் தேவையான, குறிப்பாக தீபாவளிக்குத் தேவையான கூடுதல் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தப் பேருந்துகளுக்கான பயணச் சீட்டுகள் ஆன்லைன்மூலம் பதிவு செய்யக்கூடிய வாய்ப்பை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். கூடுதல் பேருந்துகள் தேவைப்படும். நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுத்து இயக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரில் உள்ள புதிய பேருந்து நிலையத்தில்



தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தின் அலுவலகத்தில் பயண முன்பதிவு வசதி ஏற்படுத்தித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெல்லாம் பயணிகளுடைய முன் பதிவுகள் அவசியம் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் உடடினயாகத் துவக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற அந்த இடத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பயணிகளுடைய தேவைகளுக்கேற்ப முன் பதிவு மையம் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதன வண்டிகள் தனியார் மூலமாக அதிக அளவில் இயக்கப்படுகின்றன. பண்டிகைக் காலங்கள் உட்பட பல்வேறு நாட்களில் அவற்றினுடைய கட்டணங்கள் ஒழுங்குமுறையற்று இருக்கிற ஒரு சூழ்நிலையில், தனியார்கள் இயக்கக்கூடிய குளிர்சாதன வண்டிகள், ஆம்னி பேருந்துகளின் கட்டணங்களை ஒழுங்குப்படுத்துவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்டிகை தினங்கள் போன்ற சிறப்பு தினங்களில் குளிர்சாதனப் பேருந்துகளும் மற்றும் தனியார் ஆம்னி பேருந்துகளும் கூடுதல் கட்டணம் வசூலித்தால் புகார் தெரிவிப்பதற்கு புகார் எண்கள் அறிவிக்கப்பட்டு, பெறப்படுகின்ற புகார்களின்மேல் நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு

*முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அவ்வாறு புகார்கள் வரப்பெறுகின்ற அந்தப் பேருந்துகளுடைய உரிமங்களை இரத்து செய்வதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி ஏதேனும் புகார் வரப்பெற்றால், அதிகக் கட்டணம் வசூலிப்பதாகப் புகார் வரப்பெற்றால், நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**19—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

*__5496—திரு. ந. நஞ்சப்பன்:__

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படும் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒன்றாக தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் பகுதியும் மாண்புமிகு அம்மாவின் அரசால் ஏற்கெனவே மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

**திரு. ந. நஞ்சப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒகேனக்கல் மிகச் சிறந்த சுற்றுலா மையமாகும். அந்தச் சுற்றுலா மையத்திற்கு வெளி மாநிலங்களிலிருந்தும், அண்டை மாநிலங்களிலிருந்தும், குறிப்பாக கேரளா, கர்நாடகாவிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் வருகின்றனர். விடுமுறை நாட்களில் அளவு கடந்த கூட்டம் வருகிறது. விபத்துகள் ஏற்படுகின்றன. ஆற்றில் செல்வோரை விபத்து போன்றவற்றிலிருந்து பாதுகாக்க, அவசரமாக அங்கே சுகாதார நிலையம் அமைப்பது அவசியமாகிறது. அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு விரைந்து அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல், பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஒரு மலை கிராமம் ஆகும். ஒகேனக்கல் கிராமம் வனப்பகுதியைச் சார்ந்த நீர்வீழ்ச்சி சுற்றுலாத் தலமாகும். மேலும், இங்கு நீர்வீழ்ச்சி உள்ளதால், அடிக்கடி விபத்துகள் நடக்க வாய்ப்புள்ளதாலும், அவசர சிகிச்சை, சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றும் கர்நாடக எல்லையில் தமிழக மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்க வசதியாக இருப்பதாலும், மலைப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க உண்டான விதிமுறைக்குட்பட்டிருப்பதாலும், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு இக்கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க பரிந்துரை செய்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

**திரு. ந. நஞ்சப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இடவசதியும் அங்கே இருக்கிறது; அரசு நிலமும் இருக்கிறது. அதனால், அதனை அமைப்பதிலும் சிரமம் இல்லை. விரைந்து அமல்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

[2012 நவம்பர் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த மாமன்றத்தின் தலைவராகவும், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் துணைத் தலைவராகவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு என் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நட்டாலம் ஊராட்சியில் ஒரு தொடக்கப் பள்ளி பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. அருகில் பல பள்ளிகள் தற்போது இயங்கி வருகின்றன. அந்த இடமும், கட்டடமும் ஊராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளன. அங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமானால் மலைப் பகுதியில் 20 ஆயிரம் மக்கள் தொகையும், சமவெளிப் பகுதியில் 30 ஆயிரம் மக்கள் தொகையும் இருக்க வேண்டும். மேலும், 8 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களோ, வேறு அரசு மருத்துவமனைகளோ இருக்கக்கூடாது. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை இந்த விதிமுறைகளுக்கு உட்பட்டிருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் கனிவுடன் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.



2012 நவம்பர் 1]

**திரு. டி. சுரேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செங்கம் தொகுதிக்குட்பட்ட தண்டராம்பட்டு வட்டத்திலே சாத்தனூர் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை விதிமுறைகளுக்கு உட்பட்டிருந்தால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் கனிவுடன் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொதக்குடி ஊராட்சியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் கட்டிமுடிக்கப்பட்ட கூடுதல் கட்டடம் கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாக உபயோகப்படுத்தாமல் வீண் செய்யப்பட்டுள்ளது. இதை உடனே உபயோகப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து கருத்துரு பெறப்பட்டு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 நவம்பர் 1

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல்கள் 1 முதல் 4 வரை)@

## பட்டியல் 1

**1—**

### உபரி நிலம்

**வினா எண் 995—திரு எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டத்தில் உபரி நிலம் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ள பிரச்சினை எத்தனை?*

*(ஆ) வழக்கை விரைந்து நடத்தி முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) திருப்பூர் மாவட்டத்தில் உபரி நிலம் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் 14 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. ஒப்படைதாரர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்படை, நிபந்தனைகளை மீறியதற்காக ரத்து செய்ததை எதிர்த்தும், நிலம் ஒப்படை கேட்டு மனு செய்தவர்களுக்கு மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்தும் ஒப்படைதாரர்களும் உபரி நில அறிவிப்பில் மாற்றம்கோரி நில உடைமையாளர்களும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.*

*(ஆ) நிலுவையிலுள்ள 14 வழக்குகளில், 8 வழக்குகளுக்கு பத்திவாரி அறிக்கை தயார் செய்ய பரிசீலனையில் உள்ளது.*

*@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.*



2012 நவம்பர் 1]

*4 இனங்களில் எதிர்வாதுரை தயார் செய்ய அரசு வழக்கறிஞர்களிடம் நிலுவையில் உள்ளது. மீதம் உள்ள இரண்டு இனங்களில் எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்கூறிய 14 வழக்குகளும் திருப்பூர் மாவட்டத்திற்குச் சம்பந்தப்பட்டவை.*

**2—**

### பட்டா

**வினா எண் 8753—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்ககிரி தொகுதி, கன்னந்தேரி ஆதிதிராவிடர் தெருவிற்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கன்னந்தேரி கிராமம், ஆதி திராவிடர் தெருவில் வசித்த 16 பயனாளிகளுக்கு மேற்படி கிராமத்தில் உள்ள, புல எண் 22/1ஏ1 இல், வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டும், தொகுப்பு வீடுகள் கட்டியும் கொடுக்கப்பட்டுவிட்டன. எனவே, இவர்களுக்கு புதிய வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து வினா எழாது.*

**3—**

### சுனாமி நிவாரணம்

**வினா எண் 11604—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உலக வங்கி உதவித் திட்டத்தின்கீழ் சுனாமி நிவாரணப் பணியில் மெரினாவில் மேற்கொள்ளப்படும் பணிகள் எப்போது முடிவுறும்?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*உலக வங்கி உதவித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் சுனாமி நிவாரணப் பணியில் மெரினாவில் நொச்சி நகரில் 628 வீடுகள் கட்டும் பணி ஜூன் 2012-க்குள் முடிவுறும்.*

**4—**

**சுனாமி நிவாரணம்**

**வினா எண் 11608—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உலக வங்கி உதவித் திட்டத்தின்கீழ் சுனாமி நிவாரணப் பணியில் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன ?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*உலக வங்கி உதவித் திட்டத்தின்கீழ் சுனாமி நிவாரணப் பணியில் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் 2,048 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டு 2,048 குடியிருப்புகளுக்கும் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் முடிவுப் பணிகள் (பூச்சு வேலை முதலியன) நடைபெற்று வருகின்றன. அக்குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி முடிவு செய்ய வேண்டும். அனைத்துப் பணிகளும் டிசம்பர் 2012-க்குள் முடிக்கப்படும்.*

**5—**

**பட்டா**

**வினா எண் 11126—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, வள்ளியூர் பேரூராட்சி, சண்முகபுரம், கேசவனேரி பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா ?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*ராதாபுரம் வட்டம், வடக்கு வள்ளியூர் பகுதி 2 கிராமம், சண்முகபுரம், புல எண் 1625/1A 2A, 2B மற்றும் 3-இல் பரப்பு 1.47.0 ஹெக்டேர் தீர்வை ஏற்பட்ட தரிசு நிலத்தில் 29 நபர்கள் வீடு கட்டி உள்ளார்கள். அவர்களில் 15 நபர்களுக்கு உள்ளூரில் வேறு வீடு உள்ளதாலும், 13 நபர்கள் பிரஸ்தாப இடத்தில் வசிக்காது வெளியூரில் குடியிருந்து வருவதாலும், ஒரு நபர் முதியோர் உதவித் தொகை பெற்று வருவதாலும் அரசு விதிமுறைகளின்படி வீட்டுமனைப் பட்டா பெற தகுதி இழப்பதால் மேற்படி நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

*ராதாபுரம் வட்டம், வடக்கு வள்ளியூர் பகுதி 2 கிராமம் புல எண் 1660/1, 3-இல் பரப்பு 4.32.5 ஹெக்டேர் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் 48 நபர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். ஒரு முறை வரன்முறைப்படுத்தும் திட்டம் 30-9-2011 உடன் முடிவடைந்து விட்டதால், ஆக்கிரமிப்பினை வரன்முறை செய்து மேற்படி நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

**6—**

**சுனாமி நிவாரணம்**

**வினா எண் 12366—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தில் ஊரகப் பகுதிகளில் வீடுகள் கட்டும் பணிகளின் தற்போதைய நிலை என்ன ?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தில்,* Rajiv Gandhi Rehabilitation Programme *திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதிகளில் 17,826 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; மற்றும் 473 வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.*

*மேலும், உலக வங்கி நிதி உதவியுடன்* (World Bank, ETRP) *அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ்) ஊரகப் பகுதிகளில் 7505 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; மற்றும் 6859 வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.*

**7—**

**சுனாமி நிவாரணம்**

**வினா எண் 12410—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உலக வங்கி உதவித் திட்டத்தின்கீழ் சுனாமி நிவாரணப் பணியில் திருவொற்றியூர் அகில இந்திய வானொலி நிலைய இடத்தில் வீடுகள் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*திருவொற்றியூர் அகில இந்திய வானொலி நிலைய இடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**8—**

**பட்டா**

**வினா எண் 13168—திரு. மு. திராவிடமணி:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*(அ) கூடலூர் ஜென்மம் ஒழிப்பு சட்டம் பிரிவு 17-இன்கீழ் வனத் துறையிடம் ஒப்படைக்கப்பட்ட நிலம் போக மீதமுள்ள நிலத்திற்கு பட்டா வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 24/69-இன் பிரிவு 17-க்கு விதி திருத்த அரசாணை வெளியிடப்பட்ட பின்னர் நில வரி திட்ட அமலாக்கத்தின்போது வனமாக அறிவிக்கை செய்யப்பட்ட நிலம் போக மீதமுள்ள நிலங்களில் மேற்படி சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு அரசினால் வழங்கப்படும் திருத்த ஆணை அடிப்படையில் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**9—**

**சுற்றுலா பூங்கா**

**வினா எண் 2054—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி - திருப்பூர் சாலையில் சுற்றுலா பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஊத்துக்குளி – திருப்பூர் சாலையில் ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எஸ். பெரியபாளையம் மற்றும் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நெருப்பெருச்சல் ஊராட்சி (தற்போது திருப்பூர் மாநகராட்சி) உள்ளடக்கிய அஞ்சறைக் குளத்தில் பறவைகள் அதிகமாக வருவதைத் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம்*

[2012 நவம்பர் 1

பறவைகள் கண்காணிப்புக் கோபுரம் (Birds Watch Tower) ரூ.6,00,000/- மதிப்பீட்டில் அமைக்க திருப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு நிருவாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**10—**

## ஆற்று நீர்

**வினா எண் 4930—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரியிலுள்ள உயர் தொழில்நுட்பப் பூங்காவிற்கு தாமிரபரணி ஆற்று நீரை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 10-9-2011 நாளிட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஆணை எண் 85-இல் திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரியிலுள்ள உயர் தொழில்நுட்பப் பூங்காவிற்கு உடனடி குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு தற்போதுள்ள நாங்குனேரி திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 0.70 mld குடிநீர் ஒரு கிலோ லிட்டர் ரூ. 60/-வீதம் தற்காலிகமாக வழங்க ரூ. 162.00 இலட்சம் செலவில் வைப்புத்திட்டமாக நிறைவேற்றவும், இத்தொழில்நுட்பப் பூங்காவிற்கென தனியாக குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டபின், இத்திட்டம் துண்டிக்கப்படும் என்ற நிபந்தனையின் பேரிலும் ஆணையிடப்பட்டு தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**11—**

## குப்பைகளை அகற்றல்

**வினா எண் 4967—திரு. ப. பார்த்தசாரதி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*விருகம்பாக்கம் தொகுதியில் உள்ள குப்பைகளை அகற்ற அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ஆம். தினந்தோறும் குப்பை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதிக அளவில் பணியாளர்களும், வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டு தேங்கிய குப்பைகளை அகற்றிக் கொண்டிருக்கின்றனர்.

**12—**

## வீடுகள்

**வினா எண் 6477—திரு. பொன். ராஜா:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொன்னேரி தொகுதிக்குட்பட்ட கடலோர கிராமங்களில் விடுபட்டவர்களுக்கு சுனாமி வீடுகள் கட்ட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர கிராம மக்களுக்கு இராஜிவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ETRP – VRCC திட்டம் போன்ற திட்டங்கள்மூலம் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது. இராஜிவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் முடிவடைந்துள்ளது. மேலும் ETRP – VRCC திட்டம் 31-12-2011 அன்றுடன் முடிவடைந்துள்ள நிலையில், பொன்னேரி தொகுதிக்குட்பட்ட கடலோர கிராமங்களில் விடுபட்டவர்களுக்கு சுனாமி வீடுகள் கட்டுவது குறித்து தற்போது பரிசீலித்திட வழிவகை இல்லை.

[2012 நவம்பர் 1

**13—**

## குடியிருப்பு

**வினா எண் 3217—திரு. கு. நல்லதம்பி:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எழும்பூர் தொகுதி 61-வது வட்டம் திடீர் நகர் குடிசைப் பகுதியில் உள்ள குடும்பங்களுக்கு, அதே இடத்தில் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை, எழும்பூர் தொகுதி 61-வது வட்டத்தில் உள்ள திடீர் நகர் குடிசைப் பகுதி அமைந்துள்ள இடம் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமானதாகும் இக்குடிசைப்பகுதி அமைந்துள்ள நிலத்தில் 11 மனை* (grounds) *பரப்பளவில் சென்னை பெருநகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனருகில் சுமார் 700 குடும்பங்கள் வசிக்கின்றன. சென்னை மாநகராட்சியிடமிருந்து இந்நிலத்தினை குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு நில மாற்றம் செய்ய இசைவு கிடைக்கப்பெற்ற பின் இப்பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் இராஜீவ் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

**14—**

## வீடுகள்

**வினா எண் 3218—திரு. கு. நல்லதம்பி:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*(அ) எழும்பூர் தொகுதி 46-வது வட்டத்தில் திடீர் நகர் குடிசைப் பகுதி மக்களுக்கு மாற்று இடமோ அல்லது அதே இடத்தில் கான்கிரீட் வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை, எழும்பூர் தொகுதி, 46-வது வட்டத்தில் உள்ள திடீர் நகர் குடிசைப் பகுதி நிலம் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமானது ஆகும். சென்னை மாநகராட்சியிடமிருந்து இந்நிலத்தினை குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு நில மாற்றம் செய்ய இசைவு கிடைக்கப்பெற்ற பின் இப்பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் இராஜீவ் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

**15—**

## குடியிருப்புகள்

**வினா எண் 4979—திருமதி க. அழகுவேலு:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சியில் வீட்டு வசதித் துறையின்மூலம் புதிய குடியிருப்பு வீடுகள் கட்டி, விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*கள்ளக்குறிச்சியில் வீட்டு வசதி வாரியத்துக்குச் சொந்தமான நிலம் ஏதும் இல்லை. எனவே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்டி விற்பனை செய்யும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.*

**16—**

**திண்காரை தளம்**

**வினா எண் 7837—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், வடக்கு வள்ளியூர் பேரூராட்சி, வார்டு எண் 13, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு பகுதியில் திண்காரை தளம் அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் அமைந்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்புப் பகுதியில் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டு பராமரிப்பிற்காக பேரூராட்சி வசம் 21-7-1999 அன்று ஒப்படைப்பு செய்யப்பட்டுவிட்டது. ஆகவே, இத்திட்டப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் திண்காரை தளம் அமைக்க இயலாது.*

**17—**

**வீடுகள்**

**வினா எண் 7899—திரு. கே. தங்கவேல்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூர் மாவட்டத்தில், வீடுகள் கட்டும் திட்டத்தில் முடிவடையாத பணிகளை நிறைவு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*திருப்பூர் மாவட்டத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 8 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 8 திட்டப் பணிகளும்*





*முழுமையாக நிறைவு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, திருப்பூர் மாவட்டத்தில் நிறைவு செய்யப்படாத திட்டம் எதுவும் நிலுவையில் இல்லை.*

**18—**

**பட்டமளிப்பு விழா**

**வினா எண் 7901—திரு. கே. தங்கவேல்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசு பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழாக்களில் பின்பற்றப்படும் கோட் உடை கலாச்சாரத்திற்கு மாற்றாக எளிய விழாவாக நடத்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*ஒவ்வொரு பல்கலைக்கழகமும் அந்தந்தப் பல்கலைக்கழகத்தின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே, அந்தந்தப் பல்கலைக்கழக விதிகளுக்கு உட்பட்டு பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழாக்களில் உடை கலாச்சாரம் பின்பற்றப்பட்டு விழா நடத்தப்படுகிறது.*

**19—**

**விவரச் சுவடி**

**வினா எண் 11421—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை மூலம் ஈரோடு மாவட்ட விவரச் சுவடி வெளியிடும் பணியின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*ஈரோடு மாவட்ட விவரச் சுவடி வரைவு தயாரிக்கப்பட்டு அதன்மீது விவரச் சுவடி நெறிப்படுத்தும் குழுவின் ஒப்புதல்*

[2012 நவம்பர் 1

*பெறப்பட்டு அதனை அச்சிடுவதற்கு அனுமதி அளித்து அரசாணை (நிலை) எண் 212, உயர் கல்வித் துறை, நாள் 7-9-2011-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்விவரச்சுவடியை அச்சடிக்கும் பொருட்டு ஆகும் செலவினத்திற்கான மதிப்பீட்டுப் பட்டியல் சென்னை அச்சக தொழிற் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து பெறப்பட்டு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரின் ஒப்புதலுடன் அச்சிட்டு வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**20—**

**விவரச் சுவடி**

**வினா எண் 11683—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறைமூலம் நீலகிரி, திருச்சி மாவட்ட விவரச் சுவடிகளின் தமிழாக்கம் வெளியிடும் பணியின் தற்போதைய நிலையினை தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

***1. நீலகிரி மாவட்ட விவரச் சுவடி தமிழாக்கம்:***

*நீலகிரி மாவட்ட விவரச் சுவடி தமிழ் மொழிபெயர்ப்புப் பணிகள் நிறைவுபெற்று தமிழ் வளர்ச்சித் துறையினால் மொழிநடை சரி பார்க்கப்பட்டு விவரச் சுவடிகள் நெறிப்படுத்தும் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு அச்சிடுவதற்கு அரசாணை (நிலை) எண் 211, உயர் கல்வித் (டி2) துறை, நாள் 7-9-2011-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையின்படி, நீலகிரி மாவட்ட விவரச் சுவடியின் தமிழாக்கம் அச்சிடுவதற்கான பணியினை சென்னை, அச்சகத் தொழில் கூட்டுறவுச் சங்கத்திடம் 13-12-2011 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. அச்சிடும் பணி நிறைவு பெற்றவுடன் உடனடியாக நீலகிரி மாவட்ட விவரச் சுவடி வெளியிடப்படும்.*



2012 நவம்பர் 1]

***2. திருச்சிராப்பள்ளி மாவட்ட விவரச் சுவடி தமிழாக்கம்:***

*திருச்சிராப்பள்ளி மாவட்ட விவரச் சுவடி தமிழாக்கப் பணிகள் நிறைவு பெற்று தமிழ் வளர்ச்சித் துறையினால் மொழிநடை சரிபார்க்கப்பட்டு தட்டச்சு வடிவில் உள்ளது. இவ்விவரச்சுவடியின் தமிழாக்கம், விவரச் சுவடிகள் நெறிப்படுத்தும் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட உள்ளது. ஒப்புதல் பெறப்பட்டவுடன், அச்சிட்டு வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**21—**

**உபகரணங்கள்**

**வினா எண் 11684—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையில் 2011-2012 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் உபகரணங்கள் வாங்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(i) *2011-2012 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் தமிழ்நாடு ஆவணக் காப்பக நுண்படச் சுருள்களைப் பாதுகாக்க நிலைப்பெட்டிகள் வாங்குவதற்கு அரசாணை (நிலை) எண் 229, உயர் கல்வித் துறை, நாள் 24-10-2011-ல் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணி தமிழ்நாடு காதி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

(ii) *அதி திறன் கொண்ட மின் சேகரிப்புச் சாதனம் மற்றும் அது சார்ந்த பொருட்கள் வாங்குவதற்கு அரசாணை (நிலை) எண் 231, உயர் கல்வித் துறை, நாள் 24-10-2011-ல் ரூ. 2.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இச்சாதனம் மற்றும் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.*

(iii) *சேமிப்புப் பணிகலன், குளிர்சாதனப் பெட்டி மற்றும் தொடர்புடைய உப பொருட்கள் வாங்குவதற்கு அரசாணை (நிலை)*

[2012 நவம்பர் 1

எண் 230, உயர் கல்வித் துறை, நாள் 24-10-2011-ல் ரூ. 23.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்சாதனங்கள் கொள்முதல் செய்யும் பணி எல்காட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(iv) இந்திய அரசிதழ் மற்றும் புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழ்கள் ஆகியவற்றை டிஜிட்டல் ஸ்கேனிங் மற்றும் நுண்படச் சுருள்கள் பணிகள் மேற்கொள்வதற்கு அரசாணை (நிலை) எண் 228, உயர் கல்வித் துறை, நாள் 24-10-2011-ல் ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணி எல்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**22—**

## யோகாசனப் பயிற்சிகள்

**வினா எண் 9160—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மேலாண்மை நிலையத்தில் அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் அனைத்துப் பயிற்சிகளிலும் யோகா, தியானம், எளிய உடற்பயிற்சி, மூச்சுப் பயிற்சி ஆகியவற்றைப் பொதுப் பயிற்சியாகச் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அண்ணா மேலாண்மை நிலையத்தில் அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் பொது மேலாண்மைத் தத்துவங்கள் அடங்கிய பயிற்சிகளில் எல்லாம் யோகா, தியானம், எளிய உடற்பயிற்சி, மூச்சுப்பயிற்சி, மன இறுக்க மேலாண்மை, இறுக்கத்தை வெல்லும் வழி, எளிய ஆசனங்கள் ஆகியவை அடங்கிய மன இறுக்கம் ஆளுகை, யோகா என்ற தலைப்பில் மூன்று மணிநேர பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் யோகா, தியானம், எளிய உடற்பயிற்சி, மூச்சுப் பயிற்சி ஆகியவற்றை பொதுப் பயிற்சியாகச் சேர்க்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசு பரிசீலனையில் இல்லை.



2012 நவம்பர் 1]

**23—**

## பயறு வகை உற்பத்தி

**வினா எண் 13040—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதி விரைவு பயறு வகை உற்பத்தித் திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, தருமபுரி, தூத்துக்குடி மற்றும் வேலூர் மாவட்டங்களுக்கான தொகுப்பு நிலங்களைத் தேர்ந்தெடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, தருமபுரி, தூத்துக்குடி மற்றும் வேலூர் மாவட்டங்களுக்கென தொகுப்பு நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதி விரைவு பயறுவகை உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**24—**

## இறவைப் பயிர் சாகுபடி

**வினா எண் 13230—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறைந்த நீர்ப்பயன்பாட்டில் அதிக லாபம் பெற பாசனப் பகுதிகளில் நீர்ப்பிடிப்புத் திறனை அதிகரித்து இறவைப் பயிர் சாகுபடியை அதிகரிக்கவும் மாற்றுப் பயிர் பரவலாக்கவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

உலக வங்கி நிதி உதவியுடன் 61 உப வடிநிலங்களில் 2007-2008 முதல் 2012-2013 வரை ஆறு வருடங்களில் நீர் மேலாண்மையை செயல்படுத்தி பயிர் உற்பத்தித் திறனைப் பெருக்கவும் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் ரூ. 98 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீர், நிலவளத் திட்டத்தில் பயிர் உற்பத்தியை அதிகரிக்க நீர் மேலாண்மை தொழில் திட்டங்களும் குறைந்த நீரைப் பயன்படுத்தும் பயிர்களை ஊக்குவிக்கும் முறைகள் செயல் விளக்கத் திடல்கள் அமைத்து செயல்படுத்தப்படுகின்றன. பயிர் சாகுபடி செயல் விளக்கங்கள் முறையே பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி+திருந்திய நெல் சாகுபடி+நஞ்சைத் தரிசல் பயறு வகை சாகுபடி, மாற்றுப் பயிர்சாகுபடியை ஊக்குவிக்க மக்காச்சோளம், கேழ்வரகு, பயறு வகைகள், நிலக்கடலை போன்ற பயிர்களில் செயல் விளக்கத் தளைகள் அமைத்து இறவைப் பயிர் சாகுபடி பரப்பினை அதிகரிக்கவும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**25—**

## சுற்றுலா

**வினா எண் 13232—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் நவீன தொழில் நுட்பங்களை அறிந்துகொள்ள இதர மாநிலங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் அட்மா என்ற அமைப்பின்மூலம் செயல்படுத்தப்பட்டு வரும், வேளாண் விரிவாக்க மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ், வேளாண்மை மற்றும் சார்புத் துறைகளான தோட்டக்கலை, கால்நடைத் துறை, பட்டு வளர்ப்பு, வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறை தொடர்பான நவீன தொழில் நுட்பங்களை விவசாயிகள் அறிந்துகொண்டு பயன்பெறும் வகையில் இதர மாநிலங்களுக்கு கண்டுநர் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.



2012 நவம்பர் 1]

**26—**

## பயிர் காப்பீட்டுத் திட்டம்

**வினா எண் 13395—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம் 2011 ஆம் ஆண்டு கடலூர், சிவகங்கை மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்து மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டமாக 2011 காரீப் (நெல் சம்பா) பருவம் முதல் கடலூர், சிவகங்கை மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் 2000 காரீப் பருவம் முதல் தேசிய வேளாண்மை பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு தற்போதும் நடைமுறையில் இருந்து வருகிறது. இத்திட்டம் பகுதிவாரி அடிப்படையில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் சில மாறுபாடுகள் செய்து அதனை மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டமாக 2011 காரீப் (நெல் சம்பா) பருவம் முதல் கடலூர், சிவகங்கை மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக கிராம அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 2012-13 ஆம் ஆண்டிற்கும் இத்திட்டத்தினை முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்திட மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**27—**

## மகளிர் குழு

**வினா எண் 13404—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 1

தமிழ்நாட்டில் பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*2011-12 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 30 மாவட்டங்களில் 257 பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்களுக்கு வேளாண் சார்ந்த சிறு தொழில்கள் தொடங்குவதற்குத் தேவையான பயிற்சியும் நிதியுதவியும் அளிக்கப்பட்டுள்ளது. 2012-13 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.*

**28—**

## விவசாயப் பொறியியல் துறை

**வினா எண் 14410—திருமதி ம. சக்தி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியில் இயங்கி வந்த இடத்தில் விவசாய பொறியியல் துறையை மீண்டும் அதே இடத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) 2009 ஆம் நிதியாண்டுடன் வேளாண்மை பொறியியல் துறையின் காவிரிப் பாசனத் திட்டப் பணிகள் முடிவுற்றமையால் இத்திட்டம் முடிக்கப்பட்டு, பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சீர்காழியில் இயங்கி வந்த அலுவலகம் மூடப்பட்டுவிட்டது. மேலும், அரசு நிர்ணயித்துள்ளபடி ஒரு வருவாய்க் கோட்டத்திற்கு ஒரு உபகோட்ட அலுவலகம் என்கிற அடிப்படையில் மயிலாடுதுறை வருவாய்க் கோட்டத்திற்கு மயிலாடுதுறையில் வேளாண்மைப் பொறியியல் துறையின் ஒரு*



2012 நவம்பர் 1]

*உபகோட்ட அலுவலகம் இயங்கி வருகின்றபடியால், சீர்காழியில் கூடுதலாக ஒரு உபகோட்டம் இயக்க இயலாது.*

*(ஆ) எழவில்லை.*

**29—**

## விழிப்புணர்வு

**வினா எண் 14980—திரு. ஆர். சாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியிலுள்ள நெல், கரும்பு, வாழை, தென்னை விவசாயிகளுக்கு விவசாயம் சார்ந்த தொழில் முன்னேற்றத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*பயிர் வாரியான சாகுபடித் தொழில்நுட்பங்கள், வேளாண் பயிர் உற்பத்தியைப் பெருக்கச் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள் மற்றும் இதர விவரங்கள் பெறவும், மானியம் பெறவும் அணுக வேண்டி நபர் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய விவசாயிகள் கையேடு-உணவு தானியம் மற்றும் வணிகப் பயிர்கள் உற்பத்தித் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்காக அரசின் மானிய திட்டங்கள் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. மேலூர் தொகுதியில் நெல், கரும்பு மற்றும் தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இக்கையேடு விவசாயிகள் பயிற்சி, கோடை முகாம் மற்றும் இதர கிராமப்புறக் கூட்டங்கள் நடத்தப்படும்போது வழங்கப்பட்டு, விவசாயம் சார்ந்த தொழில் முன்னேற்றத்திற்கு போதிய விழிப்புணர்வும் ஊக்கமும் வேளாண்மைத் துறைமூலம் வழங்கப்பட்டு வருகிறது.*

**30—**

## மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 15215—திரு ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 1

*2011-12 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்மூலம் பணிகள் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*2011-12 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தினை ரூ. 40.00 இலட்சம் செலவில் செயல்படுத்த அரசாணை (3D) எண் 127, வேளாண்மைத் துறை, நாள் 15-11-2011-இல் ஆணைகள் வெளியிடப்பட்டன. அதன்படி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் சேலம், நாமக்கல், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், தருமபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் ரூ. 40.00 இலட்சம் செலவில் 1249 எக்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டது.*

**31—**

## பகுதி நேர அங்காடி

**வினா எண் 3700—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நாங்குப்பட்டி ஊராட்சி, 1-வது வார்டு, எஸ். நாங்குப்பட்டியில் பகுதி நேர அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதியிலுள்ள விராலிமலை ஒன்றியத்தில் மருதம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டுப்பாட்டில் செயல்படும் HP160 நாங்குப்பட்டி (இருப்பு மாங்குடி) முழுநேர அங்காடி தற்போது 422 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இத்தாய் நியாய விலைக் கடையுடன் எஸ்.நாங்குப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 65 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, தற்பொழுது நடைமுறையில் உள்ள அரசு ஆணை எண் 147, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எப்1) துறை, நாள் 24-8-2006-ன்படி புதிய பகுதி நேர அங்காடி அமைத்திட பகுதி நேர அங்காடியில் குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். எனவே, மேற்படி அரசாணையிலுள்ள நெறிமுறைகள் பூர்த்தி ஆகாத நிலையில் எஸ்.நாங்குப்பட்டி கிராமத்தில் புதிய பகுதி நேர அங்காடி அமைத்திட வாய்ப்புகள் இல்லை.*



2012 நவம்பர் 1]

**32—**

## கட்டடம்

**வினா எண் 4543—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், ஏனாதி செவல் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், ஏனாதி செவல் கிராமத்தில் புதிய பகுதி நேர அங்காடிக்கு கட்டடம் கட்ட உரிய இடத்தை அவ்வூர் மக்கள் அளிக்கும்பட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி பெற்று கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**33—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 6785—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்பகோணம் நகராட்சிக்கு உட்பட்ட நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கும்பகோணம் நகராட்சிக்கு உட்பட்ட நியாய விலைக் கடைகளுக்கு சொந்த கட்டடம் கட்ட உரிய இடத்தை அவ்வூர் மக்கள் அளிக்கும் பட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி பெற்று கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**34—**

**கட்டடம்**

**வினா எண் 7453—திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி, கண்ணமங்கலம் பேரூராட்சி, ஜாகிர்உசேன் தெருவிலுள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரணி, கண்ணமங்கலம் பேரூராட்சி, ஜாகிர்உசேன் தெருவிலுள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டுவதற்கு உரிய இடத்தை அடையாளம் காண்பித்து சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி அளிக்கும்பட்சத்தில் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**35—**

**மேம்பாட்டுத் திட்டம்**

**வினா எண் 8956—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2012 நவம்பர் 1]

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்பாட்டுப் பணி மேற்கொள்ள அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள வனப் பகுதிகளைப் பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் திருநெல்வேலி, கோவை, திண்டுக்கல், கன்னியாகுமரி, மதுரை, தேனி, திருப்பூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தீத்தடுப்புப் பணிகள், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள், வேட்டைத் தடுப்புப் பணிகள், சூரிய மின்வேலி அமைத்தல் போன்ற முக்கிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் 2010-11 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் ரூ.107.36 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 2011-12 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.236.58 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 29-2-2012 வரை ரூ.136.88 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**36—**

**மரம் வளர்த்தல்**

**வினா எண் 7851—திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லை சுற்றியுள்ள வனப் பகுதிகளில் குளிர்ச்சி தரும் பெரும் மரங்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளான 24-2-2012 முதல் செயல்படுத்தப்பட்டு வரும், மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின்கீழ் தமிழகம் முழுவதும்

64,00,000 மரக்கன்றுகள் நடும் பணி நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், ஒகேனக்கல்லை சுற்றியுள்ள காப்புக் காடுகளின் எல்லை ஓரங்களிலும் மற்றும் ஒகேனக்கல் செல்லும் சாலையின் இருமருங்கிலும் 4,000 எண்ணிக்கையில், ஆல், அரசு, புங்கன், வேம்பு, இலுப்பை, மகாகனி, நாவல், நீர்மத்தி, தேக்கு, செண்பகம் போன்ற குளிர்ச்சி தரும் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**37—**

### காடுகள்

**வினா எண் 8995—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் தரம் குன்றிய காடுகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் வனச் செயல் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டு தரம் குன்றிய காடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வனத்தினைப் பாதுகாக்க 1997-ல் துவக்கப்பட்ட தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், 17755 ஹெக்டேர் பரப்பிலும், தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், 1050 ஹெக்டேர் பரப்பிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**38—**

### நெல் கொள்முதல்

**வினா எண் 4463—திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நேரடி நெல் கொள்முதல் மையங்களில் (D.P.C.) விவசாயிகளை விட வியாபாரிகள் பல மடங்கு பயனடைவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நெல் கொண்டு வருபவர்கள் விவசாயிகள்தான் என்பதை உறுதி செய்ய சிட்டா, அடங்கல் ஆகியவற்றின் நகல்கள் பெறப்பட்டு டோக்கன் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது. சிட்டா, அடங்கல் ஆகியவற்றின் நகல்கள் விற்பனைப் பட்டியலுடன் இணைக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. வியாபாரிகளை முற்றிலும் தவிர்க்கும் வகையில் விவசாயிகளுக்கு தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள விவசாயி அடையாள அட்டையை சரிபார்த்த பின்னரே நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

**39—**

### நெல் கொள்முதல்

**வினா எண் 13013—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், வயலோகம் சாலையில் அமைந்துள்ள நெல் கொள்முதல் நிலையத்தை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், வயலோகம் சாலையில் உள்ள அன்னவாசல் கிராமத்தில் கடந்த 13-2-2012-ல் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, தொடர்ந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி நெல் கொள்முதல் நிலையம் மூலமாக 26-3-2012 வரை 577 மெட்ரிக் டன் அளவில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

[2012 நவம்பர் 1

**40—**

**ரொக்கப் பரிசு**

**வினா எண் 10192—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பூம்புகார் மாநில விருது பெறும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசை ரூ.50,000/-லிருந்து ரூ.75,000/- ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்:**

*(அ) பூம்புகார் மாநில விருது பெறும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசை ரூ.50,000/-லிருந்து ரூ.75,000/- ஆக உயர்த்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

**41—**

**ரொக்கப் பரிசு**

**வினா எண் 10193—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருதில் வழங்கப்படும் ரொக்கப் பரிசை ரூ.5,000/-லிருந்து ரூ.10,000/- ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்:**

*(அ) பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருதில் வழங்கப்படும் ரொக்கப் பரிசை ரூ.5,000/-லிருந்து ரூ.10,000/- ஆக உயர்த்தி வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

**42—**

**அடையாளப் பதிவு**

**வினா எண் 10194—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பூம்புகார் கழகம்மூலம், நாச்சியார்கோவில் விளக்கு, தோடா பூ வேலைப்பாடு, பத்தமடைப் பாய்கள் ஆகியவற்றுக்கு நிலவியல் அடையாளப் பதிவு பெறும் செயற்குறிப்பின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்:**

*நாச்சியார்கோவில் விளக்குகள் மற்றும் பத்தமடை பாய்களுக்கு பூம்புகார் நிறுவனம் அளித்த விண்ணப்பத்தின் பேரில், நிலவியல் அடையாளப் பதிவு அதிகாரிகளால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு விரைவில் நிலவியல் அடையாளப் பதிவு வழங்கப்படவுள்ளது. தோடா சித்திர வேலைப்பாடு மீதான விண்ணப்பத்தின் பதிவுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

[2012 நவம்பர் 1

43—

## ஓய்வூதியம்

**வினா எண் 10204—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விருது பெறும் பூம்புகார் கழக கைவினைஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- ஓய்வூதியம் வழங்கப்படுவதை ரூ.1,500/- ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்:**

*பூம்புகார் மாநில விருது பெறும் கைவினைஞர்களுக்கு அறுபது வயது அடைந்தவுடன், மாத ஓய்வூதியம் ரூ.1,000/- மத்திய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியத்தை உயர்த்துவது குறித்து மத்திய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.*

44—

## கண்காட்சி

**வினா எண் 10225—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு கைத்தொழில்கள் வளர்ச்சித் திட்டத்தின் மூலம், மாமல்லபுரத்தில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நிரந்தரமாக கண்காட்சி அமைக்கும் திட்டத்தின் நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்:**

*மாமல்லபுரத்திலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கடற்கரை ஒய்வு விடுதி வளாகத்தில் 4.45 ஏக்கர் பரப்பளவில் ரூ.2 கோடி மதிப்பில், நிரந்தர கண்காட்சித் திடல் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது, இத்திட்டத்திற்கான மத்திய அரசின் நிதியுதவி அதிகரிக்கப்பட்டுள்ளதால், இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்த சிறப்பான நிரந்தர கண்காட்சித் திடல் அமைக்க, ரூ.3.00 கோடி செலவில் திருத்தப்பட்ட கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய ஆணைகள் பெறப்பட்டவுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*



2012 நவம்பர் 1]

45—

## கண்காட்சித் திடல்

**வினா எண் 10226—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி கழகத்தின்மூலம் கன்னியாகுமரியில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நிரந்தரமாகக் கண்காட்சித் திடல் அமைக்கும் பணியின் நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரியில் கலங்கரை விளக்கம் அருகில் 1.89 ஏக்கர் பரப்பளவில், ரூ.2 கோடி செலவில் நிரந்தர கண்காட்சித் திடல் அமைப்பதற்கான பணிகள், பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கட்டடத்தின் வரைபடங்கள் இறுதி செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையால் ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளது.*

46—

## அருங்காட்சியகம்

**வினா எண் 10228—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

சென்னை அண்ணா சாலை, பூம்புகார் விற்பனை நிலைய வளாகத்தில், கைத்திறன் அருங்காட்சியகம் அமைக்கும் பணியின் நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்:**

சென்னை, அண்ணா சாலையிலுள்ள பூம்புகார் விற்பனை நிலைய வளாகத்தில் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில், அருங்காட்சியகம் அமைக்க முடிவு செய்யப்பட்டு, அதன் கட்டுமானப் பணிகள், பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை 75 விழுக்காடு கட்டுமானப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள வேலைகள் முடிக்கப்பட்டு, இன்னும் மூன்று மாத காலத்திற்குள் இந்த அருங்காட்சியகம் துவக்கப்படும்.

**47—**

**நிலவியல் அடையாளப் பதிவு**

**வினா எண் 10229—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் கழகம்மூலம், மாமல்லபுரம் கற்சிற்பங்கள் மற்றும் தம்மம்பட்டி மரச்சிற்பங்களுக்கு நிலவியல் அடையாளப் பதிவு பெறும் செயற்குறிப்பின் தற்போதைய நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்:**

மாமல்லபுரம் கற்சிற்பங்கள் மற்றும் தம்மம்பட்டி மரச்சிற்பங்களுக்கு நிலவியல் அடையாளப் பதிவு பெறுவதற்கான நடவடிக்கைகள் சட்டபூர்வமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



2012 நவம்பர் 1]

**48—**

**பட்டுக் கூடுகள்**

**வினா எண் 10238—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு பட்டுக் கூடுகள் விற்பனையில் நியாயமான விலை கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் பட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக் கூடுகளை விற்பனை செய்வதற்கு 19 இடங்களில், அரசு பட்டுக் கூடு அங்காடிகள் செயல்பட்டு வருகிறன்றன. பட்டுக் கூடு அங்காடி அலுவலர் விவசாயிகள் விற்பனைக்கு எடுத்து வரும் பட்டுக் கூடுகளின் தரம் குறித்த பரிசோதனைகள் செய்து, பெறப்படும் பட்டு நூலின் அளவைக் (Shell ratio) கண்டறிந்து அடிப்படை விலை நிர்ணயம் செய்கிறார்.

பட்டு நூல் உற்பத்தி செய்யும் பட்டு நூற்பாளர்கள், அங்காடியில் அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்ட பட்டுக் கூடுகளைப் பகிரங்க ஏல முறையில் கொள்முதல் செய்கின்றனர். பட்டுக் கூடுகளுக்குரிய தொகையினை, பட்டு நூற்பாளர்களிடமிருந்து பெற்று விவசாயிகளுக்குப் பட்டுவாடா செய்வதற்கு அங்காடி அலுவலர் உடனடி நடவடிக்கை மேற்கொள்கிறார். இவ்வாறு பட்டு விவசாயிகளுக்கு பட்டுக் கூடு விற்பனையில் நியாயமான விலை கிடைக்கிறது.

[2012 நவம்பர் 1

**49—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 1616—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதி, முல்லை பெரியாற்றுத் தண்ணீரை தொட்டமாந்துறையிலிருந்து கால்வாய் வெட்டி, சின்னமனூர் ஒன்றியம், எரசை, வெள்ளையம்மாள்புரம், ஓடைப்பட்டி மற்றும் காமாட்சிபுரத்திற்குக் குடிநீர் வசதி செய்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

கம்பம் தொகுதி, முல்லைப் பெரியாற்றுத் தண்ணீரை தொட்டமாந்துறையிலிருந்து கால்வாய் வெட்டி, சின்னமனூர் ஒன்றியம், எரசை, வெள்ளையம்மாள்புரம், ஓடைப்பட்டி மற்றும் காமாட்சிபுரத்திற்குக் குடிநீர் வசதி வழங்க வேண்டுமானால், மேலக்கூடலூர் கிராமத்தில் பெரியாற்றின் குறுக்கே அணை கட்டி சுமார் 25 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் வெட்டப்பட வேண்டும். கால்வாய் வெட்டப்படும் பெரும்பகுதி நன்கு விளையும் பட்டா நிலங்களாகவும், சில இடங்களில் வன நிலங்களாகவும் உள்ளதால், இந்நிலங்களைக் கையகப்படுத்துவது கடினமாகும். எனவே, முல்லை பெரியாற்றுத் தண்ணீரைத் தொட்டமாந்துறையிலிருந்து கால்வாய் வெட்டி, சின்னமனூர் ஒன்றியம், எரசை, வெள்ளையம்மாள்புரம், ஓடைப்பட்டி மற்றும் காமாட்சிபுரத்திற்குக் குடிநீர் வசதி அளிக்க இயலாது.

**50—**

**கதவணை**

**வினா எண் 9262—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2012 நவம்பர் 1]

கரூர் மாவட்டம், மாயனூர் கிராமத்தில் காவிரியாற்றின் குறுக்கே கட்டளைப் படுகை அணையிலிருந்து 250 மீட்டருக்குக் கீழே புதிதாக ஒரு கதவணை அமைக்கும் பணியினைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

கரூர் மாவட்டம், மாயனூர் கிராமத்தில் காவிரியாற்றின் குறுக்கே கட்டளைப் படுகை அணையிலிருந்து 250 மீட்டருக்குக் கீழே புதிதாக ஒரு கதவணை அமைக்கும் பணிக்கு அரசாணை எண் 29, பொதுப் பணித் (என் 2) துறை, நாள் 5-2-2009-ல் ரூ.189 கோடிக்கு திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்த கதவணை கட்டுமானப் பணிகளில், இரும்பு சட்டர்களுடன் கூடிய 97 தூண்கள் மற்றும் அதன்மீது அமைக்கப்படும் இரு வழிப்பாலம் ஆகியவை உள்ளன. இப்பணிகளில் இதுவரை 48 தூண்கள் கட்டி முடிக்கப்பட்டு 39 தூண்களுக்கான அஸ்திவாரப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பாலம் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை சுமார் 60% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பாசனத்திற்கு திறந்து விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதால் கட்டுமானப் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

**51—**

**இணைப்புக் கால்வாய்**

**வினா எண் 9264—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெண்ணை ஆற்றினை செய்யாறு வழியாக இணைப்புக் கால்வாய்மூலம் பாலாற்றுடன் இணைக்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலை என்ன?

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*திருவண்ணாமலை மாவட்டம், பெண்ணையாற்றினை செய்யாறு மூலமாக பாலாற்றுடன் இணைத்து நந்தன் கால்வாய்க்கு நீர் வழங்கும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.174.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டு (தற்போதைய மதிப்பீடு ரூ.200 கோடி) மதிப்பீடு மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசன பயன் அளிக்கும் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறும்பொருட்டு மத்திய நீர் குழுமத்திற்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது.*

**52—**

### தண்ணீர்

**வினா எண் 9273—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நெய்யாறு இடதுகரைக் கால்வாயின்மூலம் கேரள அரசு பாசனத்திற்குத் தண்ணீர் அளிப்பதை நிறுத்திவிட்டதை மீண்டும் வழங்க கேரள அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 1956 ஆம் ஆண்டு மாநிலங்களைச் திருத்தியமைக்கும் சட்டத்தின்* (States Reorganisation Act, 1956) *விளைவாக கன்னியாகுமரி மாவட்டத்தின் விளவங்கோடு வட்டத்தில் உள்ள சுமார் 9,200 ஏக்கர் பாசனப் பரப்பு தமிழ்நாட்டுடன், இணைந்தது. தமிழ்நாட்டில் உள்ள இப்பகுதிக்கு நெய்யாறு இடதுபுறக் கால்வாய்மூலம் கேரள அரசு முறையாக தண்ணீர் அளித்த போதிலும், அதனுடைய பாசனத் தேவையான 150 கனஅடி நீரைவிட குறைவாகவே தந்தது. இருப்பினும், பிப்ரவரி 2004 முதல் தண்ணீர் தருவதை கேரள அரசு அறவே நிறுத்திவிட்டது. தமிழ்நாடு-கேரள அரசுகளின் பாசன அமைச்சர்களிடையே திருவனந்தபுரத்தில் 13-2-2003 அன்று நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையின்போது, நெய்யாறு திட்டம் பற்றியும் பேசப்பட்டது. தமிழ்நாடு அனுப்பியுள்ள வரைவு ஒப்பந்தத்தை ஆய்வு செய்து, அவ்வரசின் முடிவு, தமிழ்நாட்டுக்குத் தெரிவிக்கப்படும் என்று கேரள அரசின் நீர் ஆதாரத் துறை அமைச்சர் அச்சமயம் தெரிவித்தார். நெய்யாறு ஒரு பன்மாநில நதி என்று தமிழக அரசு தனது 3-11-2010 ஆம் நாளிட்ட கடிதத்தில் உறுதிப்படுத்தியுள்ள நிலையில் தமிழ்நாடு மேற்கொண்டுள்ள ஆய்வுகள் இட அமைப்பு வரைபடம்* (Topo Sketch) *மற்றும் கேரள அரசு பிரசுரம் செய்துள்ள அறிக்கையான "கேரள நீர் ஆதாரங்கள்/ முன்னேற்ற அறிக்கை 1958"* (Water Resources of Kerala Advance Report 1958) *ஆகியவற்றை அனுப்பிவைக்குமாறு மத்திய நீர்வளக் குழுமம் அதன் 29-12-2010-ம் நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டது. இதற்கான விவரங்கள் மத்திய அரசிற்கு 1-3-2011 அன்று அனுப்பி வைக்கப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பாகவும், நெய்யாறு அணையிலிருந்து நீரை விடுவிப்பதற்கு உரிய அறிவுரையினை கேரள அரசிற்கு வழங்க வேண்டியும் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இதற்கிடையே, கேரள அரசு கேட்டுக்கொண்டதன்பேரில், இரு மாநில தொழில்நுட்ப வல்லுநர்கள் கூட்டம் 6-5-2011 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. இதில் எவ்வித ஒருமித்த கருத்தும் எட்டப்படவில்லை.*



2012 நவம்பர் 1]

*நெய்யாறு அணையிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தின் விளவங்கோடு வட்ட பாசனத்திற்காக நீரைப்பெறுவதற்கு இவ்வரசு தொடர்ந்து அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.*

**53—**

### கால்வாய்

**வினா எண் 9287—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அத்திக்கடவு அவினாசி வெள்ளக் கால்வாய் அமைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*அத்திக்கடவு அவினாசி வெள்ளக் கால்வாயானது, வெள்ளக்காலங்களில் பவானி ஆற்றில் மிகுதியான நீரை திருப்பிவிடுவதன்மூலம், 71 கண்மாய்கள் மற்றும் 538 குட்டைகள் காரமடை, அன்னூர், அவினாசி, பவானிசாகர், நம்பியூர், ஊத்துக்குளி, சென்னிமலை, திருப்பூர் மற்றும் பெருந்துறை ஒன்றியங்கள் பயனடைவதற்காக உருவாக்கப்பட்டு, பவானிசாகர் அணை நிரம்பிவழியும் காலங்களில் வினாடிக்கு 2,000 கன அடி வெள்ள நீரை அதன் மேற்பகுதியில் அமைந்துள்ள பில்லூர் அணை நீர்ப்பரப்புப் பகுதியிலிருந்து திருப்பி விடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த 685,866 ஹெக்டேர் (1694.776 ஏக்கர்) பட்டா நிலமும், 11.331 ஹெக்டேர் (28.00 ஏக்கர்) பாதுகாக்கப்பட்ட வன நிலமும் தேவைப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படின் 25,000 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும், 70,05,673 மக்களும் பயன்பெறுவர். திட்டக் கருத்துரு ரூ.1,862 கோடிக்கு தயாரிக்கப்பட்டு இந்திய அரசிடமிருந்து வெள்ள மேலாண்மை திட்டத்தின்கீழ் நிதி கோரப்பட்டுள்ளது.*

**54—**

### புனரமைத்தல்

**வினா எண் 9305—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட்டத்தின்கீழ் திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட சமமட்டக் கால்வாய் புனரமைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட பாசனப் பகுதிகளுக்கு கோயம்புத்தூர் மாவட்டம் காண்டூர் கால்வாயின் 0/0 கி.மீ. முதல் 49.30 கி.மீ. வரையுள்ள பகுதிகளைப்*





*புனரமைப்பதற்கு ரூ.184.50 கோடிக்கு அரசு ஆணை (நிலை) எண் 342, பொதுப் பணி (க்யூ1) துறை, நாள் 29-11-2010-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக்கொண்டுள்ளன.*

**55—**

### வண்ண விளக்குகள்

**வினா எண் 9366—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் கல்லணை இருகரைகளில் இர்வின் பாலம் முதல் தஞ்சாவூர்-நாகப்பட்டினம் சாலை பாலம் வரை மேம்பாடு செய்து வண்ண விளக்குகள் மற்றும் பூங்காக்கள் அமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் கல்லணை இருகரைகளில் இர்வின் பாலம் முதல் தஞ்சாவூர் — நாகப்பட்டினம் சாலை பாலம் வரை மேம்பாடு செய்து வண்ண விளக்குகள் மற்றும் பூங்காக்கள் அமைக்கும் பணியில் 75 சதவீதம் முடிக்கப்பட்டு, மீதமுள்ள அனைத்து பணிகளும் 31-3-2012-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

**56—**

### கட்டடம்

**வினா எண் 10505—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நபார்டு உதவிமூலம் தனிப்பட்ட நோய் ஆய்வு வசதிகள் இல்லாத கால்நடை மருத்துவமனைகளில் புதிய கட்டடங்கள் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*நபார்டு ஆர்.ஐ.டி.எப். திட்டத்தின்கீழ் 360 கால்நடை நிலையங்களுக்கு புதிய நிரந்தரக் கட்டடம் கட்டவும், பண்ணைகளின் மேம்பாட்டிற்காகவும் ரூ.122.24 கோடி ஒப்பளிக்கப்பட்டு, புதிய கட்டடங்கள் கட்டும் பணிகளுக்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கட்டடப் பணிகள் நடவடிக்கையில் உள்ளன.*

**57—**

**மின்சாரம்**

**வினா எண் 10184—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு, தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் சூரிய ஒளிமூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் சூரிய ஒளிமூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தினை மரபுசாரா எரிசக்தித் துறை மானிய உதவி பெற்று செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**58—**

**பட்டுப் பூங்கா**

**வினா எண் 10224—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டுப் பூங்கா அமைக்கும் பணியின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*அறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டுப் பூங்கா அமைக்க மைய அரசின் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின் (SITP) கீழ் ரூ.83.83 கோடி மதிப்பிலான திட்ட அறிக்கைக்கு மத்திய ஜவுளித் துறையின் அரசுச் செயலாளர் தலைமையிலான திட்ட அங்கீகாரக் குழுவால் (PAC) 12-04-2010-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பூங்கா இந்திய கம்பெனிகள் சட்டம் 1956-ன்படி, 20-4-2010-ல்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 75 ஏக்கர் நிலம் காஞ்சிபுரம் தாலுகா கீழ்கதிர்பூர் கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடம் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைக்கு மாற்றம் செய்து அரசாணை (நிலை) எண் 180, வருவாய்த் துறை, நாள்: 20-5-2011-ல் ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது உற்பத்தித் திறன், அளவு எண்ணிக்கை தொடர்பான திருத்திய திட்ட மதிப்பீடு மத்திய அரசின் ஜவுளித் துறையின் திட்ட அங்கீகாரக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண் 180, வருவாய்த் துறை, நாள் 20-05-2011-ல் குறிப்பிட்டுள்ளவாறு, நிலத்தினை பட்டுப் பூங்காவிற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*இத்திட்டத்திற்கு மாநில அரசின் 9% மானியத் தொகையான ரூ. 7.54 கோடி பூங்காவிற்கு வழங்கப்படும் நிலையில் உள்ளது. இத்திட்டத்திற்கு வழங்கப்படும் 75 ஏக்கர் நிலத்தின் 2012 ஆம் ஆண்டின் மதிப்பு ரூ.13.7 கோடி என காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். எனவே, இந்த மதிப்பீட்டின்படி, 75 ஏக்கர் நிலத்தினை பட்டுப் பூங்கா நிர்வாகத்திற்கு மாற்றுவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

[2012 நவம்பர் 1

**59—**

### மண்பாண்டம்

**வினா எண் 5787—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிருஷ்ணகிரி மாவட்டம், வெண்ணம்பள்ளியில் பழுதடைந்துள்ள மண்பாண்டத் தொழில் கூடத்தைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:**

*கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதி, வெண்ணம்பள்ளியில் பழுதடைந்துள்ள மண்பாண்டத் தொழில் கூடத்தைச் சீரமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**60—**

### கழிவு நீர்

**வினா எண் 3112—திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தோல் மற்றும் சாயத் தொழிற்சாலைகளின் கழிவு நீர் ஈரோட்டில் கலப்பதால், மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் மீண்டும் செயல்பட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஈரோடு வட்டத்தில் 154 சாயத் தொழிற்சாலைகளும், 241 சலவைத் தொழிற்சாலைகளும், 186 பிரிண்டிங் தொழிற்சாலைகளும், 42 தோல் தொழிற்சாலைகளும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெற்று*



2012 நவம்பர் 1]

*கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் தனித்தனியே அமைத்து இயங்கி வருகின்றன. இவற்றில் 115 சாயத் தொழிற்சாலைகளும், 33 தோல் தொழிற்சாலைகளும் உயர் நீதிமன்ற ஆணையின்படி, கழிவு நீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலையைக் கடைபிடித்து வருகின்றன. அவ்வாறு பூஜ்ய நிலையைக் கடைபிடிக்காமல் இருந்த சாய/தோல் தொழிற்சாலைகளுக்கு வாரியத்தால் மூடுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய தொழிற்சாலைகள் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் முறையாக இயக்காமல் சுத்திகரிக்கப்படாத கழிவு நீரினை நீர் நிலைகளிலோ, நிலத்திலோ வெளியேற்றும்பட்சத்தில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தாலும், உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவாலும் அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு தவறு செய்யும் தொழிற்சாலைகள்மீது மூடுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வருகிறது. அத்தகைய தொழிற்சாலைகள் தங்களது தவறுகளைச் சரி செய்யும்பட்சத்தில், தொழிற்சாலைகளை மீண்டும் இயக்க உயர் நீதிமன்ற உத்தரவின்பேரில் அனுமதியும் அளிக்கப்பட்டு வருகிறது.*

**61—**

### சுத்திகரிப்பு நிலையம்

**வினா எண் 3114—திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோட்டில் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படாத தொழில் நிறுவனங்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்தில் 154 சாயத் தொழிற்சாலைகளும், 241 சலவைத் தொழிற்சாலைகளும், 186 பிரிண்டிங் தொழிற்சாலைகளும், 42 தோல் தொழிற்சாலைகளும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெற்று*

*கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் தனித்தனியே அமைத்து இயங்கி வருகின்றன. இவற்றில் 115 சாயத் தொழிற்சாலைகளும், 33 தோல் தொழிற்சாலைகளும் உயர் நீதிமன்ற ஆணையின்படி கழிவு நீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலையைக் கடைபிடித்து வருகின்றன. (அவ்வாறு பூஜ்ய நிலையைக் கடைபிடிக்காமல் இருந்த சாய/ தோல் தொழிற்சாலைகளுக்கு வாரியத்தால் மூடுதல் உத்தரவு பிறபிக்கப்பட்டுள்ளது.)*

*மேற்கூறிய தொழிற்சாலைகள் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் முறையாக இயக்காமல் சுத்திகரிக்கப்படாத கழிவு நீரினை நீர் நிலைகளிலோ, நிலத்திலோ வெளியேற்றும்பட்சத்தில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தாலும், உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவாலும் அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு, தவறு செய்யும் தொழிற்சாலைகள்மீது மூடுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வருகிறது. அத்தகைய தொழிற்சாலைகள் தங்களது தவறுகளைச் சரி செய்யும்பட்சத்தில், தொழிற்சாலைகளை மீண்டும் இயக்க உயர் நீதிமன்ற உத்தரவின்பேரில் அனுமதியும் அளிக்கப்பட்டு வருகிறது. கழிவு நீர் சுத்திகரிப்பு அமைக்கப்படாத தொழில் நிறுவனங்கள் மற்றும் வாரியத்தில் இசைவாணை பெறாமல் இயங்கி வரும் தொழிற்சாலைகள் மீதும் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படாத தொழில் நிறுவனங்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்வது இயலாது.*

**62—**

### விமான நிலையம்

**வினா எண் 9812—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை விமான நிலைய விரிவாக்கம் மற்றும் நவீன மயமாக்குதல் தொடர்பான பணிகளை விரைவுபடுத்த மத்திய அரசை வலியுறுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை விமான நிலையத்தில் உள்ள உள்நாட்டு விமான முனையத்தில் முக்கியமான கட்டுமானப் பணிகள் டிசம்பர் 2011-ல் முடிக்கப்பட்டு, விமான போக்குவரத்து நிறுவனங்களின் அலுவலகம், பயணச்சீட்டு வழங்குமிடம் போன்றவற்றிற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் பிப்ரவரி, 2012-ல் முடிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்ட உள்நாட்டு விமான முனையம் பொது மக்கள் சேவைக்காக ஏப்ரல், 2012-ல் திறக்கப்படும். அதேபோல், புதுப்பிக்கப்பட்ட வெளிநாட்டு விமான முனையம் பொது மக்கள் சேவைக்காக ஜுன் 2012-ல் திறக்கப்படும்.*

**63—**

### தானியங்கிப் பணிமனை

**வினா எண் 9949—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் சென்னை, வேளச்சேரி அரசு மத்திய தானியங்கி பணிமனையை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தற்போது அரசு நவீன ரக வாகனங்களை அதிக அளவில் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தி வருவதால், அரசு மத்திய தானியங்கிப் பணிமனையை மேம்படுத்துவதற்காக, புதிய கட்டமைப்பை உருவாக்கி நவீன ரக இயந்திரக் கருவிகள், உபகரணங்கள் வாங்கி தொழிலாளர்களுக்குப் பயிற்சி கொடுத்து அனைத்து வாகனங்களையும் அரசு மத்திய தானியங்கி பணிமனைக்குள்ளேயே பழுது நீக்கம் செய்ய ரூ.15.50 கோடியில் புதிய செயல் திட்டம் உருவாக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.*

[2012 நவம்பர் 1

**64—**

**கணினிகள்**

**வினா எண் 10326—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் பணிமனைகளுக்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலையைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின், இயக்குநரகம் மற்றும் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அனைத்துப் பணிமனைகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் கணினி மயமாக்கப்பட்டு, பணிகள் கணினி மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக, அனைத்துப் பணிமனைகளுக்கும் தேவையான கணினிகளும், இதர உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.*

**65—**

**மீன்பிடித் துறைமுகம்**

**வினா எண் 2988—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டணம் மீன்பிடித் துறைமுகப் பணியைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*மத்திய, மாநில அரசின் பங்களிப்புடன் கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டணம் மீன்பிடித் துறைமுகம் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு இதுவரை மூன்று தவணைகளாக ரூ.30.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், முதற்கட்டப் பணியான அலை தடுப்புச் சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தென்மேற்குப் பருவமழையினாலும், அலையின் சீற்றத்தினாலும் இப்பணியில் காலதாமதம் ஏற்பட்டது. தற்போது முதற்கட்டப் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டப் பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து பணியினை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதல் கட்டப் பணிகள் முடிவுற்றபின் மற்ற பிரிவுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.*



2012 நவம்பர் 1]

**66—**

**ஜி.பி.எஸ். கருவி**

**வினா எண் 2989—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆழ்கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு வழிகாட்டியாகப் பயன்படுத்தும் ஜி.பி.எஸ். கருவியில் தமிழ் மொழியைப் புகுத்தி, மீனவர்களுக்கு இலவசமாக அல்லது மானிய விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மாநில மீன் வளக் கூட்டுறவு இணையங்கள்/ கழகங்கள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள்மூலம் ஜி.பி.எஸ். தகவல் தொடர்புக் கருவி, எக்கோ சவுண்டர், தேடுதல் மற்றும் மீட்பு பிகான் உள்ளடக்கிய கருவி/கலன்பெட்டி வாங்கிட மத்திய அரசு 75% மானிய ஒப்பளிப்பு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஜி.பி.எஸ். உள்ளடக்கிய இதர கருவிகளை மீனவர்கள் வாங்க முன்வரும் சூழ்நிலையில், ஜி.பி.எஸ். கருவியில் தமிழ் மொழியைப் புகுத்தும் தொழில்நுட்ப வழி சாத்தியக்கூறினை ஆராய்ந்து பொருள் வழங்கும் நிறுவனம் அதனை ஏற்கும்பட்சத்தில், மானிய விலையில் மேற்குறித்த உபகரணங்கள் அடங்கிய கருவி/கலன்பெட்டி வழங்கிட பரிசீலிக்கப்படும்.*

[2012 நவம்பர் 1

**67—**

## நிதியுதவி

**வினா எண் 1736—திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிறுபான்மைப் பள்ளிகள் அரசு நிதியுதவி பெறுவதில் தடையாக உள்ள 14-*A *சட்டம் திரும்பப் பெறப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசின் நிதி நிலையைக் கருதி, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம் 1973, அத்தியாயம்-*III, *பிரிவு-14க்கு, பிரிவு-14(*A) *என்ற பிரிவு சேர்க்கப்பட்டது. அதில், "1991-1992 ஆம் கல்வியாண்டு தொடங்கப்பட்ட நாளுக்குப் பின்னர் துவக்கப்பட்ட/தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு/வகுப்புகளுக்கு/பாடப் பிரிவுகளுக்கு எப்போதும் நிதியுதவி அளிக்கப்பட மாட்டாது" என திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.*

*2. எனவே, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம் 1973-ல், பிரிவு-14(*A)*-யினைத் திரும்பப் பெற இயலாது.*

**68—**

## கட்டணம்

**வினா எண் 3118—திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ)* C.B.S.E. *பள்ளி என்ற பெயரில் அதிகக் கட்டணம் வசூலிப்பதை மாநில அரசின் நேரடிக் கண்காணிப்பில் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* C.B.S.E. *பள்ளிகள் துவக்குவதற்கான அனுமதி மற்றும் அங்கீகாரம் மத்திய பாடத் திட்ட இடைநிலைக் கல்வி வாரியத்தால் வழங்கப்படுகிறது. இப்பள்ளிகள் மாநில அரசு நிர்ணயம் செய்யும் கட்டண விகிதத்தினையே பின்பற்ற வேண்டும்.*

*தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணங்களை முறைப்படுத்த 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம் இயற்றப்பட்டு, மேற்காணும் சட்டத்தின்கீழ் கட்டண நிர்ணயக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. எஸ்.ஆர். சிங்காரவேலு அவர்களின் தலைமையிலான குழு* C.B.S.E. *பள்ளிகள் உட்பட அனைத்துத் தனியார் பள்ளிகளுக்கும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய கட்டணத்தை நிர்ணயம் செய்து வருகிறது.*

*மேற்படி குழு நிர்ணயம் செய்த கட்டணத் தொகைக்கு கூடுதலாகக் கட்டணம் ஏதும் வசூலிக்கும் தனியார் பள்ளிகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் பிரிவு 7(3)*(iii)*-ன் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட கூடுதலாக கட்டணம் வசூலிப்பது தெரிய வந்தால், சம்பந்தப்பட்ட பள்ளி மீது நடவடிக்கை எடுக்க* C.B.S.E.*-க்கு குழு பரிந்துரை செய்யும்.*

*மேலும், கேட்பு செய்தல் மற்றும் கல்விக் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் மீதான விசாரணை மற்றும் பெற்றோர்கள் பள்ளிகள் மீது அளிக்கப்படும் புகார்கள், விசாரணைகள் போன்ற பணிகளையும் நீதியரசர் எஸ்.ஆர். சிங்காரவேலு அவர்கள் தலைமையிலான குழு செய்து வருகிறது. மத்திய பாடத் திட்ட இடைநிலைக் கல்வி வாரியத்தின்* (C.B.S.E.) *கீழ் வரும் பள்ளிகளின்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மேற்படி வாரியத்திற்கே வழங்கப்பட்டுள்ளது.*

[2012 நவம்பர் 1

**69—**

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 5574—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, நெடும்பலம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, நெடும்பலம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 2 வகுப்பறைக் கட்டடம் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டிலும், 3 பெண்கள் கழிப்பறை ரூ.2.5 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

**70—**

## கட்டடம்

**வினா எண் 6303—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, விராலிமலையிலுள்ள உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றிய உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றிய ஆணையரால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு காலி மனை விராலிமலையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டத்தின்கீழ் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.17.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டவுடன், கட்டடப் பணிகள் துவக்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*



2012 நவம்பர் 1]

**71—**

## நூலகர் நியமனம்

**வினா எண் 6541—திரு. கே. தங்கவேல்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அனைத்து நூலகங்களிலும் நூலகர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பொது நூலகத் துறையின்கீழ் செயல்படும் மாவட்ட நூலக ஆணைக் குழுக்களில் இயங்கும் பொது நூலகங்களில் காலியாக இருந்த 260 மூன்றாம் நிலை நூலகர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.*

**72—**

## ஆய்வகம்

**வினா எண் 9607—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, கீழக்குறிச்சி ஊராட்சி, கீழக்குறிச்சியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டவும், அறிவியல் ஆய்வகம், மிதிவண்டி நிறுத்துமிடம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கீழக்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் பகுதி XI-ல் 10 வகுப்பறைகள், 1 மேல்நிலை ஆய்வுக் கூடம், 2 கழிவறைகள், 100 மீட்டர் சுற்றுச் சுவர் ஆகிய அடிப்படை வசதிகள் ரூ.90.03 இலட்சத்தில் செய்ய நபார்டு வங்கியின் உதவி பெறும் பொருட்டு, கருத்துரு பெறப்பட்டு நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது. நிதியுதவி பெறப்பட்டவுடன், பொதுப் பணித் துறையினரால் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

**73—**

## ஓய்வூதியம்

**வினா எண் 10284—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நலிந்த நிலையிலுள்ள முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை ரூ.3,000 ஆக உயர்த்தி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நலிந்த நிலையிலுள்ள முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை ரூ.1,000/-லிருந்து ரூ.3,000/-ஆக உயர்த்தி அரசாணை 21-12-2011-ல் வெளியிடப்பட்டுள்ளது.*



2012 நவம்பர் 1]

**74—**

## நினைவு மண்டபம்

**வினா எண் 11345—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சிவகங்கை மாவட்டம், மகிபாலன்பட்டியில் கணியன் பூங்குன்றனார் நினைவு மண்டபம் அமைக்கும் பணியின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**75—**

## மின்னணு முறை

**வினா எண் 11379—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செய்தித் துறை புகைப்படப் பிரிவிலுள்ள 1.50 இலட்சம் நெகட்டிவ் படச்சுருள்கள் மற்றும் 10,000 கருப்பு வெள்ளை புகைப்படங்களை மின்னணு முறையில் மாற்ற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் புகைப்படப் பிரிவில் முக்கிய தலைவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகளின் அரிய, பழைய புகைப்பட நெகட்டிவ் சுருள்கள் உள்ளன. அரசாணை (நிலை) எண் 209, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*

மற்றும் செய்தித் (நிர்.4) துறை, நாள் 3-8-2009-ன்படி, முக்கியத்துவம் வாய்ந்த 75,018 கருப்பு-வெள்ளை மற்றும் வண்ண நெகட்டிவ்கள் அதிநவீன ஸ்கேனர் மூலம் ஸ்கேன் செய்யப்பட்டு வன்தகட்டில் (Hard Disk)-ல் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

இதுதவிர, புகைப்படப் பிரிவில் 1.50 இலட்சம் நெகட்டிவ் மற்றும் மிகவும் பழமையான சுமார் 10,000 கருப்பு-வெள்ளை புகைப்படங்களை மின்னனு முறையில் ஸ்கேனிங் செய்து சேகரிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, புகைப்படப் பிரிவை நவீனமயமாக்கும் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

**76—**

## பத்திரிகையாளர் குடும்ப நிதி

**வினா எண் 11384—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிகைத் துறையில் ஆசிரியர் உள்ளிட்டோர் பணியிலிருக்கும்போது இறந்தால், 5 ஆண்டு முதல் 10 ஆண்டு பணி புரிந்தவர்களுக்கு ரூ.1.50 இலட்சமும், 11 முதல் 20 ஆண்டுகள் பணி புரிந்தவர்களுக்கு ரூ.2 இலட்சமும் குடும்ப நிதி உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பத்திரிகைத் துறையில் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால், அவர்களின் குடும்பத்திற்கு “பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்” என்ற திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.





இதன்படி, பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து பணியிலிருக்கும்போது இயற்கை எய்தினால், அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.2 இலட்சமும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.1.50 இலட்சமும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.1 இலட்சமும் 5 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.50 ஆயிரமும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் வரப்பெறும் மனுக்களுக்குப் பத்திரிகையாளர் ஓய்வூதியத்திற்கான நடைமுறையில் உள்ள பத்திரிகையாளர் ஓய்வூதிய பரிசீலனைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த உதவி நிதி வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் அவர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

**77—**

## குடும்ப ஓய்வூதியம்

**வினா எண் 11385—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத்தை ரூ.4,500 ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் நலிவுற்ற நிலையில் உள்ள ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர்களின் குடும்ப நலன் கருதி, ஏற்கெனவே மாதந்தோறும் ரூ.2,500/-ஆக வழங்கப்பட்டு வந்த குடும்ப ஓய்வூதியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14-09-2011 முதல் ரூ.3,000/-ஆக உயர்த்தி ஆணையிட்டதற்கிணங்க, தற்போது மாதந்தோறும் ரூ.3,000/- குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

[2012 நவம்பர் 1

அரசாணை (நிலை) எண் 192, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (நிர்.4) துறை, நாள் 14-9-2011 பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத்தை ரூ.4,500/- உயர்த்துவது தொடர்பாக தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**78—**

## வீடியோ புரஜெக்டர்

**வினா எண் 11390—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் மாவட்டங்களுக்கு வீடியோ புரஜெக்டர்கள் வாங்கும் செயற்குறிப்பின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கள விளம்பரப் பணிகளுக்காக அனைத்து மாவட்டங்களுக்கும், வீடியோ வாகனங்களும் வீடியோ புரஜெக்டர்களும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் பழுதடைந்தவற்றை அவ்வப்போது மாற்றி, புதியதாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது பத்து மாவட்டங்களிலுள்ள வீடியோ புரஜெக்டர்கள் 2011-2012 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் வாங்குவதற்கு 25-10-2011 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, தி/ள். விஷன் நெக்ஸ்ட், சென்னை-17 அவர்களிடமிருந்து வாங்கி 10 வீடியோ புரஜெக்டர்கள் திருச்சிராப்பள்ளி, மதுரை, கரூர், விழுப்புரம், கடலூர், கன்னியாகுமரி, விருதுநகர், நாமக்கல், சென்னை (ம) திருவள்ளூர் ஆகிய 10 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன.

**79—**

## மடிக்கணினி

**வினா எண் 11392—திரு ரா. சரத்குமார்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2012 நவம்பர் 1]

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் 42 மடிக்கணினிகள் வாங்கும் செயற்குறிப்பின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் 42 மடிக்கணினிகள் வாங்க 27-10-2011 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, 9-3-2012 அன்று தி/ள். ஓரியண்ட் டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு கொள்முதல் ஆணை (Purchase Order) வழங்கப்பட்டுள்ளது. Directorate General of Supplies and Disposal, New Delhi அவர்கள் அளித்துள்ள விலையின் அடிப்படையில், விரைவில் அனைத்து அலுவலர்களுக்கும் 42 மடிக்கணினிகள் வாங்கி வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**80—**

## ESI வசதி

**வினா எண் 2309—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் வடக்கு தொகுதியில் கடை, ஹோட்டல் மற்றும் நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு E.S.I. வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தொழிலாளர்களை தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்ப்பது, தொழிலாளர் மாநில காப்புறுதித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. சேலத்தில் உள்ள கடைகள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போதைய நிலையில்

[2012 நவம்பர் 1

*20-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. சமீபத்தில் புதுடில்லி தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் 23-3-2011 அன்று வெளியிட்டுள்ள அறிவிக்கையில்* (Notification) *கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் உணவகங்களில் பத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிவராயின், அவர்கள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையினை ஆணையாக வெளியிடும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசு ஆணை வெளியிட்ட பின்பு தமிழ்நாட்டில் கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் உணவகங்களில் பத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிவராயின், அவர்களைத் தொழிலாளர் மாநிலக் காப்புறுதித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள தொழிலாளர் மாநிலக் காப்பீட்டுக் கழகம் நடவடிக்கை மேற்கொள்ளும்.*

**81—**

## டாம்ப்கால் தொழிற்சாலை

**வினா எண் 7417—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) டாம்ப்கால் மூலம் ஆலந்தூரில் கட்டப்படும் தொழிற்சாலையை விரைந்து கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) டாம்ப்கால் நிறுவனம் ஆலந்தூர் சி-29, சிட்கோ தொழிற்சாலையில் கட்டடம் கட்டும் பணியில் முதல் நிலை ரூ. 1.36 கோடி செலவில் 2004-2005 ஆம் ஆண்டு தொடங்கி 2007-2008 ஆம் ஆண்டு நிறைவு பெற்று பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், இரண்டாம் நிலை கட்டடம் கட்டும் பணி*



2012 நவம்பர் 1]

*ரூ. 99.20 இலட்சம் செலவில் 2006-2007 ஆம் ஆண்டு தொடங்கி 2010-2011 ஆம் ஆண்டு நிறைவு பெற்று பயன்பாட்டில் உள்ளது.*

**82—**

## 108 அவசர ஊர்தி

**வினா எண் 8317—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ஈரோடு மாவட்டம், பர்கூர் மலைப் பகுதியில் 108 அவசர ஊர்தி வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*ஈரோடு மாவட்டம், பர்கூர் பகுதியில் 108 அவசர ஊர்தி சேவை நவம்பர் 2010 வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. ஆனால், ஆம்புலன்ஸ் பயன்பாடு மிகவும் குறைந்த அளவில் (சராசரியாக மாதம் ஒன்றுக்கு-15 அவசர கால அழைப்புகள் மட்டும்) இருந்ததால், சென்னிமலைக்கு மாற்றப்பட்டது. சென்னிமலையில் மக்கள் தொகை அதிகம் உள்ளதாலும், சராசரியாக மாதம் ஒன்றுக்கு-65 அவசர கால அழைப்புகள் கிடைப்பதாலும், 108 ஆம்புலன்ஸ் சென்னிமலை பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.*

*108 அவசர ஊர்தியின் பயன்பாட்டின் அடிப்படையில், பர்கூர் பகுதியில் இருந்து 35* km *தொலைவில் அந்தியூர் பகுதியில் ஒரு ஆம்புலன்ஸ் மற்றும் 55* km *தொலைவில் அம்மாப்பேட்டை பகுதியில் ஒரு ஆம்புலன்சும் நிறுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. 108 எண்ணிற்கு அழைப்பு வந்த உடன், சம்பவ இடத்திற்கு 108 ஆம்புலன்ஸ் வந்து சேரும். எனவே, பர்கூர் மலைப் பகுதியில் 108 அவசர ஊர்தி சேவை தனியாக இயக்குவதற்கு அவசியம் எழவில்லை.*

[2012 நவம்பர் 1

**83—**

## சிறப்பு மருத்துவமனை

**வினா எண் 9201—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 'ஏ' பிளாக் கட்டடத்தில் அதிநவீன பல்துறை சிறப்பு மருத்துவமனை அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினையடுத்து, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள 'ஏ' பிளாக் கட்டடம் இத்துறைக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு, அதில் அதிநவீன பல்துறை சிறப்பு மருத்துவமனை அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**84—**

## விழிப்புணர்வு

**வினா எண் 11025—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பால்வினை நோய் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தத் தேவையான விளம்பரங்கள் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பால்வினை நோய் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தத் தேவையான விளம்பரங்கள் பஸ் நிலையங்கள், இரயில் நிலையங்கள், பொது இடங்கள், அனைத்து மருத்துவமனைகள் மற்றும் விழாக்கள் நடைபெறும் இடங்களில் செய்யப்படுகிறது. மேலும், ஒரு குறும்படம் வெளியிடப்பட்டு மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

**85—**

## கட்டணப் பிரிவு

**வினா எண் 11038—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனை ஆகியவற்றில் கட்டணப் பிரிவில் 2010-2011 ஆம் ஆண்டில் பயன் அடைந்தோர் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை கட்டணப் பிரிவில் ஜனவரி 2010 முதல் டிசம்பர் 2011 முடிய 19,334 பேர் பயனடைந்துள்ளனர். சென்னை எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனை கட்டணப் பிரிவில் ஜனவரி 2010 முதல் டிசம்பர் 2011 முடிய 1,543 பேர் பயனடைந்துள்ளனர்.*

**86—**

## சிகிச்சை

**வினா எண் 11045—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

*2011-12 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில கண் பார்வை இழப்பு தடுப்புச் சங்கம்மூலம் கண் அழுத்தம், கண்புரை மற்றும் சர்க்கரை நோயாளிகளுக்கு கண்விழி நோய் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை மூலம் பயனடைந்தோர் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு மாநில பார்வை இழப்புத் தடுப்புச் சங்கத்தின்மூலம் 2011-12-ம் ஆண்டில் (01-04-2011 முதல் 31-01-2012 வரை) பயன் பெற்ற பயனாளிகள் விவரம்:*

| | | |
|---|---|---|
| *(1) கண் அழுத்தம் தொடர்பான சிகிச்சை* | - | *இல்லை* |
| *(2) கண்புரை அறுவை சிகிச்சை* | - | *4,51,857* |
| *(3) சர்க்கரை நோயாளிகளுக்கு கண் விழி நோய் சிகிச்சை* | - | *இல்லை* |

**87—**

## மேல் விழி உள்ளாடி

**வினா எண் 11048—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கண்புரை அறுவை சிகிச்சையில் நடப்பாண்டில் எத்தனை பேருக்கு மேல்விழி உள்ளாடி பொருத்தப்பட்டது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*நடப்பாண்டில் (1-4-2011 முதல் 31-1-2012 வரை) கண் புரை அறுவை சிசிக்சை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 4,51,857. அவர்களில் விழி உள்ளாடி பொருத்தப்பட்டவர்கள்* (I.O.L.) *எண்ணிக்கை 4,47,493.*



2012 நவம்பர் 1]

**88—**

## கண் பார்வை

**வினா எண் 11049—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு மாநில கண் பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம் மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் எத்தனை பள்ளிச் சிறார்கள் பயனடைந்தனர்?*

*(ஆ) அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாநில பார்வை இழப்புத் தடுப்புச் சங்கத்தின்மூலம் 2011-12 ஆம் ஆண்டில் (01-04-2011 முதல் 31-01-2012 வரை) பயனடைந்த பள்ளிச் சிறார்கள் விவரம்:*

| | | |
|---|---|---|
| *(1) கண் பார்வை பரிசோதனை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை* | - | *8,71,087* |
| *(2) கண் பார்வைக் குறைபாடு கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை* | - | *29,672* |
| *(3) இலவச கண் கண்ணாடி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை* | - | *18,426* |

**89—**

## சித்த மருத்துவம்

**வினா எண் 13098—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், செல்லப்பம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவ சிகிச்சையைத் தினந்தோறும் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தில் தற்பொழுது திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டம், செல்லப்பம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வாரம் மூன்று நாட்கள் சித்த மருத்துவப் பிரிவு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இது வாரம் ஆறு நாட்கள் காலையில் மட்டும் 1/2 நாள் என செயல்படும் வகையில் நடைமுறைப்படுத்தும் கருத்துரு தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தின் திட்ட இயக்குநருக்கு அனுப்பப்பட்டு, பரிசீலனையில் உள்ளது. திட்ட இயக்குநரின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், காலையில் (1/2 நாள்) மட்டும் என வாரத்தில் ஆறு நாட்கள் சித்த மருத்துவப் பிரிவு செயல்படத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

**90—**

## இந்திய மருத்துவம்

**வினா எண் 10964—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இந்திய முறை மருத்துவப் பிரிவைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்பொழுது உள்ள 1,592 அரசினர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 479 இடங்களிலும், தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தின்கீழ் 475 இடங்களிலும் சேர்த்து, மொத்தம் 954 அரசினர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள இடங்களில் புதிதாக இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.*





**91—**

## சீருந்து

**வினா எண் 10967—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகப்பட்டினம், காஞ்சிபுரம், தென்காசி மற்றும் உசிலம்பட்டி ஆகிய இடங்களிலுள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இணை இயக்குநருக்குப் புதிய சீருந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*நாகப்பட்டினம், காஞ்சிபுரம், தென்காசி மற்றும் உசிலம்பட்டி ஆகிய மாவட்டங்களிலுள்ள நலப் பணிகள் இணை இயக்குநர்களுக்கு தலா ரூ.5,00,000/-வீதம் மொத்தம் ரூ.20,00,000/- அரசாணை (ப) எண் 1174, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 31-10-2011-ல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள இணை இயக்குநர்களுக்கு விரைவில் புதிய சீருந்து வழங்கப்படும்.*

**92—**

## விடுதி

**வினா எண் 7678—திரு. சு. ரவி:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்தில் மாணவர்களுக்கான சிறுபான்மையினர் நல விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதியில், சிறுபான்மையினர் நல மாணவர்களுக்காக சிறுபான்மையினர் நல விடுதி அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**93—**

**குடிநீர்**

**வினா எண் 8534—திரு. சி.எச். சேகர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி பகுதியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமிற்கு சாலை, குடிநீர் வசதி செய்து தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 03-06-2011 அன்று சட்டமன்றப் பேரவையில் அளிக்கப்பட்ட ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டபடியும், 2011-2012 நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டபடியும், இலங்கைத் தமிழர் முகாம்களில் உள்ள வீடுகளில் அடிப்படை வசதியை மேம்படுத்தவும், குடிநீர் வசதி அளிக்கவும் ரூ. 25 கோடி நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதற்கான அரசாணை (நிலை) எண். 277, பொதுத் (ம.வா.2) துறை, நாள் 19-3-2012-ல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் திருவள்ளூர் மாவட்டத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ரூ.5,02,63,000/- நிதி ஒதுக்கீட்டில் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி முகாமில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி குடிநீர் வசதிகள் செய்து தரப்படும்.*



2012 நவம்பர் 1]

**94—**

**நீர் நிரப்புதல்**

**வினா எண் 2345—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் மகாமகம் குளத்தில் மீண்டும் நீர் நிரப்புவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். 6.07 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான மகாமகக் குளத்தின் ஆழம் 15 அடி ஆகும். தற்போது இக்குளத்தில் 8 அடி உயரத்திற்கு நீர் உள்ளது. இக்குளத்திற்கு கும்பகோணம் அரசலாற்றில் இருந்து வாய்க்கால் மூலமாக அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு எதிரில் உள்ள மதகினைத் திறந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு பொதுப் பணித் துறையை அணுகி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**95—**

**திருக்கோயில் குடமுழுக்கு நிதியுதவி**

**வினா எண் 4118—முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், அம்மன்குடி அருள்மிகு துர்க்கை அம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய திருப்பணித் திட்டத்தின்கீழ் ரூபாய் பத்து இலட்சம் நிதி உதவி செய்திட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், அம்மன்குடி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலின் வருமானம் ரூ.95,917 ஆகும். இத்திருக்கோயிலுக்கு கடந்த 09-02-2003 அன்று குடமுழுக்கு நடைபெற்று 8 ஆண்டுகள் முடிவுற்றுள்ளன. ஆகம விதிப்படி திருக்கோயிலுக்கு கடைசியாக குடமுழுக்கு நடைபெற்ற நாளிலிருந்து 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்வது வழக்கத்தில் இருந்து வருகிறது. இதன்படி உரிய காலத்தில், உத்தேசமாக ரூ.20.00 இலட்சம் செலவில் உபயதாரர், பொது மக்கள் நன்கொடை மற்றும் அரசு நிதியுதவி என்ற நிதிப் பங்கீட்டின் அடிப்படையில் திருப்பணிகள் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**96—**

## மழைநீர்

**வினா எண் 5359—திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, தருமபுரி 5-வார்டு, கோட்டை காமாட்சி அம்மன் கோயிலில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தருமபுரி நகர், கோட்டை அருள்மிகு மல்லிகார்ஜுனேஸ்வரர் பரவாசுதேவசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிர்வாகம் செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இதன் ஆண்டு வருமானம் ரூ.3,83,595/- ஆகும். இத்திருக்கோயிலின் சன்னதியில் ஒன்றான அருள்மிகு காமாட்சி அம்மன் சன்னதி சாலையை நோக்கி அமைந்துள்ளது. சன்னதியின் இருபுறமும் சாலைகள் உள்ளன. சன்னதியின் தரைத்தளத்தைவிட சாலைகள் உயரமாக உள்ளதால், மழைநீர் சன்னதியின் முன்புறம் தேங்குகிறது. இதனைத் தவிர்ப்பதற்காக சன்னதிக்கு அருகில் உள்ள மழைநீர் சேகரிப்புக்காக அமைக்கப்பட்டுள்ள துவாரத்தின் வழியாக மழைநீர் வேகமாக இறங்கும் வகையில், சன்னதியின் முன்புறம் உள்ள கருங்கல் தளத்தை உயர்த்தி அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





**97—**

## திருப்பணி

**வினா எண் 5623—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், சோழமாதேவி 3-வது வார்டில் உள்ள திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், சோழமாதேவி 3-வது வார்டில் ஊர்நத்தம் இடத்தில் அருள்மிகு அப்பிச்சியம்மன் திருக்கோயில் சுமார் 2 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் மேற்கூரை மற்றும் சுற்றுச் சுவர் எதுவுமின்றி திறந்தவெளியில் இரண்டு கற்கள் நடப்பட்டு அமையப்பெற்றுள்ளது. இத்திருக்கோயிலை தாழ்த்தப்பட்ட வகுப்பினரான ஆதி திராவிட மக்கள் வழிபட்டு வருவதையடுத்து, ஆதி திராவிடர் திருப்பணித் திட்டத்தின்கீழ் இத்திருக்கோயிலுக்கு திருப்பணி செய்திட பரிசீலனையில் உள்ளது.

[2012 நவம்பர் 1

**98—**

**பொதுக் கழிப்பிடம்**

**வினா எண் 5662—திரு. வெ. பொன்னுப்பாண்டி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருத்தேர் அருகே பொதுக் கழிப்பிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக 2006-2007 ஆம் நிதி ஆண்டில் திருத்தேருக்கு அருகில் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பிடம் மற்றும் தங்கும் மண்டபம் ஆகியன கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன. எனவே, தற்போது மேலும் புதியதாக பொதுக் கழிப்பிடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

**99—**

**தீப்பிடிக்காத தகடுகள்**

**வினா எண் 9124—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் திருக்கோயில்களில் உள்ள 278 மரத்தேர்கள் சீரமைக்கப்பட்டு, தீப்பிடிக்காத தகடுகளால் கூரை வேய்ந்து பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தின்போது, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 809 திருக்கோயில்களின் 989 மரத்தேர்களில் 278 தேர்களைச் சீரமைத்து தீப்பிடிக்காத தகடுகளால் கூரை வேய்ந்து பாதுகாக்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, அரசாணை (நிலை) எண் 216, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (அநி 5.1) துறை, நாள் 10-10-2011-ல் ஆணை வெளியிடப்பட்டது. அதனைச் செயல்படுத்தும் விதமாக ரூ.417.20 இலட்சம் மதிப்பீட்டில் 44 திருத்தேர்களைச் சீரமைத்திட மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 17 திருத்தேர்கள் சீரமைப்புப் பணி நிறைவு பெற்றுள்ளது. 21 திருத்தேர் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 6 திருத்தேர்களுக்கான பணி துவங்கப்படவுள்ளது. எஞ்சிய திருத்தேர்களுக்கும் மதிப்பீடு தயாரித்து அங்கீகாரம் வழங்கி பணிகளைத் துவக்கிட விரைவு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**100—**

**அடிகுழாய்**

**வினா எண் 9789—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், தேவாத்தக்குடியிலுள்ள ஆதி திராவிடர்களின் அய்யனார் கோயிலுக்கு கை அடிகுழாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், தேவாத்தக்குடியிலுள்ள ஆதி திராவிடர்களின் அய்யனார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் இல்லாததாலும், இத்திருக்கோயில் வருமானம் இல்லாத, நிதிவசதி இல்லாத சிறிய கோயில் என்பதாலும் தற்போது கை அடிகுழாய் அமைக்க முடியாத நிலை உள்ளது.*

**பட்டியல் 2**

**1—**

**பட்டா**

**வினா எண் 3046—திரு. க. பீம்ராவ்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நொளம்பூர் ஊராட்சியில் குடியிருக்கும் மக்களுக்குப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், நொளம்பூர் கிராமத்தில் உள்ள கீழ்க்கண்ட புல எண்களில் உள்ள கிராம நத்தப் பகுதிகளில் இலவச வீட்டுமனைப் பட்டா தனி வட்டாட்சியர் (நத்தம், நில அளவைத் திட்டம்) அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.*



2012 நவம்பர் 1]

| புல எண். | விஸ்தீரணம் | வகைபாடு | பட்டா வழங்கப்பட்ட நபர்கள் |
|---|---|---|---|
| 162/1 | 0.75.4 | கிராம நத்தம் | 60 |
| 162/2 | 2.19.5 | சேரி நத்தம் | 34 |
| 166/3 | 0.22.0 | கிராம நத்தம் | 46 |
| 167/2 | 1.09.0 | சேரி நத்தம் | 45 |
| 217 | 0.96.0. | சேரி நத்தம் | 35 |
| 227/1 | 3.07.0 | கிராம நத்தம் | 35 |
| 268/3 | 0.31.0 | கிராம நத்தம் | 15 |
| | | மொத்தம் | 270 |

*எனவே, அம்பத்தூர் வட்டம், நொளம்பூர் கிராமத்தில் சுமார் 270 நபர்களுக்கு கிராம நத்தப் பகுதிகளில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.*

**2—**

**புறம்போக்கு நிலம்**

**வினா எண் 6687—திரு. பி.எல். சுந்தரம்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பவானிசாகர் தொகுதி, தாளவாடி, கடம்பூர் மலைப் பகுதிகளில் ஆக்கிரமிப்பிலுள்ள புறம்போக்கு நிலங்களை மீட்டு நிலமற்றவர்களுக்கு வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*அரசாணை நிலை எண் 1168, வருவாய்த் துறை, நாள் 25-07-1989 இல் நமது மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பகுதிகளிலும் விவசாயத்திற்கு ஒப்படை வழங்குவதற்கும், ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்துவதற்கும் தடைவிதித்து ஆணையிடப்பட்டுள்ளது.*

[2012 நவம்பர் 1

**3—**

## வீட்டு மனைப் பட்டா

**வினா எண் 8245—திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரூர் வட்டம், அரூர் பேரூராட்சி, அரூர் அம்பேத்கர் நகர குடியிருப்பு மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், அரூர் கிராமம், புல எண் 123/2பி-இல் உள்ள 0.40.0 ஹெக்டேர் பரப்பளவு நிலம், புல எண் 123/3-இல் உள்ள 2.28.0. ஹெக்டேர் பரப்பளவு நிலம், புல எண் 123/6-இல் உள்ள 0.48.0 ஹெக்டேர் பரப்பளவு நிலங்களில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. மேற்படி இடத்தில் சுமார் 20 நபர்களில் சிலர் தார்ச் வீடுகளும், சிலர் ஓட்டு வீடுகளும் மற்றும் சிலர் கூரை வீடுகளும் கட்டி வசித்து வருகின்றனர். இந்த நிலத்திற்கு ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வினத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்கும் கேள்வி எழாது.*

**4—**

## கிராம நிருவாக அலுவலகம்

**வினா எண் 10662—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், இடையப்பட்டி பஞ்சாயத்திற்கு கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தாலுகா, அன்னவாசல் ஒன்றியம், இடையப்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்டடப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.*

**5—**

## விளை நிலங்கள்

**வினா எண் 11213—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை பகுதிகளில் வீட்டுமனைகளாகும் விளை நிலங்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 302, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, நாள் 29-12-2010-ன்படி, நன்செய் நிலங்கள் விவசாயப் பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். வேறு இதர பயன்பாடான கட்டடம், மனைகள், வணிக நோக்கத்திற்குப் பயன்படுத்தக்கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது. விவசாயம் அல்லாத பிற தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டியிருப்பின், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் ஆட்சேபணையில்லா சான்று* (NOC) *பெற வேண்டும்.*

[2012 நவம்பர் 1

**6—**

**வட்டாட்சியர் அலுவலகம்**

**வினா எண் 11607—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சூலூர் வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், சூலூர் கிராமம், புல எண் 543/1 வாரச்சந்தை புறம்போக்கு சாலையில் 1.50 ஏக்கர் நிலத்தில் சூலூர் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்ட சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர், பொதுப் பணித் துறை அவர்களிடமிருந்து ரூ.236.50 இலட்சத்திற்கான தோராய மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டு, நிதி ஒப்பளிப்பு வழங்கக் கோரி அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், இவ்வினம் 2012-2013-ம் ஆண்டுக்கான பகுதி-II திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.*

**7—**

**வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள்**

**வினா எண் 12364—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1,127 வருவாய் ஆய்வாளர்களில், 1,093 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 34 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் படிப்படியாக கட்டித் தரப்படும்.*

**8—**

**வட்டாட்சியர் அலுவலகம்**

**வினா எண் 12367—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொன்னமராவதி வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாட்சியர் அலுவலகம் தற்பொழுது தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்தக் கட்டடத்தில் போதுமான இட வசதி மற்றும் அடிப்படை வசதி இல்லாத நிலை உள்ளது. மேலும், வட்ட வழங்கல் அலுவலகம், தேர்தல் பிரிவு, நில அளவைப் பிரிவு, நலிந்தோர் நலத் திட்ட பணியாளர்களுக்கான இட வசதி ஆகிய அனைத்திற்கும் போதுமான இட வசதி இல்லை.*

*எனவே, பொன்னமராவதி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு தூத்தூர் கிராமத்தில் புல எண். 19/4-ல் அரசுப் புறம்போக்கு கல்லாங்குத்தில் 0.40.5 ஏர்ஸ் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கான தோராய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.*

[2012 நவம்பர் 1

**9—**

**வட்டாட்சியர் அலுவலகம்**

**வினா எண் 12368—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கறம்பக்குடி வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டாட்சியர் அலுவலகம் தற்பொழுது அரசுக்குச் சொந்தமான சமுதாயக் கூடக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அவ்வலுவலகம் இயங்குவதற்குப் போதுமான இட வசதி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால், அதற்கான புதிய கட்டடம் கட்டுவது மிகவும் அவசியமாகிறது. கறம்பக்குடி வட்டாட்சியர் அலுவலகப் புதிய கட்டடம் கட்ட கறம்பக்குடி கிராமம், புல எண். 173/2பி ரயத்து புஞ்சை மொத்த பரப்பு 2.40.5 ஹெக்டேரில் ஒரு ஏக்கர் பகுதியை மட்டும் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கான தோராய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**10—**

**வட்டாட்சியர் அலுவலகம்**

**வினா எண் 12369—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிஞ்சிப்பாடி வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

குறஞ்சிப்பாடி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட குறிஞ்சிப்பாடி வட்டம் மற்றும் கிராமம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்குச் சொந்தமான ச.எண். 70/5—ல் 1.37.5 ஹெக்டேரில் 0.45.0 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு நேரடிப் பேச்சுவார்த்தையின்மூலம் கிரையம் பெற முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையருக்கு முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் நிதி ஒதுக்கீடு பெற்ற பின் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**11—**

**வட்டாட்சியர் அலுவலகம்**

**வினா எண் 12370—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டு உரிய முன்மொழிவுகள் பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு திட்ட மதிப்பீட்டறிக்கையுடன் சென்னை முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நேர்வில் சென்னை முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் திட்ட மதிப்பீட்டறிக்கை ரூபாய் ஒரு கோடிக்கு மேல் உள்ளதால் பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளரின் மேலொப்பத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டறிக்கையினை பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளரிடமிருந்து விரைவில் பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

[2012 நவம்பர் 1

**12**—

### வட்டாட்சியர் அலுவலகம்

**வினா எண் 12371—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆலந்தூர் வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை**—

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம், புனித தோமையார் மலை கிராமம், புல எண் 1456-ல் நிலம் 1 ஏக்கர் மற்றும் 14061 ச.அடி பரப்பில் ஆலந்தூர் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டி வருவாய்த் துறைக்கு நிலமாற்றம் செய்யக்கோரி முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையருக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது.*

**13**—

### வட்டாட்சியர் அலுவலகம்

**வினா எண் 12372—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை**—

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், சோழிங்கநல்லூர் கிராமம், புல எண் 602/8—ல் 4.35.0 ஹெக்டேர் நிலம் வட்டாட்சியர் அலுவலக வளாகம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது. செயற்பொறியாளர், பொதுப் பணித் துறை (கட்டடங்கள்), காஞ்சிபுரம் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு அறிக்கை மேலொப்பத்திற்காக தலைமைப் பொறியாளர், சேப்பாக்கம், சென்னை—5 அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசு ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.*



2012 நவம்பர் 1]

**14**—

### வருவாய்க் கோட்ட அலுவலகம்

**வினா எண் 12373—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உடுமலைப்பேட்டை வருவாய்க் கோட்ட அலுவலகம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை**—

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*உடுமலைப்பேட்டை வருவாய்க் கோட்டத்திற்கென ஒருங்கிணைந்த வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் உள்ளடங்கிய பிற அரசுத் துறை அலுவலக வளாகம் அமைப்பதற்காக, உடுமலைப்பேட்டை கிராம புல எண் 67, விஸ்தீரணம் 5.38.0 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிலம் அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலமாகும். மேற்படி இடத்தில் உடுமலைப்பேட்டை கோட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது தொடர்பாக தலைமைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, அவர்கள்மூலம் ரூ.1.20 கோடிக்கு தோராய மதிப்பீட்டறிக்கை மற்றும் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவரது அறிக்கையுடன் விரிவான அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.*

**15**—

### வருவாய்க் கோட்ட அலுவலகம்

**வினா எண் 12374—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தாம்பரம் வருவாய்க் கோட்ட அலுவலகம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், கடப்பேரி கிராமம், நகர அளவை எண் 72/1-ல் மொத்த பரப்பு 4,294 ச.மீ. பரப்பு வட்டாட்சியர் அலுவலக வளாகம் என வருவாய்த் துறைக்கு மாற்றம் செய்யப்பட்ட இடத்தில், 810 ச.மீ. பரப்பில் ரூ.1.10 கோடி (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் மட்டும்) செலவில் தரை தளம் மற்றும் முதல் தளம் கொண்ட தாம்பரம் வருவாய்க் கோட்ட அலுவலர் அலுவலகம் கட்ட ரூ.1.10 கோடிக்கு நிருவாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் செய்து அரசாணை (நிலை) எண் 84, வருவாய்த் [வ.நி.2(1)] துறை, நாள் 9-3-2012-ன்படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. கட்டடம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும்.*

**16—**

## வருவாய், ஆய்வாளர் குடியிருப்புகள்

**வினா எண் 12377—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மாவட்டம், வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) சென்னை மாவட்டத்தில் அனைத்து வருவாய் ஆய்வாளர்களும் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களிலேயே பணிபுரிந்து வருகின்ற காரணத்தால், சென்னை மாவட்டத்தில் வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.*





**17—**

## பாதுகாப்பு மையம்

**வினா எண் 12379—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*உலக வங்கித் திட்டத்தின்கீழ் சுனாமி நிவாரணப் பணியில் பல்நோக்கு பேரிடர் பாதுகாப்பு மையங்கள் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*உலக வங்கித் திட்டத்தின்கீழ் சுனாமி நிவாரணப் பணியில் 121 பல்நோக்கு பேரிடர் பாதுகாப்பு மையங்கள் கட்டும் பணி தொடர்பாக 121 மையங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 51 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று பரிசீலனையில் உள்ளன. மீதமுள்ள 70 பணிகளுக்கும் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

**18—**

## சுனாமி நிவாரணம்

**வினா எண் 12380—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*(அ) உலக வங்கி உதவித் திட்டத்தின்கீழ் சுனாமி நிவாரணப் பணியில் பாதுகாப்பு வழித்தடங்கள் அமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

கடலோரப் பகுதிகளில் அவசர காலத்தில் எளிதாக வெளியேறித் தப்பித்துச் செல்லத்தக்க, வழிகாட்டுப் பலகையுடன் கூடிய சுமார் 45 கி.மீ. நீளத்திற்கு வெளியேறும் சாலைகளை சுமார் ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்க திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட உள்ளது. இவ்வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மதிப்பாய்வில் உள்ளது.

**19—**

## முன்னெச்சரிக்கைக் கருவிகள்

**வினா எண் 12381—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலக வங்கி உதவித் திட்டத்தின்கீழ் சுனாமி நிவாரணப் பணியில் 439 பேரிடர் முன்னெச்சரிக்கைக் கருவிகள் நிறுவும் பணியின் தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

உலக வங்கித் திட்டத்தின்கீழ் சுனாமி நிவாரணப் பணியில் 439 பேரிடர் முன்னெச்சரிக்கைக் கருவிகள் தமிழ்நாட்டில் உள்ள கடலோர மாவட்டங்களில் இயற்கைச் சீற்றங்களினால் எளிதில் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் நிறுவப்படவுள்ளன.

இப்பணியானது உலக வங்கியின் உலகளாவிய ஒப்பந்தப் புள்ளி கோருதல் அடிப்படையில் (International Bidding) முதற்கட்ட ஒப்பந்தப்புள்ளிகள் (Technical Bids) பெறப்பட்டு, அவற்றினை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆலோசனைக் குழு ஆய்வு அறிக்கையினை இறுதி செய்யும் நிலையில் உள்ளது. அதன் பிறகு தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து விலைப்புள்ளிகள் (Financial Bids) பெற்று, இறுதி செய்யப்பட்டபின், தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரின்மூலம் மேற்படி பேரிடர் முன்னெச்சரிக்கைக் கருவிகள் நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்படும்.





**20—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 6037—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூத்தன்குழி ஊராட்சி, தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூத்தன்குழி ஊராட்சிக்குட்பட்ட கூத்தன்குழி, அழகர் கூத்தன்குழி, கூத்தன்குழி மேலூர் (நாடார் குடியிருப்பு) மற்றும் பாத்திமா நகர் ஆகிய நான்கு குடியிருப்புகளுக்கு தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரையோர 113 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**21—**

## கல்லூரிகளில் நன்கொடை வசூல்

**வினா எண் 3102—திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் நன்கொடை என்ற பெயரில் கட்டணம் வசூலிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) முனைவர் பேராசிரியர் டி.வி. ஜெயபாலன் அவர்களை உறுப்பினராகக் கொண்டு, கல்லூரிகளில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவதைத் தடுக்க, ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவானது கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதாக புகார்கள் பெறப்படும் கல்லூரிகளில் நேரடியாக ஆய்வு செய்து அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் தவறு செய்யும் கல்லூரியினர்மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க தொழில்நுட்பக் கல்வி ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் கல்வி ஆணையரால், கூடுதல் கட்டணம் / மூலதனக் கட்டணம் வசூலிப்பதாகப் பெறப்படும் கல்லூரிகள் மீதான புகார்கள்மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*(ஆ) எழவில்லை.*

**22—**

## கல்விக் கடன்

**வினா எண் 3106—திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குடும்பத்தில் முதல் பட்டதாரிக்கு கல்விக் கடன் வழங்குவதைச் சீர்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) குடும்பத்தில் முதல் பட்டதாரிக்கு அரசினால் வழங்கப்படும் கல்விக் கட்டணச் சலுகை நீங்கலாக மீதமுள்ள கட்டணத் தொகைக்கு வங்கிக் கடன் பெற விரும்பும் மாணவர்களுக்கு அந்தந்தப் பொறியியல் கல்லூரிகளின் முதல்வர்களால், வங்கிகளில் கல்விக் கடன் பெற சான்றிதழ் வழங்கப்படுகிறது. இது தவிர, கல்விக் கடன் வழங்குவதைச் சீர்படுத்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**23—**

## 'பூ' கன்று

**வினா எண் 9724—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதியில் மல்லிகைப் பூ, ரோஜா, கனகாம்பரம் மகசூலை அதிகரிக்க இலவசமாக பூ கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் ரோஜா மற்றும் கனகாம்பரம் பெரும் அளவில் விவசாயிகளால் சாகுபடி செய்யப்படுவதில்லை. எனவே இவற்றுக்கான திட்டம் எதுவும் தற்போது செயல்படுத்தப்படவில்லை.*

*சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் மல்லிகைப் பூ, உற்பத்தி அதிகரிக்க எக்டருக்கு 2,000 மல்லிகைச் செடிகள் வரை மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு எக்டரில் நடவு செய்ய தேவைப்படும் 6,400 கன்றுகளில், 2,000 எண்கள் தவிர, ஏனைய செடிகள் முழு விலையில் வழங்கப்படும்.*

*சிவகங்கை மாவட்டத்தில், தேசிய தோட்டக்கலை இயக்கத்தில், மல்லிகைப் பரப்பு விரிவாக்கத் திட்டத்தின்படி, 50 எக்டர் பரப்பில் மல்லிகை சாகுபடி செய்யப்பட்டது.*

*2010-2011 ஆம் ஆண்டில் ஒரு எக்டருக்கு ரூ. 12,000/- வீதம் ரூ. 6.00 இலட்சம் மானியமாக விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.*

*மானாமதுரை தொகுதியில் 2011-2012 ஆம் ஆண்டில், 35 எக்டர் பரப்பில் மல்லிகைப் பரப்பு விரிவாக்கம் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 60,000 மல்லிகைக் கன்றுகள் 35 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு 30 எக்டரில் மல்லிகைப் பரப்பு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.*

*மேலும் சிவகங்கை மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், உயர் தொழில் உயர் விளைச்சல் திட்டத்தின் கீழ், 35 எக்டர் பரப்பில் மல்லிகை சாகுபடி செய்யப்பட்டது.*

*2010-2011 ஆம் ஆண்டில் எக்டருக்கு ரூ.7,500/- வீதம் ரூ.2.625 இலட்சம் செலவில், 1,500 மல்லிகைக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.*

*மானாமதுரை தொகுதியில், 2011-2012 ஆம் ஆண்டில், 4 எக்டர் பரப்பில், மல்லிகை சாகுபடி பரப்பு விரிவாக்கம் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 4 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு எக்டருக்கு 1,500 கன்றுகள் வீதம் 6,000 கன்றுகள் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.*

**24—**

**வாழை சாகுபடி**

**வினா எண் 9731—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் வாழை சாகுபடியில் புரேடினியா புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் பகுதியில் வாழை சாகுபடியில் புரோடினியா புழுவினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் அனைத்து முன்னணி நாளிதழ்களிலும் முன்னேற்பாடாக பிரசுரிக்கப்பட்டது. மேலும் களப் பணியாளர்கள்மூலம் கிராமங்களுக்குச் சென்று தேவையான தொழில்நுட்ப அறிவுரைகள் வழங்கப்பட்டு பூச்சி தாக்குதல் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகிறது. மேலும், தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளும் விவசாயிகளுக்கும் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.*

**25—**

**உலர் மலர்**

**வினா எண் 11303—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உலர் மலர் உற்பத்தியை ஊக்குவிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) உலர் மலர்கள் என்பவை அப்படியே விளைவிக்கக்கூடியவை அல்ல. சிலவகை மலர்கள், தென்னம்பாளை, குரும்பை பனை பொருட்கள், பலவகை புல்வகைகள் ஆகியவற்றை முறையாகப் பதப்படுத்தி அவற்றைக்கொண்டு அழகுணர்வோடு பலவகை அலங்கார அமைப்புகளை ஏற்படுத்துவது உலர் மலர் அலங்காரம்/அமைப்பு*

[2012 நவம்பர் 1

எனப்படும். சாகுபடி செய்யப்படும் மலர்களில் கோழிக்கொண்டை மலர் மட்டுமே உலர் மலர் ரகத்தைச் சார்ந்ததாகும்.

சிவகங்கை மாவட்டத்தில் கோழிக்கொண்டை சாகுபடி தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் உயர் தொழில்நுட்ப உயர் விளைச்சல் திட்டம் ஆகியவற்றின்கீழ் ஊக்குவிக்க வழி உள்ளது. இவை தவிர, உலர் மலர் உற்பத்திக்கென திட்டம் தனியாக ஏதுமில்லை.

(ஆ) உலர் மலர் உற்பத்தி என்பது பதப்படுத்துதல் என்னும் இனத்தின்கீழ் வருவதால் இதற்கான திட்டம் (Project) ஆர்வமுள்ள தனி நபர் மூலம் அளிக்கப்பட்டால் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் சிறு அளவிலான அலகு ஒன்றிற்கு அதிகபட்ச செலவு ரூ.2,00,000/— என்ற வகையில் 50 சதவீத மானியமாக அதிகபட்சமாக ரூ.1,00,000/— வரை உதவித் தொகை வழங்கப்படும்.

**26—**

## நுண்ணீர்ப் பாசனம்

**வினா எண் 13226—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளிடம் குறைந்த நீர் பயன்பாட்டில் அதிக இலாபம் பெற நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தைக் கடைப்பிடிக்கச் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 2005-2006 முதல் நுண்ணீர்ப் பாசனத் திட்டம் 65 சதம் மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வந்தது. 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து தமிழக அரசின் முயற்சியின் பயனாக நுண்ணீர்ப் பாசனத் திட்டம் நிறுவ சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதம் மானியமும் இதர விவசாயிகளுக்கு 75 சதம் மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் இதுவரையில் 24,400 எக்டர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசனம் ரூ.7,310.50 இலட்சம்



2012 நவம்பர் 1]

நிதி செலவினத்தில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், 2012-2013 ஆம் ஆண்டில் 70,000 எக்டர் பரப்பளவில் ரூ.40,966.36 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**27—**

## தொழில்நுட்பம்

**வினா எண் 13227—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளிடம் குறைந்த நீர் பயன்பாட்டில் அதிக இலாபம் பெற துல்லிய பண்ணைத் தொழில்நுட்பத்தை ஊக்கப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

துல்லிய பண்ணையத் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் தோட்டக்கலைத் துறையின்மூலம் 2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 25,516 எக்டர் பரப்பளவில் ரூ. 7,820.262 இலட்சம் நிதியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டு இத்திட்டம் 2,858 எக்டர் பரப்பளவில் ரூ. 600.18 இலட்சம் நிதியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்கீழ் ஒரு எக்டருக்கு மானியமாக ரூ. 15,000 மதிப்புடைய நீரில் கரையும் உரங்கள், ரூ.5,000 மதிப்புடைய விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன் தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கத்திலிருந்து சொட்டுநீர்ப் பாசனமும் நிறுவப்படுகிறது. பயனாளி விவசாயிகளுக்கு இருநாள் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

[2012 நவம்பர் 1

**28—**

## ஒருங்கிணைந்த பண்ணை

**வினா எண் 13229—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளிடம் குறைந்த நீர் பயன்பாட்டில் அதிக இலாபம் தரக்கூடிய பயிர் சாகுபடியை மேற்கொள்ள ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டத்திற்கு செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் உப திட்டமான மானாவாரிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல், கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு போன்ற வேளாண் சார்ந்த பண்ணை வருவாயைப் பெருக்கும் அனைத்து செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், மித வறண்ட மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு விவசாயக் குடும்பமும் 2 எக்டருக்கு ரூ.1 இலட்சம் வரையிலும், ஈரப்பதம் மிக்க திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் ரூ.80,000/- வரையிலும் மேற்கூறிய பல்வேறு செயல்பாடுகளுக்கு மானியம் பெறலாம். மித வறண்ட மாவட்டங்களான அரியலூர், கோவை, தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கரூர், மதுரை, நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம், உதகை, தேனி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் மத்திய அரசால் அடையாளம் காணப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்டம் 2,655 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலை அடிப்படையிலான பண்ணையம், 334 எண்கள் பாசன நீர் மேலாண்மை, 20,000 ச.மீ. பரப்பளவில் பசுமைக்குடில் சாகுபடி செய்தல் ஆகிய திட்டக் கூறுகளுடன், ரூ.879.05 இலட்சம் நிதியுடன் தோட்டக்கலைத் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2012 நவம்பர் 1]

**29—**

## நீர்வளப் பாதுகாப்பு

**வினா எண் 15211—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஜவ்வாது மலைப்பகுதியில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஜவ்வாது மலைப்பகுதியில் 1977-1978 ஆம் வருடம் முதல் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (பழங்குடியினர் துணைத் திட்டம்) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சம உயர கல்வரப்பு, சமதள ஆதாரச்சுவர், நிலம் சீரமைத்தல், உதிரி கற்கள் தடுப்பணை மற்றும் பெரிய, சிறிய தடுப்பணை போன்ற மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலைப்பகுதியில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் 148.890 ஹெக்டேர் நிலப்பரப்பில் 30.46 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம் 289 மலைவாழ் மக்கள் பயனடைந்துள்ளனர். திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலைப்பகுதியில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் 120.510 ஹெக்டேர் நிலப்பரப்பில் 28.09 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம் 153 மலைவாழ் மக்கள் பயனடைந்துள்ளனர். மேலும் 2012-2013 ஆம் ஆண்டிலும் இம்மலைப்பகுதியில் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட உள்ளன.

[2012 நவம்பர் 1

**30—**

## நீர்வளப் பாதுகாப்பு

**வினா எண் 15212—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் கல்வராயன் மலைப்பகுதியில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கல்வராயன் மலைப்பகுதியில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் 1976-77 ஆம் வருடம் முதலும், விழுப்புரம் மாவட்டத்தில் 1977-78 ஆம் வருடம் முதலும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (பழங்குடியினர் துணைத் திட்டம்) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சம உயர கல்வரப்பு, சமதள ஆதாரச்சுவர், நிலம் சீரமைத்தல், உதிரி கற்கள் தடுப்பணை மற்றும் பெரிய, சிறிய தடுப்பணை போன்ற மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம், கல்வராயன் மலைப்பகுதியில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் 200.200 ஹெக்டேர் நிலப்பரப்பில் 49.25 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம் 201 மலைவாழ் மக்கள் பயனடைந்துள்ளனர். விழுப்புரம் மாவட்டம், கல்வராயன் மலைப்பகுதியில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள்



2012 நவம்பர் 1]

106.995 ஹெக்டேர் நிலப்பரப்பில் 29.55 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம் 108 மலைவாழ் மக்கள் பயனடைந்துள்ளனர். மேலும், 2012-2013 ஆம் ஆண்டிலும் இம்மலைப்பகுதியில் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட உள்ளன.

**31—**

## செயல் விளக்கத் தோட்டம்

**வினா எண் 15219—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாதவரம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் புதிய அலங்கார மற்றும் செயல் விளக்கத் தோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம். மாதவரம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் புதிய அலங்கார மற்றும் செயல் விளக்கத் தோட்டம் அமைக்கும் பணி சுமார் ரூ.573.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

**32—**

## மூலிகைப் பயிர்கள்

**வினா எண் 15221—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் மூலிகைப் பயிர்கள் சாகுபடி செய்யும் திட்டம் எப்போது துவக்கப்படும்?

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கத் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் மூலிகை சாகுபடி ஏற்கெனவே துவக்கப்பட்டு (2011-2012), ரூ.918 இலட்சம் செலவில் 3,774 எக்டர் பரப்பளவில் மூலிகைப் பயிர் சாகுபடியானது சாகுபடி மானியத்துடன் மேற்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*வரும் 2012-2013 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து ரூ.1,200 இலட்சம் செலவில், 5000 எக்டர் பரப்பளவில் மூலிகைப் பயிர் சாகுபடி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

**33—**

**நுண்ணீர்ப் பாசனம்**

**வினா எண் 15223—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*2011-2012 ஆம் ஆண்டில் தேசிய நுண்ணீப் பாசன இயக்கம் செயல்படுத்தும் திட்டம் எப்போது துவக்கப்படும் ?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் 2011-12 ஆம் ஆண்டிலிருந்து தமிழக அரசின் முயற்சியின் பயனாக நுண்ணீர்ப் பாசனத் திட்டம் நிறுவ சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதம் மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் இதுவரையில் 24,400 எக்டர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசனம் ரூ.7,310.50 இலட்சம் நிதி செலவினத்தில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், 2012-2013 ஆம் ஆண்டில் 70,000 எக்டர் பரப்பளவில் ரூ.40,966.36 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.*



2012 நவம்பர் 1]

**34—**

**மூங்கில் சாகுபடி**

**வினா எண் 15225—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*2011-2012 ஆம் ஆண்டில் தேசிய மூங்கில் இயக்கத்திட்டத்தின்கீழ் மூங்கில் சாகுபடி செய்யும் திட்டத்தில் எத்தனை ஏக்கரில் மூங்கில் வளர்க்க அரசிடம் திட்டம் உள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*2011-2012 ஆம் ஆண்டில் தேசிய மூங்கில் இயக்கத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 625 ஏக்கர் (250 எக்டர்) பரப்பளவில் மூங்கில் சாகுபடியை அதிகரிக்க திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

**35—**

**கட்டட வசதி**

**வினா எண் 3699—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், ஆலங்குடி ஊராட்சி, ஆலங்குடி நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், பேராம்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் ஆலங்குடி ஊராட்சி சிபி 155 ஆலங்குடி நியாய விலைக் கடை (மொத்த குடும்ப அட்டைகள் 412) ஊராட்சிமன்றக் கட்டடத்தில் வாடகையின்றி தற்போது செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட*

நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்கு ஏற்ற சொந்த இடமோ நிதி வசதியோ கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது இல்லை. ஆதலால், ஆலங்குடி அங்காடிக்கு மாவட்ட ஊராட்சி முகமை மூலம் கட்டடம் கட்டித் தருமாறு புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலரிடம் கோரப்பட்டுள்ளது.

**36—**

**பண்டகச் சாலைக்குக் கட்டடம்**

**வினா எண் 15545—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை கூட்டுறவு பண்டகசாலைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை கூட்டுறவுப் பண்டகசாலைக்குக் கட்டடம் கட்டுவதற்கு உரிய இடத்தை அவ்வூர் மக்கள் அளிக்கும்பட்சத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி பெற்று கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்*

**37—**

**மேம்பாட்டுத் திட்டம்**

**வினா எண் 8957—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நீலகிரி மாவட்டத்தில் வனத் துறையின்மூலம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம்.*

*2010-11 ஆம் ஆண்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.4.25 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2011-12 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.4.49 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் ரூ.428.95 இலட்சம் செலவில் 75 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்பும் பணிகள், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள், வேட்டைத் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வன உயிரின உறைவிட மேம்பாட்டுப் பணிகள் மற்றும் பணியாளர் செலவினங்கள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பெற்று 29-2-2012 முதல் தேசிய நிலையில் கோட்டம்வாரியாக கீழ்கண்டவாறு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.*

| வ. எண். | கோட்டம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | 29-2-2012 வரை செலவு செய்யப்பட்ட தொகை விவரம் |
|---|---|---|---|
| 1. | நீலகிரி வடக்கு | 151.61 | 103.68 |
| 2. | நீலகிரி தெற்கு | 91.84 | 52.68 |
| 3. | கூடலூர் | 71.41 | 44.60 |
| 4. | முதுமலை புலிகள் காப்பகம், உதகை | 73.22 | 36.50 |
| 5. | பணியாளர் செலவு | 40.86 | 30.83 |
| | மொத்தம் | 428.94 | 268.30 |

மேலும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்குக் குடிநீர் வழங்க ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகிறது.

[2012 நவம்பர் 1

**38—**

## ரப்பர் மரக்கன்றுகள்

**வினா எண் 8965—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகர்கோவில் அரசு ரப்பர் கழகத்தின்மூலம் 340 எக்டேர் பரப்பில் ரப்பர் மரக்கன்றுகள் நடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். அரசு ரப்பர் கழகத்தில் முதிர்ச்சியடைந்த ரப்பர் மரங்களை வெட்டி அப்புறப்படுத்திய பின்னர், 5 வருடங்களில் 1100 ஹெக்டேர் பரப்பளவில் புதிய வீரியமிக்க ரப்பர் கன்றுகள் நடவு செய்யப்படும். 2011-12 ஆம் ஆண்டில் அரசு ரப்பர் கழகத்தில் 256.70 ஹெக்டேர் பரப்பளவில் வீரியமிக்க ரப்பர் கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. 2012-13 ஆம் வருடங்களில் 316.70 ஹெக்டேர் பரப்பளவில் வீரியமிக்க ரப்பர் கன்றுகள் நடவு செய்யப்படும்.*

**39—**

## சுவரொட்டிகள்

**வினா எண் 1984—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சாலைகளில் மைல் கல்கள், கைகாட்டி பெயர்ப் பலகைகளில் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு சாலைகளில் வைக்கப்பட்டுள்ள மைல் கல்கள், கைகாட்டி பெயர்ப் பலகைகளில் சுவரொட்டி ஒட்டுவதைத் தடுக்கும் வகையில் விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன. அதனையும் மீறி ஒட்டுபவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கும்பொருட்டு சாலை ஆய்வாளர்கள், சாலைப் பணியாளர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், நகர்ப்புறத்திலுள்ள முக்கியப் பெயர் பலகைகள் சிலவற்றில் சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்கள் செய்ய இயலா வண்ணம் முன்புறம் கம்பி வலை* (Weld Mesh) *பொருத்தப்பட்டுள்ளது. சிவகங்கை (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்ட வரம்பிற்குட்பட்ட சாலைப் பகுதிகளில் அமைந்துள்ள வழிகாட்டிப் பலகைகள், பெயர்ப் பலகைகள் ஆகியவற்றில் தற்சமயம் சுவரொட்டிகள் ஏதும் ஒட்டப்படவில்லை.*

**40—**

## குடும்ப அட்டை

**வினா எண் 4253—திரு. து. முருகேசன்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கல்பட்டு தொகுதி, 216 அம்மனப்பாக்கம், கொள்ளமேடு மு 58 இருளாண்டி நகர் மற்றும் செங்கை பகுதிகளில் குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*செங்கல்பட்டு தொகுதி, 216 அம்மனப்பாக்கம், கொள்ளமேடு மு 58 இருளாண்டி நகர் மற்றும் செங்கை பகுதிகளில் குடும்ப அட்டை கோரும் குடும்பத் தலைவர்கள் உரிய படிவத்தில் தேவையான ஆவணங்கள் இணைத்து அனுப்பினால், அதன்மீது விசாரணை செய்து குடும்ப அட்டை வழங்கிட தகுதியிருப்பின், புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.*

[2012 நவம்பர் 1

**41—**

## கட்டட வசதி

**வினா எண் 5270—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் சின்னதண்டாவிலுள்ள ஈடி.24 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, சின்னதண்டா பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு (ஈடி. 24) சொந்தமாக 6 சென்ட் நிலம் உள்ளது. இதில் 1.5 சென்ட் நிலத்தில் சங்க உறுப்பினர்களால் வழங்கப்பட்ட நன்கொடையின் மூலம் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இச்சங்கம் 2009-2010ஆம் ஆண்டில் ரூ.3,610.85 மட்டுமே இலாபம் ஈட்டி, சங்கக் கட்டட நிதியில் ரூ.4,702.82 மட்டுமே இருப்பில் உள்ளது.

எனவே, சங்கக் கட்டட நிதி மற்றும் மூலதனம் குறைவாக உள்ளதைக் கருத்தில்கொண்டு, இச்சங்கத்திற்குப் புதியதாகக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

**42—**

## கட்டட வசதி

**வினா எண் 5374—திருமதி ஆர். சாந்தி:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*(அ) சேந்தமங்கலம் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், பழையபாளையம், புதுக்கோம்பை கிராமம் ஆகிய பகுதிகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பழையபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் நாளொன்றுக்கு 217 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தமாக அடிமனை ஏதும் இல்லாததாலும், போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தாலும் பழையபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

மேலும், புதுக்கோம்பை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில், 437 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை ஏதும் இல்லாததாலும், போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தாலும் புதுக்கோம்பை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

**43—**

## நவீன பாலகங்கள்

**வினா எண் 9001—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மாநகரில் 3 புதிய நவீன பாலகங்கள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில், அசோக் நகர், பெசன்ட் நகர் மற்றும் வளசரவாக்கம் ஆகிய மூன்று இடங்களில் நவீன பாலகங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் அசோக்நகரில், புதிய பாலகம் அமைக்கப்பட்டு, கடந்த இரண்டு மாதங்களாகச் செயல்பட்டு வருகிறது. ஏனைய இரண்டு இடங்களிலும் நவீன பாலகங்கள் அமைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**44—**

## பால் பண்ணை மேம்படுத்துதல்

**வினா எண் 9002—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மாநகர பால் விற்பனையை உயர்த்த காஞ்சிபுரம்-காக்களூர் பால் பண்ணைகளை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2011-2012-ன்கீழ் அரசாணை எண் 200, வேளாண்மை (வே.உ.1) துறை, நாள் 31-10-2011-ன்மூலம் பெறப்பட்ட ரூ.365 இலட்சம் செலவிலும்* NMPS *(தேசிய புரதச் சத்து வழங்கும் அமைப்பு) திட்டத்தின்கீழ் ரூ.40 இலட்சம் செலவிலும் காஞ்சிபுரத்தில் உள்ள காக்களூர் பால் பண்ணையை மேம்படுத்த நிருவாக இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் மற்றும் காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*





**45—**

## மேம்படுத்துதல்

**வினா எண் 9004—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மாதவரம் மற்றும் அம்பத்தூரிலுள்ள பால் பண்ணைகளை தேசிய புரதச் சத்து வழங்கும் அமைப்பகம் 2011-12 ஆம் ஆண்டில் ஆர்.கே.வி.ஒய் திட்டத்தின்கீழ் மேம்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2011-2012-ன்கீழ் துணைத் திட்டமான தேசிய புரதச் சத்து வழங்கும் அமைப்பகம் என்ற திட்டத்தில் அரசாணை எண் 198, வேளாண்மை (வேஉ1) துறை, நாள் 31-10-2011-ன்மூலம் மாதவரம் மற்றும் அம்பத்தூரில் உள்ள பால் பண்ணைகளை மேம்படுத்த ரூ.434 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டில் ரூ.182/- இலட்சம் செலவில் மாதவரத்தில் உள்ள பால் பண்ணையை மேம்படுத்தவும், ரூ.252 இலட்சம் செலவில் அம்பத்தூரில் உள்ள பால் பண்ணையை மேம்படுத்தவும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**46—**

## நவீன இயந்திரங்கள்

**வினா எண் 9006—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணகிரி பால் பண்ணையில் நவீன இயந்திரங்கள் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மத்திய அரசு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்* (NADP) *2011-2012 ஆம் ஆண்டில் ரூ.270 இலட்சமும் இதே ஆண்டில் தேசிய புரதச் சத்து வழங்கும் அமைப்பு* (NMPS) *திட்டத்தின்கீழ் ரூ.90 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.360 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கிருஷ்ணகிரி பால் பண்ணையில் நவீன இயந்திரங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**47—**

## தடுப்பணை கட்டுதல்

**வினா எண் 2996—திரு. து. முருகேசன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கல்பட்டு தொகுதி, பாலாற்றில் திம்மாவரம் அருகில் தடுப்பணை கட்டி பழவேரியில் கிணறுகள் அமைத்து அவை மூலமாக செங்கல்பட்டு நகரத்திற்குக் குடிதண்ணீர் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*செங்கல்பட்டு வட்டம், ஆலப்பாக்கம் கிராம எல்லையில் பாலாற்றின் குறுக்கே செங்கல்பட்டு-மதுராந்தகம் செல்லும் பாலத்திலிருந்து மேற்புறம் சுமார் 300 மீட்டர் தொலைவில் 675 மீட்டர் நீளத்திற்கு தடுப்பணை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தடுப்பணை கட்டப்படுவதன்மூலமாக நேரடியாக தடுப்பணையில்* (surface storage) *182 மில்லியன் கன அடி* (Mcft) *நீர் கொள்ளளவாகத் தேக்கப்படும். மற்றும் நிலத்தடி நீர்* (sub-surface storage) *324 மில்லியன் கன அடி அளவிற்கு சேகரமாகும். இதன்மூலம் நாள் ஒன்றுக்கு 25 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுப்பதற்கு வாய்ப்புள்ளது. மேலும், இவ்வணை கட்டுவதன்மூலம் இதன் மேற்புறத்தில் பழவேரி எல்லையில் அமைந்துள்ள செங்கல்பட்டு நகராட்சி குடிநீர் கிணறுகள் செறிவூட்டப்படும். எனவே, திம்மாவரத்தின் அருகே தடுப்பணை கட்டுவதால் செங்கல்பட்டு நகராட்சி குடிநீர் கிணறுகள் செறிவூட்டப்பட்டு செங்கல்பட்டு நகராட்சிக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்கும் வாய்ப்புள்ளது.*



2012 நவம்பர் 1]

**48—**

## மதிப்பீடு

**வினா எண் 4885—திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், காண்டூர் கால்வாய் புனரமைப்புத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?*

*(ஆ) பணிகள் எப்போது நிறைவுபெறும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 342, பொதுப் பணி (க்யூ1) துறை, நாள் 29-11-2010-ல் கோயம்புத்தூர் மாவட்டம், காண்டூர் கால்வாயை 0/0 கி.மீ. முதல் 49.300 கி.மீ. வரை புனரமைப்பதற்கு ரூ.184.50 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஒப்பந்தத்தின்படி 30 மாதங்களில் (கால்வாயில் பாசனத்திற்குத் தண்ணீர் செல்லும் காலம் உட்பட) முடிக்கப்படவேண்டும்.*

**49—**

## தூர்வாருதல்

**வினா எண் 6659—திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

*கும்பகோணம் தொகுதி, காவிரி, அரசலாறு, திருமலைராசன், முடிகொண்டாறு, நாட்டாறு, குடமுருட்டி, கீர்த்தமன்னாறு போன்ற ஆறுகளை தூர்வார அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*கும்பகோணம் தொகுதியில் கடந்த 2009-2010 ஆம் ஆண்டு முடிகொண்டான் ஆறு மைல் 58/1 முதல் 59/1 வரை, காவிரி ஆறு மைல் 57/6 முதல் 57/7 வரை மற்றும் 57/7 + 150 முதல் 58/1 வரையிலும் தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், 2010-2011 ஆம் ஆண்டு முடிகொண்டான் ஆறு மைல் 56/2 முதல் 56/6 வரை மற்றும் மைல் 56/7 முதல் 57/7 வரையிலும், திருமலைராசன் ஆறு 56/3 முதல் 56/5 வரை மற்றும் மைல் 56/5 முதல் 57/3 வரை மற்றும் மைல் 57/3 முதல் 57/5 வரையிலும் தூர்வாரப்பட்டுள்ளது. மேலும் வரும் நிதியாண்டில் (2012-2013) முடிகொண்டான் ஆறு மைல் 60/0 முதல் 60/7 வரை தூர்வாரிட முன்னுரிமைப் பட்டியலில் பணி சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆறுகளில், மண்மேடிட்டு தூர்ந்து போயுள்ள பகுதிகளில் அவசரம் மற்றும் அவசியத்தைக் கவனத்தில் கொண்டு வரும் நிதியாண்டுகளில் பெறப்படும் நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு தூர்வாரிட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

**50—**

## காவிரி நடுவர் மன்றம்

**வினா எண் 9279—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையினை மத்திய அரசிதழில் வெளியிட மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையினை மத்திய அரசிதழில் வெளியிட மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது.*

**51—**

## ஒழுங்குமுறை ஆணையம்

**வினா எண் 9300—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு மாநில நீர் ஒழுங்குமுறை ஆணையம் அமைக்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வள நிலவளத் திட்டத்திற்காக மாநில நீர் மேலாண்மை முகமையை அரசு ஏற்கெனவே அமைத்துள்ளது. தற்போது, இம்முகமையே மாநில நீர் ஒழுங்குமுறை ஆணையப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.*

**52—**

## வெள்ளப் பாதிப்புகளைத் தடுத்தல்

**வினா எண் 9316—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

நபார்டு வங்கி உதவித் திட்டம்மூலம் திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க பணிகளைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*நபார்டு வங்கி உதவித் திட்டம்மூலம் திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க அனுமதி அளிக்கப்பட்ட 49 பணிகளில், 40 பணிகள் முடிக்கப்பட்டு 7 பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள இரண்டு பணிகளில் குடமுருட்டி ஆற்றை அகலப்படுத்தி பலப்படுத்தும் பணி நிலம் கையகப்படுத்திய பின்னர்தான் தொடங்கப்பட வேண்டும், மற்றும் ஒரு பணியான பாலம் கட்டும் பணி நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்பட வேண்டும். பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**53—**

### கால்வாய்கள் நவீனப்படுத்துதல்

**வினா எண் 9333—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், திருமக்கோட்டை கிராமத்தில் திருமேனி ஏரி மற்றும் அதன் ஊட்டுக் கால்வாய்களை நவீனப்படுத்தும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*திருமேனி ஏரி மற்றும் அதன் ஊட்டுக் கால்வாய்களை நவீனப்படுத்தும் பணியில் 70% முடிடைந்துள்ளது. தற்போது. எஞ்சிய பணியில் வழங்கு வாய்க்கால் பணி, சாய்வுதளப் பணி, கிராவல் போட்டு கரை அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.*



2012 நவம்பர் 1]

**54—**

### அணை கட்டுதல்

**வினா எண் 9338—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், விளாங்குடி ஓடையின் குறுக்கே நபார்டு கடன் உதவித் திட்டத்தில் அணை கட்டும் செயற் குறிப்பின் தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*பெரம்பலூர் மாவட்டம், விளாங்குடி ஓடையின் குறுக்கே நபார்டு கடன் உதவித் திட்டத்தில் அணை கட்டும் பணியில் தற்போது 72% பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் நில ஆர்ஜிதப் பணிகள் முடிந்தவுடன் விரைவில் செய்து முடிக்கப்படும்.*

**55—**

### வரத்துக் கால்வாய்

**வினா எண் 9342—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, பெண்ணாகரம் வட்டங்களில் நபார்டு கடன் உதவித் திட்டம்மூலம் வரத்துக் கால்வாய் அமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, பெண்ணாகரம் வட்டங்களில் நபார்டு கடன் உதவித் திட்டம்மூலம் வரத்துக் கால்வாய் அமைக்கும் பணியானது 60% முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.*

**56—**

**வாய்க்கால் மேம்படுத்துதல்**

**வினா எண் 9354—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நபார்டு கடன் உதவித் திட்டம்மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம் மலட்டாறிலிருந்து பிரியும் பனங்குடி, குயவன் வாய்க்கால்களை மேம்படுத்தும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், மலட்டாற்றிலிருந்து பிரியும் பனங்குடி, குயவன் வாய்க்காலினை ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நபார்டு கடன் உதவித் திட்டத்தின்மூலம் மேம்படுத்தும் பணியானது கடந்த 28-02-2011 அன்று துவங்கப்பட்டு தற்சமயம் 65% பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.*



2012 நவம்பர் 1]

**57—**

**ஏரி அமைத்தல்**

**வினா எண் 9406—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கொத்தயம் கிராமம் நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ஏரி அமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருகே கொத்தயம் கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டப் பணியில் 50 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. 2012-2013 ஆம் நிதியாண்டிற்குள் இத்திட்டப் பணிகள் அனைத்தையும் முழுமையாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

**58—**

**அணை புனரமைத்தல்**

**வினா எண் 9426—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வீடூர் அணையைப் புனரமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்திலுள்ள வீடூர் அணையைப் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.900.00 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீட்டுடன்கூடிய கருத்துரு கிடைக்கப்பெற்ற பின்பு, நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.*

**59—**

## கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையம்

**வினா எண் 10484—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பாராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திருப்பூர் மாவட்டம், அரசூர், மதுரை மாவட்டம், கப்பலூர் ஆகிய இடங்களில் நடப்பாண்டில் டாப்கோ நிலங்களில் தாய்க்கோழி அலகுகள், குஞ்சு பொரிப்பு நிலையங்கள் நிறுவும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பாராமரிப்புத் துறை அமைச்சர்:**

*ஆம். திருப்பூர் மாவட்டம், அரசூரிலும் மற்றும் மதுரை மாவட்டம், கப்பலூரிலும்* (Tamil Nadu Poultry Development Corporation Limited) Hatchery Unit *தரம் உயர்த்துதல் குறித்த பிரேரணைகள் இரண்டுமே தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தில்* (NADP) *செயல்படுத்திட ஆணை வழங்கி நிதி ஒதுக்கீடு வழங்கிடுமாறு அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டு அரசாணை*



2012 நவம்பர் 1]

*எதிர்பார்க்கப்படுகிறது. 2011-2012 ஆம் நிதியாண்டில் இவற்றிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, 2012-2013 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன்* Tamil Nadu Poultry Development Corporation Limited *நிலங்களில் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் நிறுவும் திட்டம் செயல்படுத்தப்படும்.*

**60—**

## தரம் உயர்த்துதல்

**வினா எண் 10500—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பாராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தை நல்ல உற்பத்தித் தரத்திற்கு உயர்த்தும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பாராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தை நல்ல உற்பத்தித் தரத்திற்கு உயர்த்துவதற்கு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் 29-1-2012 அன்று நாளிதழில் விருப்ப வெளிப்பாடு* (Expression of Interest) *கோரப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்களின்* (shortlisted firms) *டிசைன்களை* (presentation of design) *உயர்நிலைக் குழுவின் முன் வைத்து, முடிவு செய்த பின்னர் அக்கழகத்தால் ஒப்பந்தப்புள்ளி* (Tender) *கோரும் பணி நடவடிக்கையில் உள்ளது.*

**61—**

## தொழில் வளம்

**வினா எண் 11277—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

*(அ) மானாமதுரையில் தொழில் வளம் பெருக அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசிடம் இல்லை.*

*சிப்காட் நிறுவனம் ஏற்கெனவே மானாமதுரையில் சுமார் 492 ஏக்கர் நிலப்பரப்பில் தகுந்த ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய ஒரு தொழில் வளாகத்தை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இதில் தற்போது 17 தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் தோராயமாக 4,478 பேர் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.*

*மேலும், தகுந்த தொழில் முனைவோர்கள், மானாமதுரை தொகுதியில் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குத் தேவையான நிதி முதலீடுகளுடன், செயல் குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால், அவர்களுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இணைந்து திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.*

**62—**

### பருத்தி சேலை

**வினா எண் 9790—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நலிந்துவரும் பருத்தி சேலை தயாரிப்புத் தொழிலை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1,173 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 1,099 சங்கங்கள் பருத்தி நெசவாளர் சங்கங்களாக உள்ளன. பருத்தி சேலைகளுக்கு வெளிச்சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளதால், பருத்தி சேலை தயாரிப்புத் தொழிலை ஊக்குவித்து, விற்பனையை அதிகரிக்க அரசால் கீழ்க்காணும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:*

- *மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின்கீழ் நெசவுத் தொழிலுக்குத் தேவைப்படும் புதிய தறிகள், ஜக்கார்டு பெட்டி, டாபி பெட்டி, அச்சு, விழுது போன்ற தறி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.*
- *பருத்தி சேலை உற்பத்திக்குத் தேவைப்படும் நூல் இரகங்கள் நியாயமான விலையில் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படுகிறது.*
- *நூல் கொள்முதல் மற்றும் நெசவாளர்களுக்குக் கூலி வழங்கி தொடர் வேலைவாய்ப்பு வழங்குவதற்காக மாநில, மத்திய கூட்டுறவு வங்கிகள்மூலம் சங்கங்களுக்குத் தேவையான காசுக்கடன் வசதி ஏற்படுத்தப்படுகிறது.*
- *காசுக்கடனுக்கான வட்டிச் சுமையைக் குறைக்க 4% வட்டி மானியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*
- *வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் வெளிச்சந்தையில் எளிதில் விற்பனையாகக் கூடிய சேலை இரகங்களை உற்பத்தி செய்வதற்கு நெசவாளர் சேவா மையம் மற்றும் தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு நிறுவனம்மூலம் புதிய வடிவமைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.*
- *பருத்தி சேலைகளின் விற்பனையை அதிகரிக்க தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கைத்தறி கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.*
- *பருத்தி சேலைகளின் விற்பனையை மேம்படுத்தி, இருப்பினைக் குறைக்கும் நோக்கில் ஆண்டு முழுவதும் 20% தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது.*

[2012 நவம்பர் 1

- பருத்தி சேலை உற்பத்தி செய்யும் கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதற்கேதுவாக, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) போதிய அளவுக்கு உற்பத்தித் திட்டம் வழங்கி, உற்பத்தி செய்யப்படும் அனைத்து பருத்திசேலைகளையும் கொள்முதல் செய்து வருகிறது.
- கைத்தறி நெசவாளர்கள் அதிக வருவாய் ஈட்டுவதற்கேதுவாக ஒவ்வோர் ஆண்டும் அகவிலைப்படி உயர்வு அல்லது அடிப்படைக் கூலி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.
- நடப்பு 2012-2013 ஆம் ஆண்டில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைத்து புத்துயிரூட்டுவதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

(ஆ) கேள்வி எழவில்லை.

**63—**

## நூற்பாலை இயந்திரங்கள்

**வினா எண் 10185—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இயங்கிவரும் 5 கூட்டுறவு நூற்பாலை இயந்திரங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்கள் 2011-2012 ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறை தொடர்பான மானியக் கோரிக்கை 13-09-2011 ஆம் நாள் அன்று நடைபெற்றபோது தற்போது இயங்கும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தியினை அதிகரிக்கும் வகையில் ரூ.67.60 கோடி செலவினத்தில் கூட்டுறவு நூற்பாலைகளின் இயந்திரங்கள் நவீனமயமாக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதனடிப்படையில், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் (NCDC) மூலம் நூற்பாலைகளைப் புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் இயங்கும் ஐந்து நூற்பாலைகளையும் முழுமையாக நவீனமயமாக்கும்பொருட்டு ரூ.104.41 கோடி திட்ட மதிப்பிலான கருத்துரு பரிசீலனையில் உள்ளது.



2012 நவம்பர் 1]

**64—**

## விசைத்தறி பெருங்குழுமம்

**வினா எண் 10263—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் விசைத்தறி பெருங்குழுமம் அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

ஈரோடு விசைத்தறி பெருங்குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த ஜவுளி வர்த்தக வளாகம் ஈரோட்டில் இருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள கங்காபுரம் எனும் இடத்தில் ரூ.153.63 கோடி திட்ட மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது. இங்கு மொத்த வியாபாரத்திற்கென 1,750 நிரந்தர வணிக வளாகங்களும் வாரச்சந்தை மூலம் விற்பனை செய்வதற்காக 1,000 கடைகளும் மற்றும் சுமார் 63.00 சதுர மீட்டர் பரப்பளவுகொண்ட நிரந்தர கண்காட்சி மையம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது. மேற்படி வர்த்தக வளாகம்மூலம் வருடந்தோறும் சுமார் ரூ.2,067 கோடி மதிப்பிற்கு வர்த்தகம் நடைபெறும் என திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட வர்த்தக வளாகம் அமைத்திட கீழ்க்காணும் விவரப்படி நிதி ஆதாரம் திட்டமிடப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. முதலீட்டாளர்கள் பங்கு | — | ரூ.41.64 கோடி |
| 2. வங்கிக் கடன் | — | ரூ.73.94 கோடி |
| 3. மத்திய அரசு மானியம் | — | ரூ.38.05 கோடி |
| | | ரூ.153.63 கோடி |

[2012 நவம்பர் 1

ஒருங்கிணைந்த ஜவுளி வர்த்தக வளாகம் அமைக்கும் பொருட்டு, ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே கங்காபுரம் எனும் இடத்தில் 15.3 ஏக்கர் நிலம் ரூ.8.19 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், வர்த்தக வளாகம் தொடர்பான, உள்கட்டமைப்பு தொடர்பான வடிவமைப்புகள் மற்றும் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வர்த்தக வளாகம் அமைக்கும்பொருட்டு தேவையான சட்டபூர்வ அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

தற்போது உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பணிகள் முழுவதும் நிறைவடைந்து 2012 டிசம்பர் மாதத்தில் ஈரோடு ஒருங்கிணைந்த விசைத்தறி பெருங்குழும ஜவுளி வர்த்தக வளாகத்தைச் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**65—**

## நாற்காலி வயர் பின்னுதல்

**வினா எண் 3779—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நலிந்துவரும் நாற்காலி வயர் பின்னும் தொழிலை மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிற அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் நமூனாக்களின் அடிப்படையில், வாரியக் கட்டுப்பாட்டில் செயல்படும் தச்சுக்கொல்லு அலகுகள்மூலம் உற்பத்தி செய்யப்படும் நாற்காலிகளில் வயர் பின்னும் பொருட்டு, சம்பந்தப்பட்ட அலகுகளின் அருகில் உள்ள வயர் பின்னும் தொழில் தெரிந்த பார்வையற்றோர் மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின்மூலம் இப்பணியை முடித்து, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வகையில் நாற்காலி வயர் பின்னும் தொழிலை மேம்படுத்திட அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2012 நவம்பர் 1]

**66—**

## மாசுபடுதல்

**வினா எண் 5591—திரு. பா. கணேசன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதி, களியாம்பூண்டி பகுதி நோபல் ஸ்டீல்ஸ் & எனர்ஜி பிரைவேட் லிமிடெட் கம்பெனியால் அப்பகுதி மாசு அடைவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தி/ள். நோபல் டெக் இண்டஸ்ட்ரிஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலையானது காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், மேல்பாக்கம் கிராமத்தில், நவம்பர் 2006 முதல் இயங்கி வருகிறது. இந்தத் தொழிற்சாலையில் கீழ்க்காணும் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன:

| | | |
|---|---|---|
| 1. இரும்பு (sponge iron) | — | 7500 டன்/மாதத்திற்கு |
| 2. இரும்பு பொருட்கள் (கம்பிகள் உட்பட) | — | 9000 டன்/மாதத்திற்கு |
| 3. மின்சாரம் | — | 8 மெகாவாட் |

கீழ்க்கண்ட மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன:

| | | |
|---|---|---|
| 1. இரும்புத் தாது | — | 480 டன்/நாள் ஒன்றுக்கு |
| 2. நிலக்கரி | — | 270 டன்/நாள் ஒன்றுக்கு |
| 3. சுண்ணாம்பு | — | 90 டன்/நாள் ஒன்றுக்கு |
| 4. இரும்புக் கழிவுகள் (scrap) | — | 100 டன்/நாள் ஒன்றுக்கு |

இரும்புத் தாது, நிலக்கரி மற்றும் சுண்ணாம்புடன் கலக்கப்பட்டு ரோட்டரி உலையில் செலுத்தப்பட்டு, இரும்புத் தாதுவிலிருந்து இரும்பு (Sponge Iron) பிரித்தெடுக்கப்படுகிறது. மேற்கண்டவாறு பிரித்தெடுக்கப்பட்ட இரும்பு, இண்டெக்சன் உலை மூலம், உருக்கப்பட்டு இரும்புக் கட்டிகளாக (Ingots) வார்த்தெடுக்கப்படுகிறது. இந்த இரும்புக் கட்டிகள் அடுத்ததாக அமைந்துள்ள உலையில் சூடேற்றப்பட்டு இரும்புக் கம்பிகள் உள்ளிட்ட பொருட்களாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

[2012 நவம்பர் 1

2. மேலும், இரும்புத் தாதுவிலிருந்து இரும்பு பிரித்தெடுக்கும்போது சம்பந்தப்பட்ட உலையிலிருந்து (Kiln) வெளிப்படும் வெப்பத்தைப் பயன்படுத்தி நீராவி (Steam) உற்பத்தி செய்யப்பட்டு அதில் இருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இத்தொழிற்சாலையில் கீழ்க்கண்டவாறு காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன:

| மாசு வெளியாகும் இடங்கள் | மாசுக்கட்டுப்பாடு சாதனம் | புகைபோக்கி உயரம் |
|---|---|---|
| 1. உலை 1 (Kiln) | எலக்ட்ரோஸ்டேட்டிக் | 40 மீ. |
| 2. உலை 2 (Kiln) | பிரிசிப்பிடேட்டர் (ESP) | |
| 3. கொதிகலன் | புகைபோக்கி | 54 மீ. |
| 4. மூலப்பொருட்கள் கையாளும் இடம் | பேக்பில்ட்டர் | 33 மீ. |
| 5. மூலப்பொருட்கள் கையாளும் இடம் | பேக்பில்ட்டர் | 33 மீ. |
| 6. இரும்பு குளிர்விக்கும் இடம் | பேக்பில்ட்டர் | 25 மீ. |
| 7. இண்டக்சன் உலை | வெட் ஸ்கிரப்பர் | 40 மீ. |

இந்தத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 23,200 லிட்டர் அன்றாடக் கழிவுநீரை (Sewage) வெளியேற்றுகிறது. குளிர்விப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய நீர் மறுசுழற்சி செய்யப்படுகிறது. தொழிற்கழிவுநீர் (Trade effluent) ஏதும் உற்பத்தி செய்யப்படவில்லை. மேலும் அன்றாடக் கழிவுநீர், சுத்திகரிப்பு நிலையம்மூலம் சுத்திகரிக்கப்பட்டு மரங்கள் வளர்க்கப் பயன்படுத்தப்படுகிறது.

மேற்கண்ட தொழிற்சாலையில் சுற்றுச்சூழல் மாசு குறித்து காற்று தர ஆய்வு கடந்த 9-8-2011 அன்று மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது. அந்த அறிக்கையின்படி SO2, NOX, CO மற்றும் நுண்துகள்கள் (Suspended Particulate Matter) உட்பட அனைத்து காரணிகளும் வாரியம் நிர்ணயித்துள்ள அளவீடுகளுக்குள் இருப்பது அறியப்பட்டது. இருப்பினும், காற்று மாசினை தொடர்ச்சியாகக் கண்காணிக்கும் சாதனங்கள் (Online Monitors) பொருத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இத்தொழிற்சாலையின் நடவடிக்கைகளை வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.



2012 நவம்பர் 1]

**67—**

## வன்கொடுமை

**வினா எண் 9008—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கையைக் குறைக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

(ஆ) தீண்டாமை கடைப்பிடிக்காத கிராமத்தை (சென்னை தவிர) மாவட்டத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து கிராமத்திற்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 31 மாவட்டத்திற்கு ரூ.62.00 இலட்சம் கிராம வளர்ச்சித் திட்டத்திற்குப் பயன்படும் வகையில் வழங்கப்படுகிறது. துறையின் கீழ் இயங்கும் விளம்பரப் பிரிவுமூலம் தீண்டாமைக் கொடுமை குறித்து விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. வன்கொடுமை புரிவோர்மீது குற்றவியல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கடுமையான தண்டனை வழங்கப்படுவதால் இக்குற்றம் குறைய வாய்ப்பு அதிகம் உள்ளது. வன்கொடுமைகளைத் தடுக்க நடுவணரசால் இயற்றப்பட்ட குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டம், 1989 போன்றவை மாநில அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன. இதற்கெனத் தனியே கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையின்கீழ் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு அரசால் ஏற்படுத்தப்பட்டு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இந்த இரு சட்டங்களின் கீழ்,

(i) வழக்குகளை பதிவு செய்தல், விசாரணை செய்தல், வழக்கு தொடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்தும்,

(ii) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குப் பாதுகாப்பு அரணாகவும் விளங்கி வருகிறது.

இச்சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க 8 மாவட்டங்கள் மற்றும் 3 காவல் துறை ஆணையரகங்களின் எல்லை வரம்பிற்குள் 4 சிறப்பு நீதிமன்றங்களை தஞ்சாவூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அரசு அமைத்துள்ளது. இதர மாவட்டங்களில், குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு, இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1995 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான (வன்கொடுமைத் தடுப்பு) விதிகளில் விதி 17(1)-ன்படி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. தேவையான இடங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பிரச்சினைகளை அறிந்த நல்ல நோக்கம் கொண்ட நபர் ஒருவரை உறுப்பினராக நியமிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவது, பாதிக்கப்பட்டவர்களுக்கு தீருதவி மற்றும் மறுவாழ்வு அளிப்பது இச்சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை ஆகியவை குறித்து ஆய்வு செய்கிறது. மேலும், இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆய்வு செய்யவும் மேற்பார்வையிடவும் மாநில அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் விழிப்புணர்வு மற்றும் மேற்பார்வைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

5. தீண்டாமையின் தீமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறும்படங்கள் கிராமங்களில் திரையிடப்படுகின்றன. மனித நேய வார விழா ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் ஜனவரி 24 முதல் 30 ஆம் நாள்வரை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படுகிறது. வில்லுப்பாட்டுக் கலைஞர்கள்மூலம் பொதுமக்களுக்குத் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து விளம்பரப்படுத்தப்படுகிறது. மேலும், சமபந்தி விருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆம் தேதிகள் மற்றும் அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களில் நடத்தப்படுகிறது. தமிழக கிராமங்களில் தீண்டாமையை ஒழிக்க மக்கள் விழிப்புணர்வுத் திட்டம், மாவட்டங்களில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் ரூ.70.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படுகிறது. இச்செலவினத்தை மாநில அரசும், நடுவணரசும் 50:50 என்ற விகிதத்தில் பங்கிட்டுக் கொள்கின்றன. சமூக நீதித் தேநீர் விருந்துகள் மாநிலம் முழுவதும் கிராமங்களில் நடத்தப்படுகின்றன.





**68—**

## பேருந்து வசதி

**வினா எண் 2588—திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை—திருப்பத்தூர் வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளைப் புதியதாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை—திருப்பத்தூர் வழித்தடத்தில் இயக்கப்பட்டுவரும் பேருந்துகளில் உள்ள அனைத்து குறைகளும் சரி செய்யப்பட்டு நல்ல முறையில் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், புதிய பேருந்துகள் வடிவமைக்கப்பட்ட பின்னர் பழைய பேருந்துகள் வயது மூப்பு அடிப்படையில் கழிவு செய்யப்பட்டு அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகள் இயக்கப்படும்.

[2012 நவம்பர் 1

**69—**

## பேருந்து வசதி

**வினா எண் 3530—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையிலிருந்து ஊத்தங்கரை, மத்தூர் வழியாக பர்கூருக்கும், ஓசூரிலிருந்து கிருஷ்ணகிரி வழியாக பர்கூருக்கும் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை-பர்கூர் (வழி) ஊத்தங்கரை, மத்தூர் வழித்தடத்தின் நீளம் 107.0 கி.மீ. ஆகும். பேருந்து வசதி கோரியுள்ள வழித்தடத்தில் திருவண்ணாமலை முதல் மத்தூர் மற்றும் மத்தூர் முதல் பர்கூர் வரை பகுதி பகுதியாக பேருந்து வசதியுள்ளது. மேற்படி வழித்தடம் முழுவதும் பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளதால், தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

2. ஓசூர்-பர்கூர் (வழி) கிருஷ்ணகிரி வழித்தடத்தின் நீளம் 75.0 கி.மீ. ஆகும். அரசு மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தடத்தில், தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

**70—**

## சிக்கனக் கடன் சங்கம்

**வினா எண் 4567—திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்துக் கழகம் கோவை மாவட்டத்தில் தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட 16 1/2 கோடி பணத்தை சிக்கனக் கடன் சங்கத்தில் உடனே செலுத்திட அரசு ஆவன செய்யுமா?



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசுப் போக்குவரத்துக் கழகம், கோவையின் நிதி நிலைமை தற்பொழுது ஓரளவு சீரடைந்து வருவதால், தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட சிக்கனக் கடன் தொகையை, சிக்கன கடன் சங்கத்திற்கு விரைந்து செலுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு முதல் தவணையாக ரூ.55,60,000/-ம், இரண்டாவது தவணையாக ரூ.26,36,587/-ம் மற்றும் மூன்றாவது தவணையாக ரூ.30,00,000/-ம் செலுத்தப்பட்டு உள்ளது.

**71—**

## ஓய்வூதியம்

**வினா எண் 4631—திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1-4-2003-க்குப் பிறகு பணி நியமனம் பெற்றவர்களை ஓய்வூதியத் திட்டத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

1-4-2003-க்குப் பிறகு பணி நியமனம் பெற்றவர்களை ஓய்வூதியத் திட்டத்தில் சேர்க்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**72—**

## பேருந்து வசதி

**வினா எண் 6194—திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 1

*(அ) சிவகங்கை பேருந்து நிலையத்திலிருந்து மதுரைக்கு புதிய பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை—மதுரை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வரும் பேருந்துகளில் உள்ள அனைத்து குறைகளும் சரி செய்யப்பட்டு நல்ல முறையில் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், புதிய பேருந்துகள் வடிவமைத்துவரும் பட்சத்தில் பேருந்துகளின் வயது மூப்பு அடிப்படையில் கழிவு செய்யப்பட்டு அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகள் படிப்படியாக மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன.*

**73—**

## பேருந்து வசதி

**வினா எண் 9755—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டையிலிருந்து இலுப்பூர்வரை செல்லும் தடம் எண் 25 பேருந்தினை காலை 8.30 மணிக்கும், மாலை 4.30 மணிக்கும் பள்ளி நேரத்தில் இருந்திராப்பட்டி வரை நீட்டிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை-இருந்திராப்பட்டி வழித்தடம் முழுவதும் பேருந்து வசதி உள்ளது. மேலும், பேருந்து இயக்கக் கோரியுள்ள வழித்தடத்தின் நீளம் நகர்ப்பேருந்து இயக்க அனுமதிக்கப்பட்ட தூரத்தைக் காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே, புதுக்கோட்டையிலிருந்து இயக்கப்படும் பேருந்தை இருந்திராப்பட்டிவரை நீட்டித்து இயக்க இயலாத நிலை உள்ளது.*



2012 நவம்பர் 1]

**74—**

## பேருந்து வசதி

**வினா எண் 9756—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், இருந்திராப்பட்டி ஊராட்சி, இலுப்பூரிலிருந்து இருந்திராப்பட்டி வழியாக ஆவூர்—மாத்தூர் வழியாக திருச்சிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இலுப்பூரிலிருந்து இருந்திராப்பட்டி வழியாக ஆவூர், மாத்தூர் வழியாக திருச்சி வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது:*

*இலுப்பூர்-இருந்திராப்பட்டி-24 நடைகள்*

*இருந்திராப்பட்டி-மலம்பட்டி-2 நடைகள்*

*மலம்பட்டி-திருச்சி (வழி) ஆவூர், மாத்தூர்-22 நடைகள். இதுவே, இப்பகுதி மக்களுக்குப் போதுமானதாக உள்ளது.*

**75—**

## பேருந்து நீட்டிப்பு

**வினா எண் 9758—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், புதுக்கோட்டையிலிருந்து இயக்கப்படும் பேருந்தினை இருந்திராப்பட்டி வரை நீட்டிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பேருந்து இயக்கக் கோரியுள்ள புதுக்கோட்டை-இருந்திராப்பட்டி வழித்தடத்தின் நீளம் நகர்ப்பேருந்து இயக்க அனுமதிக்கப்பட்ட தூரத்தைக் காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே, புதுக்கோட்டையிலிருந்து இயக்கப்படும் பேருந்தை இருந்திராப்பட்டிவரை நீட்டித்து இயக்க இயலாது.*

**76—**

## பேருந்து நீட்டிப்பு

**வினா எண் 9762—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை முதல் மண்ணவேளாம்பட்டி வழியாக அன்னவாசல்வரை செல்லும் பேருந்தை இலுப்பூருக்கு நீட்டிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையிலிருந்து மண்ணவேளாம்பட்டி வழியாக அன்னவாசல்வரை தடம் எண் 7—பி என்ற நகர்ப் பேருந்து 4 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும் இப்பேருந்து பல்முனைத் திட்டத்தின் 4 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பேருந்தை இலுப்பூர்வரை நீட்டித்து இயக்கினால் காலநேரம் மாற்றம் ஏற்பட்டு பள்ளி செல்லும் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். எனவே, இப்பேருந்தினை இலுப்பூருக்கு நீட்டித்து இயக்க இயலாது.*



2012 நவம்பர் 1]

**77—**

## புதிய பேருந்து

**வினா எண் 9765—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை முதல் சத்தியமங்கலம் வழியாக சன்னயப்பட்டி, பொன்னைண்டாபட்டி, உடையாண்பட்டிவரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை முதல் சத்தியமங்கலம் வழியாக சன்னயப்பட்டி, பொன்னைண்டாபட்டி, உடையாண்பட்டி வழித்தடத்தில் 18-12-2011 ஆம் தேதி முதல் பேருந்து இயக்கப்படுகிறது.*

**78—**

## பேருந்து நீட்டிப்பு

**வினா எண் 9767—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கீரனூரிலிருந்து இலுப்பூர்வரை இயக்கப்படுகின்ற தடம் எண் கே 9 பேருந்தை பின்னங்குடிப்பட்டியிலிருந்து மேட்டுப்பட்டி வரை நீட்டிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பட்டி கிராமம், கீரனூர்—இலுப்பூர் செல்லும் பிரதான சாலையில் மேட்டுப்பட்டி விலக்கிலிருந்து 1.5 கி.மீ. தூரத்தில் உள்ளது. மேலும், இப்பேருந்து பல்முனைத்*

திட்டத்தின்கீழ் தினசரி 424.0 கி.மீ. தூரம் போதிய கால அவகாசமின்றி இயக்கப்படுகிறது. எனவே, இப்பேருந்தினை மேலும் நீட்டித்து இயக்க இயலாது.

**79—**

## கை பேசி

**வினா எண் 9999—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பணியின்பொழுது அரசுப்• போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள் கைபேசி உபயோகித்தால் கடுமையான தண்டனை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஓட்டுநர்கள் பணியின்போது கைபேசி பயன்படுத்தவோ அல்லது எடுத்துச் செல்லவோ கூடாது என சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், பேருந்துகளில் ஓட்டுநர்கள் பணியின்போது கைபேசி உபயோகப்படுத்துகின்றார்களா என்பது கண்காணிக்கப்பட்டு, அவர்கள் அளிக்கும் அறிக்கையின்படி தவறு செய்யும் ஓட்டுநர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், தவறிழைக்கும் ஓட்டுநர்கள், தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுவதோடு, அவர்களுக்கு இது தொடர்பாக முறையான பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

**80—**

## புதிய பேருந்து

**வினா எண் 10666—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை, ஊரப்பட்டிக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டையிலிருந்து ஊரப்பட்டிக்கு தினசரி 10 நடைகள் பேருந்து இயக்கப்படுகிறது. மேலும், இப்பேருந்துகள் அனைத்தும் குறைந்த வயதுள்ள பேருந்துகளாகவும் நல்ல நிலையிலும் இயக்கப்பட்டு வருகிறது.

**81—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 10667—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை, பெருமாநாடு, புல்வயல், தளிஞ்சி, திருநாடு வழியாக இலுப்பூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை, பெருமாநாடு, புல்வயல், தளிஞ்சி, திருநாடு வழியாக இலுப்பூர் வழித்தடத்தில் பகுதி பகுதியாக கீழ்க்கண்டவாறு பேருந்து வசதி உள்ளது:

| | | |
|---|---|---|
| புதுக்கோட்டை—திருநாடு | — | 8 நடைகள் |
| திருநாடு—இலுப்பூர் | — | 2 நடைகள் |
| மணப்பாறை—இலுப்பூர் | — | 6 நடைகள் |

(வழி திருநாடு)

எனவே, மேற்படி பேருந்து வசதியே போதுமானதாகும்.

[2012 நவம்பர் 1

**82—**

## பேருந்து வசதி

**வினா எண் 10684—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், புல்வயல் ஊராட்சி நிலையப்பட்டிக்கு தொடர்ந்து பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நிலையப்பட்டி, புதுக்கோட்டை — பரம்பூர் சாலையில், நிலையப்பட்டி விலக்கிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மேலும், மேற்படி வழித்தடத்தில் 62 நடைகள் பேருந்து இயக்கப்படுகிறது. பிரதான சாலையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமம் ஆகும். எனவே, நிலையப்பட்டி கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகக் கருதப்படுகிறது.*

**83—**

## பேருந்து வசதி

**வினா எண் 10687—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, கோத்திராப்பட்டி ஊராட்சி, கோத்திராப்பட்டி வழியாக புதுக்கோட்டையிலிருந்து தேராவூர், மேட்டுப்பட்டி வரை இயங்கி வந்த தடம் எண் 25 ஏ பேருந்தினை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை — தேராவூர் மேட்டுப்பட்டி வழி இலுப்பூர் வழித்தடத்தில் இலுப்பூர் முதல் தேராவூர் மேட்டுப்பட்டி வரை உள்ள சாலை மோசமாக உள்ளது. சாலை சரிசெய்யப்பட்ட பின்பு பேருந்து இயக்கப்படும்.*

**84—**

## பேருந்து வசதி

**வினா எண் 11004—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி பேரூராட்சி, சிவகாமிபுரத்திற்கு இயக்கப்படும் தடம் எண் 15-எம் பேருந்தை சீராக இயக்கிட அரசு ஆவன செய்யுமா ?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*காலை 10.20 மணிக்கும், மாலை 18.45 மணிக்கும் இரு நடைகள் நாகர்கோவிலிலிருந்து சிவகாமிபுரத்திற்கும், காலை 11.40 மற்றும் 20.10-க்கு பணகுடி பேருந்து நிலையத்திலிருந்து இரண்டு நடைகள் சிவகாமிபுரத்திற்கும் மொத்தம் 4 நடைகள் 15-எம் பேருந்து சீராக இயக்கப்பட்டு வருகின்றது.*

**85—**

## பேருந்து வசதி

**வினா எண் 11005—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் பேரூராட்சி, நந்தகோபாலசமுத்திரம் மற்றும் குளத்துக் குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்குப் பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நந்தகோபாலசமுத்திரம் மற்றும் குளத்துக் குடியிருப்பு ஆகிய பகுதிகள், தற்போது பேருந்துகள் சென்று வரும் வள்ளியூர் - ராஜா புதூர் - திருக்குறுங்குடி சாலையிலிருந்து பிரிந்து சுமார் 1.5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளன. எனவே, இக்கிராமங்கள் பேருந்து வசதிபெற்ற கிராமங்களாகவே கருதப்படும். இக்கிராமங்களின் மக்கள் தொகை 500-க்கும் குறைவாகவே உள்ளது என்பதால், இப்பகுதி மக்கள் பிரதான சாலை வழியாக இயக்கப்பட்டு வரும் 6 சுற்றுக்கள் பேருந்து வசதியைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

**86—**

## பேருந்து வசதி

**வினா எண் 12424—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரிலிருந்து வீரடிவயல், கொட்டப்பள்ளம், ஒடுக்கூர், லெக்கணாப்பட்டி தாயினிப்பட்டி, ஏதினிப்பட்டி, நார்த்தாமலை வழியாக பொம்மாடிமலை வரை பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடமான கீரனூர்-பொம்மாடிமலை வழித்தடத்தில் ஏதினிப்பட்டி விலக்கு முதல் தெற்கு லெக்கணாப்பட்டி வரை சாலை, பேருந்து இயக்க தகுதியற்ற நிலையில் மோசமாக உள்ளதால், இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாது.

**87—**

## பேருந்து வசதி

**வினா எண் 12638—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், இராஜாளிப்பட்டி ஊராட்சி, இராஜாளிப்பட்டிக்கு காலை 8 மணிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையிலிருந்து இராஜாளிப்பட்டிக்கு காலை 5.30, 6.30 மற்றும் 6.50 ஆகிய நேரங்களில் பேருந்து இயக்கப்படுகிறது. இதுவே இப்பகுதி மக்களுக்குப் போதுமானதாகும்.

**88—**

## பேருந்து வசதி

**வினா எண் 12643—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 1

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், இருந்திராப்பட்டி ஊராட்சி, சாத்தம்பட்டியிலிருந்து இலுப்பூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சாத்தம்பட்டியிலிருந்து இலுப்பூருக்கு மினிப் பேருந்து ஒன்று இயக்கப்படுகிறது. இதுவே இப்பகுதி மக்களுக்குப் போதுமானதாகும்.*

**89—**

### பேருந்து வசதி

**வினா எண் 12644—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், இருந்திராப்பட்டி ஊராட்சி, சாத்தம்பட்டி முதல் கல்லுப்பட்டி வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சாத்தம்பட்டி—கல்லுப்பட்டி வழித்தடத்தை ஆய்வு செய்ததில், சாத்தம்பட்டி முதல் கல்லுப்பட்டி வரை தட நீளம் 2.5 கி.மீ. ஆகும். மேலும், புதுக்கோட்டையிலிருந்து சாத்தம்பட்டி வரை 2 நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து பல்முனை வழித்தடங்களின்கீழ் இயக்கப்பட்டு வருவதால் கல்லுப்பட்டி வரை நீட்டித்து இயக்க இயலாது.*



2012 நவம்பர் 1]

**90—**

### பேருந்து வசதி

**வினா எண் 13024—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையிலிருந்து வயலோகம், குடுமியான்மலை வழியாக காரச்சூரான்பட்டி வரை தினமும் இரு முறை பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையிலிருந்து குடுமியான்மலை வரை 62 நடைகள் பேருந்து வசதி உள்ளது. மேலும், புதுக்கோட்டையிலிருந்து நெருஞ்சிக்குடி வழியாக காரச்சூரான் பட்டிக்கு 4 நடைகள் பேருந்து வசதி உள்ளது. இதுவே போதுமானது.*

**91—**

### தேர்வு மையம்

**வினா எண் 6338—திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், மல்லை கிராமத்தில் உள்ள அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் தேர்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மார்ச் 2012-ம் ஆண்டிற்கான மேல்நிலைத் தேர்வுகள் ஏற்கெனவே முடிவுற்றுள்ள நிலையில், வரும் கல்வியாண்டில் இப்பள்ளியைத் தேர்வு மையமாக அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.*

**92—**

### பாடப் பிரிவுகள்

**வினா எண் 6986—திரு. சு. மாதேஸ்வரன்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பால் பண்ணை, கோழி வளர்ப்பு ஆகிய தொழில் கல்விப் பாடப்பிரிவுகள் துவங்கிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*அரசாணை (நிலை) எண் 277, பள்ளிக் கல்வி (விஇ) துறை நாள் 26-10-2009-ன்படி தொழிற்கல்வி பாடப் பிரிவுகள் துவங்க போதிய மாணவர்களின் எண்ணிக்கை, இடவசதி இருப்பின் முதன்மைக் கல்வி அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்படும் நிலையில் இதற்கான கருத்துரு பள்ளிக் கல்வி இயக்குநர் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டு அரசால் ஆய்வு செய்யப்பட்டு உரிய ஆணை வழங்கப்படுகிறது. ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பால்பண்ணை, கோழி வளர்ப்பு ஆகிய தொழிற்கல்வி பாடப் பிரிவுகள் துவங்கிடக் கோரும் கருத்துரு ஏதும் முறையான வழியில் தற்போது அரசளவில் பெறப்படவில்லை. எனவே, இப்பள்ளியில் மேற்படி தொழிற்கல்வி பாடப் பிரிவுகள் துவக்குவது குறித்து பரிசீலிக்கும் அவசியம் தற்போது எழவில்லை.*



2012 நவம்பர் 1]

**93—**

### தேர்வு மையம்

**வினா எண் 13263—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியில் தேர்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியில் மார்ச் 2012-க்கு மேல்நிலைத் தேர்வுக்கு புதிய தேர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.*

**94—**

### விலையில்லா மின் விசிறி

**வினா எண் 15203—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2011-12 ஆம் ஆண்டிற்கான விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் ஆகியவை வழங்கப்பட்டுவிட்டனவா?*

*(ஆ) 2012-13 ஆம் ஆண்டிற்கான பணிகள் எப்போது துவங்கப்படும்?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். 65 விழுக்காட்டிற்கு மேலான பயனாளிகள் பயன்பெற்று விட்டனர். பிறரும் மே மாத இறுதிக்குள் பெற்றிடுவர்.*

*(ஆ) 2012-13 ஆம் ஆண்டிற்கான முதற்கட்டப் பணிகள் தொடங்கிவிட்டன.*

**95—**

## மடிக்கணினிகள்

**வினா எண் 15204—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2011-12 ஆம் ஆண்டில் 9.12 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் அரசின் தற்போதைய நிலை என்ன?*

*(ஆ) 2012-13 ஆம் ஆண்டிற்கான பணிகள் எப்போது துவங்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) 2011-12 ஆம் ஆண்டில் 9.12 இலட்சம் மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்க திட்டமிடப்பட்டது. பின்னர் மாணவ மாணவியர்களின் துல்லியமான எண்ணிக்கை 9,07,790 எனக்கொள்ளப்பட்டு, மாணவ மாணவியருக்கு மடிக்கணினிகள் வழங்க 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ல் தொடங்கி நடத்தப்பட்டது. மடிக்கணினி வன்பொருள் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் நாடுகளில் ஒன்றான தாய்லாந்தில் ஏற்பட்ட எதிர்பாராத அளவிலான வெள்ளத்தின் காரணமாக மடிக்கணினிகள் கிடைப்பதில் சுணக்கம் ஏற்பட்டது. எனினும் இப்போது நிலைமை சீர்பெற்று 26.4.2012 வரை 2.26 இலட்சம் மடிக்கணினிகள் வரப்பெற்று தொழில்நுட்பக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள இறுதி ஆண்டு மாணவ மாணவியருக்கு வழங்குவதற்காக மடிக்கணினிகள் அனுப்பிவைக்கப்பட்டுவிட்டன. அதைத் தொடர்ந்து பெறப்பட்டுள்ள மடிக்கணினிகள் பள்ளிகளில் பன்னிரண்டாம் வகுப்பு மாணவ மாணவியருக்கு வழங்குவதற்காக அனுப்பப்பட்டு வருகின்றன.*



2012 நவம்பர் 1]

*(ஆ) 2012-13 ஆம் ஆண்டிற்கான முதல் நிலை பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு இத்திட்டத்திற்காக 7.84 இலட்சம் மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட உள்ளன.*

**96—**

## சேவை மையங்கள்

**வினா எண் 15205—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழக அரசால் வழங்கப்படும் மின்விசிறி, மிக்சி, மடிக்கணினி மற்றும் கிரைண்டர் ஆகியவற்றைப் பழுது நீக்கம் செய்ய உரிய சேவை மையங்கள் வட்ட அளவில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் ஆகியவற்றை இத்திட்டத்திற்காக கொள்முதல் செய்து வழங்கும் நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொருள்களை வழங்கும்*

[2012 நவம்பர் 1

*தயாரிப்பாளர்களின் மூலமாக வருவாய் வட்ட அளவில் 1,033 பழுது பார்க்கும் மையங்களை அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. மடிக்கணினி கொள்முதல் செய்து வழங்கும் அரசின் நிறுவனமான தமிழ்நாடு மின்னணு நிறுவனம், மடிக்கணினி தயாரிப்பாளர்கள்மூலம் மாநிலம் முழுவதிலும் உரிய இடங்களில் போதிய அளவில் பழுது நீக்கும் மையங்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.*

**97—**

## குடியிருப்புகள்

**வினா எண் 4886—திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தேயிலை மற்றும் காப்பி தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளை அவர்களுக்கே சொந்தமாக்கும் திட்டத்தை அரசு அமலாக்க ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்படி தோட்ட நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வாடகையில்லா குடியிருப்பு வசதிகள் செய்து தர, தோட்டத் தொழிலாளர் சட்டப் பிரிவு 15 மற்றும் விதிகளின்படி (விதி 43 முதல் 52 வரை) வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, தமிழகத்தில் தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கென, இதுவரை 43,343 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இதில் வால்பாறையில் உள்ள தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கென கட்டப்பட்டுள்ள 17,332*



2012 நவம்பர் 1]

*குடியிருப்புகளும் அடங்கும். ஆனால், தோட்டத் தொழிலாளர்கள் குடியிருக்கும் வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்கப்பட தோட்டத் தொழிலாளர் சட்டத்தில் வழிவகை ஏதுமில்லை.*

**98—**

## துணை சுகாதார நிலையம்

**வினா எண் 3457—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உதயத்தூரில் உள்ள துணை சுகாதார நிலையத்திற்கு சீராக மருத்துவர்கள், செவிலியர்கள் செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ் விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் கூடங்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட உதயத்தூர் துணை சுகாதார நிலையத்தில் கிராம சுகாதார செவிலியர் 9.7.2001 முதல் பணிபுரிந்து வருகிறார். மேலும், தமிழகத்திலுள்ள துணை சுகாதார நிலையங்களுக்கு மருத்துவர் பணியிடம் ஒப்பளிக்கப்படவில்லை. அருகிலுள்ள கூடங்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.*

**99—**

## குடிதண்ணீர் வசதி

**வினா எண் 8319—திரு. எஸ்.எஸ் ரமணீதரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

*ஈரோடு மாவட்டம், அந்தியூர் அரசு மருத்துவமனையில் மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிதண்ணீர் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர். வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*ஈரோடு மாவட்டம், அந்தியூர் அரசு மருத்துவமனை 46 படுக்கை வசதிகளுடன் வட்டம் சாரா மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனயில் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்துவதற்காக 2,000 லிட்டர்* PVC *நீர்த்தேக்கத் தொட்டியும் மற்றும் தண்ணீர் சுத்திகரிக்கும் கருவியும் பொருத்துவதற்கு கட்டடங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் நிதியிலிருந்து 2011—2012 ஆம் ஆண்டு ரூ.75,000/— ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**100—**

**பணியிடங்கள் நிரப்புதல்**

**வினா எண் 8338—திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காஞ்சிபுரம் வட்டம், பெரும்பாக்கம், ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள காலி மருத்துவ அலுவலர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*காஞ்சிபுரம் வட்டம், பெரும்பாக்கம், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் பணியிடங்கள்-2. இந்த இரண்டு பணியிடங்களும் நிரப்பப்பட்டு மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.*



2012 நவம்பர் 1]

## பட்டியல் 3

**1—**

**பெருந்திட்ட வளாகம்**

**வினா எண் 12375—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உட்பட பெருந்திட்ட வளாகம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம் பெருந்திட்ட வளாகம் ஏற்படுத்துவதற்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், வளாகம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும்.*

**2—**

**பெருந்திட்ட வளாகம்**

**வினா எண் 12376—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உட்பட பெருந்திட்ட வளாகம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*திருப்பூர் மாவட்டத்திற்கென ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளடக்கிய பெருந்திட்ட வளாகம் அமைப்பதற்காக திருப்பூர் வட்டத்தில் நிலம் தேர்வு செய்யப்பட்டு உரிய முன்மொழிவுகள் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டு, கட்டடம் கட்டுவதற்காக நிருவாக அனுமதி மற்றும்*

[2012 நவம்பர் 1

நிதி ஒப்பளிப்பு வழங்கக் கோரி அனுப்பப்பட்ட முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**3—**

## காவிரிக் குடிநீர்

**வினா எண் 10136—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்ககிரி தொகுதி, மோரூர் கிழக்கு கிராமம், அன்செட்டிப்பட்டிக்கு காவிரிக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, மோரூர் கிழக்கு ஊராட்சிக்குட்பட்ட அன்செட்டிப்பட்டி (கணக்கீட்டுப்படி 2011 மக்கட் தொகை (1080) குடியிருப்புக்கு சங்ககிரி தொகுதி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து நாளொன்றுக்கு 43,200 லிட்டர் காவிரிக் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டு, தற்போது சராசரியாக நாளொன்றுக்கு 42,000 லிட்டர் வீதம் காவிரிக் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகின்றது.*

**4—**

## குடிநீர் வசதி

**வினா எண் 10153—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்ககிரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, 13, 14-வது வார்டு பாப்பம்பட்டி சித்தர்கோவில் பாரதிநகர், கரட்டு அருந்ததியர் காலனி, மடத்தூர் காட்டுவளவு, 10-வது வார்டு, சித்தேஸ்வரா நகர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*



2012 நவம்பர் 1]

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இடங்கணசாலை பேரூராட்சி, சித்தர்கோவில் பாரதி நகர், சித்தேஸ்வரா நகர் ஆகிய பகுதிகள் 8-வது வார்டில் அமைந்துள்ளன. இப்பகுதிகளுக்கு காவிரி குடிநீர் வசதி தற்போது இல்லை. சித்தர்கோவில் பகுதியில் உள்ள திறந்தவெளிக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு, இவ்விரு பகுதிகளுக்கும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

*14-வது வார்டு பாப்பம்பட்டியின் மக்களுக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் காவிரி குடிநீர் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

*6-வது வார்டில் அமைந்துள்ள கரட்டு அருந்ததியர் காலனி மக்களுக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் காவிரி குடிநீர் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.*

**5—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10158—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்ககிரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, 15-வது வார்டு, வாமுக்கான்காட்டிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, 15-வது வார்டு, வாமுக்கான்காட்டின் தற்போதைய (2011) மக்கள் தொகை 93. இவ்வார்டிற்கு அருகாமையில் உள்ள 14-வது வார்டு மிளகாய்காரன் வட்டத்தில் (பாப்பான்பட்டி காட்டுவளவு) அமைந்துள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் இப்பகுதிக்கென தனியாக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.*

**6—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10374—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்ககிரி தொகுதி, தேவண்ணக் கவுண்டனூர் கிராமம், மோளப்பாறைக்காடு பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, தேவண்ணக் கவுண்டனூர் கிராமம், மோளப்பாறைக்காடு பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*



2012 நவம்பர் 1]

**7—**

## வீட்டுரிமைப் பத்திரம்

**வினா எண் 3109—திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோட்டில் பெரியார் நகர் பகுதியில் வீட்டு வசதி வாரியத்திற்கு தவணைத் தொகைகளை செலுத்திய ஒதுக்கீடுதாரர்களுக்கு வீட்டின் உரிமைப் பத்திரத்தினை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஈரோடு, பெரியார் நகர் திட்டத்தில் வீட்டிற்குரிய முழுத் தொகை செலுத்திய ஒதுக்கீடுதாரர்களுக்கு கிரையப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது.*

*(ஆ) மேலும், ஒதுக்கீடு செய்யப்பட்ட 935 வீடுகள் / மனைகளில் முழுத் தொகையையும் செலுத்திய 608 ஒதுக்கீடுதாரர்களுக்கு இந்நாள்வரையிலும் உரிமைப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.*

**8—**

## மறு சீரமைப்பு

**வினா எண் 3216—திரு. கு. நல்லதம்பி:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எழும்பூர் தொகுதி 72, 42, 61 ஆகிய வட்டங்களில் உள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் பழுதடைந்துள்ள மேற்கூரைகளை மறு சீரமைப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(1) சென்னை எழும்பூர் தொகுதி, 42-வது வட்டம், பி.கே. காலனி திட்டப்பகுதியில் 594 அடுக்குமாடிக் குடியிருப்புகள் உள்ளன. இக்குடியிருப்புகளின் பழுதடைந்த மேற்கூரைகள் மற்றும் இதர மேம்பாட்டுப் பணிகள் ரூ. 9.09 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*(2) 61-வது வட்டத்தில் உள்ள ராதாகிருஷ்ணபுரம் திட்டப் பகுதியில் 168 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.8.25 இலட்சம் செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*(3) 72-வது வட்டத்தில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அமைக்கப்பட்ட ஓசான்குளம், பி.எச். ரோடு, வேம்புலியம்மன் கோவில் மற்றும் பிள்ளையார்கோவில் திட்டப் பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மேற்கூரைகள் தற்பொழுது நல்ல நிலையில் உள்ளன. இக்குடியிருப்புகளின் மேற்கூரைகளில் பழுது ஏற்பட்டால் உரிய பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

**9—**

## கருத்தரங்குகள்

**வினா எண் 11419—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறிவியல் நகரம் மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் மரபியல், ஸ்டெம்செல், நானோ, விண்ணியல், புவி வெப்பமடைதல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய முன்னோடித் துறைகளில் கருத்தரங்குகள் நடத்தும் திட்டத்தின் நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*அறிவியல் நகரத்தால் 2011-2012 ஆம் ஆண்டில், மரபியல், ஸ்டெம்செல், நானோ, விண்ணியல், புவி வெப்பமடைதல், தகவல்*



2012 நவம்பர் 1]

*தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது:*

**மரபியல்**

(i) *2011 டிசம்பர் 16 முதல் 17 வரை, சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைந்து* “Current Trends in Biotechnological Strategies for Eco Friendly Crop Protection” *என்ற தலைப்பில், தேசிய அளவிலான கருத்தரங்கு நடத்தப்பட்டது.*

(ii) *2012, பிப்ரவரி 17 முதல் 18 வரை, பண்ணாரி அம்மன் தொழில்நட்பக் கல்லூரியுடன் இணைந்து* “Biotech Institute – industry Interaction – 2012: Current status and future prospects of Biotechnology” *என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு நடத்தப்பட்டது.*

**ஸ்டெம்செல்**

*2011, ஜூன் 9 முதல் 10 வரை, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து* “Conservation of Animal Genetic Resources of Tamil Nadu” *என்ற தலைப்பில் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.*

**நானோ**

(i) *மே 2011-இல் நானோ அறிவியல் மற்றும் நானோ தொழில்நுட்பத்தில் ஒரு மாத கோடை காலப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.*

(ii) *2011, ஆகஸ்ட் 10 முதல் 12 வரை, பெண்கள் கிருத்துவக் கல்லூரியுடன் இணைந்து* “Nanotechnology – The Force of the future” *என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு நடத்தப்பட்டது.*

(iii) *2011, அக்டோபர் 19 முதல் 21 வரை,* “Nanoscience and Nonotechnology” *என்ற தலைப்பில் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.*

**புவி வெப்பமடைதல்**

*2011, ஆகஸ்ட் 24 முதல் 26 வரை, கோவை பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து* “Global warming a biodiversity of

[2012 நவம்பர் 1

insects management and conservation" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

**தகவல் தொழில்நுட்பம்**

(i) 2011, ஜூலை 28 முதல் 29 வரை, தகவல் தொழில்நுட்பம் என்ற தலைப்பில் இரண்டு நாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

(ii) 2011, ஆகஸ்ட் 5 ஆம் நாள், "Recent Trends in Information Resource Management" என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

**10—**

**கல்வித் தரம்**

**வினா எண் 11701—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அறிவியல் தொழில்நட்ப மாநில மன்றத்தின்மூலம் கிராமப்புற மேம்பாட்டிற்கு அறிவியல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த 2011-2012 ஆம் ஆண்டில் 5 ஆயிரம் பேரின் பொருளாதாரக் கல்வித் தரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

தமிழகத்தின் பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வித் தரத்தினை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள, "கிராமப்புற மேம்பாட்டிற்கு அறிவியல் தொழில்நுட்பங்களின் பயன்பாடு" என்ற திட்டத்திற்கு, 2011-2012 ஆம் நிதியாண்டில் ரூ. 12.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், அரியலூர், திருநெல்வேலி, நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், வேலூர், திருப்பூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 10 மாவட்டங்களில், 5,000 நபர்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



2012 நவம்பர் 1]

**11—**

**பயிற்சி**

**வினா எண் 11702—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் மூலம் அறிவியல் தொழில்நுட்பத் திறன் வளர்க்க 2011-2012 ஆம் ஆண்டில் 12 மையங்களில், 3 ஆயிரம் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

தொழில் துறைக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திறன் வளர்த்தல் என்ற திட்டம், இறுதியாண்டு பயிலும் பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பட்டய மாணவர்கள் தங்கள் திறமைகளை தொழில் துறைக்கு ஏற்றவாறு மேம்படுத்துதல் மற்றும் சுயதொழில் தொடங்குவதற்கான திறன் அடைதல் ஆகிய இரண்டு நோக்கங்களை உடையது. இத்திட்டத்திற்கு, 2011-2012 ஆம் ஆண்டில், ரூ.12.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிதியிலிருந்து சுமார் 3,000 மாணவர்கள் பயனடையும் வகையில் பத்து மாவட்டங்களில் இரு கட்டங்களாக இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

**12—**

**நிதியுதவி**

**வினா எண் 11703—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் கருத்தரங்கு, சூழியம், அறிவியல் மாநாடு நடத்த 2011-2012 ஆம் ஆண்டில் 34 கருத்தரங்குகளுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

"கருத்தரங்கு, சூழியம், அறிவியல் மாநாடு நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்" என்ற திட்டத்தின்கீழ், நமது மாநிலத்திலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் மூலம் 34 அறிவியல் தொழில்நுட்பக் கருத்தரங்குகள் நடத்தப்படுவதற்கு, 2011-2012 ஆம் நிதியாண்டில் ரூ.3.40 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**13—**

**பயிற்சி**

**வினா எண் 11704—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் மூலம் அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்த கிராமப்புற மாணவர்கள், விவசாயிகள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களுக்கு 2011-2012 ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

"அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்" என்ற திட்டம் கிராமப்புற மாணவர்கள், விவசாயிகள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே, அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2011-2012 ஆம் நிதியாண்டில், திருச்சி, கரூர், சேலம், நாமக்கல், தேனி, நாகப்பட்டினம், விருதுநகர், தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 10 மாவட்டங்களில், ரூ. 6.05 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.



2012 நவம்பர் 1]

**14—**

**நிதியுதவி**

**வினா எண் 11707—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின்மூலம் தமிழில் அறிவியல் வெளியீடுகளைக் கொண்டுவர 2011-2012 ஆம் ஆண்டில் அறிவியலாளர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

தமிழில் வெளிவரும் அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கு 2011-2012 ஆம் ஆண்டில் ரூ. 0.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிதியிலிருந்து பின்வரும் மூன்று அமைப்புகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | நிறுவனம் / அமைப்பு | வெளியீடு | வழங்கப்பட்ட நிதியுதவி (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு அறிவியல் இயக்கம், சென்னை | "துளிர்" மாத இதழ் | 12,000/- |
| 2. | தமிழ்நாடு அறிவியல் மன்றங்களின் கூட்டமைப்பு, சென்னை | "அறிவுக் கண்" மாத இதழ் | 12,000/- |
| 3. | சுதேசி விஞ்ஞான இயக்கம், குன்றக்குடி | "அறிக அறிவியல்" மாத இதழ் | 12,000/- |
| | | மொத்தம் | 36,000/- |

[2012 நவம்பர் 1

**15—**

## அறிவியல் விழா

**வினா எண் 11707—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை அறிவியல் விழா 2012 ஆம் ஆண்டில் நடத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) சென்னை அறிவியல் விழா 2012, அண்ணா ஜெம் அறிவியல் பூங்கா பள்ளி, காந்திமண்டபம் சாலை, சென்னையில், 27 ஜனவரி முதல் 30 ஜனவரி 2012 வரை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.*

*(ஆ) இவ்விழா, முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர், கூடுதல் தலைமைச் செயலாளர், உயர் கல்வித் துறை, பேராசிரியர் பி. மன்னர் ஜவஹர், துணை வேந்தர், அண்ணா பல்கலைக் கழகம், சென்னை மற்றும் பேராசிரியர் கர்னல் ஜி. திருவாசகம், துணை வேந்தர், சென்னை பல்கலைக்கழகம் முன்னிலையில், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு. பி. பழனியப்பன் அவர்களால் 27-1-2012 அன்று காலை 10.00 மணிக்கு தொடங்கி வைக்கப்பட்டது.*

*30,000-க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் (சுமார் 25,000 பள்ளி / கல்லூரி மாணவர்கள் மற்றும் 5,000 பொதுமக்கள்) வருகை புரிந்தனர். ஐந்து கருப்பொருள்கள், அதாவது ஆற்றல், சுற்றுச்சூழல், உடல் நலம், அடிப்படை மற்றும் கால்நடை அறிவியல் ஆகியவற்றில் மட்டுமல்லாது, தமிழ்நாடு அறிவியல் கால்நடை பல்கலைக்கழகத்தின் நேரடிக் காட்சிப்படுத்தல்கள் உட்பட 120-க்கும் மேற்பட்ட அரங்குகளைக் கொண்ட மாபெரும் கண்காட்சிக் கூடம் அமையப் பெற்றிருந்தது. இது தவிர, சமகால அறிவியல் தலைப்புகளில் அறிவியல் குழு விவாதங்கள் மற்றும் பிரபல விரிவுரைகள் போன்றவை நடத்தப்பட்டன.*



2012 நவம்பர் 1]

*நிறைவு விழாவில், பல்வேறு போட்டிகளில் பங்குபெற்று பரிசு வென்ற மாணவர்களுக்கு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மயில்வாகனன் நடராஜன் அவர்களின் முன்னிலையில், சென்னை மேயர் திரு. சைதை எஸ். துரைசாமி அவர்கள் பரிசுகளை வழங்கி நிறைவுரை ஆற்றினார்.*

**16—**

## கட்டாயக் கல்வி

**வினா எண் 3765—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிறைகளிலுள்ள கைதிகளுக்கு சமூக வாழ்வியல் மற்றும் தமிழ்ப் பண்பாட்டை போதிக்கக்கூடிய கட்டாயக் கல்வி முறை கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாடு சிறைகளிலுள்ள சிறைவாசிகளுக்கு குறிப்பாக சமூகவியல் மற்றும் தமிழ்ப் பண்பாட்டை போதிக்கக்கூடிய கட்டாயக் கல்வி முறை கொண்டு வரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**17—**

## சிறுதானியச் சாகுபடி

**வினா எண் 13402—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

தீவிர சிறுதானியச் சாகுபடிமூலம் ஊட்டச்சத்தும் பாதுகாப்பும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2012-2013 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தீவிர சிறுதானியச் சாகுபடிமூலம் ஊட்டச்சத்து பாதுகாப்பினை ஏற்படுத்தும் திட்டம் ரூ. 1,051 இலட்சம் செலவில் செயல்படுத்த, கருத்துரு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**18—**

## கட்டட வசதி

**வினா எண் 15544—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜீ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, சிவகங்கை மத்திய கூட்டுறவு வங்கியின் மானாமதுரை கிளைக்கு கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து அவ்வங்கியின் கிளைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு, காலிமனை வழங்க வேண்டி, மானாமதுரை பேரூராட்சிக்குக் கடிதம் அனுப்பப்பட்டு காலிமனை பெறுவது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காலிமனை கிடைக்கப் பெற்றதும், கட்டடம் கட்டுவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



2012 நவம்பர் 1]

**19—**

## பறவையினங்களைக் காப்பாற்றுதல்

**வினா எண் 2934—திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகர்ப்புற மற்றும் கிராமப் பகுதிகளில் உள்ள மரங்கள், காடுகளை அழிப்பதற்குத் தடைவிதித்து, அழிந்து கொண்டிருக்கும் பறவையினங்களைக் காப்பாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

ஆம். தமிழ்நாடு வனச் சட்டம் 1882 பிரிவு 26-ன்படி மரங்களை வெட்டுவதும், மரங்களை அகற்றுவதும் ஒதுக்குக் காட்டில் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், மரம் வெட்டினாலோ அல்லது மரம் விழுந்தாலோ மரம் ஒன்றிற்கு 10 மரக் கன்றுகள் வீதம் நகர்ப்புற புறம்போக்கு பகுதியில் நடப்பட வேண்டும் என அரசாணை நிலை எண் 704, பொது (பல்வகை) துறை, நாள் 3-8-2010-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, மரம் வெட்ட தடையாணையுள்ளதால், நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள மரங்கள் வெட்டப்படுவதில்லை. அதில் பறவையினங்கள் தங்கி முட்டையிட்டு குஞ்சு பொரித்து தங்கள் இனத்தைப் பெருக்குகின்றன.

தமிழ்நாட்டில் பறவையினங்களைப் பாதுகாக்கும்பொருட்டு 17,074.50 ஹெக்டேர் நிலப்பரப்பில் 12 பறவைகள் சரணாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பறவையினங்கள் பாதுகாக்கப்பட்டு வரப்படுகின்றன. மேலும், ஈர நிலம் (Wet land) / சதுப்பு நிலங்களில் (Mangrove Forest) வரும் பறவைகளையும் பாதுகாக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன.

[2012 நவம்பர் 1

*பொதுவாக, வன உயிரினங்களைப் பாதுகாக்க வன உயிரினச் (பாதுகாப்பு) சட்டம் 1972-ல் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி வன உயிரினங்களையோ பறவைகளையோ வேட்டையாடுவது குற்றமாகும். அம்மாதிரி குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை மேற்காண் சட்டப்பிரிவின்கீழ் கைது செய்து நீதிமன்றத்தின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*கிராமப்புறங்களில், சமூகக் காடுகள் திட்டத்தின்மூலம் பெரிய, சிறிய கண்மாய்களிலும் இதர தரிசு நிலங்களிலும் நிலத்தின் தன்மைக்கேற்றவாறு மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதன்மூலம் பறவையினங்கள் பாதுகாக்கப்படுகின்றன. வன உயிரினச் (பாதுகாப்பு) சட்டம் 1972 விதி எண் 18 (1)-ன்படியும், அரசாணை (நிலை) எண் 220, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 15-12-2010-ன்படியும் 2,929 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்த்தங்கால் என்ற இடத்தில் 13-வது பறவைகள் சரணாலயமாக தேர்த்தங்கால் பறவைகள் சரணாலயம் ஒன்று அமைக்கப்பட்டு பறவை இனங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பறவைகள் அதிகம் காணப்படும் பகுதிகளில் மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. எனவே, அழிந்து கொண்டிருக்கும் பறவையினங்கள் பல்வேறு வகைகளில் பாதுகாக்கப்படுகின்றன.*

**20—**

## வீடுகளில் மரம் வளர்த்தல்

**வினா எண் 5016—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் குறைந்தபட்சம் 1,200 சதுர அடிகளில் கட்டக் கூடிய வீடுகளில் கட்டாயமாக மரம் வளர்க்க வேண்டும் என்ற சட்டத்தை அரசு கொண்டு வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கட்டுமானப் பணிகள் உள்ள இடங்களில் மழைநீரைச் சேமிப்பதற்கு “மழைநீர் சேமிப்புத் திட்டம்” தமிழ்நாட்டில் நடைமுறையில் இருப்பதால் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் இடங்களுக்குரிய நபர்களிடம் நிர்பந்தித்து மர வளர்ப்பினை ஊக்குவிப்பதற்கு சட்டம் இயற்றுவது பொருத்தமாக இருக்காது. மேலும், அரசு சார்ந்த நிலங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான ஏரி மற்றும் தரிசு நிலங்கள், மக்கள் பயன்படுத்தும் பொது இடங்களான சாலை ஓரங்கள், வடிகால்கள், ஆற்றுப்படுகை மற்றும் வாய்க்கால் பகுதிகளில் மரம் வளர்ப்பினை ஊக்குவித்து, தமிழ்நாட்டில் பசுமைப் போர்வையை அதிகரிக்க தேசிய காடு வளர்ப்புத் திட்டம், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை I மற்றும் II, தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டம், மாபெரும் மரம் நடும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் நடைமுறையில் உள்ளதால், தமிழகத்தில் குறைந்தபட்சம் 1,200 சதுர அடிகளில் கட்டக்கூடிய வீடுகளில் கட்டாயமாக மரம் வளர்க்க வேண்டும் என்ற சட்டத்தை இயற்றுவது அவசியமில்லை.*



2012 நவம்பர் 1]

**21—**

## கிருமி நாசினி

**வினா எண் 7003—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் ‘சின்பிரஷ்’ கிருமி நாசினி தரமானதாக உள்ளதால் அரசுத் துறைகள் அனைத்தும் இதனையே பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் ‘சின்பிரஷ்’ கிருமி நாசினி உற்பத்தி செய்யப்படுவதில்லை. ஆனால், குன்னூரிலுள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் முன்பு உற்பத்தி செய்யப்பட்டது. இதனை தயாரிக்கத் தேவையான தரமான இடுபொருட்கள் நியாயமான விலையில் வெளிச்சந்தையில் கிடைக்கப் பெறாததால் தமிழ்நாடு தேயிலை தோட்டக்*

கழகத்திலும் தற்பொழுது இக்கிருமி நாசினி உற்பத்தி செய்யப்படுவதில்லை.

**22—**

**வனவிலங்குகள் எண்ணிக்கை கணக்கிடுதல்**

**வினா எண் 7009—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், முதுமலை வன விலங்கு சரணாலயத்தில் இனம்வாரியாக விலங்குகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசு யானை மற்றும் புலிகளைப் பாதுகாக்க யானைகள் பாதுகாப்புத் திட்டம் (Project Elephant) மற்றும் புலிகள் பாதுகாப்புத் திட்டத்தை (Project Tiger) செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் வாயிலாக ஒருங்கிணைந்த முறையில் யானை, புலி மற்றும் புலியைச் சார்ந்த பிற மாமிச உண்ணிகள் மற்றும் தாவர உண்ணிகளின் கணக்கெடுப்பு வழிமுறைகளை மத்திய அரசு மாநில அரசுகளுக்கு வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் இனம் வாரியாக முதுமலை புலிகள் காப்பகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வனப்பகுதிகளில் கணக்கெடுப்புப் பணி பின்பற்றப்பட்டு வருகிறது.

யானைகளைக் கணக்கெடுக்க நேர்முக மற்றும் மறைமுக முறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நேர்முக முறையில் சரணாலயப்பகுதி 5 ச.கி.மீ. அளவுகொண்ட பகுதிகளாக பிரிக்கப்பட்டு, பின்னர் ஒவ்வொரு 5 ச.கி.மீ. பரப்பில் உள்ள யானைகள் எண்ணப்பட்டு மொத்த பரப்பளவிற்கான யானைகளின் எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது.





புலி மற்றும் பிற மாமிச உண்ணிகளை (செந்நாய், சிறுத்தை, கரடி, கழுதைப் புலி மற்றும் பல) கணக்கெடுக்க மறைமுக முறையில் கால் தடம், எச்சம், நகக் கீறல்கள் வேட்டையாடப்பட்ட தாவர உண்ணிகள் போன்றவைகள் வனப்பகுதிகளில் உள்ள சாலைகள், யானைகளின் வழித்தடம், ஓடைகள், ஆறு, குளம் மற்றும் குட்டைகள் போன்ற பகுதிகளில் எண்ணப்பட்டு இதன்மூலம் இவ்விலங்குகளின் எண்ணிக்கை மதிப்பிடப்படுகிறது. வனப்பகுதிகளில் புலி மற்றும் சிறுத்தைகள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் தானியங்கி புகைப்படக் கருவி பொருத்தப்பட்டு அவை எடுக்கும் புகைப்படங்களின்மூலமும் இவ்விலங்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது.

யானைகள் உட்பட பிற தாவர உண்ணிகளை நேர்முக முறையில் கணக்கெடுக்க வனப்பகுதியில் பல்வேறு இடங்களில் 2 கி.மீ. நீளத்திற்கு உருவாக்கப்பட்ட நேர்கோட்டின் இரு புறங்களிலும் காணப்படும் விலங்குகள் எண்ணப்பட்டு அவற்றின் மொத்த எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது.

தற்போது வன உயிரினங்கள் Transect முறையில் தான் கணக்கிடப்படுகிறது. நேரடியாகக் கண்டு எண்ணப்படுவதில்லை. Transect முறையில் உத்தேசமான எண்ணிக்கைதான் கிடைக்கும். கணக்கெடுப்பு வெவ்வேறு காலநிலைகளில் (season) நடைபெற்றதால் அந்தப் பகுதிகளில் நீர் இருப்புக்கு ஏற்ப வன உயிரினங்கள் அண்டை மாநிலங்கள் மற்றும் தமிழ்நாட்டின் இதர வனப்பகுதிகளான நீலகிரி வடக்கு, கூடலூர் மற்றும் நீலகிரி தெற்கு கோட்டப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து செல்வதாலும் எண்ணிக்கையில் மாறுபாடு வருகிறது.

**23—**

**இலவச வேம்புக் கன்றுகள்**

**வினா எண் 9792—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 1

*(அ) மலை வேம்பு சாகுபடி செய்பவர்களுக்கு அரசு இலவசமாக வேம்புக் கன்றுகள் வழங்க முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வனங்களுக்கு வெளியே பசுமைப் போர்வையினை அதிகரிக்கும் நோக்குடன் தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்மூலம் குறு மற்றும் சிறு விவசாயிகளது நிலங்களில் தொகுப்புத் தோட்டமாக அல்லது வரப்பு நடவுத் தோட்டங்களாக இலாபம் தரும் மரக்கன்றுகள் அதாவது சவுக்கு மற்றும் தடிமர வகைகளான வேம்பு, தேக்கு, மலை வேம்பு ஆகியவை நடவு செய்து கொடுக்கப்படுகின்றன. மேலும், தொகுப்புத் தோட்டத்திற்கு ஊக்கத் தொகையாக ஒரு எக்டேருக்கு ரூ.1,000/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது.*

**24—**

## மண்ணெண்ணெய் விநியோகம்

**வினா எண் 14257—திரு. கு. லிங்கமுத்து:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குடியாத்தம் நகரில் ஒரே இடத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் நடைபெறுவதைப் பிரித்து நகரின் முக்கிய மூன்று இடங்களில் விநியோகிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*குடியாத்தம் நகரில், குடியாத்தம் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலம் 10 நியாய விலைக் கடைகளும், வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலை குடியாத்தம் கிளை மூலமாக 8 நியாய விலைக் கடைகளும், குடியாத்தம் டெக்ஸ்டைல்ஸ் கூட்டுறவுப் பண்டகச் சாலைமூலம் 4 நியாய விலைக் கடைகளும், கோவிந்தாபுரம் தொடக்க*



2012 நவம்பர் 1]

*வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்மூலம் 2 நியாய விலைக் கடைகளும், அமுதம் அங்காடிமூலம் 2 நியாய விலைக் கடைகளும், ஆக மொத்தம், குடியாத்தம் நகரத்தில் 26 கூட்டுறவு நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.*

*குடியாத்தம் நகரில் மொத்தமுள்ள 26 நியாய விலை கடைகளில் 21 நியாய விலைக் கடைகள்மூலம் 15020 குடும்ப அட்டைகளுக்கு தற்போது வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலை, குடியாத்தம் கிளை (கற்பகம்) மூலமாக, நகரில் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைத்து மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 5 நியாய விலைக் கடைகளின்மூலம் 3435 குடும்ப அட்டைகளுக்கு அந்தந்த நியாய விலைக் கடைகளிலேயே மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. ஆக மொத்தம், குடியாத்தம் நகரில் 18455 குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.*

*குடியாத்தம் நகரில் மேலும் இரண்டு இடங்களில் புதிய மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் அமைக்க நகராட்சிப் பகுதியில் கூட்டுறவு நிறுவனங்களுக்குச் சொந்தமான இடம் ஏதுமில்லை.*

*நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண் 38, நாள் 28-2-2001-ன்படி மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைக்க தேவையான இடத்தினை வாடகைக்கு எடுத்தால் 2400 சதுர அடிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/-ம் அதற்கு மேல் கோரும் இடத்திற்கு சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குடியாத்தம் நகரத்தில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்க தேவையான 2640 சதுர அடிக்கு மாத வாடகையாக ரூ.34,536/- செலுத்த வேண்டும் என குடியாத்தம் நகராட்சி ஆணையர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது, சந்தை மதிப்பு உயர்ந்துள்ள நிலையில், இத்தொகை மேலும் உயரக்கூடிய வாய்ப்புள்ளது. இத்துடன் பணியாளர்களின் சம்பளம் மற்றும் நிருவாகச் செலவுகளையும் சங்கங்கள் கூடுதலாக ஏற்க வேண்டியுள்ளது.*

*மேற்கண்ட சூழ்நிலையில் குடியாத்தம் நகரத்தின் சந்தைப் பகுதியில் புதிய மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைக்க*

வேண்டுமென்றால் புவனேஸ்வரிபேட்டை, தாழையாத்தத்தில் உள்ள கற்பகம் கூட்டுறவு நியாய விலை கடை எண் 11, 19 மற்றும் 8 ஆகியவற்றிலிருந்து 2636 குடும்ப அட்டைகளைப் பிரித்தும், குடியாத்தம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தாழையாத்தம், நெல்லூர்பேட்டை மற்றும் காமாட்சியம்மன் பேட்டை ஆகிய 5 கூட்டுறவு நியாய விலைக் கடை எண் 3,6,17,19 மற்றும் 24-லிருந்து 3,577 குடும்ப அட்டைகளைச் சேர்த்தும் ஆக மொத்தம் (2636+3577) = 6,173 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஒரு புதிய மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைத்திட வேண்டும்.

இரண்டாவது பிச்சனூர் பகுதி கேட் அருகில் பிச்சனூர், தரணம்பேட்டை, கோபாலபுரம் மற்றும் காளியம்மன்பட்டி ஆகிய பகுதிகளில் செயல்பட்டுவரும் 8 கூட்டுறவு நியாய விலைக் கடைகளின் 5945 குடும்ப அட்டைகளைக் கொண்டு மற்றொரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைத்திட வேண்டும்.

இவ்வாறு அமைக்கும்போது ஏற்கெனவே உள்ள மண்ணெண்ணெய் வழங்கும் நிலையத்தில் உள்ள குடும்ப அட்டைகள் குறைந்து நட்டத்தில் செயல்படுவதோடு முறையே 6,173 மற்றும் 5,945 குடும்ப அட்டைகளைக் கொண்டு புதியதாக அமைக்கக் கோரும் இரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து வாடகை, பணியாளர்கள் சம்பளம் மற்றும் போக்குவரத்துக் கட்டணம் செலுத்தி மண்ணெண்ணெய் நிலையத்தினை நல்ல நிலையில் செயல்படுத்திட இயலாது.

குடியாத்தம் நகரில் மொத்தமுள்ள 18,455 குடும்ப அட்டைகளிலிருந்து முறையே 6,173 மற்றும் 5,945 குடும்ப அட்டைகள் என இரண்டு புதிய மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களுக்காகப் பிரித்த பின் ஏற்கெனவே உள்ள மண்ணெண்ணெய் வழங்கும் நிலையத்தில் 6,337 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சி நிற்கும். இதனால் இந்த மண்ணெண்ணெய் வழங்கும் நிலையமும் நல்ல நிலையில் செயல்பட இயலாது. எனவே, சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ளவாறு குடியாத்தம் நகரில் மூன்று இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.





**25—**

## கடனுதவி விண்ணப்பங்கள்

**வினா எண் 6430—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், சிறுதொழில் மையத்திற்கு கடன் உதவி பெற விண்ணப்பங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழ் தகுதியுள்ள தொழில்முனைவோர், சுய தொழில் தொடங்க 15 விழுக்காடு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெறுவதற்கான விண்ணப்பங்கள் புதுக்கோட்டை மாவட்டத் தொழில் மையம் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

**26—**

## வேலைவாய்ப்பு

**வினா எண் 11233—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், கோத்திராப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த சுற்றுப்புறக் கிராமங்களில் பட்டதாரி இளைஞர்களுக்கு சிறு தொழிற்பயிற்சிகள் அளித்து வேலைவாய்ப்புக்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் மூலம் 'வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழ் எட்டாம் வகுப்பு மற்றும் அதற்குமேல் படித்த இளைஞர்கள் சுய தொழில் தொடங்க 15 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடன் பெறும் பொருட்டு அவர்களின் விண்ணப்பங்கள் புதுக்கோட்டை மாவட்டத் தொழில் மையம் வாயிலாக வங்கிகளுக்கு அனுப்பப்படுகின்றன. வங்கிகளிடமிருந்து கடன் பெற ஆணை பெற்றவர்களுக்கு மட்டும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு, பின்னர் வங்கிகள் வாயிலாக தொழில் தொடங்க ஏதுவாக பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.*

**27—**

## இணைப்புக் கால்வாய்

**வினா எண் 9270—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தில் பெண்ணாறு-பாலாறு-காவிரி இணைப்புக் கால்வாயைச் சற்று மேல் மட்டத்தில் மாற்றியமைக்கும் திட்டத்திற்கு தேசிய நீர் மேம்பாட்டு முகமை ஒப்புதல் அளித்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தில் பெண்ணாறு-பாலாறு-காவிரி இணைப்புக் கால்வாயைச் சற்று மேல் மட்டத்தில் மாற்றியமைக்கும் திட்டத்திற்கு தேசிய நீர் மேம்பாட்டு முகமை கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.*



2012 நவம்பர் 1]

**28—**

## ஆறுகள் இணைப்பு

**வினா எண் 9271—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவிரி, வைகை, குண்டாறு இணைப்புத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*மகாநதி மற்றும் கோதாவரி நதிப் படுகைகளிலுள்ள மிகை நீரை கிருஷ்ணா-பெண்ணாறு-பாலாறு-காவிரி-வைகை-குண்டாறு நதிப் படுகைகளுக்கு எட்டு இணைப்புக் கால்வாய்கள்மூலம் இணைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை மைய அரசால் உருவாக்கப்பட்ட தேசிய நீர் மேம்பாட்டு முகமையினால் தயாரிக்கப்பட்டுள்ளது. சாத்தியக்கூறு அறிக்கைமீது ஒப்புதல் பெற்ற பின்னர், தேசிய நீர் மேம்பாட்டு முகமையினால் விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்படும். மேலும், 27-2-2012 அன்று நதிகளை இணைக்கும் திட்டத்திற்காக ஒரு சிறப்புக் குழு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. எனவே, மத்திய அரசு இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.*

**29—**

## ஆறுகள் இணைப்புத் திட்டம்

**வினா எண் 9275—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் நீராறு-நல்லாறு நேர் இணைப்புத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*நீராறு-நல்லாறு நேர் இணைப்புத் திட்டத்தினை நிறைவேற்ற தமிழக அரசு, கேரள அரசை வலியுறுத்தி வருகிறது. தமிழகத்தின் இத்திட்டமானது, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஒப்பந்தத்தின் மறு ஆய்விற்கு அப்பாற்பட்டது எனத் தெரிவித்து, இத்திட்டத்தினை இதுவரையில் கேரள அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும், இத்திட்டத்திற்கான கேரள அரசின் இசைவைப் பெறுவதற்கு தமிழக-கேரள அரசுகளிடையே தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டு வருகிறது.*

**30—**

### ஆற்று நீர்

**வினா எண் 9277—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் ஆனைமலை ஆற்றிலிருந்து 2.5 டி.எம்.சி. அடி நீரை தமிழ்நாட்டிற்குத் திருப்பும் திட்டம் குறித்த தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் ஆனைமலை ஆற்றிலிருந்து 2.5 டி.எம்.சி. அடி நீரை தமிழ்நாட்டிற்குத் திருப்புவதற்கு தமிழக அரசு கேரள அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.*

**31—**

### நீர்த்தேக்கம்

**வினா எண் 9302—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட்டத்தின்கீழ், வேலூர் மாவட்டம், மலட்டாற்றின் குறுக்கே பத்தலப்பள்ளி நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*வேலூர் மாவட்டம், மலட்டாற்றின் குறுக்கே பத்தலப்பள்ளி அணையைக் கட்டி முடிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**32—**

### தடுப்புச் சுவர்

**வினா எண் 9371—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பழையாறு கிராமத்தில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம், பழையாறு கிராமத்தில் கடலரிப்புத் தடுப்பு சுவர் (1000 மீட்டர் நீளம் + 3.25 மீட்டர் வரை) கட்டுவதற்கு அரசாணை நிலை எண் 269, பொதுப் பணித் துறை, நாள் 16-12-2011-ல் ரூ.596.50 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அப்பணிக்கான மதிப்பீட்டுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன் பணி செயல்படுத்தப்படும்.*

[2012 நவம்பர் 1

**33—**

**தூண்டில் வளைவு**

**வினா எண் 9373—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், முதலியார் சாவடியில் தொடர்ச்சியாக தூண்டில் வளைவுகளைக் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், முதலியார் சாவடியில் தொடர் தூண்டில் வளைவுகள் (3 மற்றும் 4) கட்டும் பணிக்கு அரசாணை (நிலை) எண் 269, பொதுப் பணித் துறை, நாள் 16-12-2011-ல் ரூ.826.40 இலட்சங்களுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி குறித்த ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் இறுதி செய்யப்பட்டதும் பணிகள் துவங்கி முடிக்கப்படும். மேலும், 2012-2013-ல் எடுத்துக்கொள்ள முதலியார்சாவடியில் இரண்டு தொடர் தூண்டில் வளைவுகள் (5 மற்றும் 6) கட்டும் பணிக்கு அரசாணை (நிலை) எண் 269, பொதுப் பணித் துறை, நாள் 16-12-2011-ல் ரூ. 965.00 இலட்சங்களுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.*

**34—**

**மாட்டுத் தீவனம்**

**வினா எண் 3993—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மேலக்கொன்னக் குளத்தில் மாட்டுத் தீவன மரம், புல் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) நடப்பு ஆண்டு 2011-12 இல் மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மேலக்கொன்னக் குளத்தில் இறவை சாகுபடி மற்றும் மானாவாரி சாகுபடிப் பகுதிகளில் விருப்பமுள்ள விவசாயிகளுக்கு 1 யூனிட் 0.25 சென்ட் பரப்பிற்கு தலா ரூ. 2,590/- மற்றும் ரூ.1,350/- அரசு மானியம் வழங்கி மாட்டுத் தீவன மரம், புல் வளர்க்கப்படும்.*

**35—**

**மாட்டுத் தீவனப் புல்**

**வினா எண் 3994—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மாங்குளம், செய்களத்தூர் ஆகிய இடங்களில் மாட்டுத் தீவனப் புல் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மாங்குளம், செய்களத்தூர் ஆகிய இடங்களில் அரசு மானியத்துடன் தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு தீவனப் புல் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*(ஆ) கேள்வி எழாது.*

[2012 நவம்பர் 1

**36—**

**பசுந்தீவன அபிவிருத்தித் திட்டம்**

**வினா எண் 10456—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பசுந்தீவன அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் தற்போதைய நிலையை அரசு தெரிவிக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இறவையில் தீவனப் பயிர் சாகுபடிக்கு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு 0.25 ஏக்கர் பரப்பில் தீவனப் பயிர் சாகுபடிக்கு ரூ.2,590/- 100 சதம் மானியத்தில் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் நிறுவுதல் சிறு/குறு விவசாயிகளுக்கு 75 சதம் மானியத்திலும் புல்வெட்டும் கருவிகள் 50 சதம் மானியத்திலும் வழங்கிட வேண்டி பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

**37—**

**தீவன அபிவிருத்தி**

**வினா எண் 10458—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டம், படப்பையிலுள்ள பண்ணையில் தீவன அபிவிருத்தி செய்யும் பணியின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.16.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு படப்பையிலுள்ள தீவன உற்பத்திப் பண்ணையில் 15 ஏக்கர் பரப்பில் தீவனப் பயிர் விதைகள்/விதைக் கரணைகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் நோக்கத்தில் அதற்கான புதர்கள் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல் மற்றும் சுற்று வேலி அமைத்திட உரிய மதிப்பீடு வேளாண் பொறியியல் துறையிலிருந்து பெறப்பட்டு அதற்கான வேலைகளும் தொடங்கப்பட உள்ளன.*

**38—**

**பசுந்தீவனப் பயிர்**

**வினா எண் 10460—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் பசுந்தீவனப் பயிர் வளர்க்கும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உதகமண்டலம், மாவட்ட கால்நடைப் பண்ணைக்கு ரூ.4.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 9 ஏக்கர் பரப்பில் தீவனப் பயிர் சாகுபடிக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்சமயம் புதர்கள் அகற்றும் பணி முடிவடைந்து 9 ஏக்கர் பரப்பில் ஓட்ஸ் மற்றும் மக்காச் சோளம் பயிர் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து ஒரு பக்கத்தில் வேலி பலப்படுத்துதல் மற்றும் விதைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.*

[2012 நவம்பர் 1

**39—**

**கால்நடை சினைப்பருவம்**

**வினா எண் 10467—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் கால்நடைகளில் சினைப்பருவ ஒருங்கிணைப்பு செய்யும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.378.98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கால்நடைகளின் கருத்தரிக்கும் தன்மையை அதிகரித்து கன்றுகளின் எண்ணிக்கையையும் பால் உற்பத்தியையும் பெருக்கும் வண்ணம் சினைப் பருவ ஒருங்கிணைப்பு மூலமாக பசுக்களின் கருத்தரிப்பை அதிகரிக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ரூ.104 இலட்சம் செலவில் 11,808 பசுக்கள் இத்திட்டத்தின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**40—**

**வெள்ளாடுகளுக்குத் தீவனம்**

**வினா எண் 10468—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய புரதச் சத்துப் பெருக்க இயக்கத்தின்கீழ் வெள்ளாடுகளுக்கு அடர் தீவனம் வழங்கும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

வெள்ளாடுகள் வளர்ப்பவர்களின் ஆடுகளுக்கு கலப்புத் தீவனத்தை அளிப்பதன் முக்கியத்துவத்தை வளர்க்கும் வண்ணம் ஒவ்வொரு மாவட்டத்திலும் 2,000 ஆடுகள் கொண்ட இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றிற்கு கலப்புத் தீவனம் இலவசமாக இரண்டு மாத காலத்திற்கு அளிக்கும்பொருட்டு ரூ. 90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டமானது 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**41—**

**பிற மாநில மாடுகள்**

**வினா எண் 10491—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஓங்கோல், நெல்லூர், தார்ப்பார்க்கர் போன்ற அதிக பால் தரும் பிற மாநில நாட்டு மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பிற மாநிலங்களில் அதிக அளவில் பால் தரும் நாட்டு மாடுகளின் எண்ணிக்கையை தமிழ்நாட்டில் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 110 தார்ப்பார்க்கர் இன மாடுகளை கொள்முதல் செய்ய ரூ.16.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது

*60 மாடுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. விருப்பப்படும் விவசாயிகளுக்கு இதன் கன்றுகளை இனவிருத்திக்காக அரசு விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன.*

**42—**

## கலப்பின மாடுகள்

**வினா எண் 10492—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்டின மாடுகளின் நோய் எதிர்ப்புத் திறன், கடுமையான தட்பவெப்ப நிலையினைத் தாங்கும் சக்தி, அயலின மாடுகளின் அதிக பால் உற்பத்தித் திறன் ஆகியவற்றைப் பெற சரியான அளவு இரத்தக் கலப்பு கண்டறிந்து கலப்பினம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் இனப்பெருக்கக் கொள்கையின்படி அயலின மரபணுக்கள் 50 சதவிகிதம் மற்றும் உள்நாட்டின மரபணுக்கள் 50 சதவிகிதம் இருக்கும் வகையில் கலப்பினம் உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி நாட்டினங்களின் நோய் எதிர்ப்புத் திறன் மற்றும் கடுமையான தட்பவெப்ப நிலையைத் தாங்கும் சக்தி, அயலின மாடுகளின் அதிக பால் உற்பத்தித் திறன் கொண்ட கலப்பின மாடுகள் உருவாக்கப்படுகின்றன.*

**43—**

## தோடா இன காட்டு எருமை

**வினா எண் 10493—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) தமிழ்நாட்டில் தோடா இன நாட்டு எருமைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தேசிய பசு மற்றும் எருமையின அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் தோடா இன நாட்டு எருமைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வரும் ஆண்டுகளில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**44—**

## கால்நடைப் பண்ணை

**வினா எண் 10501—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நபார்டு உதவியுடன் கால்நடைப் பண்ணைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*நபார்டு RIDF திட்டத்தின்கீழ் 360 கால்நடை நிலையங்களுக்குப் புதிய நிரந்தரக் கட்டடம் கட்டவும், 12 கால்நடைப் பண்ணைகளின் மேம்பாட்டிற்காகவும், அரசாணை (நிலை) எண் 99, கால்நடை பராமரிப்பு, பால் வளம் (ம) மீன் வளத் துறை, நாள் 12-9-2011-ன்படி ரூ.122.24 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதனில் 12 கால்நடைப் பண்ணைகளுக்கு ரூ.24.69 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

[2012 நவம்பர் 1

**45—**

## உள்கட்டமைப்பு வசதிகள்

**வினா எண் 10503—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் கால்நடை நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*கால்நடை நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடப்பு நிதியாண்டில் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்ற* Strengthening of Existing Veterinary Hospital and Dispensaries (SEVHD) *திட்டத்தின் மூலம் ரூ. 8.95 கோடியும், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்* (M&R) *திட்டத்தின்மூலம் ரூ. 25 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

**46—**

## அலகுகள்

**வினா எண் 10515—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விரைவுபடுத்தப்பட்ட பசுந்தீவன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சைலேஜ் தயாரிக்கும் அலகுகளை நிறுவும் செயற்குறிப்பின் நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன்வருமா?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தீவனப் பயிர் அபிவிருத்தியினை விரைவுப்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.105.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 100 சதவீத மானியத்துடன் 350 அலகுகள் ஊறுகாய் புல் தயாரித்திட வேண்டி 350 பயனாளிகளை தேர்வு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.*

**47—**

## இலாபத்தை அதிகரித்தல்

**வினா எண் 10186—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் இலாபத்தை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் இலாபத்தை அதிகரிக்க அரசு ஆவன செய்யும்.*

*(ஆ) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், 1964-லிருந்து நிறுவனச் சட்ட விதிகள் 1956-ன்படி கூட்டுறவுத் துறை சாராத நெசவாளர்களுக்கு, உற்பத்தி, பதனப்படுத்துதல் மற்றும் வணிகத்திற்காகவும், விசைத்தறி, பின்னல் ரக ஆடைகள் உற்பத்திக்கும் நடைமுறை மூலதன உதவி அளிப்பதற்காகவும், நெசவுத் துறையை மேம்படுத்தும் நோக்கத்தோடும் சமுதாய கோட்பாட்டுடனும் துவங்கப்பட்டது. இக்கழகத்தில் தற்போது 11,841 உறுப்பினர்கள் உள்ளனர். கடன் வசூல் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் புதுக்கடன் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டு, மறுகடன் மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.*

இக்கழகம் 2011-2012-ல் ரூ.80 இலட்சம் நெசவாளர்களுக்கு கடனாக வழங்கியுள்ளது. உத்தேசமாக ரூ.13.27 இலட்சம் இலாபம் ஈட்டப்பட உள்ளது. கழகத்தின் மொத்தம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.429.24 இலட்சம். இதில் தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.267.00 இலட்சமாக உள்ளது. மீதமுள்ள ரூ.162.24 இலட்சம் உறுப்பினர்களின் பங்கு மூலதனமாகும். 2010-2011 ஆம் ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் (2011-2012) பாரத மாநில வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரொக்கக் கடன் வசதி ரூ.330.00 இலட்சம்.

நெசவாளர்களின் நலனை மேம்படுத்தும் விதத்தில் முதல் கட்டமாக மத்திய, மாநில அரசு மானிய உதவியுடன் தமிழ்நாட்டில் 9 இடங்களில் ஒருங்கிணைந்த கைத்தறி கூட்டுறவு குழுமத் திட்டத்தின் மூலம் பல்வேறு நலத் திட்டங்களை நெசவாளர்களுக்கு அளிப்பதற்கான செயல் முகவராக 2009-ல் ஆரம்பிக்கப்பட்டு, முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுகளுக்கான செயல் திட்டங்கள் முடிவடைந்துள்ளன.

இந்நிறுவனம் லூம்வேர்ல்டு வளாகங்கள்மூலம் விற்பனையை அதிகரிக்க அதன் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டு வருகிறது.

தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் (NHDC) மூலமாக உற்பத்தி விலைக்கே (Mill Gate Prize) கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு சாராத நெசவாளர்களுக்குத் தேவைப்படும் நூலினைப் பெற்று வழங்கி வருகிறது.

கழகம், ஆகாஷ் மூலமாக இரயில்வே துறைக்கு ரூ. 1,000 இலட்சம் மதிப்பிலான துணிவகைகள் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 15.00 இலட்சம் தரகுக் கட்டணமாகப் பெற வாய்ப்புள்ளது.

அடுத்து வரும் 3 ஆண்டுகளில் முகவர் என்ற முறையில் கைத்தறி அபிவிருத்தி ஆணையம், புதுதில்லி அவர்களின் ஒருங்கிணைந்த கைத்தறி கூட்டுக் குழுமம் திட்டத்தின்படி 9 ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சிக் குழுமங்களைச் செயல்படுத்த திட்டமிட்ப்பட்டுள்ளது. அதன்மூலம் கழகம் ஆண்டொன்றுக்கு ரூ.25.00 இலட்சம் வரையில் செலவினங்களை ஈடுகட்ட முடிகின்றது. மாவட்ட அளவில் சுமார் 10 கைத்தறி கண்காட்சிகள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.





தமிழ்நாடு முழுவதும் அதிக அளவில் கைத்தறி நெசவாளர்களுக்கு மத்திய அரசின் திட்டத்தின்படி கடன் அட்டை வழங்கும் முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி மத்திய அரசிடமிருந்து 3% வட்டி மானியம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.17.00 இலட்சம் கழகத்திற்கு கூடுதல் வருமானம் பெற வாய்ப்புள்ளது. மேலும் கடன் வழங்கலில் முன்னேற்றம் காணும்பொருட்டு 250 கடன்தாரர்கள் பயன்படும் வகையில் ரூ. 120.00 இலட்சம் வழங்கவும், கடன்தாரர்களிடமிருந்து. ரூ. 190.00 இலட்சம் நிலுவையை வசூலிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் (NHDC) மூலமாக ரூ.50.00 இலட்சம் வரை கூட்டுறவுச் சங்கங்களுக்கு மற்றும் தனியார் நெசவாளர்களுக்குத் தேவைப்படும் நூலினைப் பெற்று வழங்கவும், அதற்காக மத்திய அரசிடமிருந்து மானியம் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய கழகத்தின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள்மூலம் நெசவாளர்களுக்கு மேலும் புதுக் கடன்கள் வழங்கும்பட்சத்தில் அவர்களின் வாழ்வாதாரம் உயர்வதுடன், கழகமும் தொடர்ந்து இலாபம் ஈட்டக்கூடிய நிலை உள்ளது.

**48—**

## பேருந்து வசதி

**வினா எண் 1146—திரு. கே.பி. கந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, தாம்பரம் முதல் திருவான்மியூர் வரையிலும், பல்லாவரம் முதல் துரைப்பாக்கம் வரையிலும் பேருந்துகள் அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தாம்பரம்-திருவான்மியூர் இடையே தடம் எண் ஜி51-ல் நாளொன்றுக்கு 35 பேருந்துகள் மூலமாக 420 பயண நடைகளும், கூடுவாஞ்சேரியிலிருந்து திருவான்மியூருக்கு வழித்தடம் V21-ல் 2 பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 24 பயண நடைகளும், தாம்பரம்-பல்லாவரம் வழியாக திருவான்மியூருக்கு A21 வழித்தடத்தில் 2 பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 32 பயண நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இதுவே போதுமானதாகும்.*

**49—**

## பேருந்து வசதி

**வினா எண் 1177—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்துறைப்பூண்டியிலிருந்து கோபாலசமுத்திரம் தில்லைவிளாகம் வழியாக செங்கங்காடு வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*திருத்துறைப்பூண்டியிலிருந்து கோபாலசமுத்திரம் தில்லைவிளாகம் வழியாக செங்கங்காடு வரை பகுதி, பகுதியாக 38 அரசுப் பேருந்துகள்மூலம் 158 நடைகளும், 9 தனியார் பேருந்துகள்மூலம் 84 நடைகளும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதுவே போதுமானதாகும்.*

**50—**

## பேருந்து வசதி

**வினா எண் 1182—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*(அ) திருத்துறைப்பூண்டி முத்துப்பேட்டைக்கு தொடர் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி-பட்டுக்கோட்டை (வழி) முத்துப்பேட்டை பிரதான தடத்தின் பகுதியில் மேற்படி தடம் உள்ளது. இத்தடத்தில் கழகப் பேருந்துகள்மூலம் 114 நடைகளும், 7 தனியார் பேருந்துகள்மூலம் 66 நடைகளும் சராசரி 15 நிமிட இடைவெளியில் இயக்கப்படுகின்றன. இத்தடத்தில் தொடர் பேருந்து இயக்கப்படும் அளவிற்கு தற்சமயம் போதிய பயன்பாடு இல்லை.*

**51—**

## பேருந்து வசதி

**வினா எண் 1754—திரு. வே. குணசீலன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வந்தவாசி தொகுதி, செஞ்சி, வெள்ளிமேடுபேட்டை, தாதாபுரம், சத்தியவாடி, விண்ணம்பூண்டி, சென்னேரி, ஓரத்தி வழியாக மேல்மருவத்தூர்-சென்னைக்கு இயக்கிய பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*செஞ்சி முதல் வெள்ளிமேடுபேட்டை, தாதாபுரம், சத்தியவாடி, விண்ணம்பூண்டி, சென்னேரி, ஓரத்தி வழியாக மேல்மருவத்தூர்-சென்னை வழித்தடத்தில் பகுதி, பகுதியாக அரசு மற்றும் தனியார் பேருந்து வசதிகள் உள்ள நிலையில் செஞ்சி முதல் சென்னை இடையே நேரடிப் பேருந்து இயக்கத் தேவையில்லை.*

[2012 நவம்பர் 1

**52—**

### பேருந்து வசதி

**வினா எண் 2576—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்திலிருந்து மடப்புரம், மாரநாடு, மானாமதுரை, கொல்லங்குடி, காளையார்கோவில், தாயமங்கலம் ஆகிய வழிபாட்டுத் தலங்களுக்கு தினந்தோறும் ஒரு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்புவனத்திலிருந்து, மடப்புரம், மாரநாடு வழியாக மானாமதுரைக்கும், மானாமதுரையிலிருந்து கொல்லங்குடி, காளையார்கோவில், தாயமங்கலம் ஆகிய வழிபாட்டுத் தலங்களுக்கு என பகுதி, பகுதியாக பேருந்துகள் அதிக அளவில் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே, போதுமானதாகும்.*

**53—**

### பேருந்து வசதி

**வினா எண் 2577—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து பிள்ளையார்பட்டி, பட்டமங்கலம், குன்றக்குடி, செட்டிநாடு போன்ற தலங்களுக்கு வாரம் ஒரு முறை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து திருப்பத்தூருக்கும், திருப்பத்தூரிலிருந்து பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, பட்டமங்கலம் மற்றும் செட்டிநாடு பகுதிகளுக்கும், பகுதி, பகுதியாக தினந்தோறும் அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே, போதுமானதாகும்.*

**54—**

### பேருந்து வசதி

**வினா எண் 3551—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணியிலிருந்து சேத்பட், மேலச்சேரி, கோட்டுப்பாக்கம், தெண்ணாத்தூர், தேசூர், தெள்ளார் வழியாக திண்டிவனத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து சேத்பட், மேலச்சேரி, கோட்டுப்பாக்கம், தெண்ணாத்தூர், தேசூர், தெள்ளார் வழியாக திண்டிவனம் வரை செல்லும் வழித்தடத்தில் பகுதி, பகுதியாக பேருந்து வசதி உள்ளது. மேற்படி, வழித்தடத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் அருகில் உள்ள நகரங்களுடன் போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளன. மேற்படி வழித்தடம் சுற்று வழித்தடம் என்பதால் நேரடிப் பயணிகள் விரும்பமாட்டார்கள். எனவே, மேற்படி வழித்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் இல்லை.*

[2012 நவம்பர் 1

**55—**

## பேருந்து நிலையத்தில் வசதிகள்

**வினா எண் 4006—திரு. க. பீம்ராவ்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரவாயல் தொகுதி, முகப்பேர் மேற்கு பேருந்து நிலையத்தில் தரைதளம், நிழற்குடை, சுகாதார வளாகம் மற்றும் மின்விளக்கு ஆகிய வசதிகள் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு உட்பட்ட முகப்பேர் மேற்கு பேருந்து நிலையத்தில் தரைதளம், நிழற்குடை, சுகாதார வளாகம் மற்றும் மின்விளக்கு ஆகிய வசதிகள் செய்யும்பொருட்டு, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்தொகையில் முதல் தவணையாக ரூ.25.00 இலட்சம் பெறப்பட்டு பேருந்து நிலையத்தில் மேம்பாட்டுத் பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட உள்ளன. மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது.*

**56—**

## பேருந்து வசதி

**வினா எண் 4249—திரு. து. முருகேசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கல்பட்டு தொகுதி, வெண்பாக்கம் முதல் வெங்கடாபுரம் வழியாக தாம்பரம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*வெண்பாக்கம்-வெங்கடாபுரம்-தாம்பரம் தடத்தின் நீளம் 34.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் கொளத்தூர் முதல் வெண்பாக்கம் வரையிலான சாலை சேதமடைந்துள்ளது. எனவே, மேற்படி வழித்தடத்தில் தற்போது பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.*

**57—**

## பேருந்து வசதி

**வினா எண் 4251—திரு. து. முருகேசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கல்பட்டு தொகுதி, மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலகம் எதிரில் பேருந்துகள் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு மாற்றுத் திறனாளி நல அலுவலகப் பேருந்து நிறுத்தத்தில், மதுராந்தகம்-செங்கல்பட்டு தடத்தில் இயக்கப்படும் அனைத்து நகரப் பேருந்துகளும் நின்று பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன.*

**58—**

## பேருந்து வசதி

**வினா எண் 4402—திரு. க. மனோகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் முதல் முள்ளிப்பாக்கம், ஆமூர், சிறுதாவூர் வழியாக செங்கல்பட்டு வரை பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*செங்கல்பட்டு-திருப்போரூர் வழி முள்ளிப்பாக்கம், ஆமூர், சிறுதாவூர் தடத்தில் செங்கல்பட்டிலிருந்து முள்ளிப்பாக்கம் வழியாக மானாமதி வரை நகரத் தடம் எண் டி75 மூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. மானாமதியிலிருந்து திருப்போரூர் வரையிலான பகுதி நன்கு போக்குவரத்து வசதி பெற்றுள்ளது.*

**59—**

## பேருந்து வசதி

**வினா எண் 4484—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மன்னார்குடி முதல் களப்பால் வழியாக ஒரத்தூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி-களப்பால் (வழி) ஒரத்தூர் வழித்தடம் புது வழித்தடமாகும். கோரிக்கை தடத்தில் மன்னார்குடி ஒரத்தூர் மற்றும் மன்னார்குடி-களப்பால் (வழி) வேதபுரம் போதிய பேருந்து வசதியுள்ளது. ஒரத்தூர், வேதபுரம் 3.0 கி.மீ. தடப்பகுதி பேருந்து வசதி பெறாத தடப்பகுதியாகும். மேற்படி 3.0 கி.மீ. தடப்பகுதி சாலை, பேருந்து இயக்க முடியாத அளவிற்கு குறுகிய சாலையாக உள்ளது. ஆகையால், கோரிக்கை தடத்தில் பேருந்து இயக்க இயலாது.*





**60—**

## பேருந்து வசதி

**வினா எண் 6173—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்துறைப்பூண்டியிலிருந்து கீராலத்தூர், திருக்கொள்ளிக்காடு பொங்குசனீஸ்வரர் கோயிலுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி—திருக்கொள்ளிக்காடு பொங்குசனீஸ்வரர் கோயிலுக்கு சனிக்கிழமை மற்றும் திருவிழா நாட்களில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.*

**61—**

## பேருந்து வசதி

**வினா எண் 7083—திரு. வி.எஸ். இராஜி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கல்பட்டு முதல் தச்சூர், நீலமங்கலம், நெல்வாய், பவுஞ்சூர், செங்காட்டூர் வழியாக செய்யூர் வரை நிறுத்தப்பட்ட 81-வி பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தடம் 81-வி தடத்தில் 2 பேருந்துகள் இயக்கப்பட்டன. போதிய பயணிகள் அடர்வு இல்லாததால், ஒரு பேருந்து நிறுத்தப்பட்டு, தற்பொழுது ஒரு பேருந்து மட்டுமே இயக்கப்படுகிறது. தற்பொழுது இயக்கப்படும் பேருந்திலும் பயணிகள் அடர்வு குறைவாக உள்ளது.*

[2012 நவம்பர் 1

*எனவே, தடம் எண் 81-ல் பயணிகள் எண்ணிக்கை உயரும் பட்சத்தில், ஒரு பேருந்தை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**62—**

## பேருந்து வசதி

**வினா எண் 8349—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து இளையான்குடி வழியாக கல்லடித் திடல் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நகரப் பேருந்து இயக்குவதற்கான வழித்தட தூரம் 35.0 கி.மீ. ஆகும். மானாமதுரையிலிருந்து இளையான்குடி வழியாக கல்லடித் திடல் வரை உள்ள வழித்தட தூரம் 73.2 கி.மீ. ஆகும். எனவே, நகரப் பேருந்து இயக்க இயலாது.*

**63—**

## பேருந்து வசதி

**வினா எண் 8776—திருமதி எஸ். கணிதா சம்பத்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் முதல் அருங்குணம், எண்டத்தூர், மருவலம் வழியாக செய்யூர் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*மதுராந்தகத்திலிருந்து செய்யூர் செல்லும் கோரப்பட்ட தடத்தின் நீளம் 34 கி.மீ. ஆகும். இத்தடத்தில், காந்திநகரை அடுத்து அருங்குணம் மற்றும் பிரதான சாலையில் இணையும் சித்திரவாடி வரை உள்ள சாலை பேருந்து இயக்க தகுதியற்றதாக உள்ளது. இது ஒரு சுற்று வழித்தடமாகும். மேலும், மதுராந்தகம், அருங்குணம் கூட்டுச்சாலை, எண்டத்தூர், மருவலம் வழியாக செய்யூர் வரை 2 நகரப் பேருந்துகள்மூலம் 8 நடைகளும், 1 புறநகரப் பேருந்தின் மூலம் சென்னைக்கு 4 நடைகளும் தினசரி இயக்கப்படுகின்றன. இந்த இயக்கங்கள் இத்தடத்தின் பேருந்துத் தேவைக்கு போதுமானதாகும்.*

**64—**

## பேருந்து வசதி

**வினா எண் 8779—திருமதி எஸ். கணிதா சம்பத்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுராந்தகம் தொகுதி, பெரும்பேர்கண்டரை-தாம்பரம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*பெரும்பேர்கண்டரை கிராமம், நன்கு போக்குவரத்து வசதி பெற்றுள்ள தொழுப்பேடிலிருந்து 1 கி.மீ. தொலைவிலேயே உள்ளது. எனவே, அரசு ஆணையின்படி, பேருந்து வசதி பெற்ற இடத்திலிருந்து 1 கி.மீ. தூரத்திற்குள் உள்ள பெரும்பேர்கண்டரை கிராமம் பேருந்து வசதி பெற்றுள்ள கிராமமாகவே கருதப்படும். எனவே, தொழுப்பேடு வந்தடைந்தால் அனைத்து ஊர்களுக்கும் பேருந்து வசதியைப் பெறலாம்.*

[2012 நவம்பர் 1

**65—**

## பேருந்து வசதி

**வினா எண் 8780—திருமதி எஸ். கணிதா சம்பத்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுராந்தகம் தொகுதி, தாம்பரத்திலிருந்து தொழுப்பேடு, அம்மணம்பாக்கம் வழியாக வந்தவாசி வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தாம்பரத்திலிருந்து தொழுப்பேடு, அம்மணப்பாக்கம் வழியாக வந்தவாசி வரை உள்ள வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். அச்சரப்பாக்கம் வழியாக ஒரத்தி மற்றும் எலப்பாக்கம் முதல் வந்தவாசி வரை அம்மணப்பாக்கம் வழியாக அரசு மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் போதிய போக்குவரத்து வசதி பகுதி, பகுதியாக உள்ளது. எனவே, இச்சுற்று வழித்தடத்தில் பேருந்து இயக்க அவசியம் எழவில்லை.*

**66—**

## பேருந்து வசதி

**வினா எண் 9457—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, முக்கணமலைப்பட்டியிலிருந்து அன்னவாசல், இலுப்பூர், மலைக்குடிப்பட்டி மற்றும் விராலிமலை வழியாக திருச்சி வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, முக்கணமலைப்பட்டியிலிருந்து அன்னவாசல், இலுப்பூர், மலைக்குடிப்பட்டி மற்றும் விராலிமலை வழியாக திருச்சி வரை தனியார் பேருந்து ஒன்று தற்போது 6 நடைகள் இயக்கப்படுகின்றன. இதுதவிர மேற்படி வழித்தடத்தில் முக்கணமலைப்பட்டியிலிருந்து இலுப்பூர் வரை அரசு மற்றும் தனியார் பேருந்துகள் 18 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும் இலுப்பூரிலிருந்து திருச்சிக்கு அரசு மற்றும் தனியார் பேருந்துகள் 28 நடைகள் இயக்கப்படுகின்றன. இவ்வாறு பகுதி, பகுதியாக பேருந்து வசதி போதியளவு உள்ளதால் புதிய பேருந்து இயக்கும் அவசியம் ஏதும் எழவில்லை.*

**67—**

## பெண்களுக்கு அரசு வசதி

**வினா எண் 15837—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கருவாடுகளை உற்பத்தி செய்யும் பெண்களுக்கு அரசு உதவி செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்* (SGSY) *சுகாதாரமான முறையில் மீன்களை கையாளுவதற்கும், சுகாதாரமான முறையில் கருவாடு உற்பத்தி செய்வதற்கும் துறையின்மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி 5360 மீனவ மகளிருக்கும், மீனவருக்கும் 2006 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு முடிய வழங்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியத்தின்மூலம் சுகாதாரமான முறையில் கருவாடு உற்பத்தி செய்ய உலர்மேடை அமைக்கவும், சூரிய ஒளியின்மூலம் மீன்களை உலர வைக்கும்*

[2012 நவம்பர் 1

அலகு அமைக்கவும் மீனவர்களுக்கு மற்றும் மீனவ மகளிருக்கு 25 சதவிகித மானியத் திட்டத்தின்கீழ் அதிகபட்சம் ரூ.1,50,000/- மானியம் வழங்கிட வழிவகை உள்ளது. பயனீட்டாளர் தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியினராக இருப்பின் 30 சதவிகித மானியம் அதிகபட்சமாக ரூ.1,80,000/- பெற வழிவகை உள்ளது. மேற்குறிப்பிட்ட மானியத் தொகை நீங்கலான 75 சதவிகித அல்லது 70 சதவிகிதத் தொகையினை பயனீட்டாளர் வங்கிக் கடன் பெற்றோ அல்லது சொந்த ஆதாரம் மூலமோ ஈட்டி இத்திட்டத்தில் பயன் பெறலாம். பயனீட்டாளர் மேற்குறித்த திட்டத்தில் பயன் பெற முன்வரும் பட்சத்தில் அவர்களின் கோரிக்கை தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திற்குப் பரிந்துரை செய்யப்படும்.

**68—**

## ஆசிரியர் பணியிடங்கள்

**வினா எண் 11950—திரு. சு. ரவி** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், கீழ்வெங்கடாபுரம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், கீழ்வெங்கடாபுரம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஒரு தலைமையாசிரியர் பணியிடமும் ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடமும் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் தலைமை ஆசிரியர் மட்டும் பணிபுரிந்து வருகிறார். இடைநிலை ஆசிரியர் பணியிடம் காலியாக



2012 நவம்பர் 1]

உள்ளது. தற்போது ஒரு ஆசிரியர் மாற்று பணியில் பணியாற்றி வருகிறார். வரும் 2012-2013 கல்வி ஆண்டில் ஆசிரியர் பணியிடம் பொது மாறுதலின்போது நிரப்பப்படும்.

**69—**

## வீடியோ காமிரா

**வினா எண் 11357—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு ஒரு வீடியோ காமிரா வாங்கும் செயற்குறிப்பின் நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் நலத் திட்டங்கள் குறித்த செய்திகள் மக்களைக் கவரும் விதத்திலும், எளிதில் புரியும் வண்ணமாக அனைவரையும் சென்றடையும் விதத்தில், கருத்து விளக்கப் படங்கள், வீடியோ செய்தி மலர்கள் மற்றும் குறும்பாடல்கள் தயாரித்து, அனைத்து மாவட்டங்களுக்கும் கள விளம்பரப் பணிக்கும், கேபிள் டி.வி.களில் ஒளிபரப்புவதற்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. மேற்கண்ட வீடியோ செய்தி மலர்கள் மற்றும் கருத்து விளக்கப் படங்களை படப்பிடிப்பு செய்வதற்கு அதிநவீன டிஜிட்டல் தொழில்நுட்பமான PMW 500 Sony Camera ஒன்று 2011-2012 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**70—**

## பெண்களின் உயர்வு

**வினா எண் 11361—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 1

*(அ) பெண்களைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் படத்திற்கு சிறப்புப் பரிசாக வழங்கப்படும் தொகை ரூ.1.25 இலட்சத்தை ரூ. 3 இலட்சமாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 1968 ஆம் ஆண்டு முதல், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்பட்டு தேர்வு செய்யப்படும் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.*

*பெண்களின் முன்னேற்றம் மற்றும் பெண்களைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்கு சிறப்புப் பரிசாக ரூ.1.25 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு ஆகியவை வழங்கப்படுகின்றன.*

*பெண்களைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் படத்திற்கு சிறப்புப் பரிசாக வழங்கப்படும் தொகை ரூ.1.25 இலட்சத்தை ரூ.3.00 இலட்சமாக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**71—**

## பரிசுத் தொகை

**வினா எண் 11362—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிறந்த தமிழ்ப் படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர், சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் முதல்,*



2012 நவம்பர் 1]

*2 ஆம், 3 ஆம் பரிசுகள் முறையே ரூ.3 இலட்சம், ரூ.2 இலட்சம், ரூ.1 இலட்சம் ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 1968 ஆம் ஆண்டு முதல், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்பட்டு தேர்வு செய்யப்படும் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் பின்வரும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன:*

| | | |
|---|---|---|
| *1. முதல் பரிசு* | . | *ரூ2.00 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு* |
| *2. இரண்டாம் பரிசு* | . | *ரூ1.00 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு* |
| *3. மூன்றாம் பரிசு* | . | *ரூ75 ஆயிரம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு* |
| *4. சிறப்புப் பரிசு* | . | *ரூ75 ஆயிரம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு* |

*சிறந்த தமிழ் படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர், சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் முதல், 2 ஆம், 3 ஆம் பரிசுகள் முறையே ரூ.3.00 இலட்சம், ரூ.2.00 இலட்சம், ரூ.1.00 இலட்சம் ஆக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**72—**

## உதவித் தொகை

**வினா எண் 11368—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

(அ) திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் வழங்கப்படும் மகப்பேறு உதவித் தொகையை ரூ.12,000/- ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும் அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் திரையுலகத்தினரின் நலன்களுக்காக சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினர் நல வாரியம் ஒன்றினைப் புதிதாக உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. திரைப்படத் துறையினர், சின்னத்திரையினர் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலமுடன் வாழ வேண்டுமென்பதற்காக திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் உறுப்பினர்களைச் சேர்த்து வாரிய உறுப்பினர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

3. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் மகப்பேறு உதவித் தொகை ரூ.6,000/- வழங்கப்பட்டு வருகிறது. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் வழங்கப்படும் மகப்பேறு உதவித் தொகையை ரூ.12,000/- ஆக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**73—**

## கல்வி உதவித் தொகை

**வினா எண் 11370—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2012 நவம்பர் 1]

(அ) திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ரூ.6,000, ரூ.4,000, ரூ.3,000 ரூ.2,000 ரூ.1000 என்றிருப்பதை ரூ.10,000 ரூ.7,000 ரூ.5,000 ரூ.3,000, ரூ.2,000 என உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும் அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காக சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினர் நல வாரியம் ஒன்றினைப் புதிதாக உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் கல்வி உதவித் தொகையாக 10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000/-, 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.1,000/-, 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,500/-, 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு ரூ. 1,500/-, முறையான பட்டப் படிப்புக்கு ரூ.1,500/-, மாணவரில்ல வசதியுடன் முறையான பட்டப் படிப்புக்கு ரூ.1,750/-, முறையான பட்ட மேற்படிப்புக்கு ரூ.2,000/-, மாணவரில்ல வசதியுடன் முறையான மேற்படிப்புக்கு ரூ.3,000/-, தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு ரூ.2,000/-, மாணவரில்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு ரூ.4,000/-, மாணவரில்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு ரூ.6,000/-, ஐ.டி.ஐ. அல்லது பல்தொழில் பயிற்சிப் படிப்புக்கு ரூ.1,000/-, மாணவரில்ல வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது பல் தொழில் பயிற்சிப் படிப்புக்கு ரூ.12,00/-, மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

3. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் வழங்கப்படும் கல்வி உதவித் தொகைகளை ரூ.6,000 ரூ.4000, ரூ.3,000, ரூ.2,000 ரூ.1000 என்றிருப்பதை ரூ.10,000, ரூ.7,000, ரூ.5,000, ரூ.3,000 ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2012 நவம்பர் 1

**74—**

## உதவித் தொகை

**வினா எண் 11372—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் இயற்கை மரணத்திற்காக வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.30 ஆயிரமாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும் அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் திரையுலகத்தினரின் நலன்களுக்காக சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினர் நல வாரியம் ஒன்றினைப் புதிதாக உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் உறுப்பினர்கள் பெருமளவில் சேர்க்கப்பட்டு, வாரிய உறுப்பினர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

3. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் இயற்கை மரணத்திற்காக ரூ.15,000/- உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் இயற்கை மரணத்திற்காக வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.30,000/- ஆக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**75—**

## குறும்படச் செலவு

**வினா எண் 11375—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2012 நவம்பர் 1]

(அ) அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்மூலம் மாணவர்கள் தயாரிக்கும் குறும்படச் செலவிற்காக ரூ.21 இலட்சம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில், மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர்கள் தயாரிக்கும் பட்டயப் பட குறும்படத் தயாரிப்புச் செலவினத் தொகை ரூ.8,000/- வழங்கப்பட்டு வந்தது. அத்தொகை மாணவர்களின் கோரிக்கை மற்றும் அந்நிறுவன முதல்வர் பரிந்துரையினை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி அத்தொகை ரூ.15,000/- ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்மூலம் மாணவர்கள் தயாரிக்கும் குறும்படச் செலவிற்காக ரூ.21.00 இலட்சம் வழங்குவது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**76—**

## மருத்துவ நிதியுதவி

**வினா எண் 11380—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிகையாளர் நல நிதியிலிருந்து நோயினால் பாதிக்கப்பட்ட பத்திரிகையாளருக்கு ரூ.1 இலட்சம்வரை மருத்துவ நிதி உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பத்திரிகையாளர் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும்போது,

[2012 நவம்பர் 1

*மருத்துவச் செலவினை ஈடுகட்ட முடியாத நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு மருத்துவ உதவி வழங்க ஏதுவாக, பத்திரிகையாளர் நல நிதித் திட்டம் அமைத்து, அதற்கான குழு அமைக்க அரசால் முடிவு செய்யப்பட்டு, அதற்காக ரூபாய் ஒரு கோடி ஒப்பளிப்பு செய்து தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் (நிர்.4) துறை மூலம் அரசாணை (நிலை) எண் 17, நாள் 14-1-2008-ல் ஆணை வெளியிடப்பட்டது. இந்தத் தொகையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திடம் வைப்பீடு செய்து அதன் வட்டித் தொகையிலிருந்து நோயின் தன்மை மற்றும் சிகிச்சைச் செலவினத்திற்கேற்றவாறு மருத்துவ உதவி நிதி ரூ.50,000/-க்கு மிகாமல் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. எனவே, மருத்துவ உதவி நிதி ரூ.50,000/- வரை வழங்குவதற்கு வழிவகையுள்ளது.*

**77—**

## உதவித் தொகை

**வினா எண் 11381—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சின்னத்திரையில் ஆண்டின் சிறந்த சாதனையாளர், சிறந்த வாழ்நாள் சாதனையாளர் ஆகியோருக்கு வழங்கப்படும் தொகையை ரூ.2 இலட்சமாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சின்னத்திரைக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம் 2006 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*ஒன்றுக்கு மேற்பட்ட துறையில் பணியாற்றிய கலைஞர்களில் சின்னத்திரை தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு ஆண்டின் சிறந்த சாதனையாளர் விருதாக ரூ.1.00 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும், சின்னத்திரை தொடர்களில் நடித்து வறுமை நிலையில் உள்ளவர்களில் தேர்வு*



2012 நவம்பர் 1]

*செய்யப்படும் ஒருவருக்கு ஆண்டின் சிறந்த சாதனையாளர் விருதாக ரூ.1.00 இலட்சம் ரொக்கம் நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.*

*சின்னத்திரையில் ஆண்டின் சிறந்த சாதனையாளர், சிறந்த வாழ்நாள் சாதனையாளர் ஆகியோருக்கு வழங்கப்படும் தொகையை முறையே ரூ.2.00 இலட்சமாக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**78—**

## தங்கப் பதக்கம்

**வினா எண் 11382—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சின்னத்திரையில் சிறந்த கதை ஆசிரியர், திரைக்கதை ஆசிரியர் ஆகியோருக்கு வழங்கப்படும் தங்கப் பதக்கத்தை 5 பவுனில் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சின்னத்திரைக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம் 2006 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*2. சின்னத்திரை தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர் குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த இயக்குநர், சிறந்த கதையாசிரியர், சிறந்த திரைக்கதையாசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணிக் குரல்*

[2012 நவம்பர் 1

கொடுப்பவர் (ஆண்), சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்), சிறந்த நட்சத்திரக் காட்சியாளர் ஆகிய விருதுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொருவருக்கும் 3 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

3. சின்னத்திரையில் சிறந்த கதை ஆசிரியர், திரைக்கதை ஆசிரியர் ஆகியோருக்கு வழங்கப்படும் தங்கப் பதக்கத்தை 5 பவுனாக வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**79—**

## திரைப்பட விருதுகள்

**வினா எண் 11387—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகள் விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு நல்ல திரைப்படங்களை ஊக்குவிப்பதற்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

மனித உணர்வுகளைப் பிரதிபலிக்கும் திரைப்படங்களை ஊக்கப்படுத்தும் வகையில் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு திரைப்பட விருதுகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. விருதுகள் பெறுவதற்குத் தகுதியான சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்வதற்காக தேர்வுக் குழு உருவாக்கப்பட்டு, தேர்வு செய்யப்படும் திரைப்படங்களுக்கு ஆண்டு தோறும் முதல் பரிசு ரூ.2.00 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும், இரண்டாம் பரிசு ரூ.1.00 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும், மூன்றாம் பரிசு ரூ.75,000/- ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும், சிறப்புப் பரிசு ரூ.75,000/- ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.



2012 நவம்பர் 1]

சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தலா 5 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கு திரைப்பட விருதுகள் வழங்குவதற்கு தேர்வுக் குழு அமைக்கப்பட்டு, திரைப்படங்கள் பார்வையிடப்பட்டு வருகின்றன.

திரைப்பட விருதுகள் பெறுவதற்குத் தகுதியுடைய திரைப்படங்களைத் தேர்வுக் குழு பார்வையிட்டு, தேர்ந்தெடுத்த பின்னர், தேர்வு செய்யப்பட்ட திரைப்படங்களுக்கு திரைப்பட விருதுகள் வழங்கப்படும்.

**80—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 1124—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப் பகுதிகளில் உள்ள ஒன்றிய மருந்தகங்களை மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் எடுத்து, ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கிராமப் பகுதிகளில் உள்ள ஒன்றிய மருந்தகங்களில் தகுதியுள்ளவற்றை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2012 நவம்பர் 1

**81—**

**உயர்த்துதல்**

**வினா எண் 2374—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கணக்கர்குளம் ஊராட்சி கோலியான்குளம் தாய்சேய் நல விடுதியைச் சீராகச் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி சுகாதாரப் பகுதி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் வடக்கன்குளம், முதன்மை ஆரம்ப சுகாதார நிலையக் கட்டுப்பாட்டின்கீழ், கோலியான்குளம் துணை சுகாதார நிலையம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. அங்கு பணிபுரிந்துவரும் கிராம சுகாதாரச் செவிலியர், காலையில் அக்கிராமத்தில் களப்பணியும், மாலை நேரங்களில் துணை சுகாதார நிலையத்திற்கு வரும் நோயாளிகளுக்கு சிகிச்சையும் செய்து வருகின்றார்.*

**82—**

**மருத்துவர் பணியிடங்கள் நிரப்புதல்**

**வினா எண் 3451—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி சுகாதாரப் பகுதியில், பணகுடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிக்கப்பட்டு 2 மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கூடுதலாக ஒப்பளிக்கப்பட்டுள்ள 3 மருத்துவர் பணியிடங்களை விரைவில் நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**83—**

**செயல்படுத்துதல்**

**வினா எண் 4259—திரு. து. முருகேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கல்பட்டு தொகுதி, கருநிலம் சுகாதார நிலையத்தைச் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*சைதாப்பேட்டை சுகாதார மாவட்டம், சிங்கப்பெருமாள்கோவில் ஆரம்ப சுகாதார நிலையத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில், கருநிலம் துணை சுகாதார நிலையம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. கிராம சுகாதாரச் செவிலியர், துணை சுகாதார நிலையப் பகுதிகளில் நலத் திட்டப் பணிகளை செவ்வனே நிறைவேற்றி வருகின்றார்.*

**84—**

**பணியிடத்தை நிரப்புதல்**

**வினா எண் 4469—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

(அ) அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருந்தியல் போதனையாளர் மற்றும் டெக்னீஷியன்கள் (தொழில்நுட்பர்) பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருந்தியல் போதகர் நியமனத்திற்கான கல்வித் தகுதி தொடர்பாக இரண்டு வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இப்பணியிடத்தை நிரப்ப நீதிமன்றத் தடையாணை உள்ளதால் மருந்தியல் போதகர் பணியிடங்களை நிரப்ப இயலாத சூழ்நிலை உள்ளது. இத்தடையாணையினை விலக்கிக்கொள்ள உயர் நீதிமன்றத்தில் மனு (Stay Vacation Petition) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் தடையாணை விலக்கிக்கொள்ளப்பட்டவுடன் இப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

டெக்னீஷியன்கள் (தொழில்நுட்பர்) பதவிகளைப் பொறுத்தவரை மொத்தம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள 796 பணியிடங்களில் தற்போது 190 பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலிப் பணியிடங்களை மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் (Medical Services Recruitment Board) மூலம் தெரிவு செய்து விரைவில் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**85—**

## மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 4522—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மருத்துவமனைகளிலும் காலியாகவுள்ள பிரேத அறுவை மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ஒப்பளிக்கப்பட்டுள்ள பிரேத அறுவை மருத்துவர் (பிரேத அறுவை பேராசிரியர், இணைப் பேராசிரியர், பிரேத அறுவை போதகர், உதவிப் பேராசிரியர்) மொத்த பணியிடங்கள் - 114. அதில் 56 பணியிடங்கள் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மீதம் காலியாக உள்ள 58 காலிப் பணியிடங்கள் ஏப்ரல் 2012-ல் பட்ட மேற்படிப்பு முடிக்கும் பணிசார்ந்த மற்றும் பணிசாரா மருத்துவர்களைக் கொண்டும், தற்காலிக மருத்துவர்களைக் கொண்டும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மருத்துவக் கல்லூரி அல்லாத பிற மருத்துவமனைகளில் பிரேத அறுவை சிகிச்சை, பொது மருத்துவர்மூலம் செய்யப்பட்டு வருகிறது.

**86—**

## பெண் மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 5512—திரு. மு. ராஜநாயகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணல்மேல்குடி அரசு மருத்துவமனைகளில் பெண் மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் 5 பெண் மருத்துவர்களும், ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையில் 2 பெண் மருத்துவர்களும் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். மணல்மேல்குடி அரசு

[2012 நவம்பர் 1

*மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 3 மருத்துவர் பணியிடங்களில் 2 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். காலியாக உள்ள ஒரு பணியிடத்தினை இனிவரும் பதவி உயர்வு மற்றும் இடமாறுதல் கலந்தாய்வின்மூலம் விருப்பத்தின்பேரில் பெண் மருத்துவரைக் கொண்டு நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**87—**

## மூலிகை நாற்றுகள்

**வினா எண் 6753—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) டாம்ப்கால் நிறுவனத்தின்மூலம் துளசி, சிறியாநங்கை, சிறு குறுஞ்சான் போன்ற மூலிகை நாற்றுகளை உருவாக்கி விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) டாம்ப்கால் நிறுவனத்தின்மூலம் துளசி, சிறியாநங்கை, சிறு குறுஞ்சான் மற்றும் சில மூலிகை நாற்றுகளை உருவாக்கி விற்பனை செய்யும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*

**88—**

## மருத்துவர் மற்றும் செவிலியர் நியமனம்

**வினா எண் 7450—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, செய்யார் வட்டம், கோவிலாம்பூண்டி, மேல்நகரம்பேடு (மதுரா) பகுதியிலுள்ள ஆரம்ப துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவர் மற்றும் செவிலியரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செய்யார் சுகாதாரப் பகுதியிலுள்ள மேல்நகரம்பேடு துணை சுகாதார நிலையம் நாவல்பாக்கம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் உள்ள துணை சுகாதார நிலையமாகும். அரசு விதிமுறைகளின்படி துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிப்பு இல்லை. ஒரு கிராம சுகாதார செவிலியர் தற்போது அங்கு பணிபுரிந்து வருகிறார். நாவல்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் மொத்த ஒப்பளிப்பு 5. தற்போது 5 மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். காலிப் பணியிடம் ஏதும் இல்லை.*

**89—**

## டீசல்

**வினா எண் 9116—திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு பொது மருத்துவமனைக்கு ஜெனரேட்டருக்கான டீசல் ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2011-12 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு டீசலுக்கென மொத்தமாக ரூ.83,000/- ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கென ரூ.36,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

[2012 நவம்பர் 1

**90—**

## எலும்பு சிகிச்சை மருத்துவர்

**வினா எண் 9118—திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு பொது மருத்துவமனையில் எலும்பு சிகிச்சைப் பிரிவுக்குத் தனியாக மருத்துவர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு பொது மருத்துவமனையில் உள்ள ஓர் எலும்பு சிகிச்சை மருத்துவர் பணியிடம் காலியாக உள்ளது. இப்பணியிடத்தை எதிர்வரும் மருத்துவர்கள் மாறுதல் கலந்தாய்வின்மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**91—**

## அவசர ஊர்தி

**வினா எண் 9121—திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு பொது மருத்துவமனைக்குக் கூடுதலாக அவசரகால ஊர்தி வழங்கவும், ஓட்டுநரை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் அரசு மருத்துவமனை பகுதியில் 108 அவசரகால ஊர்தி இலவசமாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, மேலும் ஓர் அவசரகால ஊர்தி தேவை தற்சமயம் எழவில்லை. மதுரை மாவட்ட திருமங்கலம் அரசு பொது மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட இரண்டு ஓட்டுநர் பணியிடங்களில் ஓட்டுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.*



2012 நவம்பர் 1]

**92—**

## மருத்துவக் கல்லூரி

**வினா எண் 9202—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 'பி' பிளாக் கட்டடங்களில் மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கான பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டு வரும் 'பி' பிளாக் கட்டடத்தில் மருத்துவப் பட்ட மேற்படிப்பிற்கான மருத்துவக் கல்லூரி துவங்க பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.*

**93—**

## கட்டட வசதி

**வினா எண் 11192—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தேனி மாவட்டம், கம்பம் அரசு மருத்துவமனையில் வெளிநோயாளிகள் சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், கம்பம் அரசு மருத்துவமனைக்கு வரும் வெளிநோயாளிகள் எண்ணிக்கையை கருத்தில்கொண்டு ஏற்கெனவே வெளிநோயாளிகள் பிரிவு அம்மருத்துவமனையில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.*

**94—**

**பணி நியமனம்**

**வினா எண் 11202—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மடத்துக்குளம் மற்றும் கணியூர் ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்திடவும், கூடுதல் மருத்துவர்கள் மற்றும் தொழில்நுட்ப மருத்துவப் பணியாளர்கள் நியமிக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில், மடத்துக்குளம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகவும், கணியூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாகவும் செயல்பட்டு வருகின்றன. இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குமரலிங்கம், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மடத்துக்குளம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் கணியூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றைத் தரம் உயர்த்தவும், அங்கு கூடுதல் மருத்துவர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களை நியமிக்கவும் சாத்தியக்கூறுகள் இல்லை.*



2012 நவம்பர் 1]

*(ஆ) இவ்வினா எழ இடமில்லை.*

**95—**

**கட்டடம்**

**வினா எண் 12166—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் அரசு மருத்துவமனையில் 30 படுக்கைகள் கொண்ட ஆண்கள் மருத்துவப் பிரிவுக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் அரசு மருத்துவமனையில் 30 படுக்கைகள்கொண்ட ஆண்கள் மருத்துவப் பிரிவு கட்ட 2011-12 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.*

**96—**

**சீரமைத்தல்**

**வினா எண் 12175—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், ஆலத்தூர் துணை சுகாதார நிலையத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், ஆலத்தூரில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அங்கு துணை சுகாதார செவிலியர் தங்கி தனது பணிகளை மேற்கொண்டு வருகின்றார். மேலும், துணை சுகாதார நிலையக் கட்டடமும நல்ல நிலையில் உள்ளது.*

*(ஆ) இவ்வினா எழ இடமில்லை.*

**97—**

**அலுவலக இட மாற்றம்**

**வினா எண் 13086—திரு. து. முருகேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னை, சைதாப்பேட்டையில் இயங்கிவரும் சுகாதாரத் துறையின் இயக்குநர் அலுவலகத்தை செங்கல்பட்டிற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் வருவாய் மாவட்டத்தில் காஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு சுகாதார மாவட்ட அலுவலகமும், சைதாப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு சுகாதார மாவட்ட அலுவலகமும் செயல்பட்டு



2012 நவம்பர் 1]

வருகின்றன. சைதாப்பேட்டையில் உள்ள கட்டடம் பொது சுகாதாரத் துறையின் சொந்தக் கட்டடமாகும். சைதாப்பேட்டையில் இயங்கும் அலுவலகத்தை, தாம்பரம் சானடோரியத்தில் உள்ள தொழுநோய் சிகிச்சைப் பிரிவு கட்டடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. செங்கல்பட்டிற்கு மாற்றம் செய்யும் உத்தேசம் தற்போது இல்லை.

**98—**

**புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு**

**வினா எண் 14988—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்கு கட்டடம் கட்ட அரசாணை வெளியிடப்பட்டு கட்டடம் கட்டுவதற்கு பொதுப் பணித் துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**99—**

**மயானம்**

**வினா எண் 8537—திரு. சி.எச். சேகர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

*கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி இலங்கை அகதிகள் முகாமில் மயானம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பெத்திக்குப்பம் முகாம் மக்கள், மேற்படி கிராமத்தில் சர்வே எண் 173/1-ல் சுமார் 0.60.5 ஹெக்டேர் (1.50 ஏக்கர்) நிலத்தினை மயானமாக உபயோகித்து வருகின்றனர். மேற்படி மயானம் 1990 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் உள்ளது. மேலும், இம்மயானம் போதுமான இட வசதியுடன் உள்ளது. எனவே, தனியாக இன்னொரு மயானம் அமைக்கத் தேவை எழவில்லை.*

**100—**

**வக்ஃப் வாரிய சொத்துக்கள் மீட்பு**

**வினா எண் 13039—திரு. அ. அஸ்லம் பாஷா:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகரில் வக்ஃப் வாரியச் சொத்துகளை மீட்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகரில் வக்ஃப் வாரியச் சொத்துகளை மீட்பது தொடர்பாக வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், அவ்வழக்கு முற்றுப் பெற்ற பின் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தொடரப்படும்.*



2012 நவம்பர் 1]

## பட்டியல் 4

**1—**

**ஊக்கத் தொகை**

**வினா எண் 16174—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிறு சேமிப்புத் திட்ட முகவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை சதவீதத்தை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:**

*(அ) சிறு சேமிப்பு முகவர்களுக்கு, ஊக்கத் தொகை வழங்குவது என்பது மத்திய அரசின் கொள்கைக்குட்பட்டது. எனினும் சிறு சேமிப்பு முகவர்களின் நலனைப் பாதுகாத்திடும்பொருட்டு மத்திய அரசால் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகையை மீண்டும் தொடர்ந்து வழங்கிட மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு வலியுறுத்தி வருகிறது.*

*(ஆ) 1. சிறு சேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்கு மாநிலம் முழுவதிலும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் சிறு சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 31,620 முகவர்கள் பணிபுரிகிறார்கள். முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக, அவர்களுக்குக் கீழ்க்காணும் வீதத்தில் மத்திய அரசு மற்றும் மாநில அரசால் தரகு மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசு 1-12-2011 முதல் தரகுத் தொகை விகிதங்களைக் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது:*

| வ. எண் | முகவரமைப்பு வகை | சேமிப்புத் திட்டங்கள் | மத்திய அரசின் தரகுத் தொகை (30-11-11 வரை) | மத்திய அரசின் தரகுத் தொகை (1-12-11 முதல் | மாநில அரசால் 1-4-2011 முதல் 31-3-2012 வரை) |
|---|---|---|---|---|---|
| அ. | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | அஞ்சலக மாத வருவாய்த் திட்டம், தேசிய சேமிப்புப் பத்திரம், அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம். | 1% | 0.5% | 0.5% |
| ஆ. | மகளிர் முகவர் திட்டம் (தொடர் வைப்புத் திட்டம்) | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 4% | 4% | 2% |
| இ. | பொது வருங்கால வைப்பு நிதி முகவர் திட்டம் | பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் | 1% | இல்லை | இல்லை |
| ஈ. | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (நிலை முகவர்கள்) | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | 0.5% | இல்லை | இல்லை |

*2. 1-12-2011 முதல், மாநில அரசுகள் முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்கு, மத்திய அரசு கட்டுப்பாடுகள் நிர்ணயித்திருந்தாலும், 31-3-2012 வரை ஊக்கத் தொகையை தொடர்ந்து வழங்கிட அரசு கடித எண் 65219/நிதி (சிறு சேமிப்பு), 2011, நாள் 20-01-2012 மூலம் உத்தரவிட்டுள்ளது. இருப்பினும், 1-4-2012 முதல், சிறு சேமிப்பு முகவர்களின் நலனைப் பாதுகாத்திடும் பொருட்டு மத்திய அரசால் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகையை மீண்டும் தொடர்ந்து வழங்கிட கடித எண் 65219/நிதி (சிறுசேமிப்பு), 2011, நாள் 12-4-2012 மூலம் மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.*

*3. மைய அரசு அக்கருத்துருவை ஏற்று, உரிய பதில் வழங்கும் பட்சத்தில் சிறு சேமிப்பு முகவர்களுக்கு தொடர்ந்து 1-4-2012 முதல் ஊக்கத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**2—**

## பட்டா

**வினா எண் 9950—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*





*திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கல்லூரணி கிராமம், மடத்தூர் குக்கிராமத்தில் அரசு கட்டிக் கொடுத்த வீட்டில் குடியிருந்துவரும் அருந்ததியர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கல்லூரணி கிராமம், மடத்தூரில் அரசு கட்டிக் கொடுத்த தொகுப்பு வீடுகளில் வசித்துவரும் 20 அருந்ததியர்களின் வீடுகள் அமைந்துள்ள நிலமானது திரு. சுப்பையா நாடார் குமாரர் வைத்தியலிங்க நாடார் என்பவர் அரசுக்கு நன்கொடையாக வழங்கிய நிலமாகும். பாவூர்சத்திரம் சார்பதிவாளர் ஆவண எண் 1459, நாள் 15-11-1985இன்படி பாவூர்சத்திரம் ஊராட்சி ஆணையாளர் (திட்டம்) பெயரில் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலமானது ஆதி திராவிடர் நலத் துறை மூலம் நில எடுப்பு செய்யப்படாத காரணத்தால் தென்காசி வருவாய் வட்டாட்சியர்மூலம் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**3—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 3843—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், கூட்டப்புளி சுனாமி நகருக்குக் குடிநீர் வழங்கிட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், லெவிஞ்சுபுரம் ஊராட்சியைச் சார்ந்த கூட்டப்புளி சுனாமி குடியிருப்பின் மக்கட்தொகையான 900-க்கு ஏற்றவாறு 2005-06-ம் ஆண்டு ரூ.5.88*

*இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, நீரேற்று குழாய் மற்றும் பகிர்மானக் குழாய் அமைக்கப்பட்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட 113 கடலோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் தற்போது தாமிரபரணி ஆற்று நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, கூட்டப்புளி சுனாமி குடியிருப்பிற்கு தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வாரிய விதிமுறைகளின்படி சாத்தியக்கூறுகள் இல்லை.*

**4—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 3845—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம் ஊராட்சி, ஈத்தன்காடு குடியிருப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், லெவிஞ்சுபுரம் ஊராட்சியைச் சார்ந்த ஈத்தன்காடு குடியிருப்பின் மக்கட்தொகை 2006 மறு ஆய்வின்படி 435 ஆகும். இக்குடியிருப்பின் மக்கட்தொகைக்கேற்ப 2004 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட ஆழ்துளைக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம்மூலம் முழு அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர, சுனாமியால் பாதிக்கப்பட்ட 113 கடலோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தாமிரபரணி ஆற்று நீரும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஈத்தன்காடு குடியிருப்புக்கு வாரிய விதிமுறைகளின்படி கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் சாத்தியகூறுகள் இல்லை.*



**5—**

## பணி நிரந்தரம்

**வினா எண் 6501—திரு. ந. நஞ்சப்பன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஊராட்சி ஒன்றிய நிருவாகத்தின்கீழ் பல ஆண்டுகளாக தினசரி ஊதிய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*அரசாணை (நிலை) எண் 22, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, நாள் 28-2-2006-ல் அரசுத் துறைகளில் பணிபுரியும் தினக்கூலிப் பணியாளர்களில், 1-1-2006 அன்று 10 ஆண்டுகள் பணி முடித்திருப்பின் அவர்களின் பணியினை வரன்முறை செய்திட ஆணை வெளியிடப்பட்டது.*

*இவ்வாணையில் அளிக்கப்பட்ட சலுகையினை ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தி 1-1-2006 அன்று பத்து ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் பணிமுடித்த ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து தினக்கூலி அடிப்படையில் ஊதியம் பெற்று பணிபுரியும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்து அரசாணை (நிலை) எண் 50, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ7) துறை, நாள் 26-8-2011-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.*

**6—**

## குடிநீர் வசதி

**வினா எண் 8515—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலைப் பகுதியில் சீரான குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1994 ஆம் ஆண்டு முதல் ஊத்துமலைப் பகுதிக்கு சங்கரன்கோவில்-ஆலங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியின் வாயிலாக தனி மின் இறைப்பான்மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி 3 எண்ணம், 60,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1 எண்ணம் மற்றும் இரண்டு பொது நல்லிகள் இவைகளின்மூலம், குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இப்பகுதிக்கு வரையறுக்கப்பட்ட அளவான 2,10,000 லிட்டர் தினமும் சீராக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், குடிநீர் தேவையினை அதிகரிக்கும் விதமாக தற்போது புதிய சங்கரன்கோவில்-ஆலங்குளம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மூலம் குடிநீர் வழங்கிட வழிவகை செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. மதிப்பீடு ஒப்புதல்பெற்று திட்டம் செயலுக்கு வரும்பொழுது ஊத்துமலை பகுதிக்கு மேலும் கூடுதலாக குடிநீர் வசதி பெற வாய்ப்பு உள்ளது.

**7—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10089—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புல்வயல் ஊராட்சி, லத்தினம்பட்டி கிராமத்தில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், புல்வயல் ஊராட்சி, லத்தினம்பட்டி குடியிருப்பில் (மறு ஆய்வின்படி தெத்தினாம்பட்டி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) மக்கட் தொகைக்கேற்ப 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு முழு அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்பிற்கு வாரிய ஊரகக் குடிநீர்த் திட்ட விதிமுறைகளின்படி, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.



2012 நவம்பர் 1]

**8—**

## நிலம்

**வினா எண் 9830—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்தாமல் நிறுத்தி வைத்துள்ள 1650 ஏக்கர் நிலம் திரும்ப நில உரிமையாளர்களுக்கே ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை பேரூராட்சியில் செம்பரம்பாக்கம், குத்தம்பாக்கம், வெள்ளவேடு, நரசிங்கபுரம் மற்றும் பர்வதராஜபுரம் கிராமங்களில் வீட்டு வசதி வாரிய திட்டங்களுக்காக 1694.98 ஏக்கர் நிலங்கள் தேர்வு செய்யப்பட்டன. இதில் 466.49 ஏக்கர் நிலங்கள் மற்றும் அணுகு சாலைக்கான 12.87 ஏக்கர் பட்டா நிலங்கள் தவிர மற்ற நிலங்களுக்கான நில எடுப்பு நடவடிக்கைகள் கைவிடப்பட்டுவிட்டன. கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் வாரியத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**9—**

## போக்குவரத்துக் காட்சிக் கூடம்

**வினா எண் 11412—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 1

*(அ) பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்திலுள்ள போக்குவரத்துக் காட்சிக் கூடம் மற்றும் நுண்ணறிவியல் தொழில்நுட்பக் காட்சித் கூடத்தை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் போக்குவரத்துக் காட்சிக் கூடத்தை மேம்படுத்த ரூ.15.00 இலட்சமும், நுண்ணறிவியல் காட்சிக்கூடத்தைப் புதிதாக அமைக்க ரூ.16.00 இலட்சமும் 2010-2011 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டன. இத்திட்டத்தின் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இக்காட்சிக் கூடங்கள் பொதுமக்களின் பார்வைக்கு விரைவில் திறக்கப்படவுள்ளன.*

**10—**

## கண்காட்சிக் கூடம்

**வினா எண் 11415—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இந்திய படைபல ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு கண்காட்சிக் கூடம் நிறுவப்பட்டு வருகிறதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) நாட்டின் படைபலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் தொழில்நுட்ப மேம்பாடுகளை பொதுமக்கள் அறியும்பொருட்டு, மத்திய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின்* (Defence Research and Development Organization) *நிதியுதவியுடன் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில், பெரியார்*



2012 நவம்பர் 1]

*அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் காட்சிக் கூடம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. இக்காட்சிக் கூடம் பொதுமக்களின் பார்வைக்கு 2012 ஆம் ஆண்டு இறுதிக்குள் திறக்கப்படவுள்ளது.*

**11—**

## கணித கண்காட்சிக் கூடம்

**வினா எண் 11416—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இராமானுஜம் கணித கண்காட்சிக் கூடம் நிறுவப்பட்டு வருகிறதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) சென்னையில் உள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் கணிதமேதை இராமானுஜம் கணித கண்காட்சிக் கூடம் நிறுவுவதற்காக, மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால், ரூ.40.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இக்காட்சிக்கூடத்தில் காட்சிப் பொருட்கள் நிர்மாணிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தக் காட்சிக் கூடம் பொதுமக்களின் பார்வைக்கு விரைவில் திறக்கப்படவுள்ளது.*

**12—**

## காட்சிப் பொருட்கள்

**வினா எண் 11417—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கணிதத்தைப் பற்றிய காட்சிப் பொருட்கள் பேருந்தில் அமைக்கப்பட்டு வருகின்றனவா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஊரகப் பகுதிகளில் உள்ள மாணவச் சமுதாயத்தினரிடையே கணிதத்தின் மீதுள்ள அச்சத்தினைப் போக்கும் வகையில், மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் நடமாடும் பேருந்து ஒன்றில், 24 காட்சிப் பொருட்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இந்த கணிதப் பேருந்து விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**13—**

## மண்டல அறிவியல் மையம்

**வினா எண் 11454—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் மண்டல அறிவியல் மையம் விரைவில் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் நகரில், ரூ.850.00 இலட்சம் மதிப்பீட்டில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் சம பங்களிப்புடன் நான்கு அறிவியல் காட்சிக் கூடங்கள், முப்பரிமாண அரங்கம் மற்றும் 42,000 சதுர அடியில் அறிவியல் பூங்கா ஆகியவை உள்ளிட்ட மண்டல அறிவியல் மையம் நிறுவப்பட்டு வருகிறது. இவ்வறிவியல் மையம் விரைவில் பொதுமக்களின் பார்வைக்கு திறக்கப்படவுள்ளது.



2012 நவம்பர் 1]

**14—**

## அறைகலன்கள்

**வினா எண் 11470—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிக்கு போதுமான அறைகலன்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிக்கு போதுமான அறைகலன்கள் கொள்முதல் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 2010-2011 ஆம் கல்வியாண்டில், தருமபுரியில் புதிதாக துவக்கப்பட்ட அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் முதலாமாண்டிற்கு (2010-2011) அறைகலன்கள் கொள்முதல் செய்வதற்கு, அரசாணை (நிலை) எண் 360, உயர் கல்வித் துறை, நாள் 9-11-2010இன்படி, ரூ.15,33,500/- ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், இரண்டாமாண்டிற்கு (2011-2012) அறைக்கலன்கள் கொள்முதல் செய்வதற்கு, அரசாணை (நிலை) எண் 237, உயர் கல்வித் துறை, நாள் 25-1-2011இன்மூலம் ரூ.34,04,500/- ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து தருமபுரி அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரிக்கு முதலாம் மற்றும் இரண்டாமாண்டிற்குத் தேவையான அறைகலன்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**15—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 4578—திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலம் ஒன்றியத்தில், காந்திபுரம் 1, காளப்பநாயக்கன்பட்டி-3, கல்குறிச்சி, வளையப்பட்டி,

*சோளக்காடு, மேளப்பட்டி, காளப்ப நாயக்கன்பட்டி—1, பகுதிகளில் நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலம் ஒன்றியத்தில், காந்திபுரம் 1, காளப்பநாயக்கன்பட்டி-3, கல்குறிச்சி, வளையப்பட்டி, சோளக்காடு, மேளப்பட்டி காளப்பநாயக்கன்பட்டி-1, பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட தேவையான இடமோ, நிதி வசதியோ அந்நியாயவிலைக் கடைகளை நடத்தும் இணைப்புச் சங்கங்களுக்கு இல்லாததால் மேற்கண்ட நியாய விலைக் கடைகளுக்கு சொந்த கட்டடம் கட்ட வழி வகை இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்தால் சில சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் ஏற்பட வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.*

**16—**

## நியாய விலைக் கடைக்கு கட்டட வசதி

**வினா எண் 12416—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் பேரூராட்சி, செங்கப்பட்டியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கவும், கோத்திரப்பட்டி ஊராட்சி மேலக்கோத்திரப்பட்டி நியாய விலை கடைக்குக் கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதிக்குட்பட்ட அன்னவாசல் பேரூராட்சியில் புதுக்கோட்டை நகரக் கூட்டுறவுப் பண்டக சாலைக் கட்டுபாட்டில் செயல்படும்* HPO *18 அன்னவாசல்* II *முழுநேர அங்காடி தற்போது 995 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அரசாணை எண் 147, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை (எப்-1) நாள் 24-8-2008இல் வகுத்தமைக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி செங்கப்பட்டிக்கும் அன்னவாசல்* II *தாய் அங்காடிக்கும் இடையே 1 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. மேற்கண்ட அரசாணை நெறிமுறைகள் பூர்த்தியாகாத நிலையில் செங்கப்பட்டியில் புதிய பகுதி நேர அங்காடி அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.*

*புதுக்கோட்டை மாவட்டம், மலைக்குடிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் நடத்தும்* HP112P1 *மேலக்கோத்திரப்பட்டி பகுதி நேர நியாய விலைக் கடை 185 குடும்ப அட்டைகளுடன் தற்போது வாடகை இல்லா இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்கு ஏற்ற சொந்த இடமோ நிதி வசதியோ கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது இல்லை. எனவே, மேலக்கோத்திரப்பட்டி பகுதிநேர அங்காடிக்கு கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை.*

**17—**

## பகுதிநேர நியாய விலைக் கடைகள்

**வினா எண் 11333—திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருமங்கலம் தொகுதி, ட்டி. கல்லுப்பட்டி ஒன்றியம், பாப்பையாபுரம் கிராம நியாய விலைக் கடையை பிரித்து எல். அரசப்பட்டியிலும், சாவிச் சந்தை, கிராம நியாய விலைக் கடையைப் பிரித்து பி. ஆண்டிப்பட்டியிலும் பகுதி நேர நியாய விலைக் கடைகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, ட்டி.கல்லுப்பட்டி ஒன்றியம், பாப்பையாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கடடுப்பாட்டில் 512 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் பாப்பையாபுரம் நியாய விலைக் கடையுடன் 2 கி.மீ. தூரத்திலுள்ள அரசப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. கல்லுப்பட்டி ஒன்றியம், பேரையூர் கூட்டுறவு விற்பனைச் சங்கக் கட்டுப்பாட்டில் 583 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வரும் சாவிச் சந்தை நியாய விலைக் கடையுடன் பி. ஆண்டிப்பட்டி கிராமத்தில் 151 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. புதிய பகுதி நேரக் கடை திறக்கப்பட்ட பின்பு தாய்க்கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்கிற அரசு நிபந்தனை மேற்கண்ட இரண்டு கிராமங்களிலும் பூர்த்தியாகாததாலும் அரசின் நிபந்தனைகளுக்கு விலக்கு அளித்து அரசாணை பெற்று எல். அரசப்பட்டி மற்றும் பி. ஆண்டிப்பட்டி கிராமங்களில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனினும், தற்போது மேற்கண்ட கிராம மக்கள் தத்தம் தாய் நியாய விலைக் கடைகளில் அனைத்து அத்தியாவசியப் பொருட்களை தடையின்றிப் பெற்று வருகின்றனர்.*

**18—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 12188—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், செங்கப்பட்டி மற்றும் திருநல்லூர் ஊராட்சி, நாச்சிகுறிச்சி ஆகிய பகுதிகளில் பகுதி நேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதிக்குட்பட்ட அன்னவாசல் பேரூராட்சியில் புதுக்கோட்டை நகரக் கூட்டுறவுப் பண்டக சாலைக் கட்டுபாட்டில் செயல்படும் HPO 18 அன்னவாசல் 2 முழுநேர அங்காடி தற்போது 995 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் செங்கப்பட்டியைச் சேர்ந்த 160 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. செங்கப்பட்டி பகுதிக்கும், அன்னவாசல் 2 தாய் அங்காடிக்கும் இடைப்பட்ட தூரம் 10 கி.மீ. மட்டுமே உள்ளதால் அரசாணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனை முழுவதுமாகப் பூர்த்தியாகாத நிலையில் செங்கப்பட்டியில் புதிய பகுதி நேர அங்காடி அமைத்திட இயலாது.*



2012 நவம்பர் 1]

*விராலிமலை தொகுதிக்குட்பட்ட அன்னவாசல் ஒன்றியத்தில் வேலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டுப்பாட்டில் செயல்படும் HP118 திருநல்லூர் முழு நேர அங்காடி தற்போது 557 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் நாச்சிகுறிச்சியைச் சேர்ந்த 74 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. எனவே நாச்சிகுறிச்சியில் 74 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், மேலும் உத்தேசிக்கப்பட்ட பகுதிநேரக் கடை பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்கின்ற நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், நாச்சிகுறிச்சிப் பகுதியில் புதிய பகுதி நேர அங்காடி அமைத்திட இயலாது.*

**19—**

## ஆக்கிரமிப்புகள்

**வினா எண் 3062—முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் வட்டம், அம்மங்குடி பாசன வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*அம்மங்குடி வாய்க்காலானது கும்பகோணம் வட்டம், மாங்குடி கிராமத்தில் கீர்த்திமன்னாறு வலதுகரை மைல் 64/7-0-ல் பிரிகிறது. இதன் நீளம் 5.0 கி.மீ. இதன்மூலம்*

[2012 நவம்பர் 1

*382.85 ஏக்கர் பாசன நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இவ்வாய்க்காலில் நீரோட்டத்திற்கும் மற்றும் கரைகளில் போக்குவரத்திற்கும் இடையூறாக இருந்த செடி கொடிகள் அகற்றப்பட்டு இந்த ஆண்டு பாசனத்திற்குத் தேவையான தண்ணீர் முழுமையாக வழங்கப்பட்டு வருகிறது.*

**20—**

## தூர்வாருதல்

**வினா எண் 3068—திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, B1 பாப்பான் ஓடை வாய்க்கால் A4 முடவன் வாய்க்கால் ஆகியவற்றைத் தூர்வார அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புதுமண்ணியாற்றின் பிரிவு A4—முடவன் வாய்க்காலாகும். இதன் பிரிவு B1-பாப்பான் ஓடை வாய்க்காலாகும். மேற்காணும் வாய்க்கால்களை வரும் 2012—2013 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் பராமரிப்பு நிதியில் தூர் வாரிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**21—**

## புனரமைத்தல்

**வினா எண் 9332—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், கீழ் அணைக்கட்டிலுள்ள தெற்கு மற்றும் வடக்கு கிளை நீர்போக்கியைப் புனரமைப்பு* (Grouting) *கிரௌட்டிங் பணியின் தற்போதைய நிலை என்ன?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், கீழ் அணைக்கட்டுகளான தெற்கு மற்றும் வடக்கு கிளை நீர்போக்கிப் புனரமைப்புப்* (Grouting) *பணி அனைத்தும் முடிக்கப்பட்டுவிட்டது.*

**22—**

## வரத்துக் கால்வாய்

**வினா எண் 9337—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிருஷ்ணகிரி மாவட்டம், படதலேவ் கண்மாய் முதல் வெண்ணாம்பள்ளிவரை நபார்டு கடன் உதவித் திட்டத்தில் வரத்துக் கால்வாய் அமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*கிருஷ்ணகிரி மாவட்டம், படதலேவ் கண்மாய் முதல் வெண்ணாம்பள்ளி வரை வரத்துக் கால்வாய் அமைக்கும் பணி முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளது. தற்போது பாலம் கட்டும் பணி 90% முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.*

**23—**

## கடலரிப்புத் தடுப்புச் சுவர்

**வினா எண் 9370—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கல்லாறு கிராமத்தில் கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம், கல்லாறு கிராமத்தில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் (700 மீட்டர் நீளம்+3.66 மீட்டர் வரை) கட்டுவதற்கு அரசாணை நிலை எண் 269, பொதுப் பணித் துறை நாள் 16-12-2011-ல் ரூ.364.90 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அப்பணிக்கான மதிப்பீட்டுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன் பணி செயல்படுத்தப்படும்.*

**24—**

**படித்துறை**

**வினா எண் 9969—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கடத்தூர் ஊராட்சி, கடத்தூர் பெரிய வாய்க்கால் பகுதியில் படித்துறை கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம், எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கடத்தூர் ஊராட்சி, கடத்தூர் பழைய வாய்க்கால் பகுதியில் பொது உபயோகத்திற்காக படித்துறையை வரும் நிதியாண்டில் (2012—2013 ஆம் ஆண்டில்) பராமரிப்பு நிதியின்மூலம் கட்டித்தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**25—**

**கலா மண்டபம்**

**வினா எண் 13477—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, அமராவதி அணைப் பகுதியில் கலாமண்டபம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, அமராவதி அணைப் பகுதியில் பொதுப் பணித் துறைமூலம் கலா மண்டபம் கட்டும் திட்டம் தற்போது ஏதுமில்லை.*

**26—**

**தீவன அபிவிருத்தி**

**வினா எண் 10457—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் மேய்ச்சல் நிலத்தில் தீவன அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி கோட்டம், திருமயம் தாலுகா, மேலூர் கிராமத்தில் மேய்க்கால் புறம்போக்கு நிலமான 10 ஏக்கரில் தீவனப் பயிர் விதைகள் விதைப்பு மேற்கொள்ளப்பட்டது. மழையின்மைக் காரணமாக விதைகள் சரிவர முளைக்காத காரணத்தால் மாற்று நிலம் அறந்தாங்கி கோட்டம், ஆவுடையார்கோவில் தாலுகா, பொன்பேத்தி பஞ்சாயத்து, சித்திரைவிடங்கன் கிராமம் தேர்வு செய்யப்பட்டு மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. வரும் மழைக்காலத்தில் திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

[2012 நவம்பர் 1

**27—**

## வெள்ளாடுகள்

**வினா எண் 10473—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தேசிய புரதச் சத்துப் பெருக்க இயக்கத்தின்கீழ் 60 பயனாளிகளுக்கு தலா 100 வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வெள்ளாடுகள் வளர்ப்பினை மேம்படுத்தி அதன்மூலம் விலங்கின புரதத்தை அதிகரிக்கும் திட்டத்தின்கீழ் அதிக வெள்ளாட்டு உற்பத்தியை விருத்தி செய்யும் வண்ணம் ரூ.160 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒரு மாவட்டத்தில் 4 சுய உதவிக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவில் உள்ள 9 நபர்களுக்கு 10 வெள்ளாடுகள், தீவனம், கொட்டகை, காப்பீடு உபகரணங்கள் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டு, வெள்ளாடு வளர்ப்பின்மூலம் வாழ்க்கைத் தரம் உயர வழிவகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

**28—**

## ஆட்டினங்கள்

**வினா எண் 10469—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் சென்னை சிவப்பு மேச்சேரி, வெம்பூர், சேலம் கருப்பு, கொடி ஆடு, கன்னி ஆடு ஆகிய ஆட்டு இனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது அரசுப் பண்ணைகளில் சென்னை சிவப்பு, மேச்சேரி, வெம்பூர், கொடி ஆடு, கன்னி ஆடு ஆகிய இனங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும்பொருட்டு, தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.385.03 இலட்சம் செலவில் கூடுதல் ஆடுகள் வாங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**29—**

## கலப்பின ஆடுகள்

**வினா எண் 10470—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பிற மாநில ஆடுகளை தமிழ்நாட்டில் தருவித்து கலப்பின ஆடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்பொழுது இருப்பில் உள்ள எண்ணிக்கையினை அதிகரிக்கும்பொருட்டு, தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பிற மாநில ஆடுகள் இனப்பெருக்கத்திற்காக வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**30—**

## கருப்பு இன வெள்ளாடு

**வினா எண் 10474—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

*தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின்கீழ் சேலம் கருப்பு இன வெள்ளாட்டுப் பிரிவு அமைக்கும் பணியின் தற்போதைய நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் நவீன முறையில் சேலம் கருப்பு இன வெள்ளாட்டுப் பிரிவு அமைத்தல் மற்றும் இலாபகரமான ஆடு வளர்ப்பிற்கு தீவனத் தேவையைக் கண்டறிதல் திட்டம், நவம்பர் 2011 முதல் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படும் மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

**31—**

## ஆட்டுப் பண்ணை

**வினா எண் 10476—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 525 செம்மறியாடுகளைக் கொண்டு முகுந்தராயபுரம் ஆட்டுப் பண்ணையைச் சீரமைப்பு செய்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்குத் தரமான ஆடுகள் மற்றும் தீவன விதைகள் புல் கரணைகள் போன்றவற்றை வழங்கும்பொருட்டு முகுந்தராயபுரத்தில் உள்ள ஆட்டுப் பண்ணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 525 ஆடுகள் மற்றும் 85 ஏக்கர் நிலப்பரப்பில் தீவனப் பயிர் உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொட்டகைகள் சீரமைப்புப் பணி, தீவன விதைகள், உரம் வாங்குதல், பண்ணைக்குளம் கட்டுதல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.*



2012 நவம்பர் 1]

**32—**

## கால்நடை முகாம்கள்

**வினா எண் 10502—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் முகாம்கள் நடத்த அரசிடம் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அனைத்து மாவட்டங்களிலும் நடத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடப்பாண்டில் நடைபெற்று வருகின்றன.*

*(ஆ) கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

**33—**

## பேருந்து வசதி

**வினா எண் 1057—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை—நாங்குநேரி பகுதியிலுள்ள நந்தன்குளம் சந்திப்பு பகுதியில், அவ்வழியாக திருநெல்வேலி, வள்ளியூர், திருச்செந்தூர், நாகர்கோவில் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திசையன்விளை—நாங்குநேரி பிரதான சாலையில் உள்ள ஆர்.சி. நந்தன்குளம் விலக்கில், அவ்வழியாக இயக்கப்படும் திருநெல்வேலி கோட்டத்தைச் சார்ந்த அனைத்துப் பேருந்துகளும் (சென்னை பேருந்து தவிர) நின்று பயணிகளை ஏற்றி/இறக்கிச் செல்வதற்கு, ஏற்கெனவே உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, மேற்படி இடத்தில் தற்போது பேருந்துகள் நின்று செல்கின்றன.

**34—**

## பேருந்து வசதி

**வினா எண் 1187—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, பரமணி, கொக்கலாடி, பண்ணத்தெரு, மணலி வழியாக திருத்துறைப்பூண்டிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் பண்ணத்தெரு—கொக்கலாடி, 2 கி.மீ. தடப்பகுதி பேருந்து இயக்க இயலாத அளவிற்கு சாலை பழுது ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படி வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

**35—**

## பேருந்து வசதி

**வினா எண் 1936—திரு. ஆர். சாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2012 நவம்பர் 1]

மேலூர் தொகுதி, மேலூரிலிருந்து சாவரப்பட்டி, உசிலம்பட்டி, கம்பாளிபட்டி, நெல்லுக்குண்டுப்பட்டி, நாட்டார்மங்கலம் வழியாக சிங்கம்புணரிவரை தினமும் பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மேலூர், சிங்கம்புணரி (வழி) சாவரப்பட்டி, உசிலம்பட்டி, கம்பாளிபட்டி, நெல்லுக்குண்டுப்பட்டி, நாட்டார்மங்கலம் வழித்தடத்தில், தற்போது தினசரி 8 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. இந்த நடைகளின் பயணிகள் அடர்வு மிகக் குறைவாகவே உள்ளது. மேற்படி பேருந்து வசதியே போதுமானதாகும்.

**36—**

## பேருந்து வசதி

**வினா எண் 3033—திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியம், எழுமலையில் இருந்து திருப்பூர், கோயம்புத்தூர் ஆகிய ஊர்களுக்கு வத்தலக்குண்டு, செம்பட்டி வழியாக பேருந்து வசதி ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எழுமலை—திருப்பூர்/கோயம்புத்தூர் வழி வத்தலக்குண்டு—செம்பட்டி தடத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் பகுதி பகுதியாக போதுமான அளவில் பேருந்து வசதிகள் உள்ளன. எழுமலையிலிருந்து நேரடியாக திருப்பூர் மற்றும் கோவைக்கு தனிப் பேருந்துகள் இயக்குமளவிற்கு பயணிகள்

[2012 நவம்பர் 1

அடர்வு இல்லை. எனவே, எழுமலையிலிருந்து மேற்படி இடங்களுக்குச் செல்ல தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானவை.

**37—**

## பேருந்து வசதி

**வினா எண் 3544—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணியில் போக்குவரத்தே இல்லாத பகுதிகளுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி பணிமனையில் இருந்து 27 நகரப் பேருந்துகள்மூலம் 74 வழித்தடங்களில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. ஆரணியில் எல்லா பகுதிகளுக்கும் போதுமான பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.*

**38—**

## பேருந்து வசதி

**வினா எண் 3549—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணியிலிருந்து இரும்பேடு, மைனந்தல், மட்டதாரி, ஆயிரம்மங்கலம், பெண்ணகர் வழியாக கலவைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி—ஆயிரம்மங்கலம் (வழி) இரும்பேடு, மைனந்தல், மட்டதாரி என தினசரி 2 நடைகளும் ஆரணி—கலவை (வழி) ச.வி.நகரம், மட்டதாரி, ஆயிரம்மங்கலம், செங்கனாவரம், பெண்ணகர் என தினசரி 4 நடைகளும், ஆரணி—கலவை (வழி) ச.வி.நகரம், பனையூர், செங்கனாவரம், பெண்ணகர் என தினசரி 6 நடைகளும் இயக்கப்பட்டு பகுதி, பகுதியாக பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள போக்குவரத்து வசதியே பொதுமக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் உள்ளது. எனவே, மேற்படி புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் இல்லை.*

**39—**

## பேருந்து வசதி

**வினா எண் 3550—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணியிலிருந்து ஆற்காடு வழியாக வள்ளிமலை முருகன்கோயில், பொன்னை விநாயகபுரம், சுயம்பு விநாயகர், நவக்கிரகக்கோயில் மற்றும் தொங்கால் மௌனகுரு ஆசிரமம் ஆகியவற்றிற்கு தினந்தோறும் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி—ஆற்காடு (வழி) திமிரி 5 நிமிட இடைவெளியில் பேருந்து வசதியும் ஆற்காடு—தொங்கால் மௌனகுரு ஆசிரமம், நவக்கிரகக்கோயில் செல்ல போதுமான பேருந்து வசதியும் உள்ளது. தற்போதுள்ள போக்குவரத்து வசதியே*

[2012 நவம்பர் 1

*பொதுமக்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளதால், மேற்படி வழித்தடத்தில் தினந்தோறும் ஒரு பேருந்து இயக்கும் திட்டம் இல்லை.*

**40—**

## பேருந்து வசதி

**வினா எண் 3552—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணியிலிருந்து சேத்துப்பட்டு, தேசூர், தெள்ளார், திண்டிவனம் வழியாக திருச்சி (ம) பாண்டிச்சேரிக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி—திருச்சி (வழி) சேத்துப்பட்டு, தெள்ளார், திண்டிவனம், விழுப்புரம் தடத்தின் நீளம் 277.0 கி.மீ. ஆகும். 250 கி.மீ.—க்கு மேல் தடநீளமுள்ள தடங்கள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமே இயக்கப்பட்டு வருகின்றன.*

*ஆரணி—புதுச்சேரி (வழி) சேத்துப்பட்டு, தெள்ளார், திண்டிவனம் தடத்தின் நீளம் 118.0 கி.மீ. ஆகும். இது ஒரு அண்டை மாநில வழித்தடமாகும். இருப்பினும், ஆரணி வழியாக புதுச்சேரிக்கு 4 அரசுப் பேருந்துகள்மூலம் தினசரி 8 நடைகளும் 1 தனியார் பேருந்துமூலம் 2 நடைகளும் இயக்கப்பட்டு போதுமான அளவு பேருந்து வசதி பெற்றுள்ளது.*

**41—**

## பேருந்து வசதி

**வினா எண் 4233—திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*(அ) உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியம், எழுமலையிலிருந்து கோடநாயக்கன்பட்டி, தாடையாம்பட்டி, சின்னக்கட்டளை, பெரியகட்டளை வழியாக பேரையூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எழுமலை—பேரையூர் (வழி) கோடநாயக்கன்பட்டி, தாடையாம்பட்டி, சின்னக்கட்டளை, பெரிய கட்டளை தடத்தின் தூரம் 40.4 கி.மீ. ஆகும். இது நகரப் பேருந்து இயக்க வரையறுக்கப்பட்ட தூரத்தைவிட அதிகமாக உள்ளதால், இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது. இது சுற்று வழித்தடமாகும். இருப்பினும் எழுமலை—பேரையூர் தடத்தில் வெவ்வேறு வழியாக 38 தனி நடைகள் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.*

**42—**

## பேருந்து வசதி

**வினா எண் 4271—திரு. க. பீம்ராவ்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரவாயல், முகப்பேர் கிழக்கு பேருந்து நிலையத்திலிருந்து வண்டலூர், கோயம்பேடு, கோவளம் மற்றும் திருவள்ளூர் பகுதிகளுக்கு பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஜெ.ஜெ. நகர் (கிழக்கு) பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள சென்னை புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து வண்டலூர், கோவளம் மற்றும் திருவள்ளூர் பகுதிகளுக்கு போதிய அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அவற்றினைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.*

[2012 நவம்பர் 1

**43—**

## பேருந்து வசதி

**வினா எண் 4273—திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி-தேவர்ஓடைக்கு தினசரி 4 முறை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோரிக்கை தடத்தில் காலை தடம் எண்* 224D *மூலம் 2 நடைகளும், மாலையில் தடம் எண் ஏ17 மூலம் 2 நடைகளும் என மொத்தம் 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே, இவ்வழித்தட மக்களுக்கும் போதுமானதாக உள்ளது.*

**44—**

## பேருந்து வசதி

**வினா எண் 4275—திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியிலிருந்து நாங்கூர் வழியாக தென்னாம்பட்டினம், கீழமூவர்கரை வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழியிலிருந்து ஏ-16 நகரப் பேருந்து, நாங்கூர், மங்கைமடம், தென்னாம்பட்டினம் வழியாக கீழமூவர்கரைக்கு தற்சமயம்* TN-*46/1354 என்ற பேருந்து நல்ல நிலையில் பொலிவுடன் இயக்கப்பட்டு வருகின்றது.*



2012 நவம்பர் 1]

**45—**

## பேருந்து வசதி

**வினா எண் 4329—திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, களக்காட்டிலிருந்து சவளைக்காரன் குளம், கோவில் அம்மாள்புரம், புளியங்குளம் வடுக்கச்சிமதில், கோதைசேரி மற்றும் வள்ளியூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) களக்காட்டிலிருந்து சவளைக்காரன் குளம், கோவில் அம்மாள்புரம், புளியங்குளம், வடுக்கச்சிமதில், கோதைசேரி மற்றும் வள்ளியூருக்கு கீழ்க்கண்டவாறு போதிய போக்குவரத்து வசதிகள் உள்ளன:*

*1. சவளைக்காரன் குளம்-ஒரு நகரப் பேருந்துமூலம் களக்காடு சென்று வர நாளொன்றுக்கு 6 சுற்றுகள்.*

*2. கோவிலம்மாள்புரம்-(அ) களக்காடு சென்று வர தினசரி 6 சுற்றுகள் (நகரப் பேருந்து)*

*(ஆ) 2 மினி பேருந்துகள்மூலம் களக்காடு மற்றும் ஏர்வாடி சென்று வர 20-க்கும் மேற்பட்ட சுற்றுகள்.*

*3. புளியங்குளம்-களக்காடு மற்றும் ஏர்வாடி சென்று வர 2 மினி பேருந்துகள்மூலம் 20-க்கும் மேற்பட்ட சுற்றுகள்.*

*4. வடுக்கச்சிமதில் மற்றும் கோதைசேரி-(அ) களக்காடு மற்றும் ஏர்வாடி சென்று வர 2 மினி பேருந்துகள்மூலம் 20-க்கும் மேற்பட்ட சுற்றுகள்.*

*(ஆ) வள்ளியூர் மற்றும் களக்காடு சென்று வர ஒரு புறநகரப் பேருந்துமூலம் 4 சுற்றுகள்.*

*மேலும், கோவிலம்மாள்புரம்-புளியங்குளம்-வடுக்கச்சிமதில் சாலைப் பகுதி குறுகலாக, பேருந்து இயக்க இயலாத அளவில் உள்ளது. தற்போதுள்ள போக்குவரத்து வசதிகளே போதுமானதாகும். எனவே, புதிதாக பேருந்து இயக்க அவசரத் தேவை எழவில்லை.*

**46—**

## பேருந்து வசதி

**வினா எண் 4486—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்துறைப்பூண்டி-களப்பால் ஒரத்தூர் வழியாக மன்னார்குடிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி-மன்னார்குடி (வழி) களப்பால், வேதபுரம், ஒரத்தூர் புதுவழித்தடமாகும். மேற்படி தடத்தில், திருத்துறைப்பூண்டி-வேதபுரம் (வழி) களப்பால், மன்னார்குடி-வேதபுரம்-களப்பால் மற்றும் மன்னார்குடி-ஒரத்தூர் போதியளவு பகுதி, பகுதியாக பேருந்து வசதி உள்ளது. ஒரத்தூர்-வேதபுரம் 3 கி.மீ. தடப்பகுதி பேருந்து வசதி பெறாத பகுதியாகும். ஒரத்தூர்-வேதபுரம் தடப்பகுதி பேருந்து இயக்க இயலாத நிலையில் குறுகிய சாலையாக உள்ளது. ஆகையால், மேற்படி தடத்தில் பேருந்து இயக்க இயலாது.*





**47—**

## பேருந்து வசதி

**வினா எண் 4487—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பால், வேதபுரம், ஆர்ச் வழியாக மன்னார்குடிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பால், வேதபுரம், ஆர்ச் வழியாக மன்னார்குடி வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். கோரிக்கை தடத்தின் பகுதி முழுவதும் பகுதி, பகுதியாக பேருந்து வசதி உள்ளது. மேல் குறிப்பிட்ட தடப்பகுதிகளின் பயணிகள் பயன்பாடு தற்பொழுது குறைவாகவே உள்ளது. எனவே, மேற்படி பேருந்து வசதியே போதுமானதாகும்.*

**48—**

## பேருந்து வசதி

**வினா எண் 4488—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மன்னார்குடி ஆர்ச், வேதபுரம், களப்பால் வழியாக திருத்துறைப்பூண்டிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி—திருத்துறைப்பூண்டி (வழி) ஆர்ச், வேதபுரம், களப்பால் வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். மேற்படி தடத்தின் பகுதி முழுவதும் பகுதி, பகுதியாக பேருந்து வசதி உள்ளது. மேல் குறிப்பிட்ட தடப்பகுதிகளின் பயணிகள் பயன்பாடு தற்பொழுது குறைவாகவே உள்ளது. எனவே, மேற்படி பேருந்து வசதியே போதுமானதாகும்.*

**49—**

## பேருந்து வசதி

**வினா எண் 4489—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்துறைப்பூண்டி—சென்னை செல்லும் பேருந்தை புதிதாக இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது, திருத்துறைப்பூண்டி—சென்னைக்கு நல்ல நிலையில் உள்ள 3 அல்ட்ரா டீலக்ஸ் பேருந்துகளும் மற்றும் 2 சூப்பர் டீலக்ஸ் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.*

**50—**

## பேருந்து வசதி

**வினா எண் 4544—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*(அ) மானாமதுரை தொகுதி, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம் ஒன்றியம் டி. பாப்பாங்குளம் வரை நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து டி. பாப்பாங்குளம் வழியாக தினசரி 34 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வந்தது. இது தவிர 20-8-2011 முதல் டி. பாப்பாங்குளம் வழியாக மேலும் கூடுதலாக 4 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆக மொத்தம், 38 தனி நடைகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. டி. பாப்பாங்குளம் கிராம மக்களுக்கு தற்போதைய பேருந்து வசதி போதுமானதாகும்.*

**51—**

## பேருந்து வசதி

**வினா எண் 4545—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதியில், திருப்புவனம் முதல் மாங்குடி வரை காலை, மாலை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம் வழியாக மாங்குடிக்கு தினசரி 12 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. இந்த நடைகளில், மாங்குடியிலிருந்து திருப்புவனத்திற்குச் சென்று திரும்பும் வகையில்*

[2012 நவம்பர் 1

காலை, மாலை பள்ளி நேரங்களில் பேருந்து வசதிகள் போதுமான அளவில் உள்ளன.

**52—**

## பேருந்து வசதி

**வினா எண் 5379—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி பணிமனை மூலம், திருநெல்வேலியில் இருந்து நாங்குநேரி, பரப்பாடி, மன்னார்புரம் விலக்கு, திசையன்விளை வழியாக ஆத்தங்கரை பள்ளிவாசலுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி பணிமனை மூலம், திருநெல்வேலியில் இருந்து நாங்குநேரி, பரப்பாடி, மன்னார்புரம் விலக்கு, திசையன்விளை வழியாக ஆத்தங்கரை பள்ளிவாசலுக்கு போதிய பேருந்து வசதிகள் தற்போது உள்ளதால், கூடுதல் பேருந்து இயக்க தேவை எழவில்லை.

**53—**

## பேருந்து வசதி

**வினா எண் 5381—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கோட்டத்திற்குட்பட்ட திசையன்விளை பணிமனை மூலம், திசையின்விளையில் இருந்து மன்னார்புரம் விலக்கு, மிட்டாதார்குளம், கோட்டை கருங்குளம், சமூகரெங்கபுரம், தெற்கு கள்ளிகுளம் வழியாக சென்னைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திசையன்விளையிலிருந்து மன்னார்புரம் விலக்கு, பரப்பாடி, நாங்குநேரி வழியாக சென்னைக்கு பேருந்து ஒன்று தினசரி இயக்கப்பட்டு வருகிறது. மேலும், வினாவில் கேட்டுள்ள இடைவழி ஊர்களான மிட்டாதார்குளம், கோட்டை கருங்குளம், சமூகரெங்கபுரம், தெற்கு கள்ளிகுளம் பகுதி பொதுமக்கள், வள்ளியூருக்கு வந்து அங்கிருந்து சென்னைக்குச் செல்லும்படி போதியளவு பேருந்து வசதிகள் தற்போது உள்ளன. தற்போதைய பேருந்து வசதிகளே இப்பகுதி மக்களுக்கு போதுமானவையாகும்.

**54—**

## பேருந்து வசதி

**வினா எண் 5405—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியம் கிராமத்திற்கு மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம் வழியாக கூடுதலாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம் வழியாக மேலராங்கியத்திற்கு தினசரி 6 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. இது தவிர மேலராங்கியத்திற்கு அருகில் மேலராங்கியம் பிரிவு வழியாக பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து பல்வேறு இடங்களுக்கு 48 தனி நடைகள் பேருந்துகள்

[2012 நவம்பர் 1

*இயக்கப்பட்டு வருகின்றன. மேலராங்கியத்திற்கு இயக்கப்படும் நடைகளில் பயணிகள் அடர்வு சுமாராகவே உள்ளதால் தற்போதைய பேருந்து வசதியே போதுமானதாகும்.*

**55—**

## பேருந்து வசதி

**வினா எண் 5406—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம் வழியாக, த.வலையப்பட்டி வரை ஒரு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம் வழியாக, த.வலையபட்டியிலிருந்து 500 மீட்டர் தூரத்தில் உள்ள தவக்தாரேந்தல் கிராமத்திற்கு தினசரி 6 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. சுமார் 50 வீடுகள் மட்டுமே கொண்ட த.வலையப்பட்டி கிராமத்திற்கு தற்போதைய பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.*

**56—**

## பேருந்து வசதி

**வினா எண் 5407—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், ஜாரிபுதுக்கோட்டை கிராமத்திற்கு மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து ஜாரிப்புதுக்கோட்டை கிராமத்திற்கு தினசரி 6 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. இந்த நடைகளில் பயணிகள் அடர்வு குறைவான அளவிலேயே உள்ளது. எனவே, கூடுதல் நடைகள் இயக்கத் தேவை எழவில்லை.*

**57—**

## பேருந்து வசதி

**வினா எண் 5467—திரு. சு. ரவி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் S.R. கேட்டிலிருந்து, தாலுகா அலுவலகம் ஜோதி நகர் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் S.R. கேட்டிலிருந்து தாலுகா அலுவலகம் ஜோதி நகர் தடத்தின் நீளம் 3.0 கி.மீட்டர் ஆகும். இத்தடத்தின் அனைத்துப் பகுதிகளும் அரக்கோணம் நகர எல்லைக்குள் உள்ளது. இத்தடத்தின் வழியாக காஞ்சிபுரத்திலிருந்து திருத்தணிக்கு குறுகிய இடைவெளியில் இயக்கப்படும் அனைத்து புறநகர் மற்றும் நகரப் பேருந்துகளும், தாலுகா அலுவலகம் மற்றும் ஜோதி நகரில் நிறுத்தி பயணிகளை ஏற்றி/இறக்கிச் செல்கின்றன. எனவே, அரக்கோணம் S.R. கேட்டிலிருந்து தாலுகா அலுவலகம் ஜோதி நகர் தடத்தில் தனியாகப் பேருந்து இயக்கத் தேவை எழவில்லை.*

[2012 நவம்பர் 1

**58—**

## பேருந்து வசதி

**வினா எண் 5510—திரு. மு. ராஜநாயகம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி முதல் வெட்டிவயல், நாட்டுமங்கலம் வழியாக எட்டியத்தளிக்கும், ஆவுடையார்கோவில் முதல் இரும்பாநாடு வழியாக ஏம்பலுக்கும் நகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி—எட்டியத்தளி வழித்தடத்தில் மஞ்சக்கரை விலக்கு முதல் பெருங்காடு வரை உள்ள 11.2 கி.மீ. தூரம் பேருந்து வசதி இல்லாத பகுதியாகும். புதிய வழித்தடங்கள் துவங்க அனுமதி அளிக்கும்போது, இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆவுடையார்கோவில்—ஏம்பல் (வழி) இரும்பாநாடு வழித்தடத்தை ஆய்வு செய்ததில், இரும்பாநாடு அருகில் பாலம் உடைப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், சாலை குறுகலாகவும், மோசமாகவும் உள்ளது. இவ்வழித்தடத்தில் மினி பேருந்து ஒன்று 8 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாது.*

**59—**

## பேருந்து வசதி

**வினா எண் 5522—திரு சு. ரவி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தக்கோலம்-பனப்பாக்கம் (வழி முருங்கை, சித்தூர், கணபதிபுரம், பள்ளூர், திருமால்பூர், பனப்பாக்கம்) அரக்கோணம்-*



2012 நவம்பர் 1]

*நெமிலி (வழி தக்கோலம் கூட்டுரோடு, ஆட்டுப்பாக்கம், கீழ்வெங்கட்டாபுரம்) புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தடம் எண் 107—ன்மூலம் பூந்தமல்லியிலிருந்து தக்கோலம், முருங்கை, சித்தூர், கணபதிபுரம், பள்ளூர், திருமால்பூர், பனப்பாக்கம் வரை 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம் மற்றும் அரக்கோணத்திலிருந்து தக்கோலம் கூட்டுச்சாலை, ஆட்டுப்பாக்கம், கீழ்வெங்கட்டாபுரம் நெமிலி வரை நகரத் தடம் எண் டி 89 மூலம் தினசரி 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இயக்கப்படும் நடைகள் தற்பொழுது உள்ள போக்குவரத்திற்குப் போதுமானதாகக் கருதப்படுவதால், இத்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்கத் தேவை எழவில்லை.*

**60—**

## பேருந்து வசதி

**வினா எண் 5523—திரு. சு. ரவி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம்-வளர்புரம் 3(தணிகைபோளூர், உள்ளியம்பாக்கம்) புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம்-வளர்புரம் (வழி) தணிகைபோளூர், உள்ளியம்பாக்கம் தடத்தின் நீளம் 15.0 கி.மீ. ஆகும். மேற்குறிப்பிட்ட தடத்தில் நகரத் தடங்கள் டி8 மற்றும்*

[2012 நவம்பர் 1

டி46-இன்மூலம் தினசரி 7 நடைகளும் மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் 4 நடைகளும் இயக்கப்படுகின்றன. இந்த இயக்கங்கள் தற்போதுள்ள போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

**61—**

## பேருந்து வசதி

**வினா எண் 5525—திரு. ஆர். சீனிவாசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆற்காடு தொகுதி, அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு, ஆற்காடு முதல் காவனூர் வழியாகவும் மற்றும் திமிரி முதல் காவனூர் வழியாகவும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது ஆற்காடு முதல் காவனூருக்கு* T40A *மற்றும்* T40B *ஆகிய நகரத் தடங்கள்மூலம் தினசரி 16 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதுபோல, திமிரி முதல் காவனூருக்கு* T43A *மற்றும்* T43B *ஆகிய நகரத் தடங்கள்மூலம் தினசரி 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. காவனூரிலிருந்து அடுக்கம்பாறை வழியாக வேலூருக்கு* 11B *நகரத்தடத்தின் மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, ஆற்காடு முதல் அடுக்கம்பாறைக்கும் மற்றும் திமிரி முதல் அடுக்கம்பாறைக்கும் பகுதி வாரியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.*

**62—**

## பேருந்து வசதி

**வினா எண் 6151—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், காரியாப்பட்டியிலிருந்து ஓடாத்தூர் வழியாக பழையனூர் வரை செல்லும் நகரப் பேருந்தை எஸ். வாகைக்குளம் வரை நீட்டிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரியாப்பட்டியிலிருந்து முஷ்டக்குறிச்சி, முக்குளம், அழகாபுரி என்ற நேர்வழித்தடத்தில், எஸ். வாகைக்குளத்திற்கு 2 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. காரியாப்பட்டி—பழையனூர் (வழி) ஓடாத்தூர் தடத்தில், ஓடாத்தூரிலிருந்து 2.5 கி.மீ. தூரத்தில் எஸ். வாகைக்குளம் கிராமம் அமைந்துள்ளது. மேற்படி பேருந்தினை, எஸ்.வாகைக்குளத்தைத் தொட்டுச் செல்லுமாறு இயக்கினால், தற்போதுள்ள இயக்க நேரங்களில் மாறுபடுவதுடன் பிற பயணிகளுக்குப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.*

**63—**

## பேருந்து வசதி

**வினா எண் 6152—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், எஸ். வாகைக்குளத்திற்கு, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம், பழையனூர், ஓடத்தூர் வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம், பழையனூர், ஓடத்தூர் வழியாக எஸ். வாகைக்குளம்*

[2012 நவம்பர் 1

*தடத்தின் தூரம் 40.0 கி.மீ. ஆகும். தடத்தின் தூரம் நகரப் பேருந்து இயக்க வரையறுக்கப்பட்ட தூரத்தை விட அதிகமாக உள்ளதால், இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.*

**64—**

**பேருந்து வசதி**

**வினா எண் 6156—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்புவனத்திலிருந்து மதுரை செல்லும் அனைத்து நகரப் பேருந்துகளையும் தட்டான்குளத்தில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம் மற்றும் திருப்புவனம் வழியாக இயக்கப்படும் அனைத்து நகரப் பேருந்துகளும் தட்டான்குளம் பேருந்து நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கி செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

**65—**

**பேருந்து வசதி**

**வினா எண் 6170—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பெருகவாழ்ந்தான், கன்னியாக்குறிச்சி, திருமக்கோட்டை,*



2012 நவம்பர் 1]

*மேலநத்தம், கிழக்குறிச்சி, நெம்மேலி, வடசேரி, திருமக்கோட்டை மற்றும் ஒரத்தநாடு வழியாக தஞ்சைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பெருகவாழ்ந்தான், கன்னியாக்குறிச்சி, திருமக்கோட்டை, மேலநத்தம், கிழக்குறிச்சி, நெம்மேலி, வடசேரி, திருமக்கோட்டை மற்றும் ஒரத்தநாடு வழியாக தஞ்சை செல்லும் வழித்தடம், புதுவழித்தடம் மற்றும் சுற்றுவழித்தடமாகும். மேற்படி, வழித்தடம் சுற்று வழித்தடமாக உள்ளதால், போதிய பயன்பாடு இருக்க வாய்ப்பில்லை. எனவே, புதிய பேருந்துகள் இயக்குவது சாத்தியமில்லை. தற்போது இவ்வழித்தடத்தில் பகுதி பகுதியாக இயக்கப்படும் பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.*

**66—**

**பேருந்து வசதி**

**வினா எண் 6780—திரு. எஸ். வேதாச்சலம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அம்பத்தூர் தொகுதி, 3-வது வார்டு வரை இயங்கும் 170-எல், 248, 71-டி பேருந்துகளை 4-வது வார்டு மாதனாங்குப்பம் வரை நீட்டிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வழித்தடம் எண் 170-எல், எம்-248 மற்றும் 71-டி பேருந்துகளை மாதனாங்குப்பம் வரை நீட்டித்தால், தற்போது இயக்கப்பட்டு வரும் பயண நடை குறைவதுடன் தற்போது பயனடைந்துவரும் பயணிகளும் பாதிக்கப்படுவார்கள்.*

**67—**

## பேருந்து வசதி

**வினா எண் 6833—திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியில் இருந்து காரைமேடு காத்திருப்பு, செம்பதனிருப்பு வழியாக பூம்புகார் கல்லூரிக்கு, புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி—கருவி 12 கி.மீ. தடப்பகுதியில், தடம் எண் 36 பேருந்து மூலம் 80 நடைகளும், 3 தனியார் பேருந்து மூலம் 9 நடைகளும் இயக்கப்படுகின்றன. கருவி—பூம்புகார் 9 கி.மீ. தடப்பகுதியில் '6' தடப் பேருந்து மூலம் 58 நடைகளும் தினசரி இயக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட பகுதியில் பகுதி, பகுதியாக தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.*





**68—**

## பேருந்து வசதி

**வினா எண் 6834—திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியில் இருந்து கீழமூவர்கரைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி-கீழமூவர்கரை கோரிக்கை வழித்தடத்தில் கழகப் பேருந்து தடம் எண் A-16 மூலம் தினசரி 14 நடைகளும், தனியார் பேருந்து மூலம் தினசரி 6 நடைகளும் இயக்கப்படுகின்றன. போக்குவரத்துக் கழகப் பேருந்தில், தினசரி பயணிகளின் அடர்வு 54% உள்ளது. இதுவே போதுமானதாகும்.*

**69—**

## பேருந்து வசதி

**வினா எண் 6835—திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியில் இருந்து புதுத்துறை, திருநகரி, நெப்பத்தூர், மங்கைமடம் வழியாக பூம்புகார் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி-மங்கைமடம் (வழி) புதுத்துறை, திருநகரி, நெப்பத்தூர், தடம் எண் A5A மூலம் 16 நடைகள் இயக்கப்படுகின்றன. மங்கைமடம்-பூம்புகார் தடத்தில் 3 நகர் மற்றும் 2 புறநகர் தடப் பேருந்து மூலம் 58 நடைகள் தினசரி இயக்கப்படுகின்றன. மேற்படி, பகுதி, பகுதியாக உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.*

**70—**

## பேருந்து வசதி

**வினா எண் 7434—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணியிலிருந்து செல்லும் தடம் எண் A10 பேருந்தை மேல்நகரம்பேடு கிராமம் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மண்டலம், ஆரணி பணிமனையில் இருந்து நகரத்தடம் A10 ஆரணி—மேல்மட்டை விண்ணமங்கலம் (வழி) வாழப்பந்தல், கொருக்காத்தூர், நாவல்பாக்கம் கூட்டுச்சாலை, பின்னப்பட்டு என தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேல்நாகரம்பேடு வழியாக மாறுதல் செய்து இயக்கினால் ஏற்கெனவே பயன்பெற்றுவரும் தேவனாத்தூர், பில்லாஞ்சி, நாவல்பாக்கம் மற்றும் பின்னப்பட்டு ஆகிய கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆரணி—செய்யாறு (வழி) வாழப்பந்தல், மேல்நாகரம்பேடு என 1 நகரப் பேருந்து தினசரி 4 நடைகளும், 3 தனியார் பேருந்துகள் தினசரி 16 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, மேல்நாகரம்பேடு வழியாக பேருந்து இயக்குவது சாத்தியமில்லை.*



2012 நவம்பர் 1]

**71—**

## பேருந்து வசதி

**வினா எண் 7435—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை-போளூர்-ஆரணி, மேல் சீசமங்கலம் வழி கொருக்காத்தூருக்கும் மற்றும் பெரணமல்லூர், வெல்லம், கிருஷ்ணாவரம் கூட்டுரோடு வழியாக வந்தவாசிக்கும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை—போளூர்—ஆரணி, மேல் சீசமங்கலம் வழி கொருக்காத்தூர் மற்றும் பெரணமல்லூர், வெல்லம், கிருஷ்ணாவரம் கூட்டுரோடு வழியாக வந்தவாசி செல்லும் வழித்தடத்தின் நீளம் 123.0 கி.மீ. இது ஒரு சுற்று வழித்தடம் என்பதால் நேரடி பயணிகள் விரும்பமாட்டார்கள். பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது. மேற்படி வழித்தடத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கும் வகையில் போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளதால் மேற்படி வழித்தடத்தில் நேரடி பேருந்து இயக்கும் திட்டம் இல்லை.*

**72—**

## பேருந்து வசதி

**வினா எண் 7436—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர், ஆரணி, எஸ்.வி. நகரம், மாம்பாக்கம், வாழப்பந்தல், வல்லம் கூட்டுரோடு, மழையூர், தேசூர், தெள்ளார் வழியாக திண்டிவனம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர், ஆரணி, எஸ்.வி. நகரம், மாம்பாக்கம், வாழப்பந்தல், வல்லம் கூட்டுரோடு, மழையூர், தேசூர், தெள்ளார் வழியாக திண்டிவனம் செல்லும் வழித்தடத்தின் நீளம் 126.0 கி.மீ. மேலும் இது ஒரு சுற்று வழித்தடம் என்பதால் நேரடி பயணிகள் விரும்பமாட்டார்கள். பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது. மேற்படி வழித்தடத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கும் வகையில் போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளதால் நேரடி பேருந்து இயக்கும் திட்டம் இல்லை.*

**73—**

## பேருந்து வசதி

**வினா எண் 7437—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர், ஆற்காடு, திமிரி, ஆரணி, எஸ்.வி. நகரம், மாம்பாக்கம் வழி வாழப்பந்தல் பெரணமல்லூர் மடம், தேசூர், தெள்ளார் (அ) தேசூர் குண்ணகம்பூண்டி வெடால் செஞ்சிக்கு அரசு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர், ஆற்காடு, திமிரி, ஆரணி, எஸ்.வி. நகரம், மாம்பாக்கம் வழி வாழப்பந்தல், பெரணமல்லூர் மடம், தேசூர், தெள்ளார் (அ) தேசூர் குண்ணகம்பூண்டி வெடால் செஞ்சி வழித்தடத்தின் நீளம் 135.0 கி.மீ. மேலும் இது ஒரு சுற்று வழித்தடம் என்பதால் நேரடி பயணிகள் விரும்பமாட்டார்கள். பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது. மேற்படி வழித்தடத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கும் வகையில் போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளதால் நேரடி பேருந்து இயக்கும் திட்டம் இல்லை.*



2012 நவம்பர் 1]

**74—**

## பேருந்து வசதி

**வினா எண் 7438—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் ஆரணி, கொருக்காத்தூர், பெரணமல்லூர் மழையூர், தேசூர் வழியாக தெள்ளாருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர், ஆரணி, கொருக்காத்தூர், பெரணமல்லூர் மழையூர், தேசூர் வழியாக தெள்ளார் வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் என்பதால் நேரடி பயணிகள் விரும்பமாட்டார்கள். பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது. மேற்படி வழித்தடத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளதால் பேருந்து இயக்கும் தேவை எழவில்லை.*

**75—**

## பேருந்து வசதி

**வினா எண் 7439—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

*(அ) ஆரணி தொகுதி, சோமந்தாங்கல் கிராமத்திலிருந்து பள்ளி மற்றும் கல்லூரி நேரத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சோமந்தாங்கல் கிராமம், ஆரணி-கண்ணமங்கலம் பிரதான சாலையில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. பிரதான சாலையில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் பேருந்து வசதி பெற்ற கிராமங்களாகவே கருதப்படும். இருப்பினும் மேற்படி வழித்தடத்தில் ஒரு சிற்றுந்து தினசரி 14 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.*

*மேலும், ஆரணி-கண்ணமங்கலம் (வழி) சோமந்தாங்கல் கூட்டுச்சாலை என இரு நகரப் பேருந்துகள் தினசரி 26 நடைகளும், 3 தனியார் பேருந்துகள் 34 நடைகளும் போதிய அளவு இயக்கப்படுவதால் மேற்படி வழித்தடத்தில் பேருந்து இயக்கும் அவசியம் எழவில்லை.*

**76—**

## பேருந்து வசதி

**வினா எண் 7440—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி, திருமணி, கொருக்காத்தூர், கடுகனூர், செய்யாறு வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 நவம்பர் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி, திருமணி, கொருக்காத்தூர், கடுகனூர், செய்யாறு வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் ஆகும். அனைத்து கிராமங்களும் பகுதி பகுதியாக ஆரணி மற்றும் செய்யாறு நகரங்களுக்குச் செல்ல போதிய பேருந்து வசதி பெற்றுள்ளதால் தனியாக ஒரு பேருந்து இயக்கும் அவசியம் எழவில்லை.*

**77—**

## பேருந்து வசதி

**வினா எண் 7441—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, கண்ணமங்கலம்-வேலூருக்கு காலை 7-8 மணிக்கு புதிய பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் திருவண்ணாமலை—வேலூர் (வழி) கண்ணமங்கலம் என 5 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்சமயம் உள்ள போக்குவரத்து வசதியே பொதுமக்களின் தேவையினை நிறைவு செய்யும் வகையில் உள்ளது. எனவே, புதிய பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**78—**

## பேருந்து வசதி

**வினா எண் 7442—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2012 நவம்பர் 1

*(அ) ஆரணி தொகுதி, அக்கூர் கிராமத்திலிருந்து ஆரணிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அக்கூர் கிராமம், ஆரணி—செய்யாறு பிரதான சாலையில் இருந்து குறைவான தூரத்தில் (2 கிலோ மீட்டர்) உள்ளதால், மேற்படி வழித்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் தற்போது இல்லை.*

**79—**

## பேருந்து வசதி

**வினா எண் 7444—திரு ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர், ஆற்காடு, கலவை, வாழப்பந்தல், பெரணமல்லூர் பகுதிகளுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர், ஆற்காடு, கலவை, கொருக்காத்தூர், பெரணமல்லூர் ஆகிய பகுதிகள் ஆரணி, செய்யாறு, சேத்துப்பட்டு ஆகிய நகரங்களுடன் போதிய பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே, புதிய பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*



2012 நவம்பர் 1]

**80—**

## பேருந்து வசதி

**வினா எண் 7445—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர், ஆற்காடு, கலவை, கொருக்காத்தூர், பெரணமல்லூர், நெடுங்குன்றம், சேத்துப்பட்டு வழியாக இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் கோரியுள்ள கிராமங்கள் அனைத்தும் ஆரணி, ஆற்காடு, பெரணமல்லூர் மற்றும் சேத்துப்பட்டு ஆகிய நகரங்களுடன் பகுதி பகுதியாக பேருந்து வசதி பெற்றுள்ளன. உறுப்பினர் கோரும் வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் என்பதால் மேற்படி வழித்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் தற்போது இல்லை.*

**81—**

## பேருந்து வசதி

**வினா எண் 7446—திரு ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி, மேல்சீசமங்கலம், முனுகப்பட்டு, கொருக்காத்தூர், பெரணமல்லூர், நெடுங்குன்றம் வழியாக சேத்துப்பட்டு வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி—சேத்துப்பட்டு (வழி) மேல்சீசமங்கலம், முனுகப்பட்டு, கொருக்காத்தூர், பெரணமல்லூர், நெடுங்குன்றம் வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் என்பதால் நேரடிப் பயணிகள் விரும்பமாட்டார்கள். மேற்படி வழித்தடத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளதால் நேரடிப் பேருந்து இயக்கும் திட்டம் இல்லை.*

**82—**

## பேருந்து வசதி

**வினா எண் 7448—திரு ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர், ஆற்காடு, கலவை, கொருக்காத்தூர், பெரணமல்லூர், கோவிலூர், கூட்டுரோடு மற்றும் வந்தவாசி வழியாக மேல்மருவத்தூர் வரை இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேற்படி வழித்தடத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் ஆரணி, ஆற்காடு, பெரணமல்லூர் மற்றும் வந்தவாசிக்கு பகுதி பகுதியாக பேருந்து வசதி பெற்றுள்ளன. மேற்படி வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் என்பதால் பேருந்து இயக்கும் திட்டம் இல்லை.*



2012 நவம்பர் 1]

**83—**

## பேருந்து வசதி

**வினா எண் 8014—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து செங்குளம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து செங்குளத்திற்கு அருகிலுள்ள முக்குடி கிராமம் வரை இயக்கப்படும் பேருந்தினை செங்குளம் வரை 4 தனி நடைகள் நீட்டித்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

**84—**

## பேருந்து வசதி

**வினா எண் 8015—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து பறையங்குளம், செங்குளம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செங்குளம், பறையங்குளம் வழியாக எஸ். நாங்கூருக்கு ஏற்கெனவே 10 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வந்தது. இப்பகுதி மக்களின் கூடுதல் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் செங்குளம் வழியாக மேலக்கள்ளங்குளத்திற்கு கூடுதலாக 6 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. ஆக மொத்தம் செங்குளம் பகுதி மக்களுக்கு 16 தனி நடைகள் பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, இப்பகுதி மக்களுக்கு தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.*

**85—**

## பேருந்து வசதி

**வினா எண் 8329—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையத்திலிருந்து விளக்குடி, மணலி வழியாக கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையத்திலிருந்து விளக்குடி, மணலி வழியாக தடம் எண் 381 மூலம் 2 நடைகளும், தடம் எண் 412A மூலம் 2 நடைகளும், 419C மூலம் 4 நடைகளும் என தினசரி 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே, இப்பகுதி மக்களுக்குப் போதுமானதாக உள்ளது.*



2012 நவம்பர் 1]

**86—**

## பேருந்து வசதி

**வினா எண் 8330—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்துறைப்பூண்டியிலிருந்து எழிலூர், மீனம்பநல்லூர், மாங்குடி, எடையூர், கோபாலசமுத்திரம், தில்லைவிளாகம் மற்றும் கோவிலடி வழியாக தில்லை தெற்கு வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி—தில்லை தெற்கு (வழி) எழிலூர், மீனம்பநல்லூர், மாங்குடி, எடையூர், கோபாலசமுத்திரம், தில்லைவிளாகம், கோவிலடி தட நீளம் 28 கி.மீ. திருத்துறைப்பூண்டி—எடையூர் தடப்பகுதியில், தினசரி 2 நடையும், எடையூர்—கோபாலசமுத்திரம்—முத்துப்பேட்டை தடத்தில், தினசரி 90 நடையும், முத்துப்பேட்டை—தில்லைவிளாகம் தெற்கு வரை தடம் எண். 30 மூலம் 10 நடைகளும், தினசரி இயக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட வழித்தடத்தில் பகுதி பகுதியாக உள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.*

**87—**

## பேருந்து வசதி

**வினா எண் 8941—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மன்னார்குடியிலிருந்து, திருக்கொள்ளிக்காடு, கிராலத்தூர், திருத்தங்கூர், திருநெல்லிக்காவல் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி—திருக்கொள்ளிக்காடு, கிராலத்தூர், திருத்தங்கூர், திருநெல்லிக்காவல் தடம் புது வழித்தடமாகும். பகுதி, பகுதியாக போதிய அளவு பேருந்து வசதி உள்ளதால், தற்போது உள்ள பேருந்துகளையே பயன்படுத்திக் கொள்ளலாம்.*

**88—**

## பேருந்து வசதி

**வினா எண் 9467—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டையிலிருந்து பரம்பூர், கடம்பராயன்பட்டி வரை இயங்கும் தடம் எண் 5 மற்றும் 28 ஆகிய பேருந்துகளை இலுப்பூர் வரை நீட்டிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பரம்பூர்—கடம்பராயன்பட்டி வரை இயங்கும் தடம் எண் 5 மற்றும் 28 ஆகிய இருநகர் பேருந்துகளின் தட நீளம் அனுமதிக்கப்பட்ட தூரத்தைக் காட்டிலும் கூடுதலாக உள்ளதால், இந்நகர் பேருந்துகளை மேலும் நீட்டித்து இயக்க இயலாது.*

**89—**

## பேருந்து வசதி

**வினா எண் 9470—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*(அ) கீரனூர் முதல் கருப்பர்மலை, பையூர் மருதுப்பட்டி மற்றும் சத்தியநாதபுரம் வழியாக இலுப்பூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கீரனூர் முதல் கருப்பர்மலை, பையூர் மருதுப்பட்டி மற்றும் சத்தியநாதபுரம் வழியாக இலுப்பூர் வரை செல்லும் வழித்தடத்தின் நீளம் 33.0 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் பையூர்விலக்கு முதல் K. நாங்குப்பட்டி சாலை வரை மண் சாலையாக பேருந்துப் போக்குவரத்திற்குத் தகுதியற்ற நிலையில் உள்ளது. எனவே, இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. சாலை சீரமைக்கப்பட்டவுடன் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**90—**

## பேருந்து வசதி

**வினா எண் 9472—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கீரனூரிலிருந்து (வருகப்பட்டி) கம்பமோடு, கொட்டப்பள்ளம் மற்றும் துவரவயல் வழியாக ஒடுக்கூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கீரனூரிலிருந்து (வருகப்பட்டி) கம்பமோடு, கொட்டப்பள்ளம் மற்றும் துவரவயல் வழியாக ஒடுக்கூர் வழித்தடத்தின் நீளம் மொத்தம் 9.5 கி.மீ. இதில் கீரனூரிலிருந்து*

[2012 நவம்பர் 1

தெற்கு துவரவயல் வரை பேருந்து வசதி உள்ள பகுதியாகும். தெற்கு துவரவயல் முதல் ஒடுக்கூர் வரை உள்ள 4.3 கி.மீ. தூரம் பேருந்து வசதி இல்லாத பகுதியாகும். எனவே, இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**91—**

## பேருந்து வசதி

**வினா எண் 9473—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையிலிருந்து கிளிக்குடிக்கு மாலை 6.25 மற்றும் இரவு 9.00 மணிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வழித்தடத்தில் புதுக்கோட்டையிலிருந்து, மாலை 6.30 மணிக்குப் புறப்பட்டு குடுமியான்மலை, பரம்பூர், மாம்பட்டி வழியாக இலுப்பூர் வரை பேருந்து இயக்கப்படுகிறது. அதேபோல் இரவு 9.00 மணிக்கு அரசுப் பேருந்து ஒன்று புதுக்கோட்டையிலிருந்து கிளிக்குடி வரை இயக்கப்பட்டு வருகிறது.

**92—**

## பேருந்து வசதி

**வினா எண் 9474—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2012 நவம்பர் 1]

(அ) விராலிமலை தொகுதி, கீரனூரிலிருந்து விராலிமலை வரை வரும் கே. 7 பேருந்தை இனாம்குளத்தூர் வரை நீட்டிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கீரனூரிலிருந்து விராலிமலை வரை உள்ள வழித்தடத்தின் நீளம் 45.4 கி.மீ. ஆகும். இது நகர் பேருந்து இயக்க அனுமதிக்கப்பட்ட தூரத்தைக் காட்டிலும் கூடுதலாக உள்ளதால், கே. 7 பேருந்தினை இனாம்குளத்தூர் வரை நீட்டித்து இயக்க இயலாத நிலை உள்ளது.

**93—**

## பேருந்து வசதி

**வினா எண் 9475—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, கீரனூர் முதல் தெற்கு துவரவயல், மேல்புதுவயல் வழியாக விராலிமலை வரை புதிய பேருந்தினை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கீரனூர் முதல் தெற்கு துவரவயல், மேல்புதுவயல் வழியாக விராலிமலை வரை 2 நடைகள் தற்போது பேருந்து வசதி உள்ளது. இதுதவிர, பகுதி, பகுதியாகவும் பேருந்து வசதி உள்ளது. கீரனூர், மேல்புதுவயல், தெற்கு துவரவயல் வழியாக மலம்பட்டி வரை 6 நடைகளும், மலம்பட்டியிலிருந்து

[2012 நவம்பர் 1

*விராலிமலைக்கு 8 நடைகளும் பேருந்து வசதி உள்ளது. எனவே, இவ்வழித்தடத்தில், தற்போது கூடுதலாக பேருந்து இயக்க அவசியம் எழவில்லை.*

**94—**

## அரசுத் திட்டங்கள்

**வினா எண் 5702—திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அனைத்து திரையரங்குகளிலும் செய்திப் பிரிவுமூலம் அரசுத் திட்டங்களைத் திரையிட்டுக் காட்டுவதற்கு அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் நலத் திட்டங்கள் குறித்த செய்திகள் மக்களைக் கவரும் விதத்திலும், எளிதில் புரியும் வண்ணமாக அனைவரையும் சென்றடையும் விதத்தில், வீடியோ செய்தி மலர்கள் மற்றும் குறும்படங்கள் தயாரித்து (35 மி.மீ.) வண்ணப் பிரதிகளாக 147 பிரதிகள் எடுத்து, டிஜிட்டல் தொழில்நுட்பம் அல்லாத அனைத்து திரையரங்குகளிலும், மைய அரசின் வழியாகத் திரையிடப்பட்டு வருகிறது.*

*மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு மீதமுள்ள நவீன டிஜிட்டல் திரையரங்குகளிலும், வெளியிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த பிப்ரவரி மாதம் முதல் 'தானே' புயல் பற்றிய கருத்து விளக்கப்படத்துடன் அனைத்து செய்திமலர்களும் திரையிடப்பட்டு வருகின்றன.*

**95—**

## பரிசுத் தொகை

**வினா எண் 11364—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2012 நவம்பர் 1]

*சின்னத்திரையில் சிறந்த நெடுந்தொடருக்கு வழங்கப்படும் முதல் மற்றும் இரண்டாம் பரிசுகளின் தொகையை முறையே ரூ.3 இலட்சம், ரூ.2 இலட்சம் என உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*சின்னத்திரைக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம் 2006 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*சின்னத்திரை தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசு ரூ.2 இலட்சம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும், இரண்டாம் பரிசு ரூ.1 இலட்சம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும், சிறந்த வாரத் தொடர் ஒன்றிற்கு ரூ.1 இலட்சம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.*

*சின்னத்திரையில் சிறந்த நெடுந்தொடருக்கு வழங்கப்படும் முதல், இரண்டாம் பரிசுகளின் தொகையை முறையே ரூ. 3 இலட்சம், ரூ. 2 இலட்சம் ஆக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**96—**

## உதவித் தொகை

**வினா எண் 11365—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் விபத்து மரணத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.2 இலட்சமாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம், எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும் அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காக சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினர் நல வாரியம் உருவாக்கப்பட்டது.*

*2. திரைப்படத் துறையினர், சின்னத்திரையினர் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலமுடன் வாழ வேண்டுமென்பதற்காக திரைப்படத் துறையினர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.*

*3. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் விபத்து மரணத்திற்கான உதவித் தொகை ரூ.1,00,000/- வழங்கப்பட்டு வருகிறது. விபத்து மரணத்திற்கான உதவித் தொகையை ரூ.2,00,000/-ஆக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**97—**

## மூக்குக் கண்ணாடி

**வினா எண் 11366—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திரைப்படத் துறையினர் நல வாரியம் மூலம் வழங்கப்படும் மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்ய ரூ. 1,000/- வழங்க ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும் அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காக சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினர் நல வாரியம் உருவாக்கப்பட்டது.*

*2. திரைப்படத் துறையினர், சின்னத்திரையினர் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலமுடன் வாழ வேண்டுமென்பதற்காக திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.*

*3. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்ய ரூ.500/- வழங்கப்பட்டு வருகிறது. மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ரூ.1,000/-ஆக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**98—**

## திருமண உதவித் தொகை

**வினா எண் 11369—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் வழங்கப்படும் திருமண உதவித் தொகையை ரூ.10,000/-ஆக வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம், எனில், எப்போது?*

[2012 நவம்பர் 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும் அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காக சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினர் நல வாரியம் ஒன்றினைப் புதிதாக உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது.*

*2. திரைப்படத் துறையினர், சின்னத்திரையினர் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலமுடன் வாழ வேண்டுமென்பதற்காக திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் உறுப்பினர்களைச் சேர்த்து வாரிய உறுப்பினர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.*

*3. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் திருமண உதவித் தொகையாக ரூ.2000/- வழங்கப்பட்டு வருகிறது. திருமண உதவித் தொகையை ரூ.10,000/-ஆக உயர்த்தி வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**99—**

**உதவித் தொகை**

**வினா எண் 11371—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திரைப்படத் துறையினர் நல வாரியம் மூலம் வழங்கப்படும் ஈமச்சடங்கு உதவித் தொகையை ரூ.5,000/- ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம், எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும் அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காக சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினர் நல வாரியம் ஒன்றினைப் புதிதாக உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது.*



2012 நவம்பர் 1]

*2. திரைப்படத் துறையினர், சின்னத்திரையினர் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலமுடன் வாழ வேண்டுமென்பதற்காக திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் உறுப்பினர்களைச் சேர்த்து வாரிய உறுப்பினர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.*

*3. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் வழங்கப்படும் ஈமச்சடங்கு உதவித் தொகை ரூ.2000/- வழங்கப்பட்டு வருகிறது. ஈமச்சடங்கிற்கான உதவித் தொகையை ரூ.5,000/- ஆக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

**100—**

**மாணவ – மாணவியர் விடுதி**

**வினா எண் 3467—திருமதி க. அழகுவேலு:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?*

*கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி, கூகையூர், எஸ். ஒகையூர், நாகலூர் பகுதியில் பிற்படுத்தப்பட்டோருக்கான மாணவர் விடுதி துவக்கவும், மற்றும் கூகையூர், எஸ். ஓகையூர், நாகலூர், நைனார்பாளையம் மற்றும் நாகலூர் பகுதியில் மாணவியர் விடுதி அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*விழுப்புரம் மாவட்டம், நயினார்பாளையத்தில் ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதியும்,*

[2012 நவம்பர் 1

கள்ளக்குறிச்சியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதியும் இயங்கி வருகின்றன. கூகையூர், எஸ். ஒகையூர், நாகலூர் ஆகிய இடங்களில் புதிதாக மாணவ/மாணவியர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### (அ) கைப்பேசிகளை புறாக் கூண்டு அறையில் வைத்துவிட்டு உறுப்பினர்கள் அவைக்குள் வருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கைப்பேசிகளை அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள புறாக் கூண்டு அறையில் வைத்துவிட்டு வரவும். இன்று கைப்பேசியின் ஒலி கேட்டது. அவை இனி பறிமுதல் செய்யப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## 3. தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். எல்லோரும் சேர்ந்து நின்று கொண்டு பேசினால் என்ன கேட்க முடியும்? உட்காருங்கள், யாராவது ஒருவர் பேசினால் என்ன பேசுகிறீர்கள் என்று கேட்கலாம். இப்படி அனைவரும் எழுந்து நின்று பேசினால், என்ன கேட்க முடியும். அனைவரும் உட்காருங்கள். யாராவது ஒருவர் பேசினால் கேட்கலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று பேசினர்.)*



2012 நவம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள், உட்காருங்கள். ஏற்கெனவே இந்த அவையினுடைய மரபு ஒத்திவைப்புத் தீர்மானமாக எதையும் எடுத்துக்கொள்வது இல்லை. உங்கள் ஆட்சி நடந்தபோதுகூட எதையும் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுக்கவில்லை. கவன ஈர்ப்புத் தீர்மானமாகத்தான் அதை எடுத்துக்கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுகின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தை இப்போது எடுத்துக்கொள்வதற்கு எனக்கு நேரமில்லை. அலுவல்கள் நிறைய இருக்கின்றன. நான் அனுமதி மறுக்கிறேன். அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) உங்கள் விருப்பம்போல் பேசினால் எதுவும் பதிவாகாது. தயவுசெய்து அனைவரும் உட்காருங்கள். அவைக்கு ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடுகள்) Adjournment motion, நான் அனுமதி அளித்தால்தான் பேச முடியும். (குறுக்கீடு) நான் அனுமதித்தால் உண்டு. தற்போது நான் உங்களை அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் சொல்லும்போது என்னால் எடுக்க முடியாது, நான் அனுமதிக்க வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நின்று கொண்டிருக்கிறேன். எனவே, நீங்கள் சென்று அனைவரும் உங்கள் இருக்கையில் உட்காருங்கள். நான் நின்று கொண்டு பேசுகிறேன், ஆனால் நீங்கள் கூட்டமாக இங்கு வந்து பேசுவது சரியில்லை. (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தரவில்லை. தொடர்ந்து அவையில் குழப்பம் விளைவிக்கிறீர்கள். நேற்றும் இதுபோல்தான் நடந்துகொண்டீர்கள். இன்றும் இதுபோல் நடந்துகொள்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நல்ல முறையில் அவை நடப்பதற்கு ஒத்துழைக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் மீண்டும் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்)

உங்கள் இடத்தில் போய் உட்காருங்கள். உட்காரவில்லையென்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இருக்கைக்குப் போய்ப் பேசுங்கள். இருக்கைக்குப் போங்கள். இவ்வளவு சொன்னதற்குப் பின்னாலேயும், (குறுக்கீடுகள்) நான் இவ்வளவு விளக்கம் சொன்னதற்குப் பின்னாலேயும் தி.மு.க. உறுப்பினர்கள் வேண்டுமென்றே குழப்பம் செய்ய வந்திருப்பதால் அவர்களை அவைக் காவலர்கள் வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*

சீக்கிரம் வெளியேற்றுங்கள். மற்ற அலுவல்கள் நடக்க வேண்டும், (குறுக்கீடுகள்) நான் மற்ற அலுவல்களை எடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்) சத்தம் போடாமல் போங்கள். காவலர்கள், லாபியில் கோஷம் போடுபவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டு சென்றனர்.)*

*முற்பகல் 11-05*

## 4. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். காலையிலே உங்களிடம் சொல்லிவிட்டேன். *(குறுக்கீடு)* அனுமதி இல்லை. இன்று காலையில்தான் நீங்கள் கொடுத்தீர்கள். துறைக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் கிடைத்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து இப்போதுதான் கொடுத்தார். காலையிலேயே அவரிடம் இதுகுறித்து சொல்லிவிட்டேன். Department-க்கு அனுப்பியிருக்கிறோம். பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். நீங்கள் ஒத்துழையுங்கள். தயவு செய்து ஒத்துழையுங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் சொல்லிவிட்டேனே!

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர்கள் உட்காரவும். பேரவை முன்னவர் பேசுகிறார். உட்காருங்கள்.





***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கேள்வி நேரம் முடிந்தவுடன் Zero Hour-ல் ஏதாவது ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை இங்கே எழுப்ப வேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட சட்டமன்றக் கட்சியினுடைய பொறுப்பாளர் ஒருவர் எழுந்து அவர் சபாநாயகரிடம் முறைப்படி அனுமதி கேட்க வேண்டும். இதை விடுத்து, சட்டமன்றக் கட்சியில் இருக்கின்ற அந்த கட்சியினுடைய உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து, ஒரே குரலில் கேள்வி எழுப்பினால் இது நடைமுறைக்கு, சட்டமன்ற விதிகளுக்கு, சட்டமன்ற மரபுக்கு ஒத்துவரக்கூடிய விஷயம்தானா என்பதை இங்கே எதிர்த்தரப்பில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் புரிந்துகொண்டு சபையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசுவது அவைக்குறிப்பில் ஏறாது.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். நான் அனுமதிக்கவில்லை. உட்காருங்கள். உங்களை நான் அனுமதிக்கவில்லை. உட்காருங்கள். நான் ஒரு அறிவிப்பு கொடுக்க வேண்டும். உட்காருங்கள். இதோ பாருங்கள். நீங்கள் என் அறைக்கு வந்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதுகுறித்து நான் விசாரிக்கிறேன் என்று சொன்னேன். *(குறுக்கீடு)* விசாரிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் உடனே இதுபற்றி என்னைக் கேட்டால் நான் என்ன செய்ய முடியும்? *(குறுக்கீடுகள்)* அதெல்லாம் செய்ய முடியாது. உட்காருங்கள். காலையில்தான் கொடுத்தீர்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். தயவு செய்து ஒத்துழைப்புத் தாருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** காவல் துறை எடுத்த நடவடிக்கைக்கு, வெளியே போக வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு நாளும் ஒரு நாடகம், கபட நாடகம் நடத்துகிறீர்கள்.

நீங்கள் நடத்துவது எல்லாம், திட்டம் போட்டு குழப்பம் விளைவிப்பது, திட்டம்போட்டு செயல்பட விடாமல் தடுப்பதுதான். ஏற்கெனவே இதைத்தான் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வெளியேறுவதாகச் சொல்லிவிட்டீர்களே. வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்)

*(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

### (ஆ) தென் மாவட்டங்களில் அமைதியை நிலைநாட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சவுந்தரராசன், இன்று காலையில்தான் என்னிடம் கொடுத்தீர்கள். அவை தொடங்குவதற்குமுன் (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) லாபியில் யாரும் கோஷம் போடுவதற்கு அனுமதிக்காதீர்கள். திரு. அ. சவுந்தரராசன் சொல்லுங்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** தென் மாவட்டங்கள் முழுவதும் கலவரங்கள் பரவிக்கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே நடந்த கலவரத்தின்மீது ஒரு உயர்மட்ட விசாரணை வேண்டும். அமைதியை நிலைநாட்டுவதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*முற்பகல் 11-10*

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**திரு. அ. சவுந்தரராசன்:** புயலால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு வேகமான நிவாரணம் வேண்டும். பல பகுதிகளிலே வீடுகள், பயிர்கள், மரங்கள், மின்கம்பங்கள் இவை சாய்ந்து பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நடவடிக்கை வேண்டுமென்று அவையின் கவனத்தை நான் ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவை துவங்குவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்புதான் என்னிடம் கொண்டுவந்து கொடுத்தீர்கள். நான் அதை அனுப்பி பதில் வாங்கி அதைப்பற்றி பேசுகிறேன் என்று சொன்னேன். நீங்கள் திடீரென்று இப்படி எழுந்து கேட்கிறீர்கள் (குறுக்கீடு) திரு. எம். ஆறுமுகம், நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்?





### (ஆ) தென் மாவட்டங்களில் அமைதியை நிலைநாட்டுதல்—தொடர்ச்சி

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் ஏற்பட்ட கலவரத்தினால் மூன்று உயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில் கேட்டு அனுப்பியிருக்கின்றேன். நேற்றே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். பதில் வந்ததும் எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. பி.வி. கதிரவன், நேற்றே உங்களுக்குச் சொல்லிவிட்டேன். துறைக்கு அனுப்பியிருக்கின்றேன். பதில் வந்ததும் எடுத்துக்கொள்வேன். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, அவர்தான் பேசுகிறாரே, நீங்கள் என்ன சொல்லப் போகின்றீர்கள்? ஒரு கட்சிக்கு ஒருவர் தானே பேச வேண்டும். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம், தென் மாவட்டங்களில் பரவி வரக்கூடிய கலவரங்கள் அரசினுடைய கவனத்திற்கு இரண்டு நாட்களாக வந்துகொண்டே இருக்கின்றன. பதில் வரவில்லை, பதில் வரவில்லை என்று சொல்கின்றீர்கள். இந்தச் சம்பவங்கள் பல மாவட்டங்களைச் சார்ந்த மக்களைப் பாதித்துக்கொண்டு இருக்கின்றன. அது சம்பந்தமாகத்தான் நாங்கள் பேசுகிறோம். நீங்கள் பதில் வரவில்லை என்று சொன்னீர்கள் என்றால் எப்படி அந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியதைப் பதிவு செய்துவிட்டோம். சீக்கிரம் பதில் கொண்டு வருவதற்கு ஏற்பாடு பண்ணுகிறோம்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளையுடன் பேரவைக் கூட்டத் தொடர் முடிந்துவிடுமே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தைப் பதிவு செய்துவிட்டேன். பதிலுக்கு விரைவுபடுத்துகிறேன். பதில் வந்ததும் எடுத்துக்கொள்ளலாம். உட்காருங்கள். திரு. பி.வி. கதிரவன், நீங்கள் சொல்லுங்கள்.

[2012 நவம்பர் 1

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்டோபர் மாதம் 28, 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழா தமிழகத்தில் நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டும் அதைப்போன்றே நடைபெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில், அரசின் கவனத்தை ஈர்க்கின்ற மாதிரி ஒரு கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவர் ஜெயந்தி நடக்கின்ற காலகட்டங்களில் பரமக்குடி அருகே இரண்டு பேர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கின்றார்கள், ஒரு ஓட்டுநர், சிவக்குமார் என்பவர் அடித்துக்கொல்லப்பட்டிருக்கின்றார். 30 ஆம் தேதி, அதே நாளில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் பதிவு செய்துகொள்கிறோம். நடவடிக்கைக்கு அனுப்புகிறோம். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், என்னவென்று சொல்லுங்கள். இப்போதுதான் திரு. எம். ஆறுமுகம் கூறினார். நீங்கள் வேறு என்ன பேசப்போகின்றீர்கள்?

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 27ஆம் தேதி மருதுபாண்டியர் குருபூஜை விழாவை முன்னிட்டு காவல் துறை துணை ஆய்வாளர் ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொரு உறுப்பினரும் எழுந்து இப்படிக் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் என்ன சொல்லப்போகின்றீர்கள்? (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். துறைக்கு அனுப்பியிருக்கின்றேன். பதில் வந்ததும் எடுத்துக்கொள்ளலாம். மூன்று நாள் கூட்டத்தொடரில் எப்படி எல்லாவற்றையும் எடுக்க முடியும்? நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வந்தீர்கள். உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டு காலமாக தென் தமிழகத்திலே நீடித்து வந்த அமைதி நிலையை, சம நிலையைச்



2012 நவம்பர் 1] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

சீர்குலைக்கக்கூடிய வகையில் அண்மைக் காலமாக நடந்து வருகின்ற கலவரங்கள் குறித்து தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) முதலமைச்சரைச் சந்திக்க அனுமதி கோரி தே.மு.தி.க உறுப்பினர்கள் நால்வர் பத்திரிகையாளர்களுடன் முதல்வர் அலுவலகம் சென்ற பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்றைய தினம், முனைவர் வைகைச்செல்வன் அவர்கள் என்னிடம் ஒரு கடிதத்தை அளித்துள்ளார்கள். அதில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் எல். வெங்கடேசன், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ப. சம்பத்குமார், செங்கம் சட்டமன்ற உறுப்பினர் டி. சுரேஷ்குமார், சூலூர் சட்டமன்ற உறுப்பினர் க. தினகரன் மற்றும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் கு. நல்லதம்பி ஆகியோர் ஒரு கடிதத்தை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அலுவலகத்தில் 30-10-2012 செவ்வாய் அன்று கொடுக்கச் சென்றதாகவும், முதலமைச்சர் அலுவலகம் அதை ஏற்க மறுத்ததாகவும் ‘இந்து’ நாளிதழில் 31-10-2012 அன்று வெளியிடப்பட்ட செய்தி, சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள ஐந்து உறுப்பினர்களின் செயல் அவை உரிமை மீறிய செயலாக இருப்பதை அறிந்து இந்த அவை உரிமை மீறலை உரிமை மீறல் பிரச்சினையாகச் சமர்ப்பிக்கின்றேன் என்று சொல்லி, தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர் கட்சிக் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் மற்றும் மேற்படி ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய செயல் இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினராக இருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உரிமையைப் பாதிக்கின்ற வகையிலே அமைந்துள்ளது.

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 1

*முற்பகல் 11-15*

'இந்து' நாளிதழுக்குப் பேட்டி அளித்த திரு. வி.சி. சந்திரகுமாரின் செயல் அநாகரிகத்தின் உச்சமாக, ஏற்கெனவே அரங்கேற்றப்பட்ட நாடகத்தின் தொடர்ச்சியாக அமைந்துள்ளதால் அவர்கள்மீது அவை உரிமை மீறல் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு க. தமிழழகன், திரு. செ. அருண் பாண்டியன் மற்றும் திரு. சி. மைக்கேல் ராயப்பன் ஆகிய நான்கு உறுப்பினர்களும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முறையான அனுமதி பெற்று சந்தித்தார்கள். இந்த நிகழ்வுக்குப்பின் தே.மு.தி.க. தலைவர் திரு. விஜயகாந்த், இது ஒரு நாடகம் என்றும், இந்த நாடகத்தினை முடிவுக்குக் கொண்டு வருவேன் என்றும் பேசினார். மேலும், அவருடைய மனைவி திருமதி பிரேமலதா, மதுரையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில், இந்த நாடகமாடிய துரோகிக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்று பேசினார். உள்நோக்கம் கொண்ட இவர்களது பேச்சின் தொடர்ச்சியாக சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்களுடைய அலுவலகம் தாக்கப்பட்டது. அவருக்குத் தொடர்ந்து கொலை மிரட்டல்கள் விடப்பட்டன. சட்டமன்ற வளாகத்திற்குள்ளேயே தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்களுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இவர்களது செயல் அரங்கேற்றப்பட்ட நாடகத்தின் உச்ச கட்டம் என்றும், மலிவான அரசியலைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும், வன்முறையைத் தூண்டும் வகையிலே செயல்படுகிறார்கள் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

நிலைமை இவ்வாறாக இருக்க, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தாங்களும் சந்திக்க வேண்டுமென்று திரு. எல். வெங்கடேசன் உள்பட நான்கு தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திற்கு கடிதம் கொடுக்கச் சென்ற நிகழ்வினைப் பதிவு செய்ய பத்திரிகையாளர்கள், ஊடகங்களின் நிருபர்கள் மற்றும் புகைப்பட கேமிரா பதிவாளர்கள் ஆகியோரை அழைத்துச் சென்றதன்மூலம் தங்களது மலிவான அரசியலை வெளிப்படுத்தியுள்ளனர். அவையின் உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா



2012 நவம்பர் 1] [பேரவைத் தலைவர்]

அவர்களுடைய தனி உரிமையையும், அவை உறுப்பினர் என்ற முறையிலே உள்ள உரிமையையும் பாதிக்கும் வண்ணம் செயல்பட்ட மேற்படி தே.மு.தி.க. உறுப்பினர்களது செயல் அவையின் உரிமையை மீறிய செயலாகும்.

மேலும், கடந்த ஒன்றரை ஆண்டுகளாக மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை தங்களது தொகுதி சம்பந்தமாக எந்த ஒரு மக்கள் பிரச்சினைக்கும் அணுகாத மேற்கூறப்பட்ட தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள், திடீரென்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அலுவலகத்திற்குச் சென்று, வேண்டுமென்றே ஒரு நாடகத்தை நடத்தி, இவற்றை ஊடகங்களில் வெளிப்படுத்திய மேற்கூறிய ஐந்து தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்களின் செயல்பாடு மலிவான விளம்பரம் தேடும் முயற்சியாகும். மேலும், அவையின் உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அவை உரிமையைப் பாதிக்கும் வண்ணம் கடிதம் கொடுத்த திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் மற்றும் நான்கு தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்திக்க அனுமதி கிடைக்கவில்லை என்று 'இந்து' நாளிதழுக்கு 31-10-2012 அன்று பேட்டி கொடுத்த தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் ஆகியோரது செயல் அவை உரிமை மீறிய செயலாகக் கருதப்பட வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் பிரச்சினைகளுக்காக நேரில் சந்திக்க அனுமதி கொடுத்துள்ளார்கள். பல உறுப்பினர்கள் சட்டமன்றப் பேரவை நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுதே கட்சிப் பாகுபாடின்றி நேரில் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் தங்களது தொகுதிப் பிரச்சினை சம்பந்தமாக பல முறை கோரிக்கை மனுக்களை அளித்துள்ளார்கள். அவை அனைத்தையும் தெரிந்துகொண்டே, மேற்கூறப்பட்ட ஐந்து தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படி ஒரு நாடகத்தை வேண்டுமென்றே அரங்கேற்றியுள்ளனர். மதிப்புமிக்க சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு

முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையிலும், அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் சுதந்திரமாகச் செயல்படுவதைத் தடுக்கும் வகையிலும் பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றக் கட்சியின் தலைவரும், மிக முக்கியமான உறுப்பினருமான மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உரிமையைப் பாதிக்கும் வண்ணம் இவர்களது செயல்பாடு அமைந்துள்ளது.

*முற்பகல் 11-20*

மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில் திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார், செங்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், சூலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. க. தினகரன் மற்றும் எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி மற்றும் 'இந்து' நாளிதழுக்கு 30-10-2012 அன்று பேட்டி அளித்த தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் ஆகியோர் அவை உரிமை மீறிய செயலில் ஈடுபட்டுள்ளதால் அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது இந்தப் பிரச்சினையில் அவை உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால் இதனை ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக பேரவை விதி 226-ன்கீழ் இதனை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) முதலமைச்சரைச் சந்திக்க அனுமதி பெற்றுத் தரக் கோரி தே.மு.தி.க. உறுப்பினர்கள் பேரவைத் தலைவரைச் சந்தித்தது–முனைவர் செ.கு. தமிழரசன் அளித்த கடிதத்தை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் தனது 31-10-2012 நாளிட்ட கடிதத்தில், 30-10-2012 ஆம் நாளைய 'தினத்தந்தி', 'தினமணி', 'தினமலர்' மற்றும் 'தினகரன்' ஆகிய நாளிதழ்களின் நறுக்குகளை இணைத்து, மேற்குறிப்பிட்ட நாளிதழ்களில் சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நான்கு தே.மு.தி.க. சட்டமன்ற



உறுப்பினர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தொகுதிப் பிரச்சினை சம்பந்தமாக சந்திக்க பேரவைத் தலைவரிடம் அனுமதி பெற்றுத் தர வேண்டி சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சிக் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள் கடிதம் கொடுத்ததாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளதை எனது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். மேலும், அவர்கள் பேரவைக்கு வெளியே சென்று பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகங்களிடம் அரசியல் நோக்கத்திற்காக, மலிவான விளம்பரம் தேடும் வகையில், பேரவைத் தலைவரின் பதவியை அரசியலாக்கும் வண்ணம் பேட்டியளித்துள்ள செயல் அவை உரிமை மீறிய செயலாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் என்பவர் சட்டமன்றத்தின் மிக உயர்ந்த மாட்சிமையும், இறையாண்மையையும் பேரவையின் மாண்பினையும், உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும் கட்டிக் காக்கும் பொறுப்புடையவர் என்று தெரிவித்து, தே.மு.தி.க. உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்கான அனுமதியைப் பெற்றுத் தருவது முதலமைச்சர் அவர்களது செயலாளர் அவர்கள்தான் என்பது தெரிந்தும், வேண்டுமென்றே இத்தகைய ஒரு கடிதத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு அளித்து அவரையே மாண்புமிகு முதலமைச்சரைச் சந்திக்க அனுமதி பெற்றுத் தருமாறு கோரியுள்ளது, மாட்சிமை கொண்ட மாண்புமிகு பேரவைத் தலைவருடைய பதவியின் கௌரவத்தைக் குறைப்பதாகவும், அப்பதவிக்குக் களங்கம் விளைவிக்கும் வகையிலும், பேரவைத் தலைவருடைய செயல்பாட்டினை மறைமுகமாகத் தரம் தாழ்த்தும் வகையிலும், பேரவைத் தலைவரின் உரிமையைப் பெரிதும் பாதிக்கிற வகையிலும் உள்ளது மட்டுமின்றி, அவையின் உரிமையைப் பாதிப்பதாகவும் உள்ளது என்றும் உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் தனது கடிதத்திலே தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த மேற்படி கடிதத்தில் கையொப்பமிட்டுள்ள தே.மு.தி.க. சட்டமன்றக் கட்சிக் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் மற்றும் உறுப்பினர்கள் திரு. எஸ். செந்தில்குமார், திரு. ஆர். அருள்செல்வன், திரு. து. முருகேசன், திருமதி ஆர். சாந்தி ஆகிய ஐந்து

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 1

உறுப்பினர்கள் மேற்கூறிய அவை உரிமை மீறல் குற்றத்திற்கு ஆளாகியுள்ளதால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு அக்கடிதத்திலே கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக ஏற்கெனவே 31-10-2012 அன்று பேரவை விதி 226-ன்கீழ் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி உள்ளதால் மேற்படி உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்களுடைய 31-10-2012 ஆம் நாளிட்ட கடிதத்தினையும் அவை உரிமைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கிறேன். (குறுக்கீடு)

## 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாலகிருஷ்ணன், ஒரு நிமிடம் உட்காருங்கள். நீங்கள் சொன்னதற்கெல்லாம் அம்மா அவர்கள் சரியான பதிலைச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்கு அம்மா அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) இன்று Zero hour-ல் உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைகள், அம்மா அவர்களின் கவனத்தில் இருப்பதால் அவர்களே அதற்குப் பதில் சொல்வார்கள். Wait பண்ணுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

முற்பகல் 11-25

## 5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

### (அ) சட்டமன்றப் பேரவையின் வைரவிழாவில் பங்கேற்க மேதகு குடியரசுத் தலைவர், ஆளுநர் இசைவு தெரிவித்துள்ளது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மூன்று அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி 1952 ஆம் ஆண்டு அமைக்கப்



2012 நவம்பர் 1] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, இந்த ஆண்டு 60 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா, சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 30-11-2012 அன்று வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.

30-11-2012 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களை அழைக்கும் பொருட்டு, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் 26-10-2012 அன்று புதுடெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் அவரை நேரில் சந்தித்து, எனது அழைப்புக் கடிதத்தை வழங்கி, அழைப்பு விடுத்தனர்.

எனது அழைப்பினை ஏற்றுக் கொண்டு, 30-11-2012 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழாவில் கலந்து கொள்ள மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் 29-10-2012 தேதியிட்ட கடிதம்மூலம் இசைவு தெரிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழாவிற்கு தலைமை தாங்குமாறு மேதகு தமிழ்நாடு ஆளுநர் டாக்டர் கே. ரோசைய்யா அவர்களை இன்று ஆளுநர் மாளிகைக்கு சென்று, நேரில் நான் அழைப்பு விடுத்தேன். எனது அழைப்பினை ஏற்று, மேதகு தமிழக ஆளுநர் அவர்களும் இந்த விழாவிற்குத் தலைமை தாங்க தனது இசைவினைத் தெரிவித்தார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த விழாவிலே கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2012 நவம்பர் 1

## (ஆ) 25 ஆண்டுகள் அப்பழுக்கற்ற பணி முடித்த அரசு ஊழியர்களுக்கு ரொக்கப் பரிசு – சான்றிதழ் வழங்குதல் மற்றும் பண்டிகை முன்பணத்தை உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசாங்கத்தின் அடித்தளமாக, அச்சாணியாக, முதுகெலும்பாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் நலன்களைக் காக்கும் வகையில் வீடு கட்டும் முன் பணத்தினை 15 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சம் ரூபாயாக உயர்த்தியது; பெண் ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பினை மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதமாக உயர்த்தியது; அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கென திருத்தி அமைக்கப்பட்ட புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என பல்வேறு சலுகைகளை எனது தலைமையிலான அரசு வழங்கி வருகிறது.

நான் முதன்முறை முதலமைச்சராக இருந்தபோது, அதாவது 1996 ஆம் ஆண்டு 25 ஆண்டு காலம் அப்பழுக்கற்ற பணியினை முடித்த அரசு ஊழியர்களுக்கு 500 ரூபாய் மதிப்புள்ள இந்திரா விகாஸ் பத்திரத்தை வழங்கலாம் என்று ஆணையிட்டிருந்தேன். அதன்படி 25 ஆண்டு காலம் பணியாற்றிய அப்பழுக்கற்ற அரசு ஊழியர்களுக்கு அந்தப் பத்திரம் வழங்கப்பட்டு வந்தது. பின்னர், இந்திரா விகாஸ் பத்திரத்திற்குப் பதிலாக கிசான் விகாஸ் பத்திரம் வழங்கப்பட்டு வந்தது. கிசான் விகாஸ் பத்திரம் வழங்குவதை 1-12-2011 முதல் மத்திய அரசு நிறுத்திவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், மத்திய அரசு கிசான் விகாஸ் பத்திரத்தை நிறுத்திவிட்டதைக் கருத்தில் கொண்டும்; 25 ஆண்டு காலம் அப்பழுக்கற்ற பணியினை முடித்த அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொண்டும்; இந்தத் தொகையை 500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்திடவும்; (மேசையைத் தட்டும் ஒலி) அதனை ரொக்கமாக வழங்கிடவும்; அவர்களது பணியினைப் பாராட்டி அரசு சார்பில் சான்றிதழ் வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2012 நவம்பர் 1] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இதுமட்டுமல்லாமல், தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு 5 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட 2,000 ரூபாய் பண்டிகை முன் பணத்தை 5,000 ரூபாயாக உயர்த்திடவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் அரசு அலுவலர்கள் தங்கள் கடமையை மேலும் செவ்வனே ஆற்ற வழி வகுக்கும் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

## (இ) தொழில் முதலீட்டை அதிகரிக்க புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட இருப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துயிர்பெற்று எழுச்சிபெறும் வகையிலும்; நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினைப் பெருக்கும் வகையிலும்; மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையிலும்; இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனும்; (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

தமிழகத்தை ஒரு திட்டமிட்ட நீண்டகால வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும்வண்ணம், 22-3-2012 அன்று "தொலைநோக்குத் திட்டம்-2023" என்ற திட்ட ஆவணத்தை நான் வெளியிட்டேன். அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் எதிர்பார்க்கப்படுகின்ற மொத்த உற்பத்தி வளர்ச்சியைக்காட்டிலும் 20 சதவிகிதம் அதிகமாக அதாவது, ஆண்டொன்றுக்கான மாநிலத்தின் மொத்த வளர்ச்சி 11 சதவிகிதம் அல்லது அதற்கு மேலாக இருக்க வேண்டும் என்பது இந்தத் தொலைநோக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்தொலைநோக்குத் திட்டத்தினைச் செயலாக்கும் விதமாக கடந்த 14-5-2012 அன்று 5 தொழில் நிறுவனங்களுடன் 5,700 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என் முன்னால் கையெழுத்திடப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் வேலைவாய்ப்பு பெறுபவர்களின் எண்ணிக்கை 9,530 ஆகும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 1

இதன் தொடர்ச்சியாக, 26-9-2012 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மேலும் 7 நிறுவனங்கள் தமிழகத்தில் முதலீடு செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன்படி,

1. உலகப் புகழ்பெற்ற அமெரிக்க நிறுவனமான பிபிஜி (PPG) நிறுவனத்துடன் இணைந்து ஹர்ஷா குரூப் நிறுவனங்கள் 4,100 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் தேர்வாய் கண்டிகையில் உள்ள சிப்காட் தொழிற் பூங்காவில் ஃபைபர் கிளாஸ் (Fibre Glass) மற்றும் ஃப்ளோட் கிளாஸ் (Float Glass) தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்கும். இதன்மூலம் 1,850 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.

2. தமிழகத்தின் பாரம்பரியமிக்க டி.வி.எஸ். குழும நிறுவனங்கள் தங்களுடைய வாகன உற்பத்திக்குத் தேவையான உதிரி பாகங்கள் மற்றும் இரப்பர் மற்றும் பிளாஸ்டிக் உப பொருள்களைத் தயாரிப்பதற்காக 700 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை, ஓசூர் மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளை விரிவுபடுத்தும். இதனால் சுமார் 1,300 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாகும்.

3. தமிழகத்தின் மற்றொரு முன்னணி தொழில் நிறுவனமான முருகப்பா குழுமம், இரும்பு குழாய்கள், வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உபபொருள்கள், சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் தயாரிப்பதற்கான உதிரி பாகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும்வகையில், 500 கோடி ரூபாய் முதலீட்டில் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தொழிற்சாலைகள் அமைக்க இருக்கிறது. இந்த முதலீட்டினால் சுமார் 1,130 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.

4. டென்மார்க் நாட்டைச் சேர்ந்த டான்ஃபாஸ் (Danfoss) நிறுவனம் தனது உற்பத்தி ஆலையினை தமிழகத்தில் அமைத்துள்ளது. தொழிற்சாலைகளுக்குத் தேவையான முக்கியமான இயந்திரங்களை உற்பத்தி செய்யும் இந்த நிறுவனம் தனது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வசதிகளைப் பெருக்கவும்; உற்பத்தியினை விரிவாக்கம் செய்யவும்; சென்னை ஒரகடத்தில் 500 கோடி ரூபாய் முதலீடு செய்ய இருக்கிறது. இதனால் சுமார் 1,200 பேர்கள் நேரடி வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள்.

5. உலகப் புகழ்பெற்ற சான்மினா (Sanmina-SCI) என்ற அமெரிக்க எலக்ட்ரானிக்ஸ் வன்பொருள் தயாரிப்பு நிறுவனம், Electronics Hardware Manufacturing Company, ஒரகடத்தில் உள்ள தங்களுடைய தொழிற்சாலையினை மேலும் விரிவாக்கம் செய்வதற்காக 250 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது. இதன்மூலம் சுமார் 1,500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.



2012 நவம்பர் 1] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முற்பகல் 11-35

6. உலகின் முன்னணி கைப்பேசி தயாரிப்பு நிறுவனமான நோக்கியா நிறுவனம் ஏப்ரல் 2005 ஆம் ஆண்டு இந்த அரசுடன் கையொப்பமிட்ட ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி தனது தயாரிப்பினை ஸ்ரீபெரும்புதூரில் தொடங்கி இதுவரை 1,380 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. இங்கு சுமார் 8,800 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிறுவனம் தற்போது மேலும் 250 கோடி ரூபாய் முதலீடு செய்ய முன்வந்துள்ளது. இதன்மூலம் கூடுதலாக 500 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.

7. அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட புகழ்பெற்ற வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனமான Alticor Incorporated என்று அழைக்கப்படும் ஆம்வே நிறுவனம் முதன்முறையாக தனது உற்பத்தியினை தமிழகத்தில் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் துவக்கவுள்ளது. இதன்மூலம் சுமார் 475 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

இவை மட்டுமின்றி, 27-10-2012 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மேலும் 5 நிறுவனங்களுக்கு தமிழகத்தில் முதலீடு செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டது என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி,

8. உலகின் நான்காவது மிகப் பெரிய கார் உற்பத்தி நிறுவனமான ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் இருங்காட்டுக்கோட்டையிலுள்ள தனது தொழிற்சாலையினை விரிவாக்கம் செய்வதற்காக 4,000 கோடி ரூபாய் முதலீடு செய்ய முன்வந்துள்ளது. இதன்மூலம் சுமார் 500 பேர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

9. இந்தியாவின் பெரிய பன்னாட்டு நிறுவனங்களில் ஒன்றான இந்தோ ராமா (Indo Rama) நிறுவனம் தனது பெட்ரோ கெமிக்கல்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 1

தொழிற்சாலை மற்றும் சிந்தட்டிக் ஃபைபர் (Synthetic Fibre) தயாரிப்பு தொழிற்சாலை ஆகியவற்றினை 4,500 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவ முன்வந்துள்ளது. சென்னை, எண்ணூர் மற்றும் கோயம்புத்தூர் அருகே அமையவுள்ள இந்தத் தொழிற்சாலைகளின்மூலம் சுமார் 500 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும். தமிழகத்தில் அமையவுள்ள முதல் பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலை இதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

10. பி.ஜி.ஆர். எனர்ஜி குரூப் (BGR Energy Group) என்ற இந்திய நிறுவனம் உலகப் புகழ்பெற்ற ஹிட்டாச்சி (Hitachi) நிறுவனத்துடன் இணைந்து 2,325 கோடி ரூபாய் முதலீட்டில் மின் உற்பத்தி நிறுவனங்களுக்குத் தேவையான டர்பைன்கள் (Turbines), ஜெனரேட்டர்கள் மற்றும் பாய்லர்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலையை காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், நெற்குணப்பட்டு கிராமத்தில் அமைக்கவுள்ளது. இதன்மூலம் சுமார் 2,400 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

11. கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் அருகே சுமார் 2,500 ஏக்கர் பரப்பளவில் 3,100 கோடி ரூபாய் முதலீட்டில் ஓர் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா அமைக்க Add Industrial Park என்ற நிறுவனம் முன்வந்துள்ளது. இதன்மூலம், முதலாம் ஆண்டில் சுமார் 2,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஏழாவது ஆண்டின் இறுதியில் இது சுமார் 25,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

12. பிரான்ஸ் நாட்டின் உலகப் புகழ்பெற்ற கண்ணாடி தயாரிப்பாளர்களான செயின்ட் கோபெயின் (Saint Gobain) நிறுவனம் தனது விரிவாக்கப் பணிகளுக்காக ஸ்ரீபெரும்புதூர் மற்றும் பெருந்துறையில் சுமார் 400 கோடி ரூபாய் முதலீடு செய்ய முன்வந்துள்ளது. இதன்மூலம் சுமார் 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மேற்படி 12 நிறுவனங்கள் 20,925 கோடி ரூபாய் அளவுக்கு தமிழ்நாட்டில் முதலீடு செய்யவிருப்பதால், 36,855 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும்; (மேசையைத் தட்டும் ஒலி) சுமார் ஒரு



2012 நவம்பர் 1] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இலட்சம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-40

மேற்படி 12 நிறுவனங்களுடன் 5 நவம்பர், 2012 அன்று எனது தலைமையிலான அரசு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையொப்பமிட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத் தொழில் துறை வரலாற்றிலேயே ஒரே நாளில் கையொப்பமிடப்படும் மிகப் பெரிய முதலீட்டுத் தொகை இதுவே என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. சட்டமன்றப் பேரவை வைரவிழா, அரசு ஊழியர்களுக்கு ரொக்கப் பரிசு—சான்றிதழ், பண்டிகை முன்பணம் உயர்த்துதல், புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடுதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு முத்தாய்ப்பாக மூன்று நல அறிக்கைகளை மாண்புமிகு போற்றுதலுக்குரிய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திற்கு ஈந்து உவந்தளித்திருக்கிறார்கள். முதலாவதாக, நம்முடைய வைர விழாவிற்குச் சிறப்பு சேர்க்கிற அந்த அறிவிப்பு. நாடு சுதந்திரம் அடைந்தபோது, அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட வேளையில், அரசியல் நிர்ணயக் குழுவிலே இத்தகைய மாநிலங்களுக்குள்ளான ஒரு மத்தியக் கூட்டாட்சி அமைந்தால் மாறுபாடுகள் விளையாதா என்ற ஒரு கேள்வி எழுந்தபோது, அரசியல் சட்டச் சிற்பியான பேரறிஞர் அம்பேத்கர் சொன்னார், 'வேற்றுமையிலே ஒற்றுமை காணுகிற உயரிய நோக்கோடுதான் இத்தகைய மத்திய கூட்டாட்சி முறை அமைகிறது' என்று சொன்னார்.

இன்றைக்கு தேசிய ஒருமைப்பாட்டின் சின்னமாக இருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாறுபடுகிறபோது மாறுபடுவேன், ஒன்றுபடுகிறபோது ஒன்றுபட்டு நிற்பேன் இந்தத் தேசத்தைக் காப்பதற்கு. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட அர்ப்பணிப்பு உணர்வோடு நான் என்னுடைய தியாக வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறேன் என்பதற்கு எடுத்துக்காட்டாக, நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களையும், நம்முடைய ஆளுநர் அவர்களையும் அழைத்து 60 ஆண்டு வைர விழாவிற்கு வைரத்திலே முத்துக்களைச் சேர்ப்பதுபோல, முத்துக்களைச் சேர்த்திருக்கிற நம்முடைய தமிழர்களின் முத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் நெஞ்சார வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'வேற்றுமையிலே ஒற்றுமை' என்கிற அந்தச் சித்தாந்தத்தின் இலக்கணமாக இன்றைக்கு இருப்பவர் நம்முடைய தென்னகத்து தமிழக முதலமைச்சர் வீராங்கனை புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்கள். வேறுபடுகிறபோது வேறுபடுவார், மாறுபடுகிறபோது மாறுபடுவார். இந்தத் தேசம் காக்கப்படவேண்டும், இந்தத் தேசத்தின் ஒற்றுமை போற்றப்படவேண்டும் என்கிறபோது ஒற்றுமைக்குக் குரல் கொடுக்கிற முதல் நபராக இங்கிருந்து ஒரு குரல் வருகிறது என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குரலுக்குரியவராக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலே இருக்கிற பல இலட்சம் அரசு ஊழியர்களுக்கு நான் பாதுகாவலனாக இருப்பேன், பாராட்டக்கூடியவராக இருப்பேன் என்கிற வகையிலே 25 ஆண்டுக்காலம் பணிபுரிந்த அரசு ஊழியர்களுக்கு 5,000 ரூபாய் கொடுத்து, அந்த 5,000 ரூபாய் என்பதுகூட ஒரு தொகையல்ல, அதோடு ஒரு சான்றிதழையும் கொடுத்து பாராட்டுகிற ஒரு பாங்கு இருக்கிறதே, அந்தப் பாங்கை நான் பாராட்டியாக வேண்டும். 25 ஆண்டுக்காலம் பணியாற்றிய அவர்களிடம் எதிர்பார்ப்பு என்று ஒன்றிருந்தால், அது அரசாங்கம் தருகிற மதிப்பாய், பாராட்டாய் இருக்கும். அந்த மதிப்பையும், பாராட்டையும் தருகிறவகையிலே பல இலட்சம் ஊழியர்களுக்கு இன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு பெருமை சேர்த்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





அதைப்போன்றே, அம்மா அவர்களின் கடந்த ஆட்சிக் காலத்திலே தொழில் துறையிலே அவர்கள் ஏற்படுத்திய புரட்சியினால்தான் இன்றுவரையிலே, இந்தியாவிலே சென்னை என்பது ஒரு ஆட்டோமொபைல் சிட்டி, மும்பை என்பது எப்படித் தங்கத்திற்கு தரம் நிர்ணயிக்கிற, தங்கத்தின் விலையை நிர்ணயிக்கிற நகரமாக இருக்கிறதோ, டில்லி என்பது ஆட்சி அதிகாரத்திற்கு ஒரு அடையாளமாக இருக்கிறதோ, அதைப்போல, சென்னை என்றால் இன்றைக்கு ஆட்டோமொபைல் சிட்டி என்று இந்தியா மட்டுமல்ல, உலகத் தொழில் அரங்கம் பாராட்டுகிற அளவிற்கு இது ஒரு கார் சிட்டியாக இருக்கிறது என்றால், அதற்கு வித்திட்டவர் ஏற்கெனவே முதலமைச்சராக இருந்த நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்தியாவின் மிகப்பெரிய தொழில் நகரமாக, இந்த சென்னையும், தமிழகமும் வருகிற அளவிற்கு ஏறக்குறைய 30,000 கோடி ரூபாய்க்கு மேலே முதலீடு, ஏறக்குறைய 12 மிகப்பெரிய தொழிற்சாலைகள் தரம் வாய்ந்த, சர்வதேசத் தரம் வாய்ந்த பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்குகிற தொழிற்சாலைகள். அதற்குமேலே 30,000 பேருக்கு நேரடிப் பணி. மேலும், அவற்றின்மூலமாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட துணைத் தொழில்கள் அமைகிற அந்த வாய்ப்பு. இதனால் பல இலட்சம் குடும்பங்கள் பலனடையும் அளவிற்கு தமிழர்களினுடைய தரம் உயரும் அளவிற்கு இன்றைக்கு அற்புதமான மூன்று அறிவிப்புகளைத் தந்திருக்கிற நம்முடைய முத்தமிழ் வித்தகர் முதலமைச்சர் அம்மா அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், பாராட்டி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

முற்பகல் 11-45

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதிநிலை அறிக்கைக்கான மானிய விவாதக் கூட்டங்களிலே தொடர்ந்து அந்நிய பெரு நிறுவனங்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களைத் தமிழகத்திலே முதலீடு செய்வதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆயிரக்கணக்கான கோடிகளை நம்முடைய தமிழ் மண்ணிலே தொழில் நிறுவனங்களை நிறுவுவதற்காக பெற்று தந்து, இலட்சக்கணக்கான படித்த, வேலைவாய்ப்பில்லாத

[திரு. உ. தனியரசு] [2012 நவம்பர் 1

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தந்து, மகிழ்ந்து, அது நடைமுறையிலே செயல் வடிவம் பெற்று வருகிற சூழ்நிலையில், இன்று விதி 110-இன்கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த வைர விழா காணுகின்ற ஆண்டிலே, வருகின்ற 30-11-2011-லே, மாண்புமிகு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அழைப்பை ஏற்று, வைர விழா நிகழ்ச்சிக்குச் சிறப்புச் சேர்ப்பதற்கு அவர்கள் தங்கள் இசைவைத் தெரிவித்துள்ள செய்தி, நம் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி.

அதுபோன்று, பல்வேறு தனியார் நிறுவனங்கள் குறிப்பாக, டி.வி.எஸ். குழுமம், முருகப்பா குழுமம், அதுபோன்று டென்மார்க், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளைச் சேர்ந்த தனியார் நிறுவனங்கள் கோடிக்கணக்கான ரூபாய்களை நம்முடைய தமிழ் நிலத்திலே முதலீடு செய்கிறார்கள். இங்கு அவர்கள் தொழில் தொடங்குவதற்குக் காரணம், சட்டம்-ஒழுங்கு பேணிப் பாதுகாக்கப்பட்டு, அமைதியாக தொழிலை நடத்துவதற்கு ஏதுவான மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம்தான்; அது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகிற தமிழகம்தான் என்பதை உணர்ந்துதான் (மேசையைத் தட்டும் ஒலி) தயக்கமில்லாமல் நம்முடைய தமிழ் மண்ணிலே தொழில் நிறுவனங்களைத் தொடங்கி கோடிக்கணக்கான முதலீடுகளை தந்திருக்கிறார்கள். இந்த முதலீடுகளின் வழியாக இந்த 12 நிறுவனங்களின்மூலம் சுமார் 20,000 கோடி ரூபாய்க்குமேல் முதலீடுகளைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதுபோன்று, நேரடியாக 35,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, சுமார் ஒரு இலட்சம் இளைஞர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பைப் பெற்று தந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நான் நன்றி பாராட்டுகிறேன்.

அரசு பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்புக் காலம் 3 மாதம் என்றிருந்ததை, 6 மாதங்களாக ஏற்கெனவே உயர்த்தி, அரசுப் பணியாளர்களின் நெஞ்சிலே பால் வார்த்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோன்று, 25 ஆண்டு காலம் அப்பழுக்கு இல்லாமல் பணியாற்றிய அரசுப் பணியாளர்களுக்கு ஏற்கெனவே 'கிசான் விகாஸ்' பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்டு வந்த ரூ.500/-யை மத்திய அரசு



2012 நவம்பர் 1] [திரு. உ. தனியரசு]

நிறுத்திவிட்டதால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை ரூ.2,000/- ஆக, ரொக்கமாக தந்து, அரசு சான்றிதழும் தந்து கௌரப்படுத்தியிருப்பது தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றில், அரசுப் பணியாளர்களுக்கு அவர்களுடைய நேர்மையை, அவர்களுடைய உழைப்பை, அவர்களுடைய கடமை உணர்வைப் பாராட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) ஊக்கப்படுத்துகிறவிதமாக, அப்படிப்பட்ட பாராட்டுதலை தந்து, கௌரப்படுத்தியிருப்பதற்காகவும் நான் நன்றி பாராட்டுகிறேன்.

அதுபோன்று, வருகின்ற தீபாவளி திருநாளில், ரூ.2,000/- ஆக இருந்த பண்டிகை முன்பணத்தை ரூ.5,000/- ஆக உயர்த்தி, இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களுக்கு மீண்டும் ஒரு இனிப்பான செய்தியைத் தந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும், மீண்டும் நன்றி பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன் நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்றத்திலே இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-இன்கீழ் மூன்று முத்தான அறிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1952-ல் அமைக்கப்பட்ட சட்டமன்றத்தின் 60 ஆண்டு வைர விழாவினைச் சிறப்பாக நடத்த வேண்டுமென்று இந்திய நாட்டின் ஜனாதிபதி அவர்களையும், தமிழக ஆளுநர் அவர்களையும் தலைமையேற்று நடத்த வேண்டுமென்று அழைத்ததற்கிணங்க அவர்களும் வர இசைவளித்துள்ளார்கள் என்கின்ற ஒரு சிறப்பான அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். அதை மனமாரப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

அதேபோன்று, அரசுப் பணி என்பது சிறந்த பணி என்பதை அரசு ஊழியர்களுக்கு உணர்த்துகின்ற வகையிலே, Government work is a God's work என்று அரசு அதிகாரிகள் உணர்கின்ற வகையிலே, அவர்கள் சிறந்தவர்களாக வர வேண்டும், சிறந்த பணியை அரசுக்குத் தர வேண்டுமென்ற நல்ல சிந்தனையோடு, 25 ஆண்டுகள் அப்பழுக்கற்ற பணியினை முடித்த அரசு ஊழியர்களுக்கு 500/- ரூபாய் மதிப்பில் வழங்கப்பட்டு வந்த கிசான்

[திரு. பி.வி. கதிரவன்] [2012 நவம்பர் 1

*விசாஸ் பத்திரத்திற்குப் பதிலாக அதை ரூ.2,000/- ஆக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அதுவும் ரொக்கமாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். இதுபோன்ற பல சலுகைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர்த்தித் தந்திருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக மாற்ற வேண்டுமென்பதற்காக 12 பன்னாட்டு நிறுவனங்களை ரூ.20,000 கோடிக்குமேல் முதலீடு செய்ய வைத்த பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு உண்டு என்பதைப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-50*

*ஏனென்றால், தமிழகத்தில்—அமைதியான தமிழகத்தில்—இந்தியாவில் அமைதியான தமிழகத்தில்—வெளிநாட்டினர் இங்கு வந்து முதலீடு செய்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் சிறப்பான வகையில் வசதிகளைச் செய்து கொடுத்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற அரசாக, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருப்பதுதான் காரணம். அந்த வகையில், இன்றைக்கு வெளிநாடுகளிலிருந்து ரூ.20 ஆயிரம் கோடி வரை முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. அதன்மூலமாக, கிட்டத்தட்ட 36 ஆயிரம் பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 1 இலட்சம் பேர்களுக்கு மறைமுகமான வேலைவாய்ப்பும் அளிக்கின்ற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நல்ல திட்டங்களை இன்றைக்குச் சட்டமன்றத்தில் அறிவித்திருப்பதற்கு, எங்கள் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் மனமாரப் பாராட்டி அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

**திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறவிருக்கின்ற சட்டமன்றப் பேரவை வைர விழாவிலே, இந்தியாவினுடைய குடியரசுத் தலைவர் அவர்களும், ஆளுநர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கவிருக்கும் நிலையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் தலைமையிலே இருக்கின்ற இந்த அரசில், இந்தச் சட்டமன்றத்தில் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் நாங்களும் பங்கு பெற்றிருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.*



2012 நவம்பர் 1] [திரு. ஆ. நாராயணன்]

*அதைப்போல, அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்கு ஏதுவாக, கடன் தொகையை ரூபாய் 15 இலட்சத்திலிருந்து, ரூபாய் 25 இலட்சமாக உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். அதேபோன்று, அரசு பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு காலத்தில் 3 மாத கால விடுப்பு என்றிருந்ததை, 6 மாத காலமாக உயர்த்தி சலுகை வழங்கியிருக்கின்றீர்கள்.*

*அதுமட்டுமல்லாமல், 12 வெளிநாட்டு நிறுவனங்கள், 20,935 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழகத்தில் தொழில் தொடங்க வாய்ப்புகளை ஏற்படுத்தியதுடன், 36,855 ஆயிரம் பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 1 இலட்சம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கின்ற வகையில் அந்தத் தொழிற்சாலைகள் தமிழகத்திற்கு வருவதற்குக் காரணமாக இருந்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதுமட்டுமல்லாமல், அந்த நிறுவனங்கள் தமிழகத்திற்கு வருவதற்குக் காரணம், தமிழகம் இன்றைக்கு ஒரு அமைதிப் பூங்காவாக இருப்பதுதான். இந்தியாவிலே எங்கே சட்டம்-ஒழுங்கு ஒழுங்காக இருக்கின்றதோ, அங்கேதான் வெளிநாட்டிலிருந்து தொழில்கள் தொடங்க முன்வருவார்கள். அந்த வகையில் இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வாழ்த்துகளைக் கூறிக்கொள்கிறேன்.*

*“பசி எடுத்தால், பாலை வார்க்கும் முகராசி; கால்பட்ட இடத்தை விளங்க வைக்கும் மகராசி; தொட்டதையெல்லாம் துலங்க வைக்கும் கைராசி; (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தொல்லைகளைத் தீர்க்க வந்திருக்கும் மகராசி” என்று வாழ்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் வைர விழாக் கொண்டாட்டங்களுக்கு பாரத நாட்டின் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களை அழைத்து,*

[திருமதி எஸ். விஜயதரணி] [2012 நவம்பர் 1

மேதகு ஆளுநர் அவர்களின் தலைமையில் அவ்விழாவை நடத்தவிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, அப்பழுக்கற்ற அரசு ஊழியர்களுக்கு cash award மற்றும் சான்றிதழ்கள் வழங்குவது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். அதேபோன்று, தொழில் துறையில் 12 வெளிநாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து, அதன்மூலம், 20,925 கோடி ரூபாய் முதலீட்டினைத் தமிழகத்திற்கு ஈர்த்தும், 36 ஆயிரம் பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு மற்றும் 1 இலட்சம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கவிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை காங்கிரஸ் கட்சியின் சார்பாக மனமாரப் பாராட்டுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 300 ஆண்டுகளாக அடிமை இந்தியாவில் அன்னிய ஏகாதிபத்தியத்தின் சின்னமாக இருந்த இந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டை, மக்களுடைய எழுச்சிகரமான போராட்டத்தால், எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாத தியாகத்தால், 1947 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 15 ஆம் தேதி சுதந்திரம் கிடைத்ததற்குப் பின்னால், இன்றைக்கு ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டு, அறுபது ஆண்டுக் கால வரலாற்றை இந்தத் தமிழகச் சட்டமன்றம் பெற்றிருக்கிற சாதனையைப் படைத்திருக்கிறது.

தமிழக அரசியலில் எத்தனையோ ஏற்ற, இறக்கங்கள், மாற்றங்கள் உருவாகியிருந்தாலும், தமிழகத்திலே ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு பாடுபட்டிருக்கிறோம்; அதை நிலைநாட்டுவதிலே நாம் அர்ப்பணிப்பு உணர்வோடு ஈடுபட்டிருக்கிறோம் என்பதை நினைவுபடுத்துகிற விழாவாக, நவம்பர் 30 ஆம் தேதி நடைபெறவிருக்கிற விழாவை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நாங்கள் வரவேற்கின்றோம்.



2012 நவம்பர் 1] [திரு. சு. குணசேகரன்]

முற்பகல் 11-55

எங்களுடைய ஆலோசனையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எப்படி நமது தமிழக முதல்வர் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த விழாவில் பங்கெடுக்க வேண்டுமென்று அன்போடு அழைத்தார்களோ, அதைப்போல, இந்த விழாவை அரசியல் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, இந்த விழாவில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்து, அனைத்து சட்டமன்றக் கட்சி உறுப்பினர்களையும் இணைத்து, விழாக் குழுவினை அமைத்து, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு நினைவுப் பரிசுகளையெல்லாம் வழங்கி கௌரவிக்கிறவிதமாக, இந்த விழாவை தமிழக மக்கள் ஒன்றுபட்டு கொண்டாடுகிற ஒரு ஜனநாயக விழாவாக நாம் நடத்திட வேண்டும். அதன்மூலமாக, தமிழகத்தில் ஒரு புதிய ஜனநாயக பாரம்பரியத்தை, பரிமாணத்தை உருவாக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, அரசு ஊழியர்கள், ஆசிரியப் பெருந்தகைகளுக்கு அளித்திருக்கின்ற பல்வேறு சலுகைகளையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்று அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நமது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், விதி 110-ன்கீழ் அறிவித்த அறிவிப்புகள் இந்திய வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலேயே, ஒரே நாளில் 20,925 கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்டு வந்து, தமிழகத்தில் ‘ஒரு பொற்காலம்’ என்று சொல்லுகின்ற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிப்பு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைய தினம் அறிவித்திருக்கின்ற அறிவிப்பின் வாயிலாக ‘உலக அளவிலேயே தொழில் துவங்குவதற்கு தமிழகம்தான் சிறந்த இடம்’ என்பது உலகுக்கு உணர்த்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பன்னாட்டுக் கம்பெனிகள், பன்னாட்டுக் கம்பெனிகள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் மத்தியில், உள்நாட்டுக் கம்பெனிகளுக்கும், பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு வழங்கப்படும்

[திரு. பி. தங்கமணி] [2012 நவம்பர் 1

சலுகைகள் உண்டு என்கிற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் அறிவிப்பு செய்திருக்கின்றார்கள் என்று சொன்னால், இன்றையதினத்திலிருந்தாவது அப்படிப் பேசுகின்றவர்கள் எல்லாம் புரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள், யாரெல்லாம் 350 கோடி ரூபாய்க்குமேல் முதலீடு செய்கின்றார்களோ, அத்தனை பேருக்கும் அந்தச் சலுகைகள் உண்டு என்பதை நிரூபிக்கின்ற வகையில் இன்றையதினம் அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது 'தமிழக வரலாற்றில் ஒரு மைல் கல்' என்றுதான் நாம் சொல்ல வேண்டும். ஏனென்று சொன்னால், ஒரேயொரு நாளில் 20,925 கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். பக்கத்து மாநிலத்தைப் பார்ப்போமானால், ஒரு ரூபாய்க்கு ஒரு ஏக்கர் நிலம் கொடுக்கிறோம் என்று சொல்லுகின்ற, ஒரு போட்டி நிறைந்த உலகத்திலே, இன்றையதினம் உலக அளவிலே இருக்கின்ற சந்தை நிலைமையைப் பார்ப்போமேயானால், பொருளாதாரம் இன்றையதினம் வீழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது. ஆனால், அந்தப் பொருளாதாரம் வளர்ச்சி அடைய வேண்டுமானால், உற்பத்தித் துறையில் அதிக அளவு முதலீடு செய்ய வேண்டும்; ஏற்றுமதி செய்வது அதிகரித்து, இறக்குமதி செய்வது குறைந்தால்தான் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் உணர்ந்து, இந்த முதலீட்டை இன்றையதினம் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு பொருளாதாரத்தை எப்படி வளர்ச்சியடையச் செய்வது என்று இன்றையதினம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. அந்த ஆலோசனைக்கு எல்லாம் இடமில்லாமல், கூடிய விரைவில் மாண்புமிகு அம்மா அவர்களே அந்த ஆலோசனை வழங்குகின்ற இடத்திலே அமருவார்கள் என்பதற்கு இன்றையதினம் எடுத்துக்காட்டாக இருக்கின்றது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு நாட்டிலே ஒரு பிரச்சினை என்று சொன்னால், அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு வேலைவாய்ப்பு இல்லை; படித்த இளைஞர்களுக்கு வேலை இல்லை என்று மற்ற பிரச்சினைகளைச் சொல்வார்கள். ஆனால், கடந்த ஒன்றரை ஆண்டு கால அம்மா அவர்களுடைய ஆட்சியில், கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து எழுபதாயிரம் பேருக்கு அரசு உத்தியோகம் கொடுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள், நேற்று



2012 நவம்பர் 1] [திரு. பி. தங்கமணி]

முன்தினம் 'தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படை'-க்கு வருடத்திற்கு பத்தாயிரம் இளைஞர்வீதம் ஐம்பதாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், ஏற்கெனவே 5,600 கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்டு வந்தபோது, 9,530 பேருக்கு வேலைவாய்ப்பும், இன்றையதினம் 36,855 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், ஒரு இலட்சம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கொடுத்திருக்கின்றார்கள் என்று சொன்னால், இத்தனை குடும்பங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலாவது ஒன்றரை ஆண்டு காலத்தில் இவ்வளவு வேலைவாய்ப்பைக் கொடுத்திருக்கின்றார்களா என்பதை இங்கு இருக்கின்ற அத்துணை பேரும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இது சாதாரண காரியம் அல்ல. தமிழகத்திலே அம்மா அவர்கள், கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்து, இரண்டு இலட்சம் குடும்பங்களைக் காப்பாற்றி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இதன்மூலமாக மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழக இளைஞர்கள் எல்லாம் வாழ்க்கைப் பாதை மாறி செல்வதைத் தடுத்து, ஒரு சமுதாயச் சீரழிவுக்குச் செல்வதைத் தடுத்து, ஒரு நல்வழிப் பாதையை அமைத்து இருக்கின்றார்கள். அந்தக் குடும்பங்கள் எல்லாம் அம்மா அவர்கள் நீண்ட ஆண்டுக் காலம் வாழ வேண்டுமென்று வாழ்த்திக் கொண்டிருக்கின்றன. அவர்களுடன் சேர்ந்து, நானும், அம்மா அவர்கள் நீண்ட ஆயுளோடு பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென்று வாழ்த்தி, அம்மா அவர்களை வணங்கி, விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்லின் வேண்டாத பகுதிகளை சிற்பியின் உளி உதறும்போது சிலை தரிசனம் தருவதுபோல, தீய சக்தியை நீர்த்துப் போக வைத்து, நாளைய இளைஞர்களுக்கு நம்பிக்கை என்னும் ஒளியைத் தந்து, தமிழகத்தை புதிய பார்வையோடு செதுக்குகிறார் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அயராத நடவடிக்கைகளினால் மிகக் குறைந்த செலவில் திறமைமிக்க மனித ஆற்றல் கிடைப்பதுடன், நல்லிணக்கமும், அமைதியான தொழில்

உறவுகளும் நிலவுகின்றன. தமிழ்நாடு நல்ல உட்கட்டமைப்பு வசதிகளை தொழில் முதலீட்டாளர்களுக்கு அளிக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் நடவடிக்கைகளால் வலுவான, சாதகமான சூழல் நிலவுவதால், முதலீட்டாளர்கள் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. உற்பத்தித் துறையிலே 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக, 20,925 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்க்க அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். சுமார் 37 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறும் வகையிலே அறிவிப்புச் செய்துள்ளார்கள்.

அரசுப் பணியாளர்களின் நலன் காக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறார்கள். 18 இலட்சம் அரசுப் பணியாளர்கள் மகிழத்தக்க வகையில் கடந்த 5-10-2012 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 1,443 கோடி அளவிற்கு அகவிலைப் படி உயர்வு வழங்கினார்கள். தற்போது அரசுப் பணியாளர்கள் மனம் மேலும் குளிரும் வகையிலே இந்த அறிவிப்பினை இன்று வழங்கி மகிழ்ச்சிக் கடலிலே ஆழ்த்தி இருக்கிறார்கள். மூன்று அறிவிப்புகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்குக் கொடுத்துள்ளார்கள். முத்தாய்ப்பாக வைர விழா குறித்த மிக முக்கிய அறிவிப்பினையும் கொடுத்து, வைர விழா சிறப்பாக நடைபெறுவதற்கு சிறப்பாக எங்களுக்கு நல்ல ஆலோசனைகளை அம்மா அவர்கள் வழங்கி, விழாவைச் சீராக, சிறப்பாக நடத்துவதற்குப் பெரிய ஆதரவு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 3 அறிவிப்புகளைத் தந்த மக்களின் மாபெரும் சக்தியாக விளங்கும் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) தென் மாவட்டங்களில் அமைதியை நிலைநாட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய தென் மாவட்டப் பிரச்சினைகளுக்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் இப்பொழுது பதில் வழங்குவார்கள்.





**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் 28-10-2012, 29-10-2012 மற்றும் 30-10-2012 ஆகிய மூன்று நாட்கள் 105-வது தேவர் திருமகன் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி மற்றும் 50-வது குரு பூஜையை முன்னிட்டு பசும்பொன்னிலும் மற்றும் மாவட்டத்தின் இதர பகுதிகளிலும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தென் மண்டல காவல் துறைத் தலைவர் தலைமையில் 2 காவல் துறை துணைத் தலைவர்கள், 18 காவல் கண்காணிப்பாளர்கள், 15 தமிழ்நாடு சிறப்புக் காவல் படை நிறுமங்கள் உட்பட 6 ஆயிரம் காவல் ஆளினர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மாவட்டம் முழுவதும் சோதனைச் சாவடிகள் அமைத்தும், நெடுஞ்சாலைகளில் ரோந்து ஏற்பாடுகள் செய்தும் முக்கிய கிராமங்களில் காவல் பாதுகாப்பும் அளிக்கப்பட்டிருந்தது.

தேவர் ஜெயந்தி மற்றும் குரு பூஜை 28-10-2012 அன்று காலை பசும்பொன்னில் துவக்கப்பட்டு நடந்து வந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் தேவர் சமாதியில் மரியாதை செலுத்தி வந்தனர். 28-10-2012 மற்றும் 29-10-2012 ஆகிய நாட்களில் தேவர் ஜெயந்தி தொடர்பான நிகழ்ச்சிகள் அனைத்தும் அமைதியாக நடந்து முடிந்தன.

30-10-2012 அன்று காலை தேவர் சமாதியில் பூஜைகள் துவக்கப்பட்டு, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் மரியாதை செலுத்தி வந்தனர். சாலை ஓரங்களில் உள்ள கிராமங்களின் தன்மையைக் கருத்தில்கொண்டு, வாகனங்கள் செல்ல சில வழித்தடங்கள் மாவட்ட நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தன. வேறு பாதைகளில் செல்வது தடுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், 30-10-2012 அன்று மேலப்பெருங்கரை கிராமத்தைச் சேர்ந்த சிலர், ஒரு வேனில் அனுமதிக்கப்படாத சாலையில் பயணித்து, பாம்புவிழுந்தான் என்ற கிராமத்திற்குள் நுழைந்தபோது, அங்கிருந்தவர்கள் தங்கள் ஊருக்குள் நுழைந்ததை எதிர்த்து வண்டியைத் தடுத்துத் தாக்கியதில், வண்டியில் இருந்தவர்கள் தப்பி ஓடினர். நரிக்குடியைச் சேர்ந்த வண்டியின் ஓட்டுநர் சிவகுமார் என்பவர் இச்சம்பவத்தில் உயிரிழந்தார். இதுகுறித்து எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 1

இதேபோன்று, அன்று மதியம் சுமார் 2 மணியளவில் பரமக்குடி நகர காவல் நிலையம், பொன்னையாபுரம் வழியாக இரு சக்கர வாகனத்தில் சென்ற இருவரை, அப்பகுதியைச் சேர்ந்த சிலர் அனுமதி மறுக்கப்பட்ட தங்கள் பகுதி வழியாகச் சென்றதற்காக எதிர்ப்புத் தெரிவித்துத் தாக்கியதில், அவ்விரு நபர்களும் உயிரிழந்தனர். இது தொடர்பாக பரமக்குடி நகர காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பரமக்குடியில் மாலை 5 மணிக்குக் கூடியவர்கள் சுமார் 1,000 பேரை காவல் துறையினர் கலைந்து செல்லுமாறு அறிவுரை அளித்தும், கலையாமல் இருந்தவர்களை குறைந்தபட்ச பலத்தை உபயோகித்தும் கலைத்தனர்.

பிற்பகல் 12-05

30-10-2012 அன்று இரவு, மதுரை மாவட்டம், எஸ்.புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பசும்பொன்னில் உள்ள தேவர் சமாதியில் மரியாதை செலுத்திவிட்டு, டாட்டா சுமோ வாகனத்தில் திரும்பிச் சென்று கொண்டிருந்தனர். அவ்வாகனம் மதுரை அவனியாபுரம் காவல் நிலையம், சிந்தாமணி சோதனைச் சாவடி அருகே இரவு சுமார் 9.00 மணி அளவில் சென்று கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் அவ்வாகனத்தை நிறுத்தியதன் பேரில், வாகன ஓட்டுனர் வாகனத்தை நிறுத்தியுள்ளார். அப்போது, அந்நபர்கள் திடீரென எரியூட்டப்பட்ட பெட்ரோல் நிரப்பிய புட்டிகளை அந்த வாகனத்தினுள் எறிந்துள்ளனர். உடனே, வாகனம் தீ பற்றி எரிந்துள்ளது. அவ்வாகனத்தில் பயணம் செய்து வந்த 20 நபர்கள் வாகனத்திலிருந்து இறங்குவதற்குள் தீக்காயம் அடைந்தனர். இச்சம்பவத்தில், வாகனம் முழுமையாக சேதம் அடைந்தது.

தகவலறிந்த காவல் துறையினர், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, காயமடைந்த 20 நபர்களையும் உடனடியாக மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். காயமடைந்தவர்கள் மதுரை அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுள் 11 நபர்கள் 50 சதவிகிதத்திற்கும் மேலாக தீக்காயம் அடைந்துள்ளனர்.



2012 நவம்பர் 1] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இச்சம்பவம் தொடர்பாக, காவல் துறையினர் அவனியாபுரம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இது தொடர்பாக மூன்று நபர்களைப் பிடித்து காவல் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

மதுரை சரக காவல் துறை துணைத் தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் உடனடியாகச் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

இச்சம்பவங்களையடுத்து, அப்பகுதிகளில் உடனடியாக பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. பசும்பொன் குரு பூஜை நிகழ்ச்சிகள் அமைதியாக நடந்து முடிந்தன.

மேற்படி சம்பவங்களில் தொடர்புடையவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த திரு. வீரமணி, திரு. மலைக்கண்ணன் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சிவக்குமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஐந்து இலட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இதேபோன்று, மிக பலத்த தீக்காயம் அடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், தீக்காயம் அடைந்தவர்களுக்கு தலா 50,000 ரூபாயும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு உயர்தர சிகிச்சை அளிக்குமாறு மாவட்ட நிர்வாகத்திற்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இதுமட்டுமல்லாமல், உயிரிழந்தவர்களின் குடும்பங்களைச் சார்ந்த ஒருவருக்கு, அவர்களுடைய கல்வித் தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரடியாக கண்காணித்து வருகிறார். அப்பகுதி முழுவதும் அமைதி நிலவுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இங்கே பேசும் எதிர்க்கட்சி மாமன்ற உறுப்பினர்கள், தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள் பரவிக் கொண்டிருக்கின்றன என்பது போன்ற

வாசகங்களை அன்பு கூர்ந்து பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாவட்டங்களில், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் முழுமையான அமைதி நிலவுகிறது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்த தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை விதி 120-ன்கீழ் உறுப்பினர் ஒருவரது நடத்தை மிகவும் ஒழுங்கீனமானது என பேரவைத் தலைவர் கருதினால், அவரை உடனடியாக அவையிலிருந்து வெளியேறுமாறு ஆணையிடலாம். அவ்வாறு பணிக்கப்பட்டால், அதாவது அவர் வெளியேற்றப்பட்டால், அவர் அன்றையதினம் கூட்டத்திற்கு வர இயலாது. உறுப்பினரை ஒரே கூட்டத் தொடரில் இரண்டாவது முறையாக அவ்வாறு வெளியேற்றினால், அவரை அந்தக் கூட்டத் தொடரில், நடக்க இருக்கும் கூட்டங்களுக்கு வராமல் இருக்குமாறு ஆணையிடலாம். இந்த விதியின் அடிப்படையில் இன்று அவைக்கு வந்திருந்த தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டாவது முறையாக வெளியேற்றப்பட்டுள்ளதால், அவர்கள் நாளையதினம் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாது என ஆணையிடுகிறேன்.*

## 7. அறிக்கை அளித்தல்

### சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *குழுக்களின் அறிக்கை அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர்.*

*பிற்பகல் 12-10*

***திரு. ஞா. செந்தமிழன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம் நித்தம் நாங்கள் போற்றி வணங்குகின்ற, எங்களுடைய அன்னையாய், ஆசானாய் விளங்குகின்ற இதய*





*தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலடியில் என் வாழ்நாள் முழுவதும் பணி செய்து கிடப்பதே என் பிறவிப் பயன். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய சிரம் தாழ்த்தி தலை வணங்கி கோடானுகோடி நன்றிகலந்த வணக்கத்தை உரித்தாக்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2012-2013 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 நவம்பர் 1

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (உ) தமிழ்நாடு நகர்–ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2012 நவம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஊ) அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 1

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*பிற்பகல் 12-15*

**(எ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 நவம்பர் 1]

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஏ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஐ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2012 நவம்பர் 1

*__மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

__மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஒ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2012 நவம்பர் 1]

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

__மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஓ) தமிழ்நாடு மீன் வள பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வள பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வள பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 நவம்பர் 1

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஔ) தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.



2012 நவம்பர் 1]

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (அஅ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*பிற்பகல் 12-20*

## 9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012-2013, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012-2013 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

***டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மம் நீங்கள் அம்மா, எம் அறிவும், தெரிவும் நீங்கள் அம்மா! உடற்கண் வாழ்ந்திடும் உயிரும் நீங்கள் அம்மா, தோளிடை வன்பு நீங்கள் அம்மா, நெஞ்சகத்து அன்பு நீங்கள் அம்மா, ஆலயம்தோறும் அணிபெற விளங்கும் தெய்வச் சிலைபோல், குவலயம் விளங்க கொள்கை கொண்ட கோமகள் நீங்கள் அம்மா, எந்தையும் தாயும் எம் சிந்தையெல்லாம் நிறைந்திருக்கும் தாயே! *(மேசையைத் தட்டும் ஒலி)* முந்தையர் ஆயிரம் ஆண்டுகளில் கண்டிராத முழுமுதற் தலைவியாம் எங்கள் தாயே! சிந்தையில் ஆயிரம் எண்ணமாய் வளர்ந்து சிறந்த எங்கள் தாயே! இதை வந்தனைகூறி மனதில் இருத்தி வாயுற வாழ்த்தேனோ; என்றும் அம்மா வாழ்க, அம்மா வாழ்க எனக் கூறி வணங்கேனோ, என் பிறவிப் பயன் அடைவேனோ! வன்மையிலே, உளத் திண்மையிலே மனத் தன்மையிலே, மதி நுண்மையிலே, உண்மையிலே தவறாத ஒரே தலைவி கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாத மலர் பணிந்து என் உரையைத் துவங்குகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் அண்ணல் காந்தி பிறந்ததால் அஹிம்சை பிறந்தது என்பார்கள்; புத்தர் பிறந்ததால் போதனை பிறந்தது என்பார்கள்; நாட்டில் நபிகள் பிறந்ததால் நேசம் பிறந்தது என்பார்கள்; அண்ணா பிறந்ததால் அன்பு பிறந்தது என்பார்கள்; அன்னை தெரசா பிறந்ததால் கருணை பிறந்தது என்பார்கள்; எங்கள் அம்மா ஒருவர் பிறந்ததால் மட்டும்தான் அனைத்தும் ஒன்றாய்ப் பிறந்தது என்பேன் நான். *(மேசையைத் தட்டும் ஒலி)*





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறண்டு, சுருங்கி, காய்ந்து, கருகி, பாளம் பாளமாய் வெடித்துக் கிடந்த தமிழர்தம் வாழ்வில் அமுத மழை பொழியும் தெய்வமாக வந்தவர்தான் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். முத்தமிழின் சுவையாக, முழு நிலவின் அழகாக, முப்பெரும் தேவியரின் ஒருங்கிணைந்த சக்தியாக, அசைக்க முடியாத மன உறுதி, அளப்பரிய மனித நேயம், சீரிய சிந்தனை, தொலைநோக்குப் பார்வை, அறிவின் ஊற்றுக்கண், செயலாற்றலின் அடையாளம், இந்திய தேசத்தின் வருங்காலத்தை நிர்ணயிக்கப்போகும் மக்கள் சக்தி, நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னாலே *(மேசையைத் தட்டும் ஒலி)* வல்லரசு நாடுகளின் வரிசையில் இந்தியாவை நிலை நிறுத்தப்போகும் எங்கள் மகாசக்தி, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே எங்கெங்கு காணினும் திட்டங்கள், எல்லாத் துறையிலும் திட்டங்கள் என திட்டங்கள் தொடர்கின்றன. இந்த நிதியாண்டின் துணை நிதிநிலை அறிக்கையை உற்று நோக்குகின்றபொழுது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ரூ.1,000 கோடி முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது பாராட்டத்தக்கது. விவசாயத்திற்கு ஒரு Horse Power-க்கு ரூ.250 என்று இருந்த மானியத்தை ஏழு மடங்காக ரூ.1,750 ஆக உயர்த்தி கூடுதலாகத் தேவைப்படுகின்ற மானியம் ரூ.1086.25 கோடியை அரசு மின்சார வாரியத்திற்கு வழங்கியுள்ளதால், இன்றைக்கு மின்சார வாரியத்தினுடைய வருவாய் இழப்பு குறைக்கப்பட்டுள்ளது; நிதிநிலை இனி மேம்படுத்தப்படும்.

அதேபோல, இந்த ஆண்டு நிதி சீரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்திட ரூ.2,000 கோடி வழங்கியுள்ளது என்பது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த கால ஆட்சியிலே சீரழிக்கப்பட்ட மின் துறையைச் சீரமைக்க எடுத்துக்கொண்ட முனைப்பையும், வேகத்தையும், அக்கறையையும் காட்டுகின்றது. Schemes of the schemes என்பார்கள். அதேபோல இன்றைக்கு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக திட்டங்களைத் தீட்டி, தீட்டிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கி, நிதி ஒதுக்கிய திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்துகின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விளங்குகிறது என்பதை நான் இந்த அவையிலே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

துணை நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்களுக்கு நிதிகளை ஒதுக்கியதோடு மட்டுமல்லாமல், புரட்சித் தலைவியுடைய புகழ் கோட்டையாம், புரட்சித் தலைவியுடைய எஃகுக் கோட்டையாம் புதுக்கோட்டைக்கு பெருமை சேர்க்கின்ற வகையிலே புதுக்கோட்டை நகராட்சி நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கின்ற வகையிலே அடிப்படைக் கட்டமைப்பிற்காக, தாயுள்ளத்தோடு ரூ.50 கோடி வழங்கியதற்கு மாவட்ட மக்களினுடைய சார்பிலே கோடானுகோடி நன்றிகளை தங்களுடைய பாதங்களிலே நான் பணிவோடு சமர்ப்பிக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே விதி 110-ன்கீழே சட்டமன்றம் நடைபெறும் நாட்களில் தினந்தோறும் புதுப்புது திட்டங்களை அறிவித்து புரட்சி செய்து வரும் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தக் கூட்டத் தொடரினுடைய முதல் நாளே, 110-வது விதியின்கீழ், தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை என்னும் ஓர் சிறப்புப் படை, காவல் துணைப் படை தமிழ்நாட்டிலே உருவாக்கப்படும் என்ற உன்னதமான அறிவிப்பை வெளியிட்டார்கள். 18 வயது முதல் 30 வயது வரை உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வயிற்றிலே பால் வார்க்கின்ற அறிவிப்பாக இந்த அறிவிப்பு இருந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட புரட்சி அறிவிப்பை வெளியிட்டு இளைஞர் கூட்டத்தினுடைய ஈர்ப்பு சக்தியாக, இளைஞர் சமுதாயம் ஏற்கும் ஒரே தலைவியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குவதை உலகம் இன்றைக்கு வியந்து பாராட்டிக்கொண்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தியாவின் எந்த முதலமைச்சரும் செயல்படுத்திடாத இந்தப் புதிய திட்டம், புரட்சித் தலைவி அம்மாவினுடைய சிந்தனையிலே உதித்த சீர்மிகு திட்டமென இளைஞர் சமுதாயம் தங்களை வாழ்த்திக்கொண்டிருக்கிறது; தங்களை வணங்கிக் கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 12-25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நல்ல திட்டங்களைச் செயல்படுத்துகின்ற நல்லாட்சி குறித்து ஒரு சிறிய உதாரணத்தை இந்த அவைக்கு நான் சொல்லலாம் என்று நினைக்கின்றேன். ஒரு மாணவன் ஆசிரியரிடத்திலே, அய்யா ஒரு நல்லாட்சி என்பது எப்படி இருக்க வேண்டும் என்று கேட்கின்றான். உடனே அந்த ஆசிரியர் சொல்கிறார், அறிவியலுக்கு



மட்டும் செயல்முறை விளக்கம் அல்ல, அரசியலுக்குக்கூட செயல்முறை விளக்கம் இருக்கிறது என்று சொல்லி, அந்த மாணவனை தன்னுடைய அருகிலே அழைத்து அந்த மேசை மேலே மூன்று கண்ணாடி குவளைகளை வைக்கிறார். அந்த மூன்று கண்ணாடிக் குவளைகளிலும் ஒரே மாதிரி தண்ணீரை ஊற்றி நிரப்புகிறார். பின்னர் மூன்று பொம்மைகளை எடுத்துக்கொள்கிறார். அந்த ஆசிரியர் மாணவனிடம் முதல் பொம்மையைக் காண்பித்து, இந்த பொம்மை எதனால் செய்யப்பட்டது என்று தெரிகிறதா என்று கேட்கிறார். அதற்கு அந்த மாணவன், இந்த பொம்மை புழுதி மண்ணால் செய்யப்பட்டது என்று சொல்கிறான். உடனே, புழுதி மண்ணால் செய்யப்பட்ட அந்த பொம்மையினை முதல் குவளையில் போடுகிறார். அந்தப் புழுதி மண் கரைந்து அந்த குவளையில் உள்ள நீர் முழுவதும் மாசு அடைந்துவிடுகிறது. இரண்டாவது பொம்மையினைக் காண்பித்து இந்த இரண்டாவது பொம்மை எதனால் செய்யப்பட்டது என்று அந்த ஆசிரியர் கேட்கிறார். அதற்கு அந்த மாணவன், இந்த பொம்மை பஞ்சினால் செய்யப்பட்டது என்று சொல்கிறான். ஆசிரியர் அந்த பொம்மையை இரண்டாவது குடுவையில் போடுகிறார். உடனே அந்த பொம்மை குடுவையில் உள்ள அத்துணை நீரினையும் உறிஞ்சி அந்தப் பஞ்சு பெருத்து, கொழுத்துவிடுகிறது. அந்த ஆசிரியர் மூன்றாவது பொம்மையை அந்த மாணவனிடம் காண்பித்து, இது எதனால் செய்யப்பட்டது என்று கேட்கிறார். அதற்கு அந்த மாணவன் இந்த பொம்மை வெண்சர்க்கரையினால் செய்யப்பட்டது என்று சொல்கிறான். உடனே அந்த வெண்சர்க்கரையினால் செய்யப்பட்ட மூன்றாவது பொம்மையை மூன்றாவது குடுவையில் அந்த ஆசிரியர் போடுகிறார். அந்த பொம்மை உடனே கரைந்து, அந்தத் தண்ணீருக்குத் தன்னையே தாரை வார்த்து, அந்தத் தண்ணீரை தித்திப்பாக மாற்றுகின்றது. உடனே ஆசிரியர் மாணவனுக்கு விளக்கிச் சொல்கிறார். எப்படி முதல் குவளையில் போடப்பட்ட புழுதிமண் பொம்மை குவளை முழுவதையும் மாசுபடுத்தியதோ, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், இன்றைக்கு ஊழல் மலிந்த மத்திய அரசு இந்த நாட்டை மாசு படுத்துவதுபோல நல்லாட்சி இருக்கக்கூடாது என்று சொல்கிறார். எப்படி இரண்டாவது குவளையிலே போடப்பட்ட பஞ்சு பொம்மை குவளையில் உள்ள நீர் முழுவதையும் உறிஞ்சி உப்பி கொழுத்துவிட்டதோ, அதுபோல் உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்று சொன்னால்,

கடந்தகால மைனாரிட்டி அரசு இந்த நாட்டையே உறிஞ்சி தாங்கள் உப்பிப் பெருத்துக் கொழுத்ததைப்போல நல்லாட்சி இருக்கக்கூடாது என்று சொல்கிறார். அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே எப்படி அந்த மூன்றாவது குவளையிலே போடப்பட்ட அந்த வெண்சர்க்கரை பொம்மை குவளை நீரை சுவைமிகுந்த நீராக மாற்றியதோ, தித்திக்கின்ற நீராக மாற்றியதோ, அதேபோல உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்று சொன்னால், இந்த நாட்டிற்கு தன்னையே அர்ப்பணித்து, மக்கள் வாழ்வை வளமாக்கி தித்திக்கின்ற ஆட்சியாக மாற்றுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய வாழ்வை தித்திப்பாக ஆக்குகின்ற ஆட்சிதான் உண்மையான நல்லாட்சி—அதுபோன்றுதான் உண்மையான நல்லாட்சி இருக்க வேண்டும் என்று அந்த ஆசிரியர் சொல்கிறார். அப்படி அந்த எண்ணத்தினுடைய வெளிப்பாடுதான்—ஆகஸ்ட் 15 அன்று கோட்டை கொத்தளத்திலே கொடியேற்றிய நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள்; "உங்களுக்காக நான் என்பது மட்டுமல்ல, உங்களால் நான்" என்று ஒரு நல்லாட்சி தத்துவத்தை இந்த உலகிற்கு எடுத்துரைத்த எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்பிறையாய் தமிழகத்தை வழிநடத்தும் வான்பிறையாய் திகழ்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்கு எளியோரின் பசி தீர்க்க விலையில்லா அரிசி, மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறியுடன் வசிப்பதற்கு பசுமை வீடுகள், வாழ்வாதாரத்திற்கு கறவை மாடுகள் மற்றும் ஆடுகள், புதுவாழ்வு துவக்கும் வறிய பெண்களுக்கு தாலிக்குத் தங்கம் மற்றும் நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி ரூ.12,000, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கல்விப் புரட்சியாக எழுதுபொருள் முதல் லேப்டாப் வரை அனைத்தையும் விலையின்றி வழங்குதல், இதை இன்னும் சுருக்கமாகச் சொல்லப் போனால், அலைபேசிக் கற்றைகளை விலைபேசி விற்றவர்கள் உலவும் தமிழகத்தில், விலையில்லா பொருட்களை குறையில்லாமல் வாரி வழங்குகின்றார் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குக்கிராமங்கள் முன்னேற தாய்த் திட்டம், ஆயிரக்கணக்கிலே புதிய பேருந்துகள்,



புதிய கலை, அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக், பொறியியல் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், புதிய அரசுப் பணி நியமனங்கள், ஆசிரியர் பணி நியமனங்கள், அரசுப் பணி மகளிர்களுக்கு பேறுகால விடுப்புகள், திருக்கோயில்களில் அன்னதானத் திட்டங்கள், அரசு கேபிள் டி.வி., எல்லாவற்றுக்கும் மேலாக சூரிய சக்தி மின் கொள்கை, சீருடைப் பணியாளர்களுக்கு சொந்த இல்லம் திட்டம், எல்லாவற்றுக்கும் மேலாக, VISION TAMILNADU - 2023 என்ற தொலைநோக்குத் திட்டம். பிறர் தேவையறிந்து வாரிக் கொடுப்பவர்தான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், "பூமியில் நேராக வாழ்கின்ற எல்லோரும் சாமிக்கு நிகரில்லையா, பிறர் தேவை அறிந்துகொண்டு வாரிக் கொடுப்பவர்கள் தெய்வத்தின் பிள்ளை இல்லையா" என்று பாடியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தெய்வத்தின் பிள்ளையாக, ஏன் தெய்வமாகவே வாழ்பவர்தான் நம்முடைய அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றிலே நாம் படித்திருக்கின்றோம், பாரி ஒரு முல்லைக் கொடிக்கு மட்டும்தான் தேர் கொடுத்தான்; பாரி ஒரு முல்லைக் கொடிக்கு மட்டும்தான் தேர் கொடுத்தான். மாண்புமிகு அம்மா அவர்கள் ஒவ்வொரு தமிழ்க் குடிக்கும் சீர் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வள்ளலுக்கெல்லாம் வள்ளலாக, வாராது வந்த வள்ளலாக, வாழும் வள்ளலாக, வாழும் வரலாறாக வாழ்ந்துகொண்டிருப்பவர் என்று சொன்னால், அது மிகையாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவையிலே தினமும் திட்டமிட்டு குழப்பத்தை விளைவித்துவிட்டு வெளியேறிச் சென்று கொண்டிருப்பவர்களை நினைத்தால் எனக்கு ஒன்று கேட்கத் தோன்றுகின்றது. ஐந்து முறை முதலமைச்சராக இருந்தும் ஒருமுறைகூட உலகத் தமிழ் மாநாடு நடத்தாத கையாலாகாததனம் உங்களுக்கு ஒருபுறம்; மத்தியிலே அங்கம் வகித்தும்கூட இலங்கைத் தமிழர்களை துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்குகின்ற கொடூரம் ஒருபுறம்; இதை மறந்து இப்போது குடில் கூட்டமாம் டெசோ மாநாடு நடத்தி ஐ.நா.விற்கும், பிரிட்டானியாவிற்கும் செல்கின்றேன் என்று—கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர்கள் வானம் ஏறி வைகுண்டம் போன கதையாக இருக்கிறது உங்களுடைய நாடகம். நெஞ்சும் நீதியும்

கொஞ்சமும் இல்லாமல் நெஞ்சுக்கு நீதி எழுதியவர்கள் அல்லவா நீங்கள். இரட்டை வேடதாரிகள். ராஜபக்சேவின் இரகசிய சினேகிதர்கள் நீங்கள். முரண்பாடுகளின் மொத்த உருவம் - நீங்கள் என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, இவர்கள் சொல்கிறார்கள்; இனிமேல் கருப்புச் சட்டைதான் என்கிறார்கள். இனிமேல் என்கின்ற வார்த்தைக்கு அர்த்தம் வெறும் 20 மணி நேரம் மட்டும்தானா என்பது உங்களுக்கே வெளிச்சம். சாகும்வரை உண்ணாவிரதம் என்கிறீர்கள். சாகும் வரை உண்ணாவிரதம் என்பது காலையில் உண்ட உணவு வயிற்றுக்குள் சாகும் வரைதானா என்பது உங்களுக்குத்தான் வெளிச்சம். தமிழருக்கு ஆதரவாகத் தீர்மானம் என்கிறீர்கள். தீர்மானம் என்ற வார்த்தைக்கு பொருள் மாற்றி, மாற்றிப் பேசுவதுதானா என்பதும் உங்களுக்கே வெளிச்சம். இப்படி புதுப்புது அர்த்தங்களை தமிழில் வாரி வழங்கும் மஞ்சள் துண்டு மாமுனிகள் குருப் பெயர்ச்சிக்கு பிறகாவது குடும்பம் ஒன்றுபடுமா? தொடர் சிறைவாசம் முற்றுப்பெறுமா? என்று இன்றைக்கு ஆரூரில் நீங்கள் ஆருடம் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்.

இவர்கள்தான் இப்படி என்றால், இன்றைக்கு இவர்களையெல்லாம் மிஞ்சும் விசித்திரமானவர்களும் இந்த அவையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்புமிக்க நிருபர்கள் வாய்மொழியால் கேட்ட கேள்விக்கு கைவழியே பதில் சொல்வதை வழக்கமாக கொண்டுள்ள வைகைக்கரை வாத்து முன் ஜாமீன் கேட்டு முண்டியடித்ததாம். இதையெல்லாம் நினைத்தால் எள்ளி நகையாடாமல் இருக்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்டவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திருவிழா காலங்களில் பளபளப்பாய் பறக்கின்ற பலூன்கள் வானத்தை தொட்டதாக வரலாறு உண்டா? இல்லையே. கரைகளிலே கிடக்கின்ற நீர்க் குட்டைகள் சமுத்திரம் ஆனதாக வரலாறு உண்டா? இல்லையே. மழைக்குப் பின் முளைக்கின்ற குடைக் காளான்கள் மரங்களாக வளர்கின்ற



வரலாறு உண்டா? இல்லையே. நாய்க் குடைகளெல்லாம் நாட்டிற்கு நிழல் கொடுத்தாக வரலாறு உண்டா? அதுவும் இல்லையே.

எங்கள் அம்மாவின் கருணையால் அங்கீகாரம் பெற்றுவிட்டு நன்றி மறந்தால் உங்கள் நிலையும் இதுதான். தரமும் இதுதான். கதியும் இதுதான் என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன். நிறை குடத்தோடு குறை குடங்கள் கூத்தாடுகின்றன என்று நினைத்த வேளையில், குறை குடங்கள் மட்டும் அல்ல, அவை ஓட்டைக் குடங்கள் என்று இன்றைக்கு மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஜெகத்தை ஆளும் மகம் நட்சத்திரமாம் எங்கள் அம்மாவுடன் இருந்ததால் உங்களுக்கு சுக்கிர திசை அடித்தது. இனி உங்களுக்கு அஷ்டமச் சனி ஆரம்பித்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வையார் சொல்லியிருக்கிறார், ‘நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே, நல்லாரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே’. அந்த அவ்வையார் சொன்ன உண்மையை உணர்த்த வந்த ‘நாலு பேருக்கு நன்றி, அந்த நாலு பேருக்கு நன்றி’ (மேசையைத் தட்டும் ஒலி) என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடிய பாடல் வரிகள் இந்த நேரத்திலே என்னுடைய நினைவுக்கு வருகின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நல்லாரை நாடி வரும் நிகழ்வுகள் தொடரும். நன்றிகள் தொடரும் என்று சொல்லி, இறுதியாக ஒன்றைச் சொல்லி முடிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிரிகளை எதிர்த்து இன்முகத்தோடு படை நடத்தும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துரோகிகளை மட்டும் தூள் தூளாகச் செய்யாமல், ஒருபோதும் விடமாட்டார்கள் என்பதை இந்த மாமன்றத்தின்மூலம் மமதைகொண்டோர்களுக்குச் சொல்லி என் உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கின்ற துணை நிதிநிலை அறிக்கையின் மீது

எனது கருத்துகளைப் பகிர்ந்துகொள்கிற வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையின் பேரிலே என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு முன்னால் என்னுடைய ஒரு கருத்தினைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் *12-35*

நேற்றைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் போற்றுதலுக்குரிய அம்மா அவர்கள் இந்த மாமன்றத்திலே ஒட்டுமொத்த தமிழர்களின் தேவைகள், உண்மைகள், உரிமைகள் என்கின்ற அடிப்படையிலே மிகமிக பாராட்டத்தக்க ஒரு பேருரையை உணர்ச்சிப்பூர்வமாக நிகழ்த்தினார்கள். தமிழகத்தின் தலைசிறந்த முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம் என்கின்ற வகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உரை நான் குறிப்பிட்டதைப்போல, தேவைகள், உண்மைகள் அதற்குப் பின்னால் உரிமைகள், அதற்கான தீர்வுகள் என்ற அடிப்படையிலே தமிழகத்தின் தேவை. அந்தத் தேவையின் பின்னணியிலே இருக்கிற உண்மை, அந்த உண்மைக்குப் பின்னால் நம்முடைய போராட்ட உணர்வான உரிமை, அதற்குப் பின்பு தீர்வு என்கிற அடிப்படையிலே அந்த நான்கையும் மையமாகக் கொண்டு ஒரு தலைசிறந்த உரையை நேற்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த அவையிலே பதிவு செய்தார்கள். அந்தப் பதிவினைப் பாராட்டிப் பதிவு செய்வது எனது கடமை என்பதனாலே, நான் அதை முதலிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இந்த அவையின் ஒவ்வொரு எழுத்தும், ஒவ்வொரு சொல்லும் நாளைய வரலாறு. நாளைய வரலாற்றிலே இந்த உரை தலைசிறந்த உரை; வருங்கால தலைமுறை பின்பற்றக்கூடிய உரை; வருங்கால தலைமுறை உணரக்கூடிய ஓர் உரை; அந்த உரைக்கு இங்கே ஒரு பதிவு இருந்தாகவேண்டும் என்பதனாலே, நான் என்னுடைய பாராட்டினைப் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய ஆற்றலுக்கு முன்னால்-- இப்போது கூட படிப்படியாக மூன்று முத்தாய்ப்பான விதி 110-இன்கீழ் அறிவிப்புகளை அவர்கள் சொன்னபோது, அதை இங்கே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் மட்டுமல்லாமல் அமைச்சர்கள் உட்பட அனைத்து உறுப்பினர்களும் அவ்வளவு ஆற்றலோடும், அவ்வளவு வேகத்தோடும்—அந்த வேகம்



அரசியலிலும், ஆற்றலிலும் அவருக்கு நிகராக ஒருவரை நாம் சொல்லிவிடமுடியாது. அதை நாம் பின்பற்றுகிற அளவிற்குக்கூட நமக்கு அந்த ஆற்றல் வராது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் விதி *110* இன்கீழ் மூன்று—படிப்படியாக இத்தனை தொழிற்சாலைகள், இவ்வளவு ஆயிரம் பேருக்கு வேலை, இவ்வளவு ஆயிரம் முதலீடு, இத்தனை கோடி முதலீடு என்றெல்லாம் அவர் சொல்கிற அந்த வேகத்தை, அதைப் பின்பற்றி புரிந்துகொள்வதற்குக்கூட நமக்கு வேகம் போதாது என்கிற அளவிற்கு அவ்வளவு ஆற்றல் மிகுந்ததொரு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம்.

அது காவிரி நதிநீர் பிரச்சினை ஆகட்டும், இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற மின்சாரப் பற்றாக்குறைக்குத் தீர்வாகட்டும், இலங்கைத் தமிழர் பிரச்சினையாகட்டும் எந்தப் பிரச்சினையிலும்— அவர் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்த ஓராண்டை கடந்து அதற்கு மேலே அடிபோட்டுக்கொண்டிருக்கிற இந்தக் காலகட்டம் வரையிலும், அவர்கள் ஒன்றிலும் தளர்ந்ததும் இல்லை; அவர்கள் போராடி அதிலே தோற்றதும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜயபாஸ்கர் அவர்கள்கூட இங்கே பேசுகிறபோது ஒரு கோரிக்கை மனுவோடு அமெரிக்காவுக்கும், பிரிட்டானியாவுக்கும் போனார்கள் என்றார்கள். ஆனால் அமெரிக்காவுக்கும், பிரிட்டானியாவுக்கும் போனவர்கள் இன்னமும் அந்தக் கோரிக்கை மனுவை தருவதற்குக்கூட நேரம் இல்லாமல் நின்றுகொண்டிருக்கிறார்கள்; வாய்ப்புகூட இல்லாமல் வழியிலே நின்று கொண்டிருக்கிறார்கள். அதை வழியிலே இருக்கிற வாயிற் காவலனிடம் கொடுத்துவிட்டு வருவார்களா, யாரிடம் கொடுத்து விட்டு வருவார்கள். Ban ki-moon- அவர்களை அவர்கள் சந்திக்கவே முடியவில்லை. மாண்புமிகு போற்றுதலுக்குரிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள்--நெடுங்காலமாகத் தீர்க்க முடியாமல் இருந்த காவிரி நதிநீர் பிரச்சினைக்கு இன்றைக்கு உச்ச நீதிமன்றம் தலையிட்டு, உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பிரிச்சினைக்கு தீர்வு கிடைக்கப்பெற்றிருக்கிறதென்றால், ஏளனம் பேசியவர்கள், ஏகடியம் பேசியவர்கள் எல்லாம் இன்றைக்கு வாய்மூடி இருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் பாராட்ட வேண்டியதுதானே? எப்படி முடியும்? மனு தந்தால் முடியுமா?

*நீதிமன்றத்திற்குப் போனால் முடியுமா? ஆணையம் இருக்கிறதே என்றெல்லாம் ஏளனம் பேசியவர்கள், ஏகடியம் பேசியவர்கள் இன்றைக்குப் பாராட்ட வேண்டியதுதானே?*

இன்றைக்கு கர்நாடக அரசு கட்டுக்குள் வந்திருக்கிறதென்றால், *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து எடுத்த நடவடிக்கைகள், அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது எடுத்த நடவடிக்கைகள் எல்லாம் தொடர்ந்து கடந்த முறை ஆனாலும், அதற்கு முன்பு இருந்த முறையானாலும் கடந்த 70 ஆண்டுகாலப் பிரச்சினைக்கு இன்றைக்குத் தீர்வு கிடைத்திருக்கிறதென்றால், அது தமிழகத்துக்குக் கிடைத்திருக்கிற மாபெரும் வெற்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)* அது காவிரி நதிநீர் பிரச்சினை ஆனாலும்,--இன்றைக்கு இந்த மாமன்றத்திலே ராஜபக்ஷே ஒரு கொலைக் குற்றவாளி என்று சுட்டிக்காட்டி தீர்மானம் தந்தவர். அப்படிப்பட்ட ஒரு துணிவு இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலச் சட்டமன்றத்துக்கு வரும். அதை இந்த மாநிலச் சட்டமன்றத்திலே நிறைவேற்றினார்கள். அப்படி எந்தப் பிரச்சினையிலும் இந்த மாநிலத்தின் உரிமைகளை, மாநிலத்தில் இருக்கிற மக்களின் உணர்வுகளைப் பெருமைப்படுத்துகிற வகையிலே அவர்கள் தலைநிமிர்ந்து, தமிழகம் ஒரு முன் மாநிலம் என்று சொல்கிற வகையிலே தொடர்ந்து பணியாற்றி வருகிற அவருடைய பாங்கினை கடந்த நாளன்று அவர்கள் இந்த மாமன்றத்திலே ஆற்றிய பேருரையின் பாங்கினை நான் பாராட்டி பதிவு செய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் *12-40*

அவர்களுக்கு எப்போதுமே தண்ணீர் ராசி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒருமுறை சொன்னதுபோல அவர்களுக்கு தண்ணீர் ராசி. அவர்கள் வந்தால் மழை பொழிந்துகொண்டே இருக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்கள் ஆட்சிக்கு வந்தால்—அவர்களே ஒருமுறை வேடிக்கையாக சொன்னதுபோல, அவர்களுக்கு தண்ணீர் ராசி. தொடர்ந்து பெய்து வருகிற மழை வருகிற கோடைக்காலத்திலே நிச்சயமாக தமிழக மக்களுக்கு குடிநீர் பஞ்சம் ஏற்படாது என்கிற வகையிலே இருந்தாலும்கூட, அதன்கூட வந்திருக்கிற இந்த 'நிலம்' என்கிற புயலால் இன்றைக்கு, கடந்த ஒரு வார காலத்திலே ஏற்பட்ட மழையாலும், புயலாலும் பல பகுதிகளிலே இயற்கைச் சீற்றத்தால் பல வகையிலே அடித்தளத்து



மக்கள், ஏழையெளிய மக்கள், குடிசைவாழ் மக்கள் கொஞ்சம் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பது ஒரு நிதர்சனமான உண்மை. 'தானே' புயலையே பார்த்தவர்கள் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதன் சுவடு தெரியாத வகையிலே, ஒரு மாத காலத்திலே, *(மேசையைத் தட்டும் ஒலி)* கடலூர் மாவட்டத்தை சகஜ வாழ்க்கைக்குக் கொண்டு வந்தவர்கள். சுனாமி புயலையே, உலகமே பாராட்டுகிற அளவிற்கு, அதன் சுவடுகள் தெரியாத வகையிலே, எப்படி நீங்கள் சுனாமி புயலைச் சமாளிக்க முடிந்தது என்று வெளிநாட்டுக்காரன் வந்து பார்த்து, இங்கேயிருந்து அதிகாரிகளை அழைத்துப் போகிற அளவிற்கு சுனாமி புயலினுடைய சுவடுகள் ஏதும் இல்லாமல், நாகப்பட்டினம் மாவட்டத்தையும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தையும் ஒரு மாத காலத்திலே புனரமைக்க செய்தவர்கள் நீங்கள். ஆகவே, 'தானே' புயலைப் போல, சுனாமிப் புயலைப் போல, இந்த 'நிலம்' புயலையும் நீங்கள் நிலத்திலே அந்த வடுகூட இல்லாத அளவிற்கு மாற்றி அமைப்பீர்கள் என்கிற ஆற்றல் உங்களுக்கு இருக்கிறது என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். ஆனாலும், போர்க்கால அடிப்படையிலே கிராமப்புற ஏழையெளிய மக்களுக்கு ஏதாவது, துணை நிதிநிலை அறிக்கையிலே நாம் விவாதித்துக்கொண்டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்திலேயே, அதற்காக ஒதுக்கீடு செய்து, வேலூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை மாவட்டம் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தாராளமான நிவாரண உதவிகளை நீங்கள் வாரி வழங்கிட வேண்டும் என்கிற அந்த உணர்வினை நான் இங்கே வெளிப்படுத்த விரும்புகிறேன்.

'ஆயிரம் கண்ணுடையாள் அம்மன்' என்று சொல்வார்கள். ஆனால், பரந்த தமிழ் மண்ணில், இன்றைக்கு விரிந்த நோக்கோடு ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்லாயிரம் கண்ணுடையவர்கள். நாமெல்லாம் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* பல்லாயிரம் கண்ணுடையவர்கள் அவர்கள், அவர்களுக்கு இருக்கிற அந்த வாய்ப்புகளின், வசதிகளின் அடிப்படையிலே, பலவகையிலே தமிழக மக்களுடைய பிரச்சினைகளை அவர்களாகவே தெரிந்து, அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகிற, அப்படிப்பட்ட எண்ணமும், பெருநோக்கமும் உடையவர்கள் என்பதை நாம் அறிந்தாலும்கூட, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே சிலவற்றையெல்லாம் இங்கே

எடுத்து வைப்பதன்மூலம் அதற்கொரு முன்னுரிமை தந்து தீர்வுகள் கிடைக்கும் என்கிற அடிப்படையிலே சிலவற்றை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த சில மாதங்களாக தமிழகத்திலே—ஒரு காலத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் மணல் திருட்டை முற்றுமாக ஒழித்து, தமிழக அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து மணல் வாரியத்தை உருவாக்கி தமிழகத்திலே, அதன்மூலம் தமிழக அரசுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வருவாய்க்கு வழி செய்தார்கள். அதைப்போலவே கனிம வளத்தை எடுத்துக்கொண்டால், நம்முடைய கனிம வளம் பல வகைகளிலே களவாடப்படுவதை தடுத்து நிறுத்துகிற வகையிலே, ஒரு கனிம வள வாரியத்தை உருவாக்க வேண்டும். அதற்கான ஒரு சீரமைப்பை உருவாக்கிட வேண்டும் என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே, கைத்தறிக்கு என்று ஒரு துறை இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தோளிலே கைத்தறியைத் தூக்கி சுமந்து, அவர்கள் விற்பனை செய்து கைத்தறித் துறைக்கு ஒரு பெருமை சேர்த்தார்கள். ஆனால், வளர்ந்து வருகிற விஞ்ஞான யுகத்திலே இன்றைக்கு விசைத்தறி என்பது தவிர்க்க முடியாத ஒன்று. அப்படிப்பட்ட ஒரு தொழில், விசைத்தறி என்பது வளர்ந்து வருகிற விஞ்ஞான யுகத்திலே தவிர்க்க முடியாததாகி விடுகிறது. விசைத்தறித் தொழிலிலே பல இலட்சம் பேர் கொங்கு மண்டலத்திலே, கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளடக்கிய பகுதிகளிலே ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால், அதற்கென்று ஒரு துறை இல்லை. கைத்தறித் துறையுடனேயே அந்தத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது. விசைத்தறித் தொழிலாளர்களும் கைத்தறித் துறையினுடைய கட்டுப்பாட்டிலேதான் வருகிறார்கள். ஆகவே, கைத்தறித் துறை இருப்பதைப்போல, விசைத்தறித் துறை என்று ஒரு துறை இருந்தால் கைத்தறி மற்றும் விசைத்தறித் துறை என்று அதனுடன் இரண்டு துறைகளும் இணைந்து செயல்படுகிற வகையிலே, அதற்கென்று ஒரு தனித் துறை இப்போது உருவாகுமானால், வளர்ந்து வருகிற இந்த சூழல்களுக்கு அது சரியாக அமையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், இன்னும் எட்டு பேர் பேச வேண்டியிருக்கிறது. கொஞ்சம் ஒத்துழையுங்கள்.



**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை விரைவில் முடித்துவிடுகிறேன். ஆகவே, அதற்கு ஒரு தனித் துறை உருவாக்கிட வேண்டுமென்கிற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-45*

அதைப்போன்றே, பல தேசிய ஆணையங்கள், தமிழகத்திலே மாநில ஆணையங்களாகவும் இருந்து கொண்டிருக்கின்றன. கடந்த முறை இந்த மாமன்றத்திலே குழந்தைகளுக்கு ஒரு தேசிய ஆணையம் இருப்பதைப் போல, மாநிலத்திலே குழந்தைகளுக்கு ஒரு ஆணையம் இருக்க வேண்டாமா என்கிற அந்த உணர்வை எடுத்துச் சொன்ன வேகத்திலேயே, *15* நாட்களிலேயே அதற்கு விடிவு கிடைத்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேசிய குழந்தைகள் நல ஆணையத்தையும் தமிழகத்திலே இன்றைக்கு உருவாக்கியிருக்கிறார்கள். அவர்கள் செவிக்கு கோரிக்கைகள், மக்களின் பிரச்சினைகள் எடுத்து வைக்கப்படுகிறபோது, அந்த வேகத்திலேயே, அதாவது மனோ வேகம் என்றுதான் கற்பனையை கவிஞர்கள் சொல்வார்கள்; வேகத்திலேயே அளவிட முடியாத, விஞ்ஞானிகளாலும் உணரமுடியாத ஒரு வேகம் என்றால், அது மனோ வேகம்தான். நாம் மனதில் நினைப்பதை அதாவது லண்டன் என்று நினைத்தால், லண்டனை உடனே கற்பனை செய்துகொள்கிறோமே அதைப்போல, நினைத்தமாத்திரத்திலேயே வருகின்ற ஒரு வேகம். கற்பனைக்கும், கவிதைக்கும் சொல்லுகின்ற அந்த மனோ வேகம். அந்த மனோ வேகத்தைக்கூட மிஞ்சுகின்ற ஒரு வேகம் இருக்கிறது என்றால், அது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நடவடிக்கையின் வேகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நினைத்ததை, சரி என்று பட்டதை செய்து முடிப்பதற்கு எந்தத் தடையும் இன்றி, எப்படிப்பட்ட தடை வந்தாலும் அந்தத் தடையை உடைத்து மிக வேகமாகச் செய்து முடிக்கக்கூடிய ஆற்றல் பெற்ற நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். தேசிய அளவிலே இருக்கின்ற தொழிலாளர் நல ஆணையம், மாநில அளவில் இருக்கிறது. குழந்தைகள் ஆணையம் மாநில அளவில் இருக்கிறது. பெண்கள் ஆணையம் மாநில அளவில் இருக்கிறது. ஆனால், தேசிய அளவில் இருக்கும் தாழ்த்தப்பட்டோர் ஆணையம் மட்டும் தமிழகத்திலே இல்லாமல் இருக்கிறது. உங்களுடைய பொற்கால ஆட்சியிலேதான் அதுவும்

அமைய வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு பொற்கால ஆட்சி என்றால், தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) பல சிறப்புகள், பல பெருமைகள், பல உரிமைகள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் உருவாகியிருக்கின்றன என்பதை நான் பட்டியலிட்டுச் சொல்வேன். ஆனால், அது ஒரு பெரிய பட்டியல், நீளமான பட்டியலாக இருக்கும், நேரமற்ற நிலையிலே நான் அந்தப் பட்டியலைத் தொட விரும்பவில்லை. உங்களுடைய பொற்கால ஆட்சியில் தாழ்த்தப்பட்டோர் தேசிய ஆணையத்தையும் நீங்கள் தமிழகத்தில் உருவாக்கிட வேண்டும் என்கிற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

தற்போது பெய்த மழையால் என்னுடைய தொகுதியில்கூட 3 பேர் இன்று காலை இறந்திருக்கிறார்கள். நெல்லூர்பேட்டை ஊராட்சியில் மணி என்கிற ஒரு குடிசைவாசியும், மூடிக்குப்பம் ஊராட்சியில் ஓர் இஸ்லாமியக் குடும்பத்தைச் சேர்ந்த சையருனிசா என்கிற தாயும் அவருடைய 25 வயது மகள் உட்பட மூன்று பேரும் இன்று காலை என்னுடைய தொகுதியில் கடும் மழையின் காரணமாக வீடு இடிந்து இறந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கிட வேண்டுமென்கிற கோரிக்கையை நான் இங்கே முன் வைத்து, பல்வேறு கோரிக்கைகள் இருந்தாலும்கூட நேரத்தின் அருமை கருதி ஒன்றிரண்டு கோரிக்கைகளை மட்டும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். அம்மா அவர்களிடத்திலே வைக்கின்ற கோரிக்கைகள் நிச்சயமாக பரிவோடும், விரைவாகவும் அவை நிறைவேறும் என்கிற உணர்வுகளுக்காக என்னுடைய ஒன்றிரண்டு கோரிக்கைகளை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். இடைநிலை ஆசிரியர்களுக்கு மீண்டும் ஒரு தேர்வை மத்திய அரசு முன்வைக்கிறது. அப்படி ஒரு தேர்வு வருகின்றபோது 25 ஆண்டு காலத்திற்கு முன்பாக படித்த இடைநிலை ஆசிரியர்கள், பழைய பாடத் திட்டத்தை வைத்துக்கொண்டு இப்போது 25 ஆண்டுகளுக்குப் பின்பு புதிய தேர்வை அவர்களால் எழுத



முடிவது இல்லை. சில மாநிலங்களிலே அவர்களுக்கு ஐந்து ஆண்டுகள் வாய்ப்புத் தருகிறார்கள். இடைநிலை ஆசிரியர்களுக்கு பணியையும் தந்துவிட்டு, ஐந்து ஆண்டுகள் வாய்ப்பும் தருகிறார்கள். மத்திய அரசு கொண்டுவந்துள்ள திட்டத்தின்படி புதிய தேர்வை ஐந்து ஆண்டு காலத்திற்குள் எழுதிக்கொள்ளலாம் என்று வாய்ப்புத் தருகிறார்கள். அதைப்போல, ஒரு வாய்ப்பைத் தந்தாலும், அவர்களுக்கு வசதியாக இருக்கும். ஏன் என்றால், இருபது ஆண்டுக் காலத்திற்குப் பிறகுகூட வேலையில்லாமல் இருப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தப் புதிய தேர்வு, பழைய முறையில் படித்தவர்களால் எழுத முடிவதில்லை. ஆகவே, அதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டும் என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர் தேர்வைப் பொறுத்தவரை மத்திய அரசு 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் தேதி ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. 8 வயதிலிருந்து 14 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு பயிற்றுவிக்க 60 சதவிகிதம் மதிப்பெண் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்கிற ஒரு சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. 2009 ஆம் ஆண்டு கொண்டுவந்த அச்சட்டத்தை 2010 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 ஆம் தேதி முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு அமலுக்குக்கொண்டு வந்தது. ஆனால் ஆசிரியர் நியமனத்திற்குத் தகுதித் தேர்வு தேவையில்லையென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய தொலைக்காட்சிகளிலும், செய்தித் தாள்களிலும் தொடர்ந்து ஆசிரியர்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-50

நான் இந்த நேரத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆசிரியர்களின் நலன் காக்கின்ற அரசு. அதன் அடிப்படையிலேதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசால் ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலமாக

தகுதித் தேர்வு 12-7-2011-ல் நடைபெற்றது. அப்பொழுது 6 இலட்சத்து 50 ஆயிரத்து 843 பேர்கள் தேர்வு எழுதினார்கள். அப்பொழுது தேர்வு எழுதியவர்களில் 2,448 பேர்கள் மட்டுமே தேர்ச்சி பெற்றார்கள். அது .3 சதவிகிதத்திற்கும் குறைவாக இருந்தது. இது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு வந்தபொழுது, ஆசிரியர் நலன் காக்கின்ற அம்மா அவர்கள் தேர்ச்சி பெறாதவர்கள் மீண்டும் ஒரு தேர்வை எழுதுவதற்கு வாய்ப்பைத் தந்தார்கள். இதை இந்த நேரத்தில் நான் பெருமையாகச் சொல்ல விரும்புகின்றேன். மீண்டும் தேர்வு 14-10-2012-ல் நடைபெற்றிருக்கிறது. அதை நான் இந்த நேரத்தில் மீண்டும் நினைவுபடுத்துவதற்குக் காரணம், இந்தியாவிலேயே எந்த மாநில முதலமைச்சரும் செய்யாத அளவுக்கு, ஒரு தேர்வு எழுதுகின்றபொழுது, அதில் தேர்ச்சி பெறாதவர்கள் மீண்டும் பழைய தேர்வுக் கட்டணத்திலேயே மறு தேர்வை எழுதலாமென்று ஒப்புதல் வழங்கியது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமட்டுமல்ல, ஆசிரியர் நலன் கருதி, அந்த முதல் தேர்வு, இரண்டாம் தேர்வு நடைபெற்ற இடைப்பட்ட காலங்களில் பதிவு செய்திருக்கின்ற ஆசிரியர்களும் இந்தத் தேர்வில் கலந்துகொள்ளலாம் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து, அந்த வகையில் 20,147 பேர்கள் மீண்டும் மறு தேர்வில் பங்குபெற்றார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவுக்கு ஆசிரியர் நலன் காக்கின்ற அம்மா அவர்கள் அரசு. தேர்வாணையத்தின்மூலம் நடைபெற்றிருக்கிற இந்த மறு தேர்வில் கிட்டத்தட்ட 7,34,036 பேர்கள் தேர்வு எழுதியிருக்கிறார்கள். இந்தத் தேர்வினுடைய விடைகள் இன்றைக்கு இணையதளத்திலே வெளியிடப்பட்டிருக்கின்றன. இப்போது ஆசிரியர்களே அவர்களுடைய மதிப்பெண்களைத் தெரிந்துகொள்ளலாம். இந்த அளவுக்கு ஒளிவுமறைவின்றி, வெளிப்படையான முறையிலே ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் தேர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த நல்ல நேரத்தில் விடைத்தாள்கள் திருத்துகின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனையில்பேரில் நடைபெற்ற இத்தேர்வின் தேர்ச்சி சதவிகிதம் எந்த அளவுக்கு வருகிறது என்பதைத் தெரிந்துகொண்டு,



அதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அவரது வழிகாட்டுதலின்படி, அம்மா அவர்கள் அரசு, மேல் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு என்ன கேட்கப் போகிறீர்கள்? நீங்கள் பேசும்போது கேட்கலாம். முனைவர் செ.கு. தமிழரசன். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது கேட்கலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். அதிலெல்லாம் clarification கிடையாது. உட்காருங்கள். முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள். நீங்களும் உங்கள் பேச்சை உடனே முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களுடைய... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், நீங்கள் உட்காருங்கள். இன்னும் 8 பேர்கள் பேசவிருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள். பிறகு விளக்கமெல்லாம் கேட்டுக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) பிறகு விளக்கம் கேட்டுக்கொள்ளலாம். தயவுசெய்து உட்காருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர் பேசப் போகிறார். அப்போது கேட்டுக்கொள்ளலாம். முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் செ.கு. தமிழரசன், ஒரு நிமிடம் இருங்கள். திரு. சு. குணசேகரன், சொல்லுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கல்வி அமைச்சர் அவர்கள் கடந்தகாலத் தேர்வுகளைப் பற்றி விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதிலே ஒரு கஷ்டம். அது என்னவென்றால், நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் செ.கு. தமிழரசன் அவர்கள் கூறியதுபோல நீண்ட காலத்திற்கு முன்னால் கல்வி கற்றவர்கள்தான் இந்தத் தேர்வை எழுதுகிறார்கள். எனவே, தேர்ச்சி விகிதத்திற்கான மதிப்பெண்கள் கூடுதலாக இருக்கிற காரணத்தால், இதில் தேர்ச்சி பெறுவதில் மிகவும் சிரமப்படுகிறார்கள். இப்போதுகூட

*150-க்கு 90 மதிப்பெண்கள் இருந்தால்தான் தேர்ச்சி பெறுவார்கள் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். மாணவர்களுக்கே 30 மதிப்பெண்கள், 35 மதிப்பெண்களுக்குத் தேர்ச்சி என்று கொடுக்கிற நேரத்தில் ஆசிரியர்களுக்கு 60 மதிப்பெண்கள், 90 மதிப்பெண்கள் என்று சொல்வது சரியாக இருக்காது. எனவே, 150-க்கு 60 மதிப்பெண்கள் என்ற அளவில் இருந்தால் தேர்ச்சி விகிதம் கூடுதலாக இருக்கும்; தேர்ச்சி பெற முடியும் என்று சொல்கிறார்கள். எனவே, தயவுசெய்து அந்த மதிப்பெண்களைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். (குறுக்கீடு)*

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் கொஞ்சம் பொறுங்கள். செல்வி கே. பாலபாரதி, நீங்கள் சொல்லுங்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் முறை தேர்ச்சி பெறாத ஆசிரியர்களுக்கு மறு முறை நம்முடைய அரசுதான் வாய்ப்புக் கொடுத்தது என்பதைப் பெருமையாகக் குறிப்பிட்டார்கள். நானும் அதைப் பெருமையாகக் கருதுகின்றேன். இரண்டாவது முறையும் சரியாகத் தேர்ச்சி பெறவில்லை என்று சொன்னால், மூன்றாவது முறையும் நீங்கள் வாய்ப்புக் கொடுப்பீர்களா? மாணவர்களுடைய எதிர்கால கல்வி நிலை என்னவாகும்? மூன்றாவது கேள்வி-வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக முதலில் பதிவு மூப்பு அடிப்படையில் எடுத்துக்கொண்டு, பின்னர் நாம் தகுதித் தேர்வை வைத்து, ஆசிரியர்களுக்கு தேர்ச்சிப் பயிற்சியைக் கொடுக்கலாம் என்றுதான் நாங்கள் சொல்கிறோம். மூன்றையும் இரண்டையும் கூட்டினாலும் ஐந்துதான், இரண்டையும், மூன்றையும் கூட்டினாலும் ஐந்துதான். ஆகவே, முதலில் வேலையைக் கொடுப்பது, பிற்பாடு தகுதித் தேர்வு பயிற்சிக்கு அவர்களை அழைத்துச் செல்வது என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போதாவது பரிசீலிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *டாக்டர், சி. விஜயபாஸ்கர், நீங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) முனைவர் செ.கு. தமிழரசன் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பள்ளிக் கல்வி,*



*விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.*

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் இத்தேர்வு எழுதியவர்களுக்குப் பணி வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இது நடைமுறையில் சாத்தியம் இல்லை. இது மத்திய அரசு கொண்டுவந்த சட்டம். இதில் ஆசிரியர் தகுதித் தேர்வு,* TET (Teacher Eligibility Test) *கட்டாயம் என்று* R.T.E Act-*ல் ஒரு நிபந்தனையைக் கொண்டுவந்திருக்கின்றார்கள். அதன்மூலம்தான் ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்ற இச் சட்டம் எல்லா மாநிலங்களிலும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில்தான் நமது அரசும் இதைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றது.*

*மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆசிரியர் நலன் காக்கின்ற அரசு என்பதை மேலும் கோடிட்டுக் காட்டுவதற்கு ஒரு உதாரணம், 150 கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மூன்று மணி நேரத்தை ஒதுக்கி அவர்கள் தாராளமாக நேரம் எடுத்துக்கொண்டு, விடை அளிக்கலாம் என்ற உன்னதமான ஒரு பெரிய வாய்ப்பை, ஒன்றரை மணி நேரம் உயர்த்திக் கொடுத்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதுமட்டுமல்ல. ஆசிரியர்கள் தேர்வு நடக்கின்றபோது அத்தனை ஆசிரியர்களுக்கும், மேலும் 20 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கலந்துகொள்வதற்கும் வாய்ப்பு கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதையெல்லாம் உங்களிடத்திலே நான் நினைவுபடுத்துவதற்குக் காரணம், எதிர்காலத் தூண்களாக வரவிருக்கின்ற மாணவச் சமுதாயத்தை உருவாக்குபவர்கள், தகுதியானவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தேர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இருந்தாலும் உங்களுடைய கோரிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*மாண்புமிகு பாலபாரதி அவர்கள் யூகத்தின் அடிப்படையில் கேட்டிருக்கின்றார்கள். யூகத்தின் அடிப்படையில் கேட்பதற்குப்*

பதில் சொல்ல முடியாது. இப்போது விடைத்தாள்களைத் திருத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவிலேயே தேர்ச்சி சதவிகிதம் வந்தபிறகு, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அரசு சரியான மேல் நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். நன்றியைச் சொல்லி உரையை முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய அந்த விரிவான விளக்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, தமிழ்நாடு அரசு, தேர்வாணையத்தின்மூலம் நடத்துகின்ற தேர்வுகள் முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை தேர்வுகள் என நடத்தப்படுகின்றன. முதல் நிலைத் தேர்வில் கலந்துகொள்கின்ற தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு, 40 வயது வரையிலே விலக்கு தரலாம், 35 வயது என்பது மிகக் குறுகிய ஒரு வயது. பல மாநிலங்களிலே 40 வயது வரையிலேகூட தாழ்த்தப்பட்டவர்கள் அந்த முதல் நிலைத் தேர்வு எழுதலாம் என்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, 40 வயது அல்லது 45 வயது வரைகூட நீடிக்கலாம். அதில் தவறு ஒன்றும் இல்லை. ஆகவே, இதை நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்கின்றேன்.

தீபாவளி பண்டிகை முடிந்தவுடன் பொங்கல் திருவிழாவினுடைய உற்சாகம் களைகட்ட ஆரம்பித்துவிடும். பொங்கல் விழாவின்போது எங்களுடைய மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்திலும், மஞ்சு விரட்டும், எருது விரட்டு விழாவும் வாடிக்கையாக நடந்துகொண்டிருக்கின்ற ஒரு கிராமப்புற தமிழ் பண்பாட்டு நிகழ்ச்சியாக இருந்துகொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் அது ஒரு வாடிக்கையான பாரம்பரியமிக்க ஒரு கலையாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்த எருது விடும் நிகழ்ச்சிக்கு உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படியும், பரிந்துரையின்படியும் பல்வேறு வகையிலே கட்டாயம் நிர்பந்திக்கப்படுகிறது. ஒவ்வொரு தெருவிலும் இந்த விழாவை



நடத்த வேண்டுமானால், 2 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது. ஒவ்வொரு தெருவுக்கும் அங்கிருக்கும் ஏழை மக்களால் 2 இலட்சம் ரூபாய் கட்டுவது என்பது முடியாத காரியம், சிரமமான காரியம். ஆகவே, இதை அரசு எடுத்துக் கொண்டு நடத்தலாம். அதற்கான இன்சூரன்ஸ் தொகையைக் கட்டலாம். ரூ.7,000/-ரூ.8,000/-, ரூ.10,000/- இன்சூரன்ஸ் தொகை வருகிறது. அந்தத் தொகையை வேண்டுமானால் கிராம மக்கள் கட்டலாம். ஆனால், 2 இலட்சம் ரூபாய் வைப்புத் தொகை என்பது கிராமத்து மக்களுக்கு இயலாத ஒரு காரியமாக இருக்கிறது. ஆகவே, அதை அரசுக்கு . . . (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவற்றை இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசலாம். போதும், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். கடந்த அக்டோபர் 30 ஆம் தேதி தேவர் ஜெயந்தியன்று சட்டமன்றம் நடக்கும் என்று அறிவிப்பு வந்தது. அந்த நேரத்திலே, சட்டமன்றம் 30 ஆம் தேதி நடைபெறுவதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைச் சந்தித்து, 30 ஆம் தேதியன்று தேவர் ஜெயந்தி விழா தென் மாவட்டங்களில் சிறப்பாக நடைபெறும். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டேன். அதேபோன்று முன்னாள் பேரவைத் தலைவரையும் சந்தித்துக் கேட்டேன். அதற்குப் பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து, கடிதம் கொடுத்து, 30 ஆம் தேதி சட்டமன்றம் நடைபெறுவதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டேன். அதை ஏற்றுக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30 ஆம் தேதியன்று சட்டமன்றக் கூட்டம் இல்லை என்று அறிவித்ததற்கு அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் பாராட்டுகளையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. பி.வி. கதிரவன்] [2012 நவம்பர் 1

தேவர் ஜெயந்தியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சில மன வருத்தமான அசம்பாவிதங்கள் நடந்திருக்கின்றன. அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்திலே தெளிவான, விரிவான பதிலைச் சொல்லி, இறந்தவர்கள் குடும்பத்திற்கு தலா 5 இலட்சம் ரூபாய் கொடுத்து, அவர்களுக்கு கல்வித் தகுதிக்கேற்ப அரசு வேலையும் கொடுத்து, கொலை செய்தவர்களைக் கைது செய்துள்ளதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக அமைதியான தமிழகமாக இருந்துகொண்டிருக்கின்ற நிலையில் இப்படி கடந்த நான்கு தினங்களாக தவறான ஒரு அணுகுமுறை, ஏதோ திட்டமிட்டு சதி செய்வதாகக் கருதுகிறேன். ஏனென்றால், அமைதிப் பூங்காவை, அமைதியாக நடக்கின்ற தமிழகத்தில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்று யாரோ சதி செய்து, இரண்டு மூன்று இடங்களில் அசம்பாவிதங்கள் நடைபெற்று கொலைகள் நடந்திருக்கின்றன. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், அந்த மக்கள் உண்மையான நிலையை அறிய, வருத்தத்தோடு இருக்கும் தென் மாவட்ட மக்களுக்கு இந்த சம்பவம் குறித்து நீதி விசாரணை அமைத்து தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் 5,617 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்குவதற்காக இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் மின்சார வாரியத்திற்கான மானியத்திற்காகவே ரூ.1,086.25 கோடியும், மின்சார வாரியத்தைச் சீரமைப்பதற்காக ரூ.2,000 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 1-05*

தமிழகத்தில் மின்வெட்டு நடந்து கொண்டிருக்கிறது. மின்வெட்டால் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றையதினம் விரிவாக, விளக்கமாக, முந்தைய தி.மு.க. ஆட்சியில் என்ன நடந்தது என்பதையெல்லாம் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இப்பொழுது இருக்கின்ற மின் பற்றாக்குறை குறித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் கவலைப்படுவதைக் காட்டிலும்



2012 நவம்பர் 1] [திரு. பி.வி. கதிரவன்]

நாங்கள் 1 இலட்சம் மடங்கு கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எங்களை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, தமிழக முதல்வராக்கிய இந்த மக்களுக்கு, அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்வது எங்களுடைய கடமை என்பதை முதல்வர் அவர்கள் இங்கேயே அறிவித்தார்கள். மேலும், மின்சாரப் பற்றாக்குறையை நீக்கி, தமிழகத்தை மின்சாரத்தில் உபரி மாநிலமாக மாற்றுவேன், நிச்சயமாக அதிலே வெற்றி பெறுவேன் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றையதினம் இங்கே சட்டமன்றத்திலே அறிவித்திருப்பதற்கு நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, இங்கே ஊரகக் கட்டமைப்பு வசதிகளுக்காக 275.68 கோடி ரூபாய் சாலைகள், பாலங்கள் மேம்படுத்துவதற்காக தமிழக அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த மக்களுக்குத் தேவையான ஒன்றுதான். அதைச் செய்வது இந்த அரசினுடைய கடமை என்பதால் தமிழக அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மீன் வள பல்கலைக்கழகம் ஒன்று நிறுவுவதற்காக இந்த ஆண்டு நிதியில் 14 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதற்கும், துணை சுகாதார நிலையங்கள் 31-க்கும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் 42-க்கும் 19.44 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும் பாராட்டத்தக்கது. குறிப்பாக, சிவகாசி அரசு மருத்துவமனையில் தீக்காயங்களுக்காக தனியாக ஒரு மருத்துவமனைக்கு 4½ கோடி ரூபாய் ஒருக்கியிருப்பதற்காக உண்மையிலேயே தமிழக அரசை நான் பாராட்டுகிறேன். ஏனென்றால், அந்தப் பகுதியில் எப்பொழுது வெடி விபத்து நடக்கும் என்பதே தெரியாத நிலையில், சிவகாசி மக்கள் மிகவும் சிரமத்தோடு இருந்தார்கள். அந்தப் பகுதி மக்களின் சிரமத்தை மாற்றுகின்ற வகையிலே, அவர்களுக்கு திருப்தி தருகின்ற வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 4½ கோடி ரூபாயில் அங்கு புதிய மருத்துவமனையை, அதிலும் தீக்காயங்களுக்காகவே மருத்துவமனையைத் தந்திருக்கிறார்கள் என்பதையும் நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழக அரசு எடுத்து வருகின்ற நல்ல பல திட்டங்களுக்கு நாங்கள் எப்பொழுதும் உறுதுணையாக இருப்போம் என்பதைச் சொல்லி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் பேரவைத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக இந்த இருக்கையிலே அமர்ந்து, அதுவும் முதல் முறையாக நானே உங்களைச் சந்திக்கக்கூடிய இந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். முதற்கண் உங்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, 2012-2013 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கையின்மீது சில கருத்துகளை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக பதிவு செய்ய நான் விரும்புகின்றேன்.

கடந்த காலங்களில் தமிழகத்தில் தாமிரபரணியாறு, பாலாறு, வைகை, காவிரி என்று பல ஆறுகளுடைய மணல் எல்லாம் கொள்ளை அடிக்கப்பட்டு விவசாயத்திற்கும், குடிநீருக்குமே தட்டுப்பாடு ஏற்பட்ட ஒரு நிலைமை. தமிழ்நாட்டினுடைய கனிம வளங்களான கிரானைட்களும் அதேபோல கல் குவாரிகளும், கிராஃபைட்களும் கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு கொள்ளையடிக்கப்பட்ட நிலைமை. அந்த நிலைமைகளிலேயிருந்து தமிழகத்தை விடுவிப்பதற்காக 2011-இலே தமிழகத்திலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மதுரையை மையமாக வைத்து, ஒரு பெரிய ஜாம்பவானால் 16,000 கோடி ரூபாய்க்கு மேலாக கிரானைட் கற்கள் கொள்ளை அடிக்கப்பட்டதை, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு துணிவோடும், தைரியத்தோடும், எந்தவிதமான எதிர்பார்ப்புகளும் இல்லாமல், இப்பொழுது அந்த கிரானைட் கொள்ளையர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆறுகள், குளங்கள், புராதன வரலாற்றுச் சின்னங்கள் என்று அரசினுடைய பல நிலங்களையெல்லாம் ஆக்கிரமித்தவர்கள்மீது இப்பொழுது ** முறையிலே அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதனை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக முதற்கண் நான் வரவேற்கிறேன்.

அதேபோல, பெரிய மனதோடு தமிழகத்திலே இருக்கக்கூடிய 39,330 குளங்களையும் தூர் வார வேண்டும், அப்படித் தூர் வாருவதன் வாயிலாக நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கும் மழை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நீரைச் சேமிப்பதற்கும் உண்டான வாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென்று...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கையைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றபோது, பேச்சுவாக்கில் ** நடவடிக்கை என்று சொன்னார்கள். அந்த ** நடவடிக்கை என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அந்தக் குளங்களில் தூர்வாருவதற்காக, குளங்களையெல்லாம் ஆழப்படுத்த வேண்டும்-நீண்டநெடு நாட்களாக அந்தக் குளங்களெல்லாம் தூர்வாரப்படவில்லை, தூர்வாரப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு 3 அடி ஆழத்திற்கு மட்டும் கரம்பல் மண்ணை எடுப்பதற்கு இந்த அரசு அனுமதிக்கிறது. ** பல சம்பவங்கள் நடந்து வருகின்றன. அதாவது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளங்கள், ஊராட்சிக்குச் சொந்தமான குளங்களையெல்லாம் இதுபோல . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் பாராட்டுவதைப்போல பாராட்டி, செய்யப்படாத செயல்பாடுகளைச் செய்ததாக இங்கே குற்றம் சாட்டுகிறார். ஆதாரத்தோடு தயவுசெய்து குற்றத்தைச் சாட்ட

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டும். ஆதாரம் இல்லாமல் கருத்துகளைச் சொல்லக்கூடாது. தூர் வாருவது ** அதை ஆதாரத்தோடு அவைத் தலைவரிடத்திலே கொடுத்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதாரம் இல்லாமல் தயவு செய்து ஒரு கருத்தை, அரசினுடைய நடவடிக்கையைப் பற்றி பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் தயவுசெய்து ஆதாரத்தோடு பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணியாச்சி குளத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதையெல்லாம் முதலில் காட்டிவிட்டு பிறகு பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதாரத்தைக் காட்டுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ** என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அதற்கான புகைப்படங்களைக் காட்டுங்கள்; ஆதாரத்தைக் கொடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையில் வருகின்ற செய்திகள் முழுவதும் உண்மையில்லை. தயவு செய்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்திரிகைச் செய்தி இருந்தால் மட்டும் போதாது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து சம்பவம் நடைபெறுகின்ற இடத்தைப் பற்றி, ஆதாரத்தோடு சொல்லச் சொல்லுங்கள். ஆதாரத்தைக் காட்டச் சொல்லுங்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதாரத்தைக் கொடுங்கள். ஆதாரம் கொடுத்தால் அவைக் குறிப்பில் இருக்கும். ஆதாரம் கொடுக்கிற வரையில் அவைக் குறிப்பில் இருக்காது.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** பொதுக் கூட்டத்தில் பேசுவது மாதிரி பேசினால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுக் கூட்டத்தில் எது வேண்டுமானாலும் பேசலாம். சட்டமன்றத்தில் பதிவு செய்யப்படுகிறது. பதிவு செய்யப்படுவது ஆதாரத்தோடு இருக்க வேண்டும். அரசினுடைய நடவடிக்கைமீது அவர்கள் குற்றங்குறை சொல்லுகின்றபோது ஆதாரத்தோடு சொன்னால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து ஆதாரம் இல்லாமல் பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் பேசுவதற்கு ஆதாரம் கொடுத்தால் அது அவைக் குறிப்பில் இருக்கும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்பதை எப்படி ஆதாரமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** போட்டோ எடுத்துக் கொடுங்கள். அதுசம்பந்தமாக, ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதாரமின்றிப் பேசியவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் இங்கு ஏதோ பொத்தாம் பொதுவாக, ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டை பதிய வைத்துக் கொண்டிருக்கின்றார். அதாவது, எந்த ஆற்றுப் படுகையில், எந்த இடத்தில் மணல் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்? அந்தப் பகுதியை தடுத்து நிறுத்துங்கள் என்று சொல்லலாம். எங்கேயும் அதுமாதிரி இல்லை. ஏனென்றால் விதிகள் இப்பொழுது மிகவும் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன. உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணை இருப்பதனால் விதிகள் மிகவும் கடுமையாக இருக்கின்றன. நீங்கள் கடந்தகால தி.மு.க. அரசில் நடந்ததைப் பற்றி இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது அதுமாதிரி இல்லை. குடிநீர் ஆதாரங்களான கிணறுகள் பக்கத்திலே போக முடியாது, கரைகள் பக்கத்திலே போக முடியாது. சுற்றுச்சூழல் துறையின் அனுமதியைப் பெற்றுத்தான் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையோடு G.O.—அரசாணையை வெளியிடுகிறார்கள். அந்த அடிப்படையில்தான் விதிகளுக்குட்பட்டு மணல் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மணலைப் பற்றி பேசவில்லை. குளங்களில் தூர்வாருவதற்காக அரசு . . .

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணலாக இருந்தாலும் சரி, குளத்தில் இருக்கின்ற கிராவல் மண்ணை எடுத்தாலும் சரி, இதே விதிமுறைகள்தான் அதற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் ஆதாரம் கொடுத்தால் அவைக்குறிப்பில் ஏறும். அதுவரை நீங்கள் குறிப்பிட்டது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று கேட்கிறார். பொதுப் பணித் துறையினுடைய

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அதிகாரிகள் ஒரு இடத்தில், அதாவது ஒரு குளத்தில் மண் எடுக்கின்றபோது இத்தனை அடி என்று ஒரு point-ஐ mark செய்துவிடுவார்கள். அந்த point-ஐ விட்டு விட்டு அதனைச் சுற்றி மணல் எடுப்பார்கள். அந்த pointதான் அளவு. அதைக் காட்டியே ஆக வேண்டும். அது இல்லையென்றால் அவர்களால் மணல் எடுக்க முடியாது. தயவுசெய்து அதையும் கவனத்தில் கொள்ளுங்கள். ஏதோ சொல்வதற்காக இங்கே கருத்தைச் சொல்லக்கூடாது. நம்மிடத்திலே ஒரு குற்றச்சாட்டு வருகிறது என்று சொன்னால் அந்தக் குற்றச்சாட்டை ஆய்வு செய்த பின்பு, சட்டமன்றத்திலே ஒரு சட்டமன்ற உறுப்பினர் அந்தக் கருத்தைச் சொன்னால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, அடுத்த point-க்குச் செல்லுங்கள். உங்கள் நேரம் சுருங்கிக் கொண்டேயிருக்கிறது.

*பிற்பகல் 1-15*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணியாச்சி அருகே சாலை அமைப்பதற்காக மாவட்ட ஆட்சியர் 150 லோடுகளுக்கு மட்டும் அனுமதித்தார். ** மண் எடுக்கப்பட்டது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் செய்ததன்பேரில் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர், நீங்கள் இவற்றை பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது, தயவுசெய்து ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுப் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்துவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கெனவே

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே சொல்லி, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதும் நன்றாகத் தெரியும். அன்று அவர் பேசியது வேறு ஒரு குளத்தைப் பற்றியது என்று நான் சொன்னேன். உடனடியாக அவர் சொன்னவுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டதா, இல்லையா என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதற்குண்டான தண்டனை, அபராதத் தொகையும் வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியைப் பொறுத்தவரை, யார் தவறு செய்தாலும் அவர்கள் நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என்பதற்கு இது உதாரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர், தயவு செய்து அடுத்த Point-க்குச் செல்லுங்கள். நேரம் ஆகிறது. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடியப்போகிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசைக் குற்றம் சுமத்துவது என்னுடைய நோக்கம் அல்ல. குளங்களில் தூர்வாருவதற்காக மூன்று அடி ஆழம் எடுக்கின்ற அரசின் நல்ல நோக்கத்தை ** இந்த விதிமுறையை, முறையாகப் பயன்படுத்துவதற்குண்டான கண்காணிப்புகள் அவசியம் என்பதுதான் என்னுடைய நோக்கமேதவிர, இது குற்றச்சாட்டு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கு முன்பாகவே மாண்புமிகு அம்மா அவர்கள் இதுபோன்ற அரசுப் பணிகளுக்கு எடுக்கின்ற மண்ணை, அதாவது, தார்ச் சாலை போடுவதாக இருந்தால், அந்தத் தார்ச் சாலைக்கு எவ்வளவு லோடு மண் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு பில் போடுவார்கள். அந்த பில்லுக்குண்டான தொகையும் வசூல் செய்யவேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுகாறும் இதுபோன்று இல்லை. இதுகாறும் seigniorage fees மட்டும்தான் கட்டுவார்கள். இப்பொழுது நீங்கள் அந்தத் தார்ச் சாலை அமைப்பதற்காக 500 லோடு மண் எடுக்கிறார்கள் என்று சொன்னால், அந்த 500 லோடுகளுக்கு, நெடுஞ்சாலைத் துறையோ, பொதுப் பணித் துறையோ என்ன விலையை நிர்ணயிக்கின்றார்களோ அந்த விலையையும் அரசுக்குக் கட்டவேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். Seigniorage fees-உடன் சேர்த்து இந்தத் தொகையையும் கட்டவேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள்மீது அபராதம் போடுகிறார்கள். ஆனால் கைது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை, எனவே கைது நடவடிக்கையும், சட்டப்பூர்வ நடவடிக்கையும் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் ஈமு கோழி சம்பந்தமாக ஒரு விஷயத்தை raise செய்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகாறும் 1,109 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. சுருக்கமாக சீக்கிரமாகப் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இதில் ஒரு சிக்கல் இருக்கிறது. பொதுப் பணித் துறையிலும், உள்ளாட்சித் துறையிலும் 2 குளங்கள் இருக்கின்றன. ** இரண்டு அமைச்சர்களும் அவற்றைப் பார்வையிடவேண்டும். அதற்காகத்தான் சொல்கிறேன். இது குற்றச்சாட்டு அல்ல. குளங்கள் மிக முக்கியமானவை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஈமு கோழியைப் பற்றிப் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அடுத்து, ஈமு கோழி சம்பந்தமாக நான் raise செய்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு துறைகளுக்கும் சம்பந்தப்பட்டது என்றும், இதனை நேரடியாகப் பார்க்கவேண்டுமென்றும் நமக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். உங்களைப் போலவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொண்டர்கள், அமைச்சர்களாக இருந்தாலும்கூட, வாரத்தின் கடைசி இரண்டு நாட்கள் தொகுதியைச் சுற்றிக்கொண்டுதான் வந்துகொண்டிருக்கிறோம். எங்கு தவறு நடந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். ஆதலால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவதற்கு முன்பாகவே தவறு எங்கு நடந்தாலும், எங்களுக்கும் தெரிந்தவுடனேயே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர், உரையை நிறைவு செய்யுங்கள். ஒரே பிரச்சினை குறித்து பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் இப்பொழுதுதான் உரையை ஆரம்பித்திருக்கிறேன். அடுத்து, கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பாகவே முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஈமு கோழி சம்பந்தமாக-பல பேர் இதை ஒரு பெரிய மோசடிக்கு பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். நான் அரசினுடைய கவனத்திற்கு ஏன் சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால்-ஈமு கோழி, நாட்டுக் கோழி-இவற்றையெல்லாம் பயன்படுத்தி பல மோசடி நிறுவனங்கள் உருவாகிவிடுகின்றன. அதுபோல Fine Future என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும்தான் இதுபோன்ற மோசடி நிறுவனங்கள் புற்றீசல் போல உருவாவதால் ஏழை எளிய மக்களுடைய சாதாரண சேமிப்புகளையெல்லாம் மோசடி செய்கின்ற நிகழ்வுகள் உருவாகின்றன. அதனால் இதனை ஒட்டுமொத்தமாக கண்காணிப்பு செய்வதற்கு . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 1-20*

***மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈமு கோழியைப்பற்றி கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே தே.மு.தி.க. உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியபோது அதற்கு விளக்கமாகப் பதிலளித்திருக்கிறேன். கால்நடைத் துறைக்கும், ஈமு கோழிக்கும் சம்பந்தம் இல்லையென்று சொல்லியிருக்கிறேன். அதே நேரத்திலே, சீட்டு கட்டி ஏமாந்ததுபோலத்தான் ஈமு கோழி விஷயத்திலும் மக்கள் ஏமாந்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து, அவர்களையெல்லாம் கைது செய்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், பண்ணையிலே வளர்ந்த அந்த ஈமு கோழிகளுக்குத் தீவனம் இல்லாமலிருந்தது. அம்மா அவர்கள் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, அந்த ஈமு கோழிகளுக்கு இன்றைக்கு கால்நடைத் துறையின் சார்பாக தீவனத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஈமு கோழி வளர்ப்பு மூலமாக மோசடி செய்த அத்தனைபேரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிறுவனங்கள் தோன்றுகின்றபோதே இவற்றையெல்லாம் கண்காணித்து அந்தந்தத் துறைகளின் வாயிலாக தொடக்கத்திலேயே தவறுகள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு மானியத்திலேயும் அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவிக்கிறது. இந்த நலத் திட்டங்களை அறிவிக்கின்றபோதும், நலத் திட்டங்களை மக்கள் மத்தியில்

கொண்டு செல்கின்றபோதும், ஐந்து ஆண்டுகள் கடந்த பிறகு அந்த நலத் திட்டங்களை மக்கள் மத்தியிலே எடுத்துச் செல்வதற்கும் ஒரு மிகப் பெரிய இடைவெளி இருப்பதாக நான் கருதுகிறேன். இந்த அரசின் சார்பில் பல்வேறு நலத் திட்டங்களை, அது இலவச அரிசி திட்டமாக இருந்தாலும் சரி, அல்லது இலவச வீட்டுமனைப் பட்டாவாக இருந்தாலும் சரி, லேப் டாப்பாக இருந்தாலும் சரி, சைக்கிளாக இருந்தாலும் சரி, அந்தத் திட்டங்களை அமல்படுத்துகின்றபோது ஒவ்வொரு தொகுதியிலேயும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பது ஒரு மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது. இவற்றில் சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் தொடர்ந்து என்னுடைய கோரிக்கையாக இருக்கிறது. ஏனென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு Recommendation Body ஆக மட்டும் இருப்பது என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு அல்லது ஐந்து ஆண்டுகாலம் கழிந்த பிறகு எப்படி நீங்கள் அதிகாரிகளை மட்டும் நம்பி அரசினுடைய திட்டங்களை எடுத்துச் செல்ல முடியும்? ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் தொடர்ந்து ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் பதவியில் இருப்பார்; அதற்குப் பிறகு அவர் மாறிவிடுவார்; D.R.O. மாறிவிடுவார்; R.D.O. மாறிவிடுவார், தாசில்தார் மாறிவிடுவார். அரசு என்ன திட்டம் போடுகிறதோ அந்தத் திட்டம் மக்களிடம் போய்ச் சேர்ந்ததா, இல்லையா என்பதை எப்படிக் கண்காணிக்க முடியும்? 2011-2012-லே கொடுத்த இலவச வேட்டி-சேலைகூட இன்னும் பல பகுதிகளுக்குப் போகவில்லை. நான் குற்றச்சாட்டாகச் சொன்னால், ஆதாரம் கேட்பீர்கள். ஆனால், என்னால் நிரூபிக்க முடியும். இதற்குக் காரணம் என்னவென்றால், நீங்கள் அதிகாரிகளை மட்டும் முழுமையாக நம்புகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே நலத் திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டும், அவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தினார். அடுத்ததாக, இன்னொரு குற்றச்சாட்டைச் சொல்கிறார். இலவச வேட்டி-சேலை கொடுத்ததே சரியாகச்





சென்றடையவில்லை, அதற்கு என்னால் ஆதாரம் காட்ட முடியும் என்று சொல்கிறார். நான் இந்த அவையிலே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்வதெல்லாம், ஆதாரத்தோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால், உடனடியாக புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு நடவடிக்கை எடுக்கும். பசுமை வீடுகள் திட்டமாக இருந்தாலும் சரி, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டமாக இருந்தாலும் சரி, அனைத்தும் இதுவரையில் முறையாகச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நான் உறுதியாக இந்த அவையிலே சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. நேரமாகிவிட்டது, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறை சொல்லவோ அல்லது குற்றம் சுமத்தவோ இல்லை. அதாவது, அரசினுடைய திட்டங்கள், சிறப்புத் திட்டங்கள் அனைத்திலுமே சட்டமன்ற உறுப்பினர்களை முன்னிலைப்படுத்த வேண்டும். குறைந்தது இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது ஒவ்வொரு மாவட்டத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மற்ற அதிகாரிகளோடு கூட்டம் நடத்த வேண்டும். அப்பொழுதுதான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களுடைய O.A.P. பிரச்சினை, பட்டா பிரச்சினை போன்ற எல்லாவற்றையும் நாங்கள் எடுத்துச் சொல்ல முடியும். இல்லையென்றால், ஒவ்வொரு மனுவையும் எடுத்துக்கொண்டு நாங்கள் எந்த அதிகாரியிடம் போவது?

அதேபோல, சொந்த வாகனம் இல்லாத சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். இது நிச்சயமாக பல உறுப்பினர்களுடைய கோரிக்கையாக இருக்கும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாகனம் வழங்க வேண்டும்.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2012 நவம்பர் 1

அதேபோல, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகங்கள் ஒதுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அரசும் வலுவாக இருக்க முடியும். அரசினுடைய திட்டங்களும் முறையாக மக்களைச் சென்றடைகிறதா என்பதைக் கண்காணிக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் 16 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வாகனம் கிடையாது. ஒரு தாசில்தாருக்கு வாகனம் இருக்கிறது, B.D.O.-க்கு வாகனம் இருக்கிறது, சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி கடமையாற்றுவது? அதற்கு ஒன்றும் பெரிய செலவாகாது. ஒரு வாகனத்திற்கு ரூ.10 இலட்சம், ரூ.15 இலட்சம் என்று பார்த்தால், 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சுமார் 10 கோடி ரூபாய்தான் செலவாகும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாகனம் கொடுப்பதற்கு அரசு தயங்க வேண்டியதில்லை. அரசினுடைய திட்டங்கள் நேரடியாக grass-root-ல் மக்களுக்குப் போய்ச் சேருவதற்கு வசதியாக இருக்கும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாகனம் கொடுப்பது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் இடையிலே குறைந்தபட்சம் தாசில்தார் அளவிலே ஒரு Nodal Officer இந்த அரசின் சார்பில் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அஸ்லம் பாஷா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அமருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் இன்னொரு சந்தர்ப்பத்திலே பேசலாம், உட்காருங்கள். திரு. அஸ்லம் பாஷா, நீங்கள் பேசுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, நன்றி சொல்லுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு 14 நிமிடங்கள் கொடுத்து. . .



2012 நவம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையாற்ற நேரம் அதிகப்படியாகக் கொடுத்து. . .

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** எனக்கு 14 நிமிடங்கள் ஒதுக்கி என்னுடைய உரையைப் பதிவு செய்ததற்கு நான் நன்றி கூறி விடைபெறுகிறேன். நான் துவக்கத்திலே பேசியது குறை சொல்வதற்காக அல்ல. நடைபெற்ற சம்பவம். எனவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டாம். அந்தப் பகுதி இருந்தால் நல்லது; இருந்தால்தான் சிறப்பாக இருக்கும். எனவே, நான் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கு ஆதாரம் கொடுங்கள், அப்போதுதான் அது இருக்கும். திரு. அஸ்லம் பாஷா, நீங்கள் பேசுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளுக்கான மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 2012-2013 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் கூட்டத் தொடரில் எங்களுடைய இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினரும், எனது பெருமைக்குரிய பேராசிரியருமான முனைவர் ஜவாஹிருல்லா அவர்களும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி கூறி; 14 நிமிடம் கொடுத்து ** என்ற வார்த்தையைச் சொன்னார். அந்த ** என்பதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 நவம்பர் 1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். அப்படி ஒரு வார்த்தை இருந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வார்த்தையும் சேர்த்து இரண்டுமே அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அப்படிச் சொல்லவில்லை என்றால் விட்டுவிடுங்கள். திரு. அஸ்லம் பாஷா, நீங்கள் பேசுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினரும், பேராசிரியருமான எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களும் சூரிய ஒளி மின் திட்டம் தொடர்பாக கூறிய கருத்துக்களை அரசு பரிசீலித்து இன்றைக்கு அதற்குச் செயல்வடிவம் கொடுக்கின்ற வகையிலே பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதனை மனித நேய மக்கள் கட்சி வரவேற்கின்றது, பாராட்டுகின்றது.

தமிழகத்திலே இப்போது நிலவுகின்ற கடுமையான மின்வெட்டு சென்னையிலே மட்டும் இரண்டு மணி நேரமும், மற்ற பகுதிகளிலே 12 மணி நேரமும் இருக்கின்றதை மாற்றி, ஒரு சீரான மின்வெட்டை தயவுசெய்து அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், எங்களைப் போன்றோர் நகரப் பகுதியில் பொதுமக்கள் மத்தியிலே பதில் சொல்லமுடியாமல் தவிக்கின்றோம், மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றோம். இன்னும் சொல்லப்போனால், இரட்டை மெழுகுவர்த்தியில் நாங்கள் ஓட்டு கேட்டுவிட்டு, இப்போது போனால் அதைப்பற்றி பெரிய அளவிலே கமென்ட் அடிக்கிறார்கள். அதனாலே சீரான ஒரு மின்வெட்டை 12 மணி நேரம் என்று இல்லாமல், 4 மணி நேரம், 6 மணி நேரம் என்று ஒரு சீரான மின்வெட்டை நீங்கள் மற்ற பகுதிகளிலேயும் அறிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

8 மணி நேரம் வேலை நடக்கின்ற தொழிற்சாலைகளிலே வெறும் இரண்டு மணி நேரம் தான் அவர்களுக்கு மின்சாரம் கிடைக்கின்றது. காலையிலே 6 மணி முதல் 10 மணி வரை மின்சாரம் கிடையாது. பின்னர் 10 மணி முதல் 12 மணி வரை மின்சாரம் இருக்கிறது. மறுபடியும் 12 மணிக்கு ஆப் செய்தால் மாலை 4 மணி வரை மின்சாரம் கிடையாது. மாலை 5 மணிக்கு வேலையை முடித்துவிட்டு தொழிலாளர்கள் சென்றுவிடுகிறார்கள்.



2012 நவம்பர் 1] [திரு. அ. அஸ்லம் பாஷா]

தொழிற்சாலைகள் மிகப்பெரிய அளவிற்கு பாதிக்கப்படுகின்றன. தொடர்ந்து அவர்களுக்கு 4 மணி நேரம் மின்சாரம் கொடுத்தால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்த சட்டமன்றக் கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலந்துகொண்டாரா இல்லையா என்று தெரியவில்லை. கலந்து கொண்டிருந்தால், இப்போது இந்தப் பேச்சு பேசியிருக்கமாட்டார். ஏனென்று சொன்னால், நேற்று முழுவதும் நீங்கள் எழுப்பிய பிரச்சினைகள் அத்தனைக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் அத்துணை விளக்கங்களையும் அளித்திருக்கிறார். அதையே திருப்பி கேட்கிறீர்கள். இருந்தாலுங்கூட சிறு தொழிற்சாலைகளுக்கு நான்கு மணி நேரம் தொடர்ந்து மின்சாரம் வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். அதற்கு வாய்ப்பு இருந்தால், அதற்கு என்று ஒரு குழு நியமனம் செய்து, கிடைக்கின்ற மின்சாரத்தை எந்த அளவிற்கு குறைந்தபட்சம் தொடர்ந்து அவர்களுக்கு வழங்க முடியும் என்பதற்கு தொழில்நுட்ப ரீதியாக பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவேதான், அதையெல்லாம் ஆய்வு செய்து, அதைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் இந்தப் பிரச்சினைகளுக்கு விரிவான பதில்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். நேற்றைக்கு அவைக்கு வரவில்லையென்று சொன்னால், அதை வாங்கி படித்துவிடுங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதையெல்லாம், வாங்கி படித்து தெளிவு பண்ணிக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த கருத்துக்குப் போங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் முழுமையான பேச்சை படித்துப் பாருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக நிறுவனங்களிலே மாலை

நேரங்களிலே விளம்பரப் பலகைகளுக்கு அவர்கள் பயன்படுத்தும் மின்சாரத்தை நிறுத்தினாலே தடை செய்தாலே ஓரளவிற்கு அந்த மின்சாரத்தை மிச்சப்படுத்தி மற்ற பகுதிகளுக்கு அளிக்கலாம் என்ற ஆலோசனையை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் *1-30*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான இடங்களிலே அந்த விளம்பரங்களுக்கு அவர்கள் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்துகிறார்கள். விளம்பரத்திற்கு மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டாமென்ற வேண்டுகோள்தான் விட முடியுமே தவிர, மின் சப்ளையை நிறுத்துவதற்கு தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமே இல்லை. ஒரு நிறுவனம் அல்லது ஒரு கடைக்கு மின் இணைப்பு கொடுக்கின்றபொழுது, அதிலே விளம்பரத்திற்குத் தருகின்ற மின்சாரத்தைத் தடை செய்ய வேண்டுமென்று நாம் அதிலே ஒதுக்க முடியாது. ஒட்டுமொத்தமாகத்தான் மின் சப்ளை செய்ய முடியும். இருந்தாலும்கூட, அவர்களுக்கு ஒரு awareness- விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, மின் சிக்கனத்தைப் பற்றி இன்றைக்கு பெரிய அளவிலே விளம்பரப்படுத்தி, மின் சிக்கன நடவடிக்கைக்காக அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையிலே, அதையும் நாங்கள் வலியுறுத்திக்கொண்டுதான் இருக்கிறோம்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. உட்கட்டமைப்பு வசதிக்காக கூடுதலாக *275.68* கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றீர்கள். இந்த நேரத்திலே ஒரு முக்கியமான கோரிக்கையை நான் வலியுறுத்த கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய ஆம்பூர் நகரத்திலே, மூன்றில் ஒரு பகுதி மக்கள் வசிக்கக்கூடிய பெத்லஹேம் என்று சொல்லக்கூடிய ஒரு பகுதியில் ஏறத்தாழ *30,000* மக்கள் வசித்து வருகிறார்கள். இந்தப் பகுதி அரசு அலுவலகங்கள், கல்லூரிகள், ஊரின் முக்கிய மருத்துவமனை ஆகியன இருக்கின்ற பகுதி. அந்தப் பகுதியில் இரயில்வே தண்டவாளம் அந்தப் பக்கமாக இருப்பதாலே அவர்களுக்கு வேறு வழி கிடையாது. அந்தக் கானாறு வழியாகத்தான் அவர்கள் செல்ல வேண்டும். நேற்றைக்கு



முன்தினம் பெய்த கனத்த மழையின் காரணமாக, நேற்று ஒரு நாள் முழுவதும் அந்தப் பகுதிக்கு மக்கள் சென்று வர முடியவில்லை. மிகுந்த வெள்ளம் அந்தப் பகுதியிலே சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, நீண்ட நாள் கோரிக்கையாக, சென்ற நிதிநிலை கூட்டத்தொடரின்போதுகூட நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனுவினை அளித்திருந்தேன். அவர்களும் அதைப் பரிசீலித்து, துறைக்கு அனுப்பி, அதற்கு திட்ட மதிப்பீடும் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பரிந்துரை செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு மேம்பாலத்தை அமைத்துத் தருமாறு இந்த நேரத்திலே ஒரு கோரிக்கையாக வைக்கின்றேன்.

அதேபோல, ஆம்பூரின் முக்கியப் பகுதியிலே ஒரு பெரிய கானாறு இருக்கின்றது. அந்த ஆற்றைச் சுற்றி மக்கள் வசிக்கிறார்கள். அது புறம்போக்கு நிலம் கிடையாது. பட்டா நிலத்திலே சொந்தமாக இடம் வாங்கி, வீடு கட்டியிருக்கின்றார்கள். *2010* ஆம் ஆண்டு பெய்த கனத்த மழையின் காரணமாக அந்தக் கானாற்றிலே வெள்ளம் வந்து *5* பேர் மரணடைந்திருக்கின்றார்கள். நேற்றைக்கு அந்தப் பகுதியிலே பெய்த கனத்த மழையின் காரணமாக மீண்டும் வெள்ளம் ஏற்பட்டு, பக்கத்தில் இருக்கின்ற வீடுகளுக்குள் தண்ணீர் நிரம்பி, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களெல்லாம் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். அந்தக் கால்வாய் பகுதிக்கு ஒரு தடுப்புச் சுவர் அமைத்துத்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து ஒரு முக்கியமான கோரிக்கை. எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பிரச்சினை. சென்ற தி.மு.க. ஆட்சியிலே மறைமுகமாக எங்கள் Shariah சட்டத்திலே கை வைத்துவிட்டார்கள் என்பதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். அதற்குத் தக்க பதிலடியும் கொடுத்துவிட்டார்கள் எங்கள் சமுதாய மக்கள். முஸ்லிம்களுக்கான திருமணப் பதிவுச் சட்டம் எளிமைப்படுத்தப்பட வேண்டுமென்று நாங்கள் நீண்ட வருடங்களாக கோரிக்கை வைத்துகொண்டிருக்கின்றோம். சென்ற சட்டமன்றத் தேர்தலின்போதுகூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் நாங்கள் கோரிக்கை வைத்தோம். அவர்களும் அதைப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, வெகுவிரைவிலே தமிழகத்திலே முஸ்லிம்களின் திருமணப் பதிவுச் சட்டம்

எளிமைப்படுத்தப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இந்திய அரசியல் சாசனச் சட்டம், முஸ்லிம்களுக்கு, முஸ்லிம் தனியார் சட்டத்தைப் பின்பற்ற அனுமதி அளித்துள்ளது. இதை டெல்லி உயர் நீதிமன்றம்கூட சென்ற மாதம் உறுதி செய்திருக்கிறது. ஆனால், தமிழகத்திலே கடந்த 6 மாத காலமாக முஸ்லிம் பெண்கள் திருமணத்தின்போது, அவர்கள் 18 வயதை முடிக்கவில்லையென்ற ஒரு காரணத்திற்காக, அந்தத் திருமணத்தை சமூக நலத் துறை அதிகாரிகளும், காவல் துறையினரும் தடுத்து நிறுத்துகின்றார்கள். ஜமாத்துமீது வழக்குப் போடுவது, பெற்றோர்களைக் கைது செய்வது போன்ற பணிகளில் அரசு ஊழியர்களும், காவல் துறையினரும், சமூக நலத் துறையைச் சேர்ந்தவர்களும் ஈடுபடக் கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலைத் தருகிறார். சமூக நலத் துறையினுடைய அலுவலர்களின் பணி அதுவல்ல. சிறு வயதிலேயே குழந்தைத் திருமணம் எங்கேயாவது செய்கிறார்கள் என்ற செய்திகள் அரசுக்கு, சமூக நலத் துறைக்கு வருமேயானால், அதைத் தடுப்பதற்காக காவல் துறையினரின் உதவியோடு, அந்த இடத்திற்குப் போகிறபோது 18 வயது நிரம்பி இருக்கிறதா என்கிற சான்றிதழ் இருந்தால், அனுமதித்துவிடுகிறார்கள். சான்றிதழ் இல்லையென்று சொன்னால், சம்பந்தப்பட்டவர்களை காவல் துறையினரிடம் ஒப்படைத்து, வழக்குப் போடுகிறார்களே தவிர, இது ஒன்றே சமூக நலத் துறையின் பணி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷா, உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம் இது. ஒரு sensitive-ஆன matter இது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் நிறையப் பேர் பேச வேண்டி இருக்கிறது.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** Shariah சட்டத்தின்படி எங்கள் மார்க்கத்திலே பெண்கள் maturity ஆனவுடனே எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் திருமணம் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் அதற்காக 13 வயது, 14 வயது குழந்தைகளுக்குத் திருமணம் செய்யவில்லை. 16, 17 வயது ஆகின்றது. 18 வயது நிறைவடையவில்லை; அவ்வளவுதான். ஆனால், 16, 17 வயதில் திருமணம் என்பது குழந்தைத் திருமணம் கிடையாது. (குறுக்கீடுகள்) 16 வயது, 17 வயது என்பது குழந்தைத் திருமணம் கிடையாது. (குறுக்கீடுகள்) அதனால் நீங்கள் எங்களுக்கு. . .

பிற்பகல் 1-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** அப்படித் திருமணம் தடை செய்யப்படுவதை நீங்கள் தவிர்க்க வேண்டுமென்றுதான் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உங்களது உரையை நிறைவு செய்யுங்கள். இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) உறுப்பினர், நீங்கள் சீக்கிரம் conclude செய்யுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** அதேபோல, சென்ற அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் கந்து வட்டி, லாட்டரிச் சீட்டு, சூதாட்டம் போன்றவற்றை ஒழிப்பதற்காகக் கடுமையான சட்டங்களை நீங்கள் கொண்டுவந்து அமல்படுத்தினீர்கள். அதைப்போன்று, இன்றைக்குத் தமிழகத்திலே மதுவிலக்கினை அமல்படுத்த வேண்டுமென்று அனைத்துத் தரப்பு மக்களாலும் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. நிச்சயமாக நீங்கள் அதை அமல்படுத்தினால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உங்களது உரையை முடியுங்கள் please.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** அந்த வருவாய் இழப்பை ஈடு கட்டும் வகையில், இயற்கை வளமான கிரானைட், தமிழகத்திலே

உங்களுக்கு மிகப் பெரிய அளவில் கிடைக்கிறது. அதன்மூலமாக, நிச்சயமாக நீங்கள் வருவாய் இழப்பை ஈடுசெய்து கொள்ளமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்குப் பலமுறை பதில் சொல்லியாகிவிட்டது. ஆனால், மீண்டும் மீண்டும் இங்கே அதை எழுப்பிக் கொண்டிருக்கிறீர்கள். ஏதோ தமிழகத்திலே மட்டும்தான் மதுக் கடைகள் இருப்பதைப்போலவும், இந்தியாவிலே வேறு எந்தப் பகுதியிலும் அது இல்லாதது போலவும், ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவதற்குச் சிலர் முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். இதிலே எங்களுக்கும் மாற்றுக் கருத்து ஏதுமில்லை. மதுவை ஊக்கப்படுத்த வேண்டுமென்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணமும் அல்ல; கொள்கையும் அல்ல. உங்களைவிட, மதுவை எதிர்ப்பதிலே, மதுவின் கொடுமைகளை எதிர்ப்பதிலே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேசமயத்தில், இன்றைக்கு உள்ள நடைமுறைச் சிக்கல்களையும் நாம் பார்க்க வேண்டும். நமக்குப் பக்கத்திலே இருக்கின்ற அனைத்து மாநிலங்களிலும் மது விற்பனை அனுமதிக்கப்பட்டிருக்கின்றபோது, தமிழகத்திலே மட்டும் மதுவிலக்கை அமல்படுத்தினால், அது கள்ளச்சாராயப் பேர்வழிகளுக்கும், சமூக விரோதிகளுக்கும்தான் பயனுள்ளதாக அமையும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, அந்தக் கள்ளச்சாராயப் பேர்வழிகளுக்கும், சமூக விரோதிகளுக்கும் சென்று கொண்டிருந்த பணம்தான், இன்றைக்கு அரசின் கஜானாவிற்குத் திருப்பி விடப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதே நேரத்திலே, மதுவின் தீமையைப்பற்றி விளம்பரப்படுத்தி, மக்களிடம் அரசு பெரிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்தியா முழுவதும் மதுவிலக்கை அமல்படுத்தினால், தமிழகமும் அதை அமல்படுத்துவதற்குத் தயார். தமிழக அரசினுடைய வருவாயை ஈடு கட்டுகின்ற வகையிலே, மத்திய அரசே மதுவிலக்கை அமல்படுத்தி, அவர்களே அந்த வருவாயை ஈடு கட்டுகின்ற வகையிலே நிதியாதாரத்தையும் கொடுத்தால், இதற்கு வழிவகை இருக்கிறதேதவிர, ஏதோ தீவுத்திடல் போல ஒரேயொரு மாநிலத்திலே மட்டும் இதை அமல்படுத்தினால், அது முழுக்க முழுக்க தோல்வி அடையும் என்பதை இந்த நேரத்திலே உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை நிறைவு செய்யுங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** இறுதியாக, ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)*

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். இன்னும் நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது. *(குறுக்கீடுகள்)* உங்களுடைய கோரிக்கை ஏற்கப்படவில்லை, உட்காருங்கள். *(குறுக்கீடு)* திரு. அ. அஸ்லம் பாஷா, நீங்கள் உங்கள் உரையை நிறைவு செய்யுங்கள். *(குறுக்கீடு)* செல்வி கே. பாலபாரதி, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக, கூடங்குளம் போராட்டக்காரர்கள்மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை தயவு செய்து வாபஸ் பெறவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உங்கள் உரையை நிறைவு செய்யுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள். *(குறுக்கீடுகள்)* திரு. எல். வெங்கடேசன், நீங்கள் பேசுங்கள்.

***திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* இந்தத் துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எல். வெங்கடேசன், இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது பிரச்சினை என்னவென்றால், தமிழக அரசு வந்தபிறகு, கூடுதலாக கடைகளினுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தி, சில இடங்களில் பள்ளிவாசல், கோயில், பள்ளிக் கூடங்களின் பக்கத்திலேயே அதை வைத்துவிடுகிறார்கள். 'அவற்றை அங்கிருந்து அப்புறப்படுத்துங்கள்; அந்தக் கடைகளின் இடத்தை மாற்றுங்கள்' என்று அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்றால், அதிலே உரிய கவனம் செலுத்தப்படுவதில்லை. ஆகவே, அந்தச் சிக்கலையாவது தீருங்கள் என்று நாங்கள் சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** இல்லையென்றால், நான் மொத்தமாகக்கூடச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணனும் சொல்லிவிடட்டும், நான் சேர்த்தே பதில் சொல்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தெந்த இடங்களில் எல்லாம் பொது மக்களின் எதிர்ப்பு இருக்கின்றதோ அல்லது எங்கெங்கெல்லாம் மசூதிகள், கல்விக் கூடங்களுக்குப் பக்கத்தில் அந்தக் கடைகள் இருக்கின்றனவோ, அதுகுறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதிலே அரசு உடனடியாகத் தலையிட்டு, அந்த இடங்களிலிருந்து அந்தக் கடைகள் மாற்றியமைக்கப்படுகின்றன அல்லது அந்தக் கடைகளை ஒட்டுமொத்தமாக மூடி விடுகிறோம். ஆனால், சில இடங்களிலே, சில அரசியல்வாதிகள் அரசியல் செய்வதற்கு வழியே இல்லாமல்



இருக்கின்றபோது, சில நேரங்களில் பொழுதுபோக்காக இந்தப் பிரச்சினையை அந்தந்தப் பகுதிகளிலே எடுத்துவிடுகிறார்கள்.

பிற்பகல் 1-40

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். எங்கள் ஊரிலேயே, திண்டுக்கல்லிலேயே, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலிருந்தே, கடந்த 10, 15 ஆண்டுக் காலமாகவே ஒரு கடை செயல்பட்டு வந்தது. இன்றைக்கு 15 ஆண்டுக் காலத்திற்குப்பிறகு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சகோதரி செல்வி பாலபாரதி அவர்கள் அங்கே அந்தப் பிரச்சினையை எழுப்பி, அந்தக் கடை அங்கிருந்து மாற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள்; போராட்டமும் நடத்தினார்கள்; பின்னர் அதை மாற்றிவிட்டோம். அது வேறு விஷயம். ஆனால், கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியிலும் அந்தக் கடை இருந்தது. அந்த ஆட்சிக் காலத்திலும் மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. என்றால், அவர்களிடம் பயந்து, நடுங்கி, மிரண்டு, ஒடுங்கி இருக்கிறீர்கள். அ.இ.அ.தி.மு.க.விடம் உரிமையோடு கோரிக்கை வைக்கிறீர்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, உறுப்பினர்களுடைய கோரிக்கைளை தாயுள்ளத்தோடு கவனித்து, உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுதும் சொல்கிறேன், எந்த சட்டமன்ற உறுப்பினராவது டாஸ்மாக் கடையை மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்தால், எந்தவிதமான தயக்கமும் காட்டாமல், கடையை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கையை உடனுக்குடன் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது. அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாகச் செய்வோம் என்பதை மீண்டும் ஒரு முறை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாஸ்மாக் கடைகளை இடம் மாற்றுவது சம்பந்தப்பட்ட வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், கடையை உடனே மாற்றி விடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், அங்கே

இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே கடைகளை மாற்ற வேண்டுமென்று உத்தரவிட்ட பிறகும்கூட, நான்கு கடைகள் மாற்றப்படவில்லை. இதை தி.மு.க. ஆட்சியா, அ.இ.அ.தி.மு.க ஆட்சியா என்கிற அடிப்படையில் இந்தப் பிரச்சினையை நாங்கள் பார்க்கவில்லை. நான் இங்கே குறிப்பிட விரும்புவது என்னவென்றால், டாஸ்மாக் கடையை இடம் மாற்றுவதிலே உள்ள பிரச்சினை என்னவென்றால், வாடகைக்கு இடம் கொடுக்கிறவர், advance கொடுத்தால்தான் வாடகைக்கு கடையைக் கொடுக்கிறார். ஆனால், டாஸ்மாக் நிறுவனத்தில் advance கொடுப்பதற்கு provision இல்லை. ஆகவே, வாடகைக்கு இடம் தர மறுக்கிறார்கள். நாங்கள் என்ன கோரிக்கை வைக்கிறோம் என்று சொன்னால், ஒன்று, advance கொடுத்து, வாடகைக்கு இடத்தைப் பெறவதற்கு நடவடிக்கை எடுங்கள், இல்லையென்றால், டாஸ்மாக் கடை இன்றோ, நாளையோ போகப் போவது கிடையாது. அதன்மூலம் ஏராளமான வருவாய் வருகின்ற காரணத்தினால், அரசே ஒதுக்குப்புறமான இடத்தைத் தேர்வு செய்து, நிரந்தரமாகக் கட்டடம் கட்டிவிட்டால் பிரச்சினையே இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல ஆலோசனையை வழங்கி இருக்கிறார். (சிரிப்பு) டாஸ்மாக் திட்டம் தொடர வேண்டுமென்பதையும் மறைமுகமாக இங்கே வலியுறுத்தி இருக்கின்றார். அவருடைய நோக்கம் நல்ல நோக்கம்தான். சமூக விரோதிகளுக்குச் செல்கின்ற வருவாய், அரசு கஜானாவிற்கு வருவதை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி. அதேபோல, அவர் கூறிய ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறோம். இன்றைக்கும் சொல்கிறோம்; மாற்று இடங்களுக்கு வழியில்லை என்றாலும்கூட, பொதுமக்கள் எதிர்ப்பு இருந்தால் அந்தக் கடையை மாற்றுவதற்கு வழியிருந்தால் மாற்றச் சொல்கிறோம்; மாற்றுவதற்கு வழி இல்லை என்றால் அந்தக் கடையை மூடியே விடுகிறோம். அந்தக் கடைக்குப் பதிலாக மாற்றுக் கடை திறக்க வேண்டிய அவசியம்கூட இல்லை என்று மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். டாஸ்மாக் கடைக்கான வாடகையை டாஸ்மாக் நிறுவனமே கொடுத்துவிடுகிறது. வாடகை கொடுப்பதிலே எந்தவிதமான பிரச்சினையும் எழவில்லை.



டாஸ்மாக் கடைக்கான முன்பணத்தை, பார் எடுப்பவர்கள் கொடுக்கும் நடைமுறை இருக்கின்றது. கடையை மாற்றுவதற்கு advance ஒரு பிரச்சினை இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தால், அந்தக் கடையை மாற்றி விடுகிறோம்; மாற்ற முடியவில்லை என்றால், அந்தக் கடையை மூடிவிடுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு என்னை அனுப்பி வைத்து, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திலே கலந்துகொள்ள வாய்ப்பளித்தமைக்கு, எங்களையெல்லாம் ஆளாக்கி, அழகு பார்க்கின்ற புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 6-7-2012 அன்று, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மொத்தம் 36 ஏரிகள் பயன்பெறும் விதத்திலே, 1970 ஆம் ஆண்டிலிருந்து இருக்கின்ற நந்தன் கால்வாயைத் தூர்வாரி, செப்பனிட வேண்டுமென்ற புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுடைய ஆணையின்பேரில், எனது தலைமையில் தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சியிலே ஒரு மிகப்பெரிய கோரிக்கை உண்ணாவிரதத்தை நடத்தினோம். அந்தக் கோரிக்கை உண்ணாவிரதத்தின் அடிப்படையிலே, அப்போது பொதுப் பணித் துறை அதிகாரிகளிடத்திலே கேட்டபோது, அவர்கள் நந்தன் கால்வாயைத் தூர்வாரிச் செப்பனிட சுமார் 14, 15 கோடி ரூபாய் இருந்தால் போதும் என்று சொன்னார்கள். அதைத் தமிழக அரசு வழங்க வேண்டுமென்றுதான் அந்த உண்ணாவிரத அறப் போராட்டதை நடத்தினோம். ஆனால், இந்தத் துணை நிதிநிலை அறிக்கையில் அதற்கான அறிவிப்பு வராமல் இருப்பது மிகப்பெரிய வருத்தத்திற்குரிய விஷயமாக தேசிய முற்போக்கு திராவிட கழகம் கருதுகிறது.

பிற்பகல் 1-45

அடுத்தபடியாக, இந்த அரசு பொறுப்பேற்றவுடன், சுமார் 26,000 இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் விரைவில்

நிரப்பப்படும் என்றது. ஆசிரியர் நியமனத்தில், கடந்த காலம் வரை கடைப்பிடித்து வந்த நடைமுறையை மத்திய அரசினுடைய N.C.T.-யின் அறிவுறுத்தலின்படி, இந்த அரசு புதிய ஆசிரியர் நியமன நடைமுறையைக் கொண்டு வந்தது. இதன்படி 7-3-2012 அன்று ஆசிரியர் நியமனத்திற்கு, ஆசிரியர் தகுதித் தேர்வு என்ற புதிய நியமன முறையைக் கடைப்பிடிக்கும் என அறிவித்தது. இந்தத் தகுதித் தேர்வில் குறைந்தபட்சம் 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த நடைமுறை மத்திய அரசின் அங்கமான N.C.T.-யின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி 11-2-2011 அன்று அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதில், 23-8-2010 அன்று முதல் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பாடம் நடத்தும் ஆசிரியர்களை நியமனம் செய்ய, ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனவும், அதற்காக அந்தந்த மாநில அரசாங்கம் ஆசிரியர் தகுதித் தேர்வை நடத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி இந்தத் தேர்வு கடந்த 10-7-2012 அன்று நடைபெற்றது. இந்தத் தேர்வில் சுமார் 6 இலட்சத்திற்கும் அதிகமானோர் கலந்து கொண்டார்கள். இதில் 2,448 பேர்கள் மட்டுமே தேர்ச்சி பெற்றனர். தேர்வு எழுதிய 6,50,843 பேர்களில், இந்தத் தேர்ச்சி வெறும் 0.3% மட்டுமே. இதனால் தேர்வெழுதியவர்களின் கோரிக்கைகளை ஏற்று, ஆசிரியர் தேர்வு வாரியம் மீண்டும் 14-10-2012-இல் மறு தேர்வு நடத்தியது. இதில் 7,34,036 பேர் பங்கேற்றார்கள். இந்தத் தேர்வில் அரசு அறிவித்த பாடப் புத்தகங்களிலிருந்து கேள்விகளைக் கேட்காமல், out of portions-லிருந்து, அதாவது வெளியிலிருந்து பல கேள்விகளை கேட்டு, பதில் அளிக்க முடியாத வகையில், ஆசிரியர் தேர்வு வாரியம் தேர்வை நடத்தியுள்ளது. இதிலும் எதிர்பார்த்த சதவிகித தேர்ச்சி இருக்காது என்றே கூறப்படுகிறது. இந்தச் சூழலில், இந்த 7,34,036 ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுடைய எதிர்காலம் கேள்விக் குறியாக உள்ளது. கடந்த ஆட்சியில் குறைந்த அளவில் ஆசிரியர்கள் நியமனம் நடைபெற்ற நிலையில், அதேபோல் இப்போதுள்ள அரசும் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் தேர்வு எழுதுகின்றபோது, திறமையின்மையைக் காரணமாகக் காட்டி, நேரடியாக நியமனம் செய்யாமல், காலம் கடத்துகின்ற முயற்சியாகவே தெரிகின்றது என நாங்கள் நம்புகின்றோம். இதனால், ...



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் பேசுகின்றபோது இந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். அதற்குத் தெளிவான முறையில், அரசினுடைய செயல்பாட்டினைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர் வெங்கடேசன் அவர்களும் இதையேதான் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்.

இது மத்திய அரசு கொண்டு வந்த சட்டம். ஏற்கெனவே 60% தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 8 முதல் 14 வயது வரையுள்ள மாணவர்கள் படிக்கின்ற பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்காக இந்தச் சட்டத்தை, (R.T.E) Act கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் தேர்வு நடைபெற்றிருக்கிறது. இதையேதான் மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்களும் சொன்னார்கள். இரண்டாவது முறையாக தேர்வு நடைபெற்றிருக்கிறது. அதில் தேர்ச்சி பெற்றவர்கள் சதவிகிதம் குறைந்திருந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டிருக்கிறார். அதையேதான் வெங்கடேசனும் கேட்கிறார். இந்த யூகத்திற்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது. விடைகளை இணையதளத்தில் வெளியிட்டிருக்கிறோம். தேர்வில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு தேர்வு எழுதியவர்கள் பதிலைத் தெரிந்துகொண்டு, மதிப்பெண்ணையும் தெரிந்துகொள்ளலாம். இது வெளிப்படையான முறையாகும். இப்போது விடைத் தாள்கள் சரி பார்க்கும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. விரைவிலேயே ஆசிரியர்கள் எந்த அளவிற்குத் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, இந்த அரசு நல்ல முறையில் மேல் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், ஒரு நிமிடத்தில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது N.C.T.E.-யின் வழிக்காட்டுதலின்படி, ஆசிரியர் தகுதித் தேர்வை அப்படியே பின்பற்றுகின்ற அரசு, பணி அமர்த்தலுக்கான நெறிமுறையை விரிவாக விளக்கும் வகையில் sub-section 1 (23) R.T.E. Act-இல் எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி., வகுப்புகளைச் சேர்ந்தவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட 60% விழுக்காடு தேர்ச்சி விகிதத்திலிருந்து அந்தந்த மாநில அரசாங்கம் சலுகை வழங்க முன் வரலாம் என அதே சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அதை இந்த அரசு ஏற்க வேண்டும். ஏனென்று சொன்னால், எனக்கு முன்பாகப் பேசியவர்கள் சொன்னார்கள். 150 மார்க்கிற்கு 60% என்றால் 90 மார்க் வருகிறது. அந்த 90 மார்க்கும் தேர்வு வாரியம் அனுமதிக்கப்பட்ட அந்தப் பாடப் புத்தகத்திலிருந்து கேள்விகளைக் கேட்டால் பரவாயில்லை. அதிலிருந்து கேள்விகள் கேட்காமல், வெளியிலிருந்து கேட்கிறார்கள். தொடர்பு இல்லாத பாடத் திட்டத்திலிருந்து அந்தக் கேள்விகளை கேட்கின்ற காரணத்தினால், அவர்களால் பதில் அளிக்க இயலவில்லை. எனவே, அரசாங்கம் மனது வைத்தால் வெளியில் இருந்து, தொடர்பு இல்லாத கேள்விகளுக்கு பதில் எழுதியிருந்தாலோ, எழுதாமல் இருந்தாலோ அதை போனஸ் மார்க்-ஆக போடுவதற்கு இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென தேசிய முற்போக்கு திராவிட கழகம் தனது கோரிக்கையை வைக்கிறது.

பிற்பகல் 1-50

அதேபோன்று, இன்றையதினம் துணை நிதிநிலை அறிக்கையை இந்த அரசாங்கம் தாக்கல் செய்துள்ளது. கடந்த 2011-2012 நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்தபோது இலவச மின் விசிறி-fan, இலவச...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** இலவச மிக்ஸி, கிரைண்டர், ஃபேன்-க்கு 25 இலட்சம்—மொத்தம் ஒரு கோடியே 83 இலட்சம் குடும்ப அட்டைக்கும் நாங்கள் இலவசப் பொருட்களைக் கொடுப்போம், விநியோகம் செய்வோம் என்று சொன்னார்கள், விலையில்லாப் பொருட்களை. அந்த அடிப்படையிலே 2011-2012-லே 25 இலட்சம் குடும்பங்களுக்கு 1,250 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது இந்த அரசு. ஆனால், 2012-2013-க்கான நிதிநிலை அறிக்கையிலே 35 இலட்சம் குடும்பங்களுக்கு 2 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆக, முன்பு 2011-2012-லே ஃபேன், மிக்ஸி, கிரைண்டர் 5,000 ரூபாய், அப்படித்தான் கணக்கு 25 இலட்சம் குடும்பங்களுக்கு. ஆனால், அதற்குப் பிறகு 2012-2013-ல் 2 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; 1,250 கோடி ரூபாய்க்கு 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஏன் என்று புரியவில்லை!



அதேசமயத்திலே, அரசு கேபிள் டி.வி. ஆரம்பித்ததிலிருந்து 2012 மே மாதம் வரை தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் மூலம் 12-11-2011...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எல். வெங்கடேசன்:** இன்னொரு விஷயத்தை சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். இன்னும் எனது தொகுதி சம்பந்தமாகப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 11 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** இரண்டு விஷயத்தைப் பேசி முடித்துவிடுகிறேன். கேபிள் என்று சொன்னவுடன் உரையை முடிக்கச் சொன்னால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசிவிட்டீர்கள், உடகாருங்கள். திரு. ம. கலை அரசு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) நல்லது, உங்கள் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் பேசுகின்றபோது, 2011-2012 ஆம் ஆண்டில் விலையில்லாத மின் விசிறி, கிரைண்டர், மிக்ஸி ஆகியவற்றிற்கு, 25 இலட்சம் குடும்பங்களுக்கு மின் விசிறிகள், கிரைண்டர்கள், மிக்ஸியை வாங்குவதற்கு 1,250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்ததே, இப்போது 35 இலட்சம் குடும்பங்களுக்கு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 நவம்பர் 1

2,000 கோடி ரூபாய்தானே ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த நிதி போதுமான நிதி என்ற அளவிற்கு இருந்தால் சரிக் கட்டுவோம். கூடுதலாக நிதி தேவைப்பட்டால் (குறுக்கீடு) உறுதியாக 35 இலட்சம் எண்ணிக்கையில் குறையாது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த எண்ணிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் வெங்கடேசன் அவர்களுக்கு சந்தேகம் எழ வேண்டாம். உரிய நிதி, உரிய நேரத்தில் ஒதுக்கித் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித்ததற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நேற்றைக்கு தமிழ்நாட்டின் கரையைக் கடந்த ‘நிலம்’ புயல் வேலூர் வழியாக ஆந்திராவிற்குச் செல்கின்றபோது வேலூர் மாவட்டத்தைப் பெரிதும் பாதித்துவிட்டுச் சென்றிருக்கிறது. (குறுக்கீடுகள்) வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாது மலைப் பகுதியில் பெய்த மழையின் காரணமாக அங்கே இருக்கக்கூடிய பேயாறு, அகரம் ஆறு போன்ற ஆறுகள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. கலை அரசு, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன், நன்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** திருவண்ணாமலையையும், தியாகதுருகத்தையும் இணைக்கக்கூடிய ஒரு சாலை. அந்தச் சாலையிலே மணலூர்பேட்டை அருகிலே தென்பெண்ணையாற்றின் குறுக்கே ஒரு பாலத்தைக் கட்ட வேண்டும். இதுவொரு கோரிக்கை. அதன்பிறகு, மிக நீண்ட நெடுநாள் கோரிக்கை, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், திருக்கோவிலூரில் பேருந்து நிலையம் வேண்டுமென்று நான் தொடர்ந்து இந்த அவையிலே வலியுறுத்தி வருகிறேன். அதற்கான முயற்சியை இந்த அரசு எடுக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எல். வெங்கடேசன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.



2012 நவம்பர் 1]

**திரு. எல். வெங்கடேசன்:** நிறைவாக இந்த விவாதத்திலே கலந்துகொள்ள வாய்ப்பளித்த கேப்டன் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றியைக் கூறுவதற்கு முன், **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ம. கலை அரசு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இதெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. இந்தக் கடைசி வரி ஏறாது, உட்காருங்கள். திரு. ம. கலை அரசு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நேற்றையதினம் கரையைக் கடந்த ‘நிலம்’ புயல் வேலூர் வழியாக ஆந்திராவிற்குச் செல்கிறபோது வேலூர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய ஜவ்வாது மலைப் பகுதியில் கடுமையான மழையைப் பெய்வித்து, அங்கே இருக்கக்கூடிய இரண்டு ஆறுகளில், பேயாற்றிலும், அகரம் ஆற்றிலும் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்திவிட்டுச் சென்றிருக்கிறது. ஒருபுறம் வேலூர் வறட்சியான மாவட்டம், குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் என்று நாம் சந்தோஷமாக இருந்தாலுங்கூட, அந்தக் காட்டாற்று வெள்ளத்தினால் ஏறக்குறைய அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட பல கிராமங்கள், 25 கிராமங்களுக்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டு மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். இன்று காலையில்கூட நம்முடைய வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதிகாலை 4.00 மணிக்கு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று ஏறக்குறைய 4, 5 அடி தண்ணீரில் நடந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார் என்கின்ற ஒரு ஆறுதல் நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

பிற்பகல் 1-55

வெள்ளம் கிராமங்களுக்குள் புகுந்ததனால் வீட்டிலிருந்த உடமைகளும், உணவுப்பொருள்களும், தட்டுமுட்டுச் சாமான்களும் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டிருக்கக்கூடிய ஒரு வேதனையான நிகழ்வைக் காண முடிகிறது. இந்தக் கடுமையான

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வெள்ளத்தினால் பள்ளிகொண்டாவைச் சேர்ந்த சேகர் என்கின்ற ஒரு கூலித் தொழிலாளி இறந்தார் என்கின்ற செய்தியும் வேதனை அளிக்கிறது. தமிழக அரசு, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும். விவசாயிகளுடைய விளைபொருள்கள் வாழை மரங்கள், நெற்பயிர்கள், கரும்பு சாகுபடி இப்படி எல்லா வகையிலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, வெள்ள நிவாரணத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக விரைந்து மேற்கொள்ள தமிழக அரசை இந்த நேரத்திலே நான் வலியுறுத்துகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை துவங்குவதற்கு முன்னரே கன மழையிலிருந்து மக்களைக் காக்கின்ற வகையிலே பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். இந்தச் சூழ்நிலையிலே, தமிழகத்திலே கன மழை பெய்து வருவதால் இதிலிருந்து மக்களைக் காக்க எடுக்கப்பட்டு வரும் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித் தொகைகளை வழங்குவது குறித்தும் விரிவான ஆலோசனைக் கூட்டம் 20-10-2012 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்திலே நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்து வருகின்ற கன மழை காரணமாக ஏற்பட்டுள்ள மனித உயிரிழப்புகள் குறித்தும், கால்நடைகள் உயிரிழப்புகள் குறித்தும், சேதமடைந்துள்ள வீடுகள் பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டதன் அடிப்படையிலே இந்தக் கன மழை காரணமாக உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலத்திலே ஒரு இலட்சத்து



50 ஆயிரம் ரூபாயாக இருந்த உதவித் தொகையை, இந்த முறை ஒரு இலட்சம் ரூபாய் அதிகப்படுத்தி மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக அந்த உதவித் தொகையை நீட்டித்துக் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முழுமையாகச் சேதமடைந்த குடிசை வீடுகளுக்கு நிவாரண உதவித் தொகையாக 5,000 ரூபாயை வழங்கவும், பகுதியாகச் சேதமடைந்த வீடுகளுக்கு நிவாரண உதவித் தொகையாக 2,500 ரூபாய் வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்கு ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். இதுதவிர, முழுமையாக வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்கு ஆணை பிறப்பித்து, அதனடிப்படையிலே வேகமாக நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதையும் பணிவோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாடுகளை இழந்த உரிமையாளர்களுக்கு 20,000 ரூபாய் நிவாரண உதவித் தொகையாக வழங்கச் சொல்லி ஆணைகள் பிறப்பித்திருக்கின்றார்கள். ஆடுகளை இழந்த உரிமையாளர்களுக்கு 2,000 ரூபாய் உதவித் தொகை வழங்கச் சொல்லி ஆணைகள் பிறப்பித்திருக்கின்றார்கள். கோழிக்குக்கூட 100 ரூபாயை உதவித் தொகையாக வழங்கக்கூடிய ஒரே அரசு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை நான் இங்கே பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி இன்றைக்குத் தமிழ்நாட்டிலே உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வேகமாக நிவாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியையும் முன்வைத்திருக்கின்றார்கள். அதாவது, நெற்பயிர்கள், பாசன வசதி கொண்ட பிறவகைப் பயிர்கள் இப்படிப்பட்ட பயிர்களுக்கு நிவாரண உதவித் தொகை பற்றி ஒரு கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நெற்பயிர்களுக்காக எக்டர் ஒன்றுக்கு 10,000 ரூபாயும், பாசன வசதி கொண்ட பிறவகைப் பயிர்களுக்கு எக்டர் ஒன்றுக்கு 7,500 ரூபாயும், மானாவாரி நிலங்களில் பாதிக்கப்பட்டுள்ள பயிர்களுக்கு எக்டர் ஒன்றுக்கு 4,000 ரூபாயும்,...

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** நீண்ட காலப் பயிர்கள் பாதிக்கப்படுகின்றபோது ரூ.9,000 ஆக உதவித் தொகையை இன்றைக்கு உடனடியாக வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே வருவாய்த் துறையைச் சார்ந்த அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அந்தந்த மாவட்டங்களில் வழங்க வேண்டிய நிவாரண உதவிகளை வேகமாக வழங்கிக்கொண்டு வருகிறார்கள்.

'நிலம்' புயல் பாதித்த பகுதிகளில் எந்த இடத்திலும், தமிழ்நாட்டில் ஒரு பகுதியில்கூட நிவாரண உதவித் தொகைகள் வழங்கப்படவில்லை என்றோ, அல்லது நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றோ, எந்தப் பத்திரிகையிலும், எந்தவிதமான செய்தியும் இதுவரை வரவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள், உரையாற்ற இன்னும் இரண்டு நிமிடங்கள் உங்களுக்கு நேரம் உள்ளது, பேசுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** அமைச்சர் அவர்கள் 10 நிமிடங்கள் எடுத்துக் கொண்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் கவனத்திற்கு நடந்த நிகழ்ச்சியை நான் கொண்டு வந்தேன். நான் எதுவும் குறை சொல்லவில்லை. குறை சொல்லவேண்டுமென்றால் சொல்லலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் நன்றாகச் செயல்பட்டு காலை 4 மணிக்கே அந்தச் சம்பவ இடத்திற்குச் சென்றார். எனக்கும் தகவல் தெரிவித்து, நானும் அவர் பின்னாலேயே சென்று நான்கு அடி ஆழமுள்ள தண்ணீரில் நாங்கள் இரண்டு பேரும் நடந்து சென்றோம்.



நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிவாரண உதவிகள் வழங்குவது பற்றிச் சொன்னார்கள். குலை தள்ளிய வாழை மரத்திற்கு எவ்வளவு நிவாரணம் தருகிறேன் என்று அவர் சொல்ல மறந்துவிட்டார். அதற்கு ஏதாவது விளக்கம் தருவாரா என்று பார்க்கின்றேன். (குறுக்கீடு) ஆமாம், ஒரு வாழை மரத்திற்கு ரூ.3 அல்லது ரூ.4 தான் தருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்கள் பகுதியிலே இருக்கின்ற பாதிக்கப்பட்ட குலை தள்ளிய வாழைகள் எவ்வளவு என்கின்ற மதிப்பின் அடிப்படையில் உங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நீங்கள் மனு செய்தால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து நிவாரணம் வழங்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டில் மின் வெட்டினால் மக்கள் கடுமையாகப் பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நேற்றையதினம் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் முழுமையான விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள், வேறு பாயின்டுக்கு போங்கள். முழுமையான விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. ம. கலை அரசு:** விளக்கம் சொல்லிவிட்டால் மட்டும் போதுமா? சர்க்கரை என்று எழுதி பாக்கெட்டில் போட்டால் இனிக்குமா? இன்றைக்கு மின்சார வெட்டினால் தமிழ்நாடு மிகப் பெரிய சிக்கலில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. **

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 நவம்பர் 1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஏற்பட்டிருக்கிற பிரச்சினைக்குக் காரணம் என்னவென்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாக விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். இது உடனடியாக மந்திரத்தில் மாங்காய் காய்க்கின்ற வியாபாரம் அல்ல. இன்றைக்குச் சொல்லி, நாளைக்கு 'சூ மந்திரக்காளி, காலையில் மாங்காய் வா' என்று சொன்னால் மாங்காய் வராது. (குறுக்கீடு) ஒன்றைச் சொல்கிறேன் கேளுங்கள். நீங்கள் விவசாயிதானே? ஒரு மாஞ்செடியை நடுகின்றீர்கள். நட்டதற்கு அடுத்த நாளே, என்ன காய்க்கவில்லையே, என்று பலன் எதிர்பார்த்தீர்கள் என்றால் எப்படி? அது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்? அதற்கு குறைந்தது 3 அல்லது 3-1/2 வருடங்கள் ஆகும். தென்னை மரத்தை நட்டால் காய்ப்பதற்கு, பலன் தருவதற்கு 3 அல்லது 3-1/2 வருடங்கள் ஆகும். ஒவ்வொன்றிற்கும், இயற்கையிலும் சரி, விஞ்ஞானத்திலும் சரி, நடைமுறையிலும் சரி, வாழ்க்கை முறையிலும் சரி, ஒவ்வொன்றிற்கு என்றும் கால அவகாசம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. என்னதான் விஞ்ஞான வளர்ச்சியை இன்றைக்கு அடைந்திருந்தாலும்கூட மின்சாரத் திட்டத்தை தொடங்கி உற்பத்தி செய்வதற்கு குறைந்தபட்சம் 3 முதல் 3-1/2 ஆண்டு காலம் ஆகும், இன்றைக்கு எவ்வளவுதான் உலகம் முழுவதும் தொழில்நுட்பம் வளர்ந்திருந்தாலும்கூட 3 ஆண்டுகள் முதல் 3-1/2 ஆண்டுகளுக்கு முன்பாக அந்தப் பணிகளை முடிக்க முடியாது. இப்போது புதிய திட்டங்களை அறிவித்து விரைவாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இருக்கின்ற திட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கத் தொடங்க, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று தெளிவாக புள்ளிவிவரங்களோடு, ஆதாரங்களோடு விளக்கியிருக்கிறார்கள். அதைத் தெரிந்துகொண்டு மீண்டும், மீண்டும் பேசினால் ஏதோ, அரசியலுக்காகவும், விளம்பரத்திற்காகவும் பேசுகிறீர்களே தவிர வேறொன்றுமல்ல.

பிற்பகல் 2-05

மற்றொன்று, தூங்குபவனை எழுப்பலாம்; தூங்குவது போன்று நடிப்பவனை எப்படி எழுப்ப முடியும்? இதுதான் இன்றைக்கு இருக்கும் உண்மை நிலை. இந்த உண்மை நிலையினைப் புரிந்துகொண்டபிறகும் நீங்கள் இப்படிப் பேசுவது பொருளற்றது.



2012 நவம்பர் 1][திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

உங்களைவிட அம்மா அவர்கள் சொன்னார்கள். ஆயிரம் மடங்கு அல்ல இலட்சம் மடங்கு அக்கறை இருக்கிறது என்று அம்மா அவர்கள் நேற்றே சொன்னார்கள். இதைவிட வேறு என்ன வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ இந்த மக்களுக்காக நாங்கள் தான் அவதாரம் எடுத்ததுபோலவும், அம்மா அவர்கள் இதனை கண்டுகொள்ளாதது போன்ற ஒரு தோற்றத்தை மக்களிடத்தில் ஏற்படுத்த முயற்சிக்காதீர்கள். இதனால் பின்னடைவு ஏற்படப்போவது உங்களுக்கு. இன்றைக்கு அம்மா அவர்கள் எல்லா நிலையிலும் மக்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். மின்வெட்டினைப் படிப்படியாகக் குறைக்க அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இன்றைக்கு அடித்திருக்கின்ற புயலைவிட வேகமாக அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆகவே, அம்மா அவர்கள் எடுத்துவருகின்ற நடவடிக்கைகளின் காரணமாக மிக விரைவில் பிரச்சினைகள் தீர இருக்கின்றன. வருகின்ற ஜுன் மாதம் 2013-க்குப் பிறகு தமிழகத்தில் மின்வெட்டே இருக்காது என்று அம்மா அவர்கள் சொன்னதை மீண்டும் ஒரு முறை தெரிவித்து, அதுவரை நீங்கள் அனைவரும் ஒத்துழைப்புத்தர வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒரு நிமிடம் தான். அதோடு உங்கள் கருத்தை பதியவைத்துவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** ** என்று உறுப்பினர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மின்தடை குறித்த உண்மை நிலையினை தெரிந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மேலும், திரும்பத் திரும்ப நீங்கள் இதனை பேசினீர்கள் என்று சொன்னால் அது வேண்டுமென்றே பேசுகிறீர்கள் என்றுதான் அர்த்தம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து அந்த வார்த்தைகள் நீக்கப்படுகின்றன. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 நவம்பர் 1

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேலூர் மாவட்டத்தில் பல மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கின்றது. இன்னும் சில மாதங்களில் தேர்வுகள் நடைபெறவிருக்கின்ற காரணத்தினால் இனிமேலாவது ஆசிரியர்களை நியமித்து சாதாரண சாமானிய மக்கள் படிக்கக்கூடிய அரசுப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதனைப் பலமுறை இந்த மாமன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். ஆட்சிப்பொறுப்பினை ஏற்றபின்னரே மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்தப் பள்ளிக் கல்வித் துறையை முதன்மைத் துறையாக உருவாக்க வேண்டும் என்பதற்காக, குறிப்பாக, இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் கல்வித் துறையில் நூறு சதவிகிதம் கல்வி கற்றவர்கள் உள்ள முதன்மையான மாநிலமாக உருவாக்க வேண்டும் என்பதற்காக அதிக ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று ஆணை வழங்கியிருக்கிறார்கள். 25 ஆண்டுகளில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் இதுவரை 1,05,048 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இந்த ஓராண்டு மட்டும் தமிழ்நாட்டிலே 59,000 ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாதவர்களை நியமிக்க வேண்டும் என்று ஆணை வழங்கியவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையிலே இப்போது ஆசிரியர் பணி நியமனம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதில் என்னவொரு பிரச்சினை என்றால், ஒவ்வொரு ஆசிரியர் பணி நியமனத்தின்போதும், ஆசிரியர்கள் நீதிமன்றத்திற்குப்போய் வழக்கைத் தொடர்கிறார்கள். உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்கிறார்கள், உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். அதனடிப்படையில் பார்க்கும்போது பணி நியமனம் சற்று காலதாமதம் ஆகின்றதேயொழிய, விரைவாக பணி நியமனம் செய்ய வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன்பேரில் இதுவரை பகுதிநேர ஆசிரியர்கள் 16,549 பேர்



2012 நவம்பர் 1] [திரு. என்.ஆர். சிவபதி]

நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வேளாண் பயிற்றுநர்கள் 25 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நடுநிலை தலைமையாசிரியர்கள் இதுவரை எந்த ஆட்சியிலும் நடைபெறாத, எந்த ஆண்டும் நடைபெறாத online counselling மூலம் 831 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் online மூலம் 34 பேர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். முதுநிலை விரிவுரையாளர்கள் 34 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தையல் ஆசிரியர்கள் சான்றிதழ் சரிபார்ப்பு தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 872 பேர் தையல், உடற்கல்வி, இசை ஆசிரியர்கள் சான்றிதழ் சரிபார்ப்பு தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு நடைபெற்றிருக்கிறது. தேர்ச்சி சதவிகிதம் தெரிந்தபிறகு உடனடியாக காலியாக உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி. (குறுக்கீடு) திரு. ம. கலை அரசு, நீங்கள் நிறைய கேட்டீர்கள். நிறைய பேசிவிட்டீர்கள். உங்கள் நேரம் முடிந்துவிட்டது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) சரி, திரு. ம. கலைஅரசு, நீங்கள் ஒரு நிமிடம் மட்டும் பேசுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை சமாளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கிறது என்று சொல்கிறார்கள். மகிழ்ச்சி. ஆனால் தினந்தோறும் செய்தித்தாள்களைப் பார்க்கின்றபோது நடைபெறுகின்ற கொலை, கொள்ளை, குத்து, வெட்டு சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திருமதி எஸ். விஜயதரணி, பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ம. கலை அரசு,

நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, பேசுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2012-2013 துணை நிதிநிலை அறிக்கை மானியக் கோரிக்கைகளின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் சூரிய சக்தி கொள்கையில் சோலார் பவர் மக்கள் இயக்கமாக நடத்தப்படும் என்று கூறியிருக்கிறீர்கள். இது வரவேற்கத்தக்கது. தனியார்கள் வீடு கட்டும்போது இதை கட்டாயமாக Roof Top அல்லது விளக்குகள் அமைக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மழைநீர் சேகரிப்புத் திட்டம் கொண்டுவருவதற்கு எவ்வாறு கட்டாயப்படுத்தினீர்களோ அதைப்போல இதையும் ஒரு கட்டாயக் கொள்கையாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'நிலம்' புயல் குறித்து அரசு நடவடிக்கைகள், நிவாரணங்கள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரித்தார்கள். பாதிக்கப்பட்ட மீனவர்கள் அதிக அளவில் இருப்பதால் தகுந்த நிவாரணங்கள் வழங்குமாறும், மின்சார இணைப்புகளை விரைவில் சரி செய்யவும், உடைந்து விழுந்த மரங்களை விரைவில் அப்புறப்படுத்தவும், விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஏற்பட்ட புயலால் மின் துறைக்கு ஏற்பட்ட பாதிப்பினை சீர்செய்கின்ற பணியிலே அந்தப் புயலைவிட வேகமாகப் பணியாற்றி மின் நிலைமை சீரமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்போது மின்சார சப்ளையில் பாதிக்கப்பட்ட சென்னை பெருநகரம், காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், திருப்போரூர், செங்கல்பட்டு ஒன்றியங்கள், திருவள்ளூர், பொன்னேரி ஒன்றியங்கள், விழுப்புரம், கண்டமங்கலம், வானூர், மரக்காணம், மயிலம், ஒலக்கூர் ஒன்றியங்கள் கடலூர் ஒன்றியத்தில் சில பகுதிகள், நாகப்பட்டினம் மாவட்டத்திலே சீர்காழி ஒன்றியம், திருவாரூர் பகுதியிலே சில பகுதிகள், வேலூரிலே சில பகுதிகள்,



திருவண்ணாமலையிலே சில பகுதிகள், தஞ்சாவூரிலே கும்பகோணம், பட்டுக்கோட்டை ஒன்றியங்களிலே இப்படி இந்தப் பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 5,000-க்கும் மேற்பட்ட மின் கம்பங்கள் சேதமடைந்திருக்கின்றன. சுமார் 250 மின்மாற்றிகள் பழுதடைந்திருக்கின்றன. 673 மின்னூட்டிகள் செயலிழந்திருக்கின்றன. அதிலே 568 மின்னூட்டிகள் இப்போதே சரி செய்யப்பட்டிருக்கின்றன என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல 105 மின்னூட்டிகளையும் சீரமைக்கின்ற பணி இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, சென்னை பெருநகரத்திலே 63 துணை மின் நிலையங்களிலே மின் விநியோகம் நிறுத்தப்பட்டதை சீரமைக்கின்ற அத்தனை பணியும் இன்று மாலைக்குள் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது பெரும்பகுதி சீரமைக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இதனுடைய விளைவாக மின் தேவை புயல் நேரத்திலே 500 மெகாவாட் என்றுதான் சென்னையின் மின் தேவை இருந்தது. இந்தப் பணிகளை இந்த மதிய நேரத்திற்குள் 12 மணி நேரத்திற்குள் அரசு எடுத்த, அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக இப்போது 1,433 மெகாவாட் பயன்பாட்டிலே இருக்கிறது என்று சொன்னால் எந்த அளவிற்கு சீரமைக்கின்ற பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்பாராத பிரச்சினை, இயற்கைச் சீற்றத்திலே, இன்றைக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வதிலே இந்தியாவிலே அல்ல; உலகத்திலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இணையான, திறமையான தலைவர்கள் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று இந்தப் புயல் வருவதற்கு முன்பாகவே ஆலோசனைக் கூட்டங்கள், நிவாரணப் பணிகள் எல்லாம், வந்த பின்பு காப்பதற்குப் பதிலாக புயல் வருவதற்கு முன்பாகவே நேற்றைக்கு சட்டமன்றம் நடந்துகொண்டிருக்கும்போதே அதற்கு வேண்டிய ஆய்வுக் கூட்டங்களை நடத்தி எந்தெந்த இடங்களுக்கு என்னென்ன நிவாரணப் பணிகள் செய்யவேண்டுமென்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததன் பயனாக இன்றைக்கு இவ்வளவு பழுதுகள் விரைவாக சீரமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு, கல்குளம், தோவாளை தாலுகாக்களுக்கு உட்பட்ட இரண்டரை இலட்சம் சிறு, குறு, ஏழை விவசாயிகள், தொழிலாளிகள் தங்களுக்குச் சொந்தமான பட்டா நிலங்கள், தனியார் நிலங்கள் இரண்டரை சென்ட் முதல் 10 ஏக்கர் வரையிலும் உள்ள சுமார் 75,000 ஏக்கர் நிலங்கள் தனியார் காடுகள் சட்டத்தின்கீழ் உட்படுத்தப்பட்டிருக்கின்றன. இதில் வீடுகள், கடைகள், சிறு தொழிற்சாலைகள் மற்றும் விவசாய விளைநிலங்கள் இவைகளெல்லாம் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 2-15

தற்போது நவம்பர் மாதம் 2, 3 தேதிகளில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உயர் மட்டக் குழு கள ஆய்வு நடத்துவதற்கு வரவிருப்பதால் தனியார் பட்டா நிலங்களை இந்தச் சட்டத்திலிருந்து விடுவிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், விளவங்கோடு வட்ட விவசாயத்திற்கும், குடிநீருக்கும் ஆதாரமாக விளங்கும் நெய்யாறு இடதுகரை சானலில் தண்ணீர் விடுவதற்கு கேரள அரசிடமும் பேச்சுவார்த்தை மூலமாகவோ அல்லது உச்ச நீதிமன்றத்தில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஆர்ட்டிகிள் 32 இன்கீழ் உரிய நடவடிக்கை எடுத்து பெட்டிஷன் ஃபைல் செய்தாவது இந்தத் தண்ணீரை கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு குறிப்பாக விளவங்கோடு மக்களுக்குப் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெய்யாறு சம்பந்தமாக கேரளாவிற்கும் நமக்கும் பல்வேறு கட்டங்களில் பேச்சுவார்த்தை நடைபெற்றும் அதில் பயனில்லாமல் போகவே, உச்ச நீதிமன்றத்தை நாடலாம் என்ற முடிவை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்திருக்கிறார்கள். விரைவிலே அந்த வழக்கு தொடரப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. உச்ச நீதிமன்றத்தையாவது அணுகி இதைப் பெறுவதில் நாம் உறுதியாக இருக்கவேண்டுமென்று கேட்டதில் எனக்கு ஒரு பதில் கிடைத்திருக்கிறது. அதற்கு நான் இதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். தற்போது அதற்கு ஒரு பதில் கிடைத்திருக்கிறது. அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உரையை நிறைவு செய்ய உங்களுக்கு இன்னும் மூன்று நிமிடங்கள் இருக்கின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரளாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆட்சி காங்கிரஸ் ஆட்சி. மாண்புமிகு உறுப்பினர் நினைத்தால் உடனடியாக அந்தத் தண்ணீரைக் கொண்டுவரமுடியும். உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. உடனடியாக அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** கேரளாவில் நடைபெற்றுக் கொண்டிருப்பது . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெய்யாறு இடதுகரை சானலில் தண்ணீர் விடவேண்டாம் என்கிற அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து அதை சட்டமன்றத்திலே நிறைவேற்றி அந்தத் தண்ணீர் வருவதற்குத் தடை விதித்தவர்களே இன்றைக்கு ஆட்சியிலே இருக்கக்கூடிய காங்கிரஸ் காரார்கள்தான். அன்றைக்கு ஆட்சியில் இருக்கிறபோது செய்தார்கள் என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெய்யாறு இடதுகரை சானலில் தண்ணீர் கொண்டுவரவேண்டாம், கொடுக்கவேண்டாம் என்ற வலியுறுத்தலை திரு. அச்சுதானந்தன் அவர்கள்தான் முதலில் முன்வைத்தார் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறார். இருந்தாலுங்கூட, எது எப்படியாக இருந்தாலும் கேரளத்தில் அவர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள். அதில் தவறில்லை. அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். அங்குள்ள அரசியல் சூழ்நிலை. இருந்தாலுங்கூட, காங்கிரஸ் ஆட்சி புரியும் அந்த மாநிலத்தில்கூட பிற கட்சிகளும் கூட்டணியாக ஆட்சியில் இருக்கின்றன. ஆகையால், அவ்வாறான நடவடிக்கைகளில் நாம் நிச்சயமாக உச்ச நீதிமன்றத்தை அணுகி ஒரு ஆணையைப் பெற்றுவிட்டோமானால் அது எந்த ஆட்சியாக இருக்கட்டும் கம்யூனிஸ்டாக இருக்கட்டும், காங்கிரஸாக இருக்கட்டும் யாராக இருந்தாலும் அதை அமல்படுத்தவேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவார்கள். நான் காங்கிரஸ் உறுப்பினராக இருந்தாலுங்கூட இந்த நடைமுறையைத்தான் நானும் விரும்புகிறேன், வலியுறுத்துகிறேன் என்பதில் எந்தக் கருத்து மாற்றமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும், நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். இந்தியத் துணைக் கண்டத்தினுடைய அரசியல் வரலாற்றிலேயே ஒரு ஆட்சிப் பொறுப்பிலிருந்து தன்னுடைய உரிமையை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காக பல்வேறு கட்டப் போராட்டங்களுக்குப் பின்பு நீதிமன்றம்தான் தீர்வு என்று முழுவதுமாக நடவடிக்கை எடுத்து, எந்தத் துறையானாலும் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடுத்து, சட்டப்படியாக தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய ஒரே தலைவர் இந்தியத் துணைக் கண்டத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து,



நீங்கள் ஏதோ அறிவுரை கூறுவதைப் போல நாங்கள் ஏற்றுக்கொள்வதைப்போல அது வருகிறது. ஏற்கெனவே எந்தெந்த வகையில் தமிழகத்திற்குத் தேவையான உரிமைகள் நிலைநாட்டப்படவேண்டுமோ அவற்றைப் பெறுவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். அப்படிச் சென்று வெற்றி பெறுகின்ற அந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துகின்ற இடத்திலே இருக்கின்ற மைய அரசு அதை முறையாக நடைமுறைப்படுத்தாமல் காலந்தாழ்த்திக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் மீண்டும் மீண்டும் நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய நிலையிலே இன்றைக்கு தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கோரிக்கை என்றால் நிச்சயமாக ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது எனது கடமை. அந்த அடிப்படையில் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். அமைச்சர் அவர்களிடமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் இந்தக் கோரிக்கையை வைத்திருந்தேன். அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதில் நிச்சயமாக எனக்கு சந்தோஷம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இங்கே அவர் கோரிக்கை வைப்பது கடமை. காங்கிரஸ் கட்சி என்ற முறையில் தமிழ்நாட்டினுடைய பிரச்சினைகளை அந்தக் கட்சியினுடைய தலைவர், பிரதமராக இருக்கின்ற மன்மோகன்சிங் அவர்களிடத்திலேயும் அவர்கள் இந்தக் கோரிக்கையை வைத்து ஒரு பத்திரிகையில் விளம்பரமாக வந்தால் அவரை நாம் பாராட்டலாம்.

[2012 நவம்பர் 1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உரையாற்ற உங்களுக்கு இன்னும் ஒரு நிமிடம் இருக்கிறது.

பிற்பகல் 2-20

**திருமதி எஸ். விஜயதரணி:** நிச்சயமாக அதற்குண்டான நடவடிக்கைகளையும் நான் எடுப்பேன். உச்ச நீதிமன்றத்திலும், காவிரிக்கு என்று ஒரு ஆணையம் உருவாக்கப்பட்டதுபோன்று, நெய்யாறுக்கும் ஒரு ஆணையம் உருவாக்கப்பட்டால் நிச்சயமாக அதற்கு பிரதமர் அவர்கள் தலைவராக இருந்து ஒரு தீர்வு காண்பார் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குண்டான நடவடிக்கையையும் தமிழக அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று எல்லைப் போராட்டத் தியாகிகளின் நினைவு நாள். இந்த நாளில் கன்னியாகுமரி தாய்த் தமிழக இணைப்பில் பங்குபெற்ற எல்லைப் போராட்டத் தியாகிகள் மற்றும் சுதந்திரப் போராட்டத் தியாகிகளில் தகுதியானவர்கள், விட்டுப் போனவர்களுக்கு பென்ஷன் கிடைக்கப் பெறாமல் இருக்கிறது. அதை ஆய்வு செய்து அவர்களுக்கு பென்ஷன் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்களின் வாரிசுகளில், குடும்பத்தில் ஒருவரையாவது அரசுப் பணியில் அமர்த்த வாய்ப்பளிக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

குழித்துறை ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில், இப்போது நீதிமன்ற வளாகம் கட்டப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவடைந்தும், தேவையான தளவாடச் சாமான்கள், பெஞ்ச், சேர், மேஜை போன்ற ஃபர்னிச்சர் பொருட்கள் அந்த court complex-ல் வழங்கப்படாமல் இருப்பதால், அதைத் திறக்க முடியாமல் காலதாமதமாகிறது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி தேவையான ஃபர்னிச்சர்களை விரைவில் வழங்கி நீதிமன்றத்தைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி, உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** விரைவில் முடித்து விடுகிறேன். பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் பெருவாரியாக மணல் மற்ற பொருட்களெல்லாம் நிறைந்து கிடப்பதால், அதை விரைவில்



2012 நவம்பர் 1] [திருமதி எஸ். விஜயதரணி]

தூர்வாரி—நான்கரை கோடி ரூபாய் ஏற்கெனவே இதற்கு அரசால் நிதி வழங்கப்பட்டிருக்கிறது—அதை தூர் வாரி உடனடியாக, அந்த அணைகளில் தேக்க நிலையை அதிகமாக உருவாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சாலைகளைப் பொறுத்தவரை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள், பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, உட்காருங்கள். இன்னொரு வாய்ப்பு தரும்போது, நீங்கள் பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உரையை முடித்து விடுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** சாலைகளைப் பொறுத்தவரை, விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியில் தற்பொழுது களியல், நெட்டா மற்றும் சானல் கரை, ஆலஞ்சோலை இதுபோன்ற சாலைகள் பல ஆண்டுகளாகப் பழுதடைந்த சூழ்நிலையில் இருந்த சாலைகளுக்கு தமிழக அரசு தற்போது நிதி வழங்கி, மதிப்பீடு செய்து, அதற்கு அரசாணை பிறப்பித்திருக்கிறது. அதற்காக நான், என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, திக்குறிச்சி-வள்ளக்கடவு-பயணம் இந்தப் பாலம் நெடுநாட்களாக. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள், பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உரையை முடிக்கமாட்டீர்கள், உட்காருங்கள். திரு. எம். ஆறுமுகம், பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் நன்றி மட்டும் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) நன்றி சொல்லிவிட்டீர்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உரையாற்றியது போதும், உட்காருங்கள். இன்னொரு வாய்ப்பு கிடைக்கும்போது விரிவாகப் பேசலாம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், பேசுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் பற்றி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், ஒரு நிமிடம் இருங்கள். திருமதி எஸ். விஜயதரணி, நன்றி சொல்லி முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** இல்லை, இல்லை. அரசாங்கம் செய்ததை நாம் சொல்ல வேண்டுமல்லவா! அதுவும் எங்கள் கடமைதானே? அதற்கும் வாய்ப்புத் தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** சாலைகள்—இரண்டு மேஜர் சாலைகள். அதற்கு அரசாணை வழங்கியிருக்கிறீர்கள். அதற்காக என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, திக்குறிச்சி-வள்ளக்கடவு-பயணம் பாலம், ஏழு தடவை டெண்டர் போட்டு, இந்த முறை அது Committee of Tender-ல் புரிய வைத்து, அதில் correction எல்லாம் செய்து, இந்த முறை அதற்கு ஒப்பந்தம் கொடுத்து அது நடைமுறைக்கு வந்திருக்கிறது. அதற்காக, நான் உண்மையாகவே, அதுகுறித்து நான் முன்பு, அவையில் கவன ஈர்ப்பு கொண்டுவந்து, பதில் கேட்டிருக்கிறேன். அதை, இன்றைக்கு நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதற்காக நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோல, பல கோரிக்கைகள் என்னுடைய உரையில் இருக்கின்றன. நேரம் இல்லாததால், நீங்கள் அனுமதி மறுக்கிறீர்கள். நான் எழுத்து வடிவத்தில் கொடுத்து விடுகிறேன். அவைக் குறிப்பில் அதை ஏற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, கொடுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** தொகுதி சம்பந்தமான கோரிக்கைகள். தாலுகா அலுவலகம். விளவங்கோடு தாலுகா இரண்டு சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கியது. சுமார் 7 இலட்சம் மக்கள் தொகை கொண்டது. இதனை ஒரு சட்டமன்றத்திற்கு ஒரு தாலுகா அலுவலகம் என நிருவாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்க வேண்டும். பெரிய வட்டங்களைப் பிரித்திடவும் அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு தாலுகா அலுவலக வளாகம், மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், மார்த்தாண்டம் பதிவு மாவட்ட அலுவலகம் மற்றும் சார் பதிவாளர் அலுவலகங்களான பளுகல், குழித்துறை ஆகியவற்றிக்கும் புதுப் பொலிவுடன் வசதியான புதிய அரசுக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.





கன்னியாகுமரி மாவட்டம், விவசாயம் சார்ந்த மாவட்டம். இங்கு பெரிய, நடுத்தர, சிறிய அரசு மற்றும் தனியார் தொழிற்சாலைகள் இல்லை. அவற்றை உருவாக்க அரசு முன்வரவேண்டும்.

விவசாயத்திற்குத் தண்ணீர் செல்லும் சானல்கள், கால்வாய்கள், வாய்க்கால்களைத் தூர்வாரி கரைகளைப் பலப்படுத்த வேண்டும். சானல்களின் உடைந்த ஷட்டர்கள், மடைகளை வருடந்தோறும் பழுது பார்க்க வேண்டும். குளங்களின் ஆக்கிரமிப்புகளை அகற்றி ஆகாயத் தாமரை படராத வண்ணம் நீர் நிலைகளைப் போற்றிப் பாதுகாக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி மலைகளும், இயற்கை வளங்களும் கொண்ட பகுதி. இங்கு அடிக்கடி மழை பெய்வதால் சாலைகள் எளிதில் சேதமுற்று போக்குவரத்துக்கு லாயக்கற்றவையாக மாறிவிடும். சாலைகள், மலையோர சாலைகளைச் சீரமைத்து சீரான போக்குவரத்து ஏற்படுத்த வேண்டும். முக்கியமாக கடையால்-பேச்சிப்பாறை சாலை, திக்குறிச்சி-சிதறால் சாலை, அருமனை-ஆற்றூர் சாலை, இடைக்கோடு-கண்ணுமாமூடு சாலை, ஆறுகாணி-அணைமுகம் சாலை, குழித்துறை-மடிச்சல் சாலை, மேல்பாலை-தோலட்டி சாலை, மாலைக்கோடு-குடுக்கச்சிவிளை சாலை, கைதகம் S.C. காலனி செல்லும் சாலை ஆகிய சாலைகளை தார், சிமெண்ட் கான்கிரீட் போட்டு செப்பனிட வேண்டும்.

எனது விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, குழித்துறை தாமிரபரணி ஆற்றின் குறுக்கே அருமனை, திக்குறிச்சி, காப்பிக்காடு, முஞ்சிறை ஆகிய இடங்களிலும், கருப்பையாறு ஆற்றின் குறுக்கே அணைமுகம் என்ற பகுதியிலும் தடுப்பணைகள் (Check Dam) கட்டி நிலத்தடி நீர் உயர அரசு ஆவன செய்ய வேண்டும்.

எனது சட்டமன்றத் தொகுதி கருப்பையாறு ஆற்றின் குறுக்கே கடையாலுமூடு பேரூராட்சி, அணைமுகம்-குன்றின்புறம் ஆகிய இரண்டு ஊர்களை இணைக்க அமைக்கப்பட்டிருந்த பாலம் 1992 ஆம் ஆண்டு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. எனவே, மீண்டும் அந்தப் பாலத்தைக் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.

[திருமதி எஸ். விஜயதரணி] [2012 நவம்பர் 1

திற்பரப்பு பேரூராட்சியையும், கடையாலுமூடு பேரூராட்சியையும் இணைக்கும் தெற்பக்கடவு பாலத்தையும் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.

பேச்சிப்பாறை ஊராட்சி, மணியன்குழியையும் ஆம்பாடியையும் இணைக்கும் வண்ணம் கோதையாறு ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.

களியக்காவிளை, நட்டாலம், பளுகல், உண்ணாமலைக் கடை ஆகிய இடங்களில் உடனடியாக அரசு ஆரம்ப சுகாதார நிலையம் (PHC) தொடங்க வேண்டும். அம்பலக்காலை, இளஞ்சிறை, மாலைக்கோடு, குன்னத்தாலம் ஆகிய ஊர்களில் துணை சுகாதார மையம் (HSC) அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் MRI Scan நிறுவ அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 24 மணி நேரமும் மின்சாரம் கிடைத்திட துணை மின் நிலையம் (Sub-station) அல்லது பார்வதிபுரத்தில் இருந்து Sub-station-ல் தனி மின்சார ஒயர் அமைத்திட வேண்டும்.

குழித்துறை அரசு மருத்துவமனையில் மத்திய அரசின் NHRM Scheme வாயிலாக Trauma Ward, Paediatric Intensive Care Unit (PICU), Neo-Natal Intensive Care Unit (NICU) கொண்டு வரவும், குடிநீர் வசதி செய்ய பைப் லைன், மோட்டார் பொருத்தவும் அரசு ஆவன செய்ய வேண்டும்.

எனது தொகுதிக்குட்பட்ட கடையால் பேரூராட்சி, வலிய ஏலா பகுதியில் இருளில் வசிக்கும் மக்களுக்கு மின்சாரம் வழங்கிட இந்தப் பகுதி Reserve Forest என்பதால் அதனை De-Forestation செய்ய மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

பேச்சிப்பாறை ஊராட்சி, அன்பு நகர் மக்களுக்கும் I.A.Y. வீடுகள் மற்றும் காணிகள், ஆதி திராவிடர், பழங்குடியினர் வசிக்கும் மக்களுக்கு Grinder, Mixie, Fan வழங்கப்பட்டுள்ளது. ஆனால், மின்சாரம் இல்லை. எனவே, அவர்களுக்கும் மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.



2012 நவம்பர் 1] [திருமதி எஸ். விஜயதரணி]

எனது தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பஸ் போக்குவரத்து வசதியற்ற கிராமங்களுக்கு புதிய பேருந்து வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்ய வேண்டும்.

(1) மார்த்தாண்டம்-குழித்துறை-தாலுகா அலுவலகம்-மேல்புறம்-அருமனை-குரூர்-காரோடு-ஜெயந்தி காலனி-முக்கூட்டுக்கல்-கீழ் மாங்கோடு-ஐந்துளி-திக்குறிச்சி வரை புதிய பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

(2) குலசேகரம்-திருவட்டார்-பயணம்-மார்த்தாண்டம்-கருங்கல்-பாலப்பள்ளம்-ரீத்தாபுரம்-குளச்சல் புதிய பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

எனது தொகுதிக்குட்பட்ட கடையால் அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள முதுகலை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் மற்றும் விளவங்கோடு திக்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணி இடங்களை மாணவர்கள் நலன் கருதி நிரப்பிட வேண்டும்.

மலையாள ஆசிரியர் பணி இடங்கள் முழுமையாக நிரப்பப்படவில்லை. எனவே, அவற்றையும் நிரப்பிட வேண்டும்.

ஆசிரியர்கள்—மாணவர்கள் விகிதாச்சாரம் 1:30 என்று இருப்பதனை மாற்றி வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்று நியமனம் செய்யப்பட வேண்டும்.

மார்த்தாண்டத்தில் அரசு ஆண்கள் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்ட வேண்டும். பேச்சிப்பாறை அணையின் மறுபக்கம் தச்சமலை, கோட்ட மலை பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர் மருத்துவ வசதி பெற்றிட Boat Ambulance அமைத்திட அரசு ஆவன செய்ய வேண்டும்.

மார்த்தாண்டம் பேருந்து நிலையப் பணிகளை விரைந்து முடித்திடவும், கான்கிரீட் தரை (concrete flooring) அமைத்திடவும் அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நல்ல சுத்தமான, சுகாதாரமான குடிநீர் வழங்கிட குழித்துறை நகராட்சியிலும், பாகோடு பேரூராட்சியிலும் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்திட அரசு ஆவன செய்ய வேண்டும்.

மார்த்தாண்டத்தில் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் (Deputy Superintendent of Police) (DSP) அமைத்திடவும், களியக்காவிளை, கடையாலுமூடு, ஆறுகாணி ஆகிய இடங்களில் தீயணைப்பு மீட்புப் பணிகள் நிலையம் அமைத்திடவும் அரசு ஆவன செய்ய வேண்டும்.

குமரி மாவட்டம் நிலப்பரப்பில் மிகச் சிறியது. 1,864 சதுர கிலோ மீட்டர் பரப்பு உள்ளது. ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 1,106 பேர் வசிக்கின்றனர். எனவே, வீட்டு வசதி வாரியம்மூலம் நாகர்கோவில், மார்த்தாண்டத்தில் அடுக்குமாடி வீடு கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிதறால் மலைக்கோயில் சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்கிட மலையின் முகட்டில் (உச்சி) Telescope அமைத்து இயற்கை எழில் காட்சிகளைக் காண அரசு ஆவன செய்ய வேண்டும். மலைக்கு மேலே செல்லவும், வாகனங்கள் செல்ல வசதியாக சாலை வசதியும் ஏற்படுத்த வேண்டும். குடிநீர் வசதி, கழிப்பிட வசதி செய்து தர அரசு ஆவன செய்ய வேண்டும்.

மார்த்தாண்டத்தில் இருந்து திக்குறிச்சி-சிதறால் மலைக்கோயில் வரை சுற்றுலா திட்டத்தின்கீழ் அகலமான, பலமான சாலை வசதி ஏற்படுத்திட அரசு ஆவன செய்ய வேண்டும்.

திற்பரப்பு அருவியில் நீராடி மகிழ வரும் சுற்றுலாப் பயணிகளின் வாகனங்களை நிறுத்த இடவசதி செய்து கொடுக்க வேண்டும்.

ஆசியாவிலே மிக நீளமானதும், புகழ் பெற்றதுமான தொங்கு பாலமான திருவட்டார்-மாத்தூர் தொட்டி பாலத்தை புனரமைத்து சீரமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

நாகர்கோவிலில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு (District Employment Office) புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.

எனது விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி கேரள எல்லையை ஒட்டியது. இதன் எல்லை zigzag ஆக உள்ளது. களியக்காவிளை, பளுகல் பேரூராட்சிகள் விளவங்கோடு, கண்ணுமாமூடு, புலியூர்



சாலை போன்ற ஊராட்சிகளில் வீடு கட்டும் பயனாளிகள் தங்களுக்குத் தேவையான ஆற்று மணல் கொண்டுசெல்வதில் பெரும் தடங்கல் உள்ளது. எனவே, வருவாய்த் துறை, வணிக வரித் துறை, காவல் துறை ஆகிய துறைகள் இணைந்து கூட்டு முயற்சியுடன் உண்மையான பயனாளிகளுக்குக் கட்டுமானப் பொருட்கள் கிடைத்திட அரசு ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் பற்றிப் பேச அனுமதி அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நிதி மேலாண்மையை மேம்படுத்த தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைக்கிணங்கவும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிச் சீரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊரகக் கட்டமைப்பு, பாலங்கள் கட்ட, மீன் வள பல்கலைக்கழகம் நிறுவ, 31 துணை சுகாதார நிலையம் மற்றும் 42 ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த இந்தத் துணை மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சிவகாசியில் அரசு மருத்துவமனையில் தீக்காயப் பிரிவு சிறப்பு மையமாக மேம்படுத்த 4.50 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டுதலுக்குரியது. அடிக்கடி சிவகாசியில் பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துகள் ஏற்பட்டு, சிறார்களும், குழந்தைகளும், இன்னுமிருக்கக்கூடிய மக்களும் பாதிக்கப்படுகின்ற நேரத்தில் தீக்காயத்திற்கு என்று சிறப்புப் பிரிவை அமைப்பதற்கான நிதி ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது.

பிற்பகல் 2-25

கழிவுநீர் கலப்பதைத் தடுப்பது போன்றவற்றிற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. இவை நீங்கலாக, தமிழகத்தில் கிட்டத்தட்ட 6 மாத காலமாக காவிரி நீர் பிரச்சினை என்பது இருந்தது. “சோழ நாடு சோறுடைத்து” என்று சொல்லக்கூடிய காவிரி டெல்டா பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம்

[திரு. எம். ஆறுமுகம்] [2012 நவம்பர் 1

கடுமையான நெருக்கடிக்கும், சிக்கலுக்கும் உள்ளாக்கப்பட்டு இருந்த நேரத்தில், 17 ஆண்டு காலமாக காவிரி ஆணையத்தையே கூட்டாமல் இருந்த மத்திய அரசாங்கம், தமிழக முதல்வர் அவர்களுடைய முன் முயற்சியினால் ஆணையத்தை உடனடியாகக் கூட்டவேண்டுமென்று எடுத்த முயற்சியின் அடிப்படையில் ஆணையம் கூட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்லாமல், பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழகத்திற்கு 9 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று முடிவெடுத்ததற்குப் பிறகும்கூட கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட மாட்டேன், ஒரு சொட்டுத் தண்ணீர்கூட திறந்துவிட மாட்டேன் என்று அடம்பிடித்த நேரத்தில், உச்ச நீதிமன்றத்திற்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசின் சார்பில் சென்றதற்குப் பிறகு, உச்ச நீதிமன்றமும் தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு—வருத்தப்பட வேண்டிய விஷயம், மத்திய அமைச்சராக இருந்த எஸ்.எம். கிருஷ்ணா அவர்கள் கர்நாடக மாநிலத்தில் இருக்கக்கூடிய காவிரியிலிருந்து தமிழகத்திற்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூட திறந்துவிடக்கூடாது என்று சொல்லி வெளிநாட்டிலிருந்து கடிதம் எழுதியது மட்டுமல்ல, கர்நாடகத்தில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளையும் அழைத்துச் சென்று பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டாம் என்று சொல்லக்கூடிய ஒரு சூழல் இருந்த நேரத்தில், தமிழகத்தில் இருக்கக்கூடிய, தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றிப் பேசக்கூடிய, தமிழ் இனத்தினுடைய தலைவர் என்று சொல்லக்கூடியவர்கள், தமிழருக்குத் தமிழர் என்று சொல்லக்கூடியவர்கள், இங்கே இருக்கக்கூடிய ஒரு மத்திய அமைச்சர்கூட தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று வாயைத் திறக்காமல் இருந்திருப்பது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) வெட்கக்கேடான விஷயம் மட்டுமல்ல, நாம் சிந்திக்க வேண்டிய கட்டாயத்திலே இருந்து கொண்டிருக்கிறோம்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாகத்தான் காவிரியிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இப்போது ஆணையமும் கூடி தண்ணீர் தொடர்ந்து விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பது என்பது பாராட்டுதலுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி)



2012 நவம்பர் 1] [திரு. எம். ஆறுமுகம்]

அதைப்போலதான் நேற்றையதினம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விரிவான ஓர் அறிக்கையை அளித்திருந்தாலும்கூட தமிழகத்திற்கு வெளிமாநிலங்களிலிருந்து பெறக்கூடிய மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கான வழித்தடங்கள் இல்லை. மத்திய அரசாங்கம் உடனடியாக வழித்தடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கவேண்டிய மின்சாரத்தை மத்திய அரசாங்கம் வழங்காமல் மாநில அரசாங்கத்திற்கு வஞ்சகத்தைச் செய்து கொண்டிருக்கிறது என்பதில் இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு முழுமையான உடன்பாடு உண்டு என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மத்திய அரசாங்கம் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றபோது நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய எந்த ஓர் அமைச்சரும் வாயைத் திறக்காமல் இருப்பது இந்த இன மக்களுக்குச் செய்யக்கூடிய துரோகமாகவே நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் இந்த நேரத்தில் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நேற்றைய தினம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் விளக்கமான முறையிலே, தெளிவாக தன்னுடைய கருத்துகளை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். நான் அவர்களிடத்திலே சொல்லிக்கொள்வதெல்லாம், தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழில் நகரம் இன்றையதினம்கூட 20 ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் 36 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பினைக் கொடுக்கக்கூடிய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகக்கூட காலையிலே சொல்லப்பட்டது. எனவே, தொழில் பெருகி வருகிறது. வேலைவாய்ப்பை அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். கோவை, திருப்பூர், ஈரோடு போன்ற மாவட்டங்களில் சிறு, குறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பெரிய தொழிற்சாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. நான் மின்சாரத் துறை அமைச்சரிடத்தில் வைக்கின்ற கோரிக்கை என்பது, ஜென்செட்டை உபயோகப்படுத்திக் கொள்வதற்கு இந்த நேரத்தில் நீங்கள் அனுமதி கொடுத்தால், அதற்கான டீசலை சப்சிடி அடிப்படையில் கொடுப்பீர்களேயானால் இந்த மின்வெட்டிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அவர்களைப் பாதுகாக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் என்னுடைய கருத்தாகச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் இரண்டு, மூன்று செய்திகளை இங்கே சொன்னார்கள். சிறு, குறு தொழிற்சாலைகள் ஜென்செட்டைப் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்த மானியம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே, ஜெனரேட்டர் வாங்குவதற்கு மானியம் கொடுக்கும் திட்டம் அமலில் இருக்கிறது. ஆகவே, ஜெனரேட்டர் வாங்கிக் கொள்வதற்கான மானியம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. மற்றொன்று, மத்திய அரசுத் தொகுப்பிலிருந்து நமது மாநிலத்திற்கு மொத்தமாக ஒதுக்கப்பட்ட மின்சாரம் 2,744 மெகா வாட். இதை மத்திய அரசு வழங்கவேண்டும். ஆனால், இன்றைக்குவரை சராசரியாக, இதிலே முன்னே பின்னே வரும். சில நேரங்களிலே 2,200 மெகா வாட் வழங்குவார்கள்; 300 மெகா வாட் வழங்குவார்கள்; 500 மெகா வாட் வழங்குவார்கள். ஆகவே, சராசரியாக நாளொன்றுக்கு 518 மெகா வாட் என்று சென்ற ஆண்டு முழுவதும், ஒரு ஆண்டு காலத்திலே குறைத்து நமக்கு மின் சப்ளை செய்திருக்கிறார்கள். சராசரியாக 518 மெகா வாட் மின்சாரம் வழங்குவதை மத்திய அரசு குறைத்திருக்கிறது. ஆகவே, அதையும் வழங்க வேண்டும் என்று அம்மா அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 2-30*

அதுமட்டுமல்ல, இப்பொழுது இடைக்கால நிவாரணமாக இந்தத் திட்டங்களெல்லாம், உற்பத்தித் திட்டங்களெல்லாம் கைகொடுக்கின்ற வரை, உற்பத்தியைத் தொடங்குகின்றவரை இடைக்கால நிவாரணமாக 1,000 மெகா வாட்டை அம்மா அவர்கள் கேட்டார்கள். அதையும் கொடுக்கவில்லை. இப்போது எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், அம்மா அவர்கள் சொன்னதை நேற்றே நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பீர்கள். அம்மா அவர்களுடைய அரசு இந்த மின்சாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எந்த அளவுக்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பது. இதுதான் உச்ச கட்ட முயற்சி. அத்தனை முயற்சிகளையும் அம்மா அவர்களுடைய அரசு, இன்றைக்கு எடுத்து வருகிறது. நிச்சயமாக நீங்கள் சொன்ன பாதிப்பு அத்தனையும் அம்மாவினுடைய அரசுக்குத் தெரியும். ஆகவே, எல்லாவிதத்திலும்



அம்மா அவர்களைவிட இதற்காகக் கவலைப்படுபவர்கள், இதைத் தீர்க்க வேண்டுமென்று முயற்சிப்பவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. ஆகவே, இந்தப் பிரச்சினையை, மீண்டும் மீண்டும் சொல்வதால் உங்களுடைய நேரமும் வீணாகிறது. நாங்களும் சொன்னதையே சொல்ல வேண்டியது இருக்கிறது. நீங்களும் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்கிறீர்கள். ஆகவே, இதிலிருந்து மக்களுக்கு உண்மை நிலைமைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் மார்க்கெட்டிலிருந்து விலை கொடுத்து வாங்கக்கூடிய பொருள் அல்ல என்பது எனக்கு நன்றாகவே தெரியும். எங்களுக்கும் தெரியும். நான் சொல்வதெல்லாம் பெரிய தொழிற்சாலைகள் ஜென்செட் வைத்து இயக்குவதற்கான முறையில் மத்திய அரசாங்கத்திடம் சப்சிடி பெற்றுக் கொடுத்தால் இந்த மின்வெட்டிலிருந்து அந்தத் தொழிற்சாலைகள் இயங்குவதற்கு உதவிகரமாக இருக்கும் என்ற கருத்தைத்தான் நான் உங்களிடத்திலே சொன்னேன். செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே டெங்கு காய்ச்சல் பரவலாக அங்குமிங்கும் வந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட கோவைக்கு வந்து இந்த டெங்கு காய்ச்சலை முன்கூட்டியே தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு அதிகாரிகள் மற்றுமுள்ள மருத்துவமனைகளில் பணியாற்றக்கூடிய டாக்டர்களை எல்லாம் வைத்து ஒரு சிறப்பான கூட்டத்தை நடத்தினார்கள். ஆனால், அரசு மருத்துவமனைகளில் மட்டுந்தான் அதைத் தடுப்பதற்கான மருந்துகள் இருக்கின்றன. ஆனால், தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்கின்றபோது இறக்கக்கூடிய நேரத்தில்தான் மீண்டும் அவர்களை அரசு மருத்துவமனைகளுக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் இதுபோன்றவற்றில் மட்டுமல்லாமல் டெங்கு காய்ச்சல் பரவுவதற்கான வாய்ப்புகள் இருக்கக்கூடியதை அறிந்துகொண்டு சிறப்பு முகாம்களை அங்கே தொடங்கி இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல தினந்தோறும் 800 மருத்துவமுகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைதான் காரணம் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. எம். ஆறுமுகம்:** நன்றி. பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் தொழிலாளர் நல வாரியங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தத் தொழிலாளர் நல வாரியங்களில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் பதிவு செய்ய வேண்டும் அல்லது அவர்கள் அதிகாரிகளிடத்திலே செல்ல வேண்டும். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பணப் பயன்கள் உரிய நேரத்திலே கிடைக்க வேண்டும் என்பதில் இப்போது தொய்வு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. தொழிற்சங்கங்கள் அதில் தலையிடக்கூடாது. சம்பந்தப்பட்ட பயனாளிகளே நேரடியாக வந்து விண்ணப்பங்களைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுவது என்பது தொழிற்சங்க இயக்கத்தை முடக்குவது போன்று இருக்கக்கூடிய ஒரு நடவடிக்கையாக நாங்கள் கருதுகிறோம். தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கக்கூடிய தொழிற்சங்கத்திலே சேருவதற்கு உரிமையுண்டு. அதில் அவர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொழிற்சங்கத்திற்கு அந்த முழுமையான அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொண்டு பணப் பயன்கள் முழுமையாகக் கிடைப்பதற்கான முறையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன்மூலம் தொழிலாளர்கள் பயன் பெறுகின்றார்கள். அவர்களுக்கு அரசு நலத் திட்டங்களைக் கொடுக்கின்றது. முதலில் அரசுக்கு அவர் யார் என்று தெரிய வேண்டும். அவர்கள் வந்தால்தான் அவர்கள் யார் என்று தெரியும். யாரோ ஒருவர் வருகின்றார், போகின்றார்; எப்படி அவர் யார்



என்று தெரியும். ஆகவேதான், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லமுறையில் இன்றைக்கு அவர்களுக்கு zero balance மூலமாக வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதன்மூலமாக, நலத்திட்ட உதவிகளைக் கொடுக்கவிருக்கின்றோம், கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், நல வாரிய உறுப்பினர்களுக்கு பயன்கள் சரியாக வழங்கப்படவில்லை என்று. கடந்தகால ஆட்சியைவிட இப்பொழுது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு அதிகமாக தொழிலாளர்களுக்கு உதவித் தொகைகள் வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை உங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எம். ஆறுமுகம்:** பணப்பயன்கள் இப்பொழுது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதில் மாற்றம் இல்லை. ஆனால், அவர் தனியாக வரவேண்டும். சம்பந்தப்பட்டவர்கள்தான் வர வேண்டுமென்று சொல்லுவது என்பது ஒரு கடினமான பணி. தொழிற்சங்கத்தின்மூலமாக வருவதை அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 2-35

வால்பாறையைப் பொறுத்தமட்டிலும், நீலகிரியைப் பொறுத்தமட்டிலும் புலிகள் காப்பகம் என்று இப்பொழுது மத்திய அரசாங்கம் அறிவித்திருப்பது என்பது, நெருக்கடியும், சிக்கலும் நிறைந்திருக்கக்கூடிய காலம். 2007 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கின்றபோதுதான் வால்பாறை பகுதியை புலிகள் காப்பகமாக அறிவித்தார்கள். ஆப்பிரிக்கக் காடுகளிலிருந்து கொண்டுவந்து இங்கே சிறுத்தைப் புலிகளை விட்டதன் விளைவு, இன்றைக்கு மிருகங்களோடு சண்டை போட்டுக்கொண்டிருக்கின்றோம். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், வால்பாறை போன்ற பகுதிகளில் இரவு நேரங்களில் யாரும் நடமாட முடியாது. வெளியே வர முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், அங்கேயும் இந்த மின்வெட்டை அமல்படுத்துவது என்பது மக்களுக்கு நெருக்கடியையும் சிக்கலையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. வெறும் 6 மெகா வாட் மின்சாரம் மட்டுமே முழுமையாக

வால்பாறை பகுதிக்கு வழங்கினால், அங்கே இருக்கக்கூடிய மக்கள் மிருகங்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும். எனவே, அங்கு தடையில்லாத மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, புலிகள் சரணாலயம் என்று அறிவித்திருப்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் அதற்கான ஒரு கூட்டத்தைக் கூட்டி, நடவடிக்கை எடுத்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருப்பதை எதிர்க்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு வால்பாறை பகுதியில் இருக்கக்கூடிய சுற்றுலா மையங்களை இப்போது அந்தத் தடையிலிருந்து நீக்கியிருக்கின்றார்கள். ஆனால், இப்போதும் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. எனவே, வால்பாறை பகுதியில் புலிகள் காப்பகம் என்று இருப்பதை தயவுசெய்து நீக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாநிலத்தில் ஏழை எளிய மக்களுக்கு இலவச வேஷ்டி, சேலைகள் தொடர்ச்சியாக வழங்கி வந்தார்கள். ஆனால், இந்த ஆண்டு இலவச வேஷ்டி, சேலைகள் வழங்குவது என்பது பல இடங்களில் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. 50 சதவிகிதம் மட்டுமே வழங்கி இருக்கின்றார்கள். முழுமையாக அனைவருக்கும் இலவச வேஷ்டி, சேலைகள் வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இலவச வேஷ்டி சேலைகள் இன்னும் முழுமையாக வழங்கப்படவில்லை என்று கூறினார்கள். 2012 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்காக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாக 1 கோடியே 70 இலட்சத்து 65 ஆயிரத்து 739 சேலைகளும், 1 கோடியே 69 இலட்சத்து 57 ஆயிரத்து 625 வேஷ்டிகளும் கொள்முதல் செய்யப்பட்டு, 25-10-2012 வரை 1 கோடியே 67 இலட்சத்து 47 ஆயிரத்து 838 சேலைகளும், 1 கோடியே 66 இலட்சத்து 47 ஆயிரத்து 990 வேஷ்டிகளும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கி இருக்கின்றது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) 3 இலட்சத்து 17 ஆயிரத்து



901 சேலைகளும், 3 இலட்சத்து 9 ஆயிரத்து 635 வேஷ்டிகளும் மட்டுமே இன்னும் வழங்க வேண்டியவை நிலுவையில் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதியிலே, எந்தெந்த கிராமங்களிலே இன்னும் முழுமையாக வேஷ்டி, சேலைகள் வழங்கப்படவில்லை என்று குறிப்பாக குறிப்பிட்டுச் சொல்கின்றீர்களோ, அந்தந்தப் பகுதிகளுக்கு உடனடியாக வேஷ்டியும் சேலையும் இந்த தீபாவளிப் பண்டிகைக்குள் உடனடியாக வழங்கவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த ஆணையின் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினருடைய அந்தத் தொகுதியிலே இருக்கக்கூடிய மக்களுடைய தேவைகள் இன்னும் ஒரு வார காலத்திற்குள் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, உங்கள் அருகில்தான் உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களும் உட்கார்ந்திருக்கின்றார். நீங்கள் அவரிடம் கூறுங்கள். அவரே கேட்டுவிடுவார். அவர்தானே பேசுகிறார்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இலவச வேஷ்டி சேலை வழங்கப்படவே இல்லை என்று சொல்லவில்லை. ஆயிரம் குடும்ப அட்டைகள் உள்ள ஒரு இடத்தில் 500 பேருக்குக் கொடுத்திருக்கின்றார்கள். 500 பேருக்குக் கொடுக்கவில்லை. சிவகங்கை மாவட்டத்தில் கல்லல், நான் இருக்கக்கூடிய தொகுதியில் உள்ள தோணிமுடி எஸ்டேட், கஜமுடி எஸ்டேட், பன்றிமேடு எஸ்டேட் இந்த மாதிரி இருக்கக்கூடிய பகுதிகளில் வழங்கப்படவில்லை. 1,000 கார்டு இருந்தாலும்கூட 500 பேருக்குத்தான் கொடுத்திருக்கின்றார்கள். அந்தப் பட்டியலை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றேன் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, நேரம் ஆகிவிட்டது. ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலவச வேஷ்டி, சேலை வழங்குவது என்பது 2012-2013 ஆம் ஆண்டிற்கா அல்லது 2011-2012 ஆம் ஆண்டிற்கா என்பதைத் தெரிவிக்கவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012 தீபாவளிப் பண்டிகை இந்த ஆண்டு நிறைவுக்குள் அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

பிற்பகல் 2-40

**திரு. எம். ஆறுமுகம்:** கோவை மாவட்டம், அன்னூரிலிருந்து கோவைக்கு வரக்கூடிய தேசிய நெடுஞ்சாலை எண் 67-ல், அதிலிருந்து என்.எச்.47, நீலம்பூரிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லக்கூடிய பைபாஸ் சாலையை புதிதாக அமைப்பதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது. அந்தச் சாலை அமைக்கப்படுகின்ற காரணத்தினால் அங்கு இருக்கக்கூடிய விவசாய நிலங்கள் கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன. இரண்டாயிரம் ஏக்கரில் வீடுகளும், மக்களும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். கிணறுகளெல்லாம்கூட பாதிக்கப்படுகின்றன. எனவே, மாற்றுப் பாதை என்பதற்கான முறையில் இதற்கு முன்னால் இருந்த எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசுக்கு ஒரு கருத்துருவை அனுப்பியிருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொண்டு மாற்றுப் பாதையில் பை-பாஸ் சாலையை அமைக்க வேண்டும். விவசாயிகள் விளை நிலங்கள் அல்லது அவர்கள் வீடுகள் இடிக்கப்படாமல் இருப்பதற்கான பாதுகாப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டம், சிவரக்கோட்டையில் 1,700 ஏக்கர் விவசாய நிலம் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக தி.மு.க. ஆட்சியில் கையகப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டது. விவசாயிகள் எதிர்த்துப்



போராடிய காரணத்தினால் அது நிறுத்தி வைக்கப்பட்டது. அதற்குப் பின்னால் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் நேரத்தில் வாக்கு கேட்டு வருகின்றபொழுது அந்த இடத்தைக் கையகப்படுத்துவதற்கு அரசு அனுமதிக்காது என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது அதைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய சிவரக்கோட்டையில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் விவசாயிகள் நேரடியாக அழைக்கப்பட்டு அந்த விளைநிலங்களைக் கொடுப்பதற்கு ஏதேனும் ஆட்சேபனை இருக்கிறதா என்று கேட்டபோது, 2.5 சதவீத மக்கள் மட்டும்தான், கிட்டத்தட்ட 10 ஏக்கர் மட்டும்தான் நாங்கள் கொடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தினுடைய மொத்தப் பரப்பு 1,481 ஏக்கர். சிவரக்கோட்டையில் இருப்பது 360 ஏக்கர். அந்த 360 ஏக்கரில் 2.5 சதவீதம் பேர் மட்டும்தான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கடிதமாகக் கொடுத்திருக்கின்றார்கள். என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது. மாவட்ட ஆட்சியரின் அறிக்கையும் என்னிடத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு யாராவது தர மறுக்கின்றார்கள் என்று சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். விளைநிலங்களை எந்தச் சூழ்நிலையிலும் கையகப்படுத்தக் கூடாது என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த மன்றத்திலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நானும் அதற்கு பதில் சொல்லியிருக்கிறேன். நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விசாரணை நடத்தி, அந்த விசாரணை அறிக்கையும் என்னுடைய கையில் இருக்கிறது. நீங்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் மக்கள் தர மறுக்கின்றார்கள் என்று சொன்னால், அது விளைநிலமாக இருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மாவின் அரசு அதைக் கைப்பற்றாது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் ஏற்கெனவே உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்திற்கெல்லாம் சென்றிருக்கிறீர்கள். அவற்றிலெல்லாம் அரசுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வந்திருக்கிறது

என்பதும் தெரியும். ஏழைகள் நிலத்தைக் கையகப்படுத்த வேண்டும் என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கை இல்லை என்பதைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். உங்களைவிட மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள் என்பதை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உங்கள் தலைவர்தானே பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவரக்கோட்டை, கரிசன்குளம் என்ற பகுதியில் 1,700 ஏக்கர், மூன்று போகம் விளையக்கூடிய நிலங்கள் கடந்த ஆட்சியில் எடுக்கப்பட்டு, கடந்த ஆட்சியிலிருந்தே மிகப்பெரிய போராட்டம் அங்கே நடந்து கொண்டிருக்கிறது. இன்றைக்குக்கூட விவசாய அமைப்பின் சார்பில் அங்கே மிகப் பெரிய போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆட்சியில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அதை எடுக்கக்கூடாது என்று இங்கே பேசியிருக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் நமது தமிழக முதல்வரும் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். ஆனால், இதற்கு எதிர்த்த பகுதியிலேயே 5,000 ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றன. அந்தத் தரிசு நிலங்களை பல பேர் பினாமியாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். நான் பெயரிட்டுச் சொல்ல விரும்பவில்லை. கல்லூரிகள் கட்டி இருக்கிறார்கள். இதை எடுத்த நோக்கமே, அந்தத் தரிசு நிலங்களுக்கு விலை ஏற்றத்தின் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதிப்பதுதான். எனவே, அது எல்லோருக்கும் பட்டவர்த்தனமாகத் தெரியும். தரிசு நிலங்களை எடுத்து சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைப்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்தும் கிடையாது. தயவுசெய்து இதிலே பிரித்தாளுகின்ற சூழ்ச்சிகளைப் பயன்படுத்தி மாவட்ட ஆட்சியர்களோ, மற்றவர்களோ இந்த நிலங்களைக் கையகப்படுத்துவது மிகப் பெரிய தவறு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, விளைநிலங்களை எடுக்கக் கூடாது என்ற கொள்கையை இந்த அரசு கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். தரிசு நிலங்கள் இருக்கின்ற காரணத்தினால் இந்தத் திட்டத்தைக் கைவிட்டு, 5,000 ஏக்கர் தரிசு நிலங்களில் எத்தனை ஏக்கர் வேண்டுமானாலும் எடுத்துக்



கொண்டு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைக்கலாம் என்பதை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தாலுகா சிவரக்கோட்டை பகுதியில் சிப்காட் அமைப்பதற்காக விளைநிலங்களைக் கையகப்படுத்துவது சம்பந்தமான பிரச்சினையில், கடந்த ஆட்சியில் துவங்கிய பிரச்சினை. கடந்த ஆட்சியில் அந்தப் பகுதியில் அரசியல் செல்வாக்கு படைத்தவர்கள் தங்கள் நிலங்களின் விலையை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் அங்கே சிப்காட் அமைக்கும் முயற்சியிலே ஈடுபட்டு வந்தார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல அங்கே விளைநிலங்கள் இருப்பதற்கு எதிர்ப்பக்கத்தில் 5,000-க்கும் மேற்பட்ட ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதி விவசாயிகளும், நாங்களும் கோருவதெல்லாம், அங்கே சிப்காட் அமைய வேண்டுமென்கிற அவசியம் ஏற்படுமென்று சொன்னால் விவசாயம் அல்லாத தரிசு நிலங்களைக் கையகப்படுத்தி அங்கே சிப்காட் அமைப்பதிலே யாருக்கும் எந்த ஆட்சேபனையும் இல்லை.

*பிற்பகல் 2-45*

சொல்லப்போனால், கடந்த ஆட்சியிலே மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட—மதுரையிலே இருக்கிற நிலைமை என்னவென்று நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்—எந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் அன்றைக்கு உண்மையை தைரியமாகப் பேசிவிட முடியாது. எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஒரு முறையற்ற விசாரணை என்பது நடைபெற்று, 1,400 ஏக்கர் விளைநிலங்கள் இருக்க, அங்கு மொத்தமே 90 ஏக்கர்தான் விளைநிலங்கள் என்று பொய்யான தகவல் எல்லாம் அங்கே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களே உறுதி கொடுத்திருக்கிறார்கள். விளைநிலங்களை எக்காரணம் கொண்டும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு கையகப்படுத்த மாட்டோம் என்று உறுதி கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கும் அங்கே விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, 2,000, 3,000 குடும்பங்களை நடுத் தெருவில் நிறுத்தக்கூடிய அந்த ஏற்பாட்டைக் கைவிட்டு, தரிசு

நிலங்களைக் கையகப்படுத்தி நீங்கள் சிப்காட் அமைக்க வேண்டும். ஏற்கெனவே விவசாயிகள் நெருக்கடியில் இருக்கிற இந்தச் சூழ்நிலையில், விளைநிலங்களை விட்டு அவர்களை வெளியேற்றிவிட்டால் அவர்கள் வாழ்வாதாரத்தையே இழந்து பட்டினியில் திளைக்க வேண்டிய நிலைமை என்பது ஏற்படும் என்கிற காரணத்தினால், அந்த முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து, அருள்கூர்ந்து கைவிட வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். நஞ்சை நிலம் என்பதுதான் விளைநிலம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நிலம் எடுக்க வேண்டாமென்று சொன்னால் புஞ்சை நிலத்தில் வேறு எங்கேயும் இடம் எடுக்க முடியாது, தொழிற்சாலைகள் கொண்டு வர முடியாது என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், நீங்கள் சொல்வதைப்போல, விளை நிலமாக இருந்து, மக்கள் பாதிக்கப்பட்டால் மாண்புமிகு அம்மா அவர்கள் நிச்சயமாக அதை எடுக்கமாட்டார்கள் என்று நான் ஏற்கெனவே உறுதி கூறியிருக்கின்றேன். ஆனால், இன்றையதினம் நீங்கள் சொல்வதைப்போல, இன்றைய மாவட்ட ஆட்சியர் இரண்டு முறை ஆய்வுக் கூட்டம் நடத்தி, அவர்களிடத்திலே கருத்துகள் கேட்டு, அவர் அனுப்பியிருக்கின்ற அறிக்கையில் 2.5 சதவிகிதம் மக்கள் மட்டும்தான் இடம் தர மறுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று சொல்லியிருக்கின்றார். ஆனால், நீங்கள் இங்கே சொல்வதைப் பார்த்தால், இப்போது ஆயிரக்கணக்கான பேர் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்ற ஒரு தோரணையில் சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள். அப்படியானால், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொன்னவர்களெல்லாரும் தவறானவர்களாகச் சொல்லிவிட்டார்களா? இல்லை, அங்கே அப்படி ஆயிரம் பேர் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்றால் ஏன் அவர்கள் மாவட்ட ஆட்சியரிடத்திலே அவர்களுடைய கருத்துகளைப் பதிய வைக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.*



*அதுமட்டுமல்லாமல், விளைநிலங்களைப் பொறுத்தவரை மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவான அறிவுரை வழங்கியிருக்கின்றார்கள். எந்தச் சூழ்நிலையிலும் ஏழைகளுடைய நிலம் விளைநிலமாக இருந்தால் அதை எடுக்கக்கூடாது என்பதற்கு எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை மீண்டும், மீண்டும் உங்களிடத்திலே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த இடத்திற்கு எதிர்ப்பாக 5 ஆயிரம் ஏக்கர் இருக்கிறதென்று சொல்லியிருக்கின்றார். இது ஏற்கெனவே பாதி, கிட்டத்தட்ட 90 சதவிகித நிலம் எடுப்புப் பணி முடிந்துவிட்டது. மீண்டும் ஒரு இடத்திலே பணி எடுக்க வேண்டுமென்று சொன்னால், நிலம் எடுக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு மறுபடியும் ஆரம்ப கட்டத்திலிருந்தே செல்ல வேண்டும். இதற்கெல்லாம் நிதியை ஒதுக்கி அவர்களுக்கு போய்ச் சேரவேண்டும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவலையை அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று அதற்குத் தகுந்த தீர்வு காணப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம், பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. குணசேகரன், உட்காருங்கள். நீங்கள் பேசியது போதும். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

**திரு. சு. குணசேகரன்**: இல்லை, அமைச்சர் சொன்னதிலே ஒரு பாலிசி மேட்டர் இருக்கிறது. அதனால் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *எல்லாமே பாலிசி மேட்டர்தான். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. குணசேகரன், கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)*

**திரு. சு. குணசேகரன்**: ஒரே நிமிடத்தில் ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கிடு) ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *திரு. குணசேகரன், இப்படியே பேசிக்கொண்டிருந்தால் அவையை எப்போது முடிப்பது? (குறுக்கீடு) சரி, பேசி முடியுங்கள்.*

**திரு. சு. குணசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில், நஞ்சை நிலங்கள்தான் விளைநிலங்கள்; புஞ்சை நிலங்கள் விளைநிலங்கள் அல்ல என்று சொல்வது தவறான கருத்து. அதன் காரணமாகத்தான் இன்றைக்கு உணவு தானியங்கள், பருப்பு வகைகள் போன்றவையெல்லாம் மிகப் பெரிய அளவில் நாட்டில் இழப்பு ஏற்பட்டு, மக்களுக்கு இதனால் நிறைய சத்துக் குறைவு எல்லாம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் புஞ்சை நிலங்களாக இருந்தாலும் 3 போகமும் உணவு தானியங்கள், பருப்பு தானியங்கள், காய்கறிகள் போன்றவை விளையக்கூடிய பகுதி என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, புஞ்சை நிலங்கள் என்பதற்காக அவற்றையெல்லாம் நாம் waste land என்று நினைக்கக்கூடாது. ஆனால், அதே சமயத்தில் தரிசு நிலங்கள் இருக்கின்றன. தரிசு நிலங்கள் இருக்கின்றன என்று சொல்கிறோம். இன்னும் பச்சையாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் இன்றைக்கு மத்திய அமைச்சராக இருக்கக்கூடிய திரு. அழகிரி உள்ளிட்ட பினாமி நபர்களால் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் நீங்கள் எடுப்பதற்கு என்ன தயக்கம் இந்த ஆட்சியிலே? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பினாமியின்கீழ் அந்த நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களைக் கையகப்படுத்தி எடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 2-50*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்லுகின்றார். மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், எதற்கும் நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்கியது கிடையாது என்பதை நீங்கள் நன்றாக முதலிலே புரிந்துகொள்ள வேண்டும். அவருடைய மகன் இன்றையதினம் கிரானைட்டிலே ஊழல் செய்த காரணத்தினாலேதான் ஓடி ஒளிந்துகொண்டிருக்கின்றார் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி இருக்கின்றபோது அழகிரியைக் கண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் அங்கே மதுரையில் நடந்த கூட்டத்திலேயே சொல்லியிருக்கின்றார்கள், எந்தச் சூழ்நிலையிலும் தவறு செய்தவர்கள்மீது கடுமையான



நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதற்குப் பின்னால், மீண்டும் உறுப்பினர் அவர்கள் அதைச் சொல்வது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்பதைச் சொல்லி, இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இது நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய கவலையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே நிச்சயமாக தெரிவிக்கப்படும். உங்களைவிட அதிகமாக விவசாயிகள் பற்றி அம்மா அவர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நேற்றையதினம் மின்சாரத்தைப் பற்றிச் சொன்னார்களே, ஒரு முறை அல்ல, 100 முறை அல்ல, ஒரு இலட்சம் முறை நான் கவலைப்படுகிறேன் என்று சொன்னார்களே, அதைப்போலத்தான் விவசாயிகள் பிரச்சினையிலும் அம்மா அவர்கள் அது எந்தவிதமான பிரச்சினையாக இருந்தாலும் மிகவும் கவலையோடு இருப்பார்கள். ஆக, நிச்சயமாக இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து, உங்களுடைய போராட்டம் உண்மையான போராட்டம், உண்மையாக மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்று சொன்னால் அது அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அமைச்சர் அழகிரி பினாமியாக வாங்கிப் போட்டிருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். அப்படியிருந்தால் அதுவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, சிப்காட் நிலங்களை எடுப்பதற்கு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யாராக இருந்தாலும்கூட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருப்பதற்கு நன்றி. வேளாண்மைத் துறையை மறு சீராய்வு

[திரு. எம். ஆறுமுகம்] [2012 நவம்பர் 1

செய்ய தமிழக சட்டப் பேரவையில் அறிவிப்பு செய்ததன் அடிப்படையில் மறு சீரமைப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வேளாண்மை வேதியியல் பிரிவை மீண்டும் தனியாக ஏற்படுத்தி அதை ஒரு இயக்கமாக அமைத்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, தீபாவளிப் பண்டிகை நெருங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் சென்னையில் இருக்கக்கூடியவர்கள் மற்றும் பிற இடங்களிலிருந்து சொந்த ஊருக்குச் செல்லக்கூடியவர்கள் நெருக்கடியில் இருக்கக்கூடிய இந்த நேரத்தில் மத்திய அரசு கூடுதலான இரயில்களை விட வேண்டுமென்று மாநில அரசாங்கம் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, நான் விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்புக்கு நன்றி. 2013-ல் தமிழகம் மின் மிகை மாநிலமாகும் என்ற அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தீபாவளி பண்டிகையன்று சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் துறையினுடைய மேலாண்மை இயக்குநர்கள், பொது மேலாளர்கள் எல்லாம் பணியிலே அமர்த்தப்பட்டு பேருந்து பயணச் சீட்டைப் பெற்றவர்கள் காலதாமதமாக வந்தாலும்கூட அதற்கு அடுத்த பேருந்திலே அவர்களை வழியனுப்பி வைத்து, காலை 5 மணிவரை இருக்கின்ற கூட்ட நெரிசல் என்பது நள்ளிரவு 12-1/2 மணிக்கே மக்கள் அந்தந்த ஊர்களுக்குச் செல்வதற்குண்டான சிறப்புப் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டு, மக்கள் எந்தவிதமான சிரமமுமின்றி அவர்களுடைய இல்லங்களுக்குச் சென்றார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகையன்று எந்தெந்த ஊர்களுக்கு, எவ்வளவு கூடுதல்



2012 நவம்பர் 1] [திரு. வி. செந்தில்பாலாஜி]

பேருந்துகள் தேவையோ, எந்தெந்தப் பயணிகள் கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு வந்து உடனடியாகப் பயணச் சீட்டைக் கேட்டுப் பெறுகிறார்களோ அவர்கள் அனைவருக்கும் கூடுதல் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்தச் சேவை மிகச் சிறப்பாக நடைபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-ல் தமிழகம் மின் மிகை மாநிலமாகும் என்று அரசு அறிவித்திருக்கிறது. இது ஒரு நீண்டகாலத் தீர்வு. அதில் ஐயமில்லை. ஆனால், எந்தப் பிரச்சினைக்கும் ஒரு உடனடித் தீர்வு என்ற ஒரு தேவை இருக்கிறது. நான் நேற்றே பேசுகிறபோது சொன்னேன். ஏற்கெனவே வந்திருக்கிற ஆர்டர்கள் உரிய நேரத்தில் தரப்படாததால் சில தொழில்கள் வெளி மாநிலங்களுக்கு போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே, சிறு, குறு, நடுத்தரத் தொழில்களுக்கு ஒரு 500 கோடி ரூபாய் துணை மானியக் கோரிக்கையிலே ஒதுக்கி டீசல் மானியம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மின் வாரியத்திற்கு ரூ.2,000 கோடி ஒதுக்கியிருக்கிற இந்த அரசு இதையும் செய்யும் என்று நான் எதிர்பார்க்கிறேன். தொழிலுக்கும், தொழில் ஆர்டர் வெளியே போகாமல் இருப்பதற்கும் இது அவசியம் என்று நான் வலியுறுத்துகிறேன்.

மத்திய அரசினுடைய டீசல் விலையேற்றத்தால் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்டிருக்கிற சுமையைத் தவிர்ப்பதற்காக 200 கோடி ரூபாய் இந்த துணை நிதி நிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது மிக நல்ல நடவடிக்கை. ஆனால், அதேநேரத்தில் போக்குவரத்துக் கழகங்கள் ஏற்கெனவே சாதாரணப் பேருந்துகளாக இருந்தவற்றை பழையபடி P.P., Express, L.S.S. என்று மாற்றி கூடுதல் கட்டணம் வசூலிக்கிறார்கள் என்கிற புகார்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. தேனியில் இப்பொழுது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-55

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்த வழித்தடங்களில், எந்தப் பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டினால் நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பேருந்தினுடைய நடத்துனர் மீதும், அந்தத் துறையினுடைய அதிகாரிகள் மீதும் நிச்சயம் நடவடிக்கை எடுக்கும். ஏனென்று சொன்னால், தங்கள் அருகில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் பல்வேறு முறை இங்கே கடந்த 5 ஆண்டுகாலமும் சென்னையில் Express, P.P என்றெல்லாம் இருப்பதை வலியுறுத்திச் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிகப்படியான சாதாரணப் பேருந்துகளை இயக்கவேண்டுமென்று உத்தரவிட்டு தற்பொழுது 51 சதவிகித அளவுக்கு பேருந்துகள் சாதாரணக் கட்டணப் பேருந்துகளாக இயக்கப்பட்டு வருகின்றன. எந்த வழித் தடங்களில், எந்தப் பேருந்து எண் என்பதை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால் நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** தேனியில் இப்படி மாற்றப்பட்டிருக்கிற பேருந்துகளைச் சுட்டிக்காட்டி 5 நாட்களாக உண்ணாவிரதப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. நேற்று எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர் அவர்கள் தங்களிடம் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார். சென்னை மாநகரத்தில் சாதாரண பேருந்துகளின் எண்ணிக்கை குறைகிறது என்கிற புகார் மக்களிடத்திலிருந்து வந்துகொண்டிருக்கிறது. நான் நாளைக்கு உங்களிடத்தில் அந்த ஆதாரத்தைத் தருகிறேன் என்று இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை அகற்றி அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுகிறபோது, ஏற்கெனவே இருக்கிற குடிசைகளைக் காலி செய்யச் சொல்கிறோம். ஓராண்டுக்குப் பிறகு மீண்டும் அவர்கள் அங்கு வந்து மீண்டும் குடியேறலாம் என்று சொல்கிறோம். காலி செய்கிறபோது, அவர்களுக்கு வெறும் 500 ரூபாய்தான் தரப்படுகிறது. அவர்களுடைய பொருட்களை அகற்றுவதற்கு வண்டி



வாடகைக்குக்கூட அது பயன்படாது. இது 30 ஆண்டுகளுக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே அவர்களுக்கு குறைந்தபட்சம் ரூ.5,000 தரவேண்டும். இன்றுகூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு ஊழியர்களுக்கு சலுகை 500 ரூபாய் என்று இருந்ததை 2,000 ரூபாய் என அறிவித்தார்கள்.

அடுத்து, மருந்து கொள்முதல் கழகத்தின் மூலமாக மதுரை மருத்துவமனையில் டெண்டர் விடப்பட்ட பிரச்சினையில் அடக்க விலையிலே 3 மடங்கு (300 சதம்) மார்க்கெட் விலைக்குமேல் வைத்து அவர்கள் டெண்டர் விட்டார்கள். நாங்கள் புகார் செய்தோம். எங்களுடைய உறுப்பினர் திரு. அண்ணாதுரை அதற்காகப் போராடினார். உடனே அரசு தலையிட்டு அந்த டெண்டரை இரத்து செய்துவிட்டது. ஆனால், அதற்குக் காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்கிற ஒரு குறை இருக்கிறது. அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது ஒன்று. இதர மாவட்டங்களிலும் இதேபோன்ற முறைகேடு இருக்கின்றதா என்றும் நாம் விழிப்போடு இருந்து பார்த்தால் அரசுக்குப் பணம் மிச்சப்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்பொழுது தொழிற்சங்கங்கள் அமைப்பதற்காக தொழிற்சாலைகளிலே கடுமையான பழிவாங்கல்கள் இருக்கின்றன. வேலை நீக்கங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஹுண்டாய் கார் தொழிற்சாலை நிறுவனத்தில் வேலை நிறுத்தம் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்றுகூட முதல்வர் அவர்கள் பல தொழிற்சாலைகள் வரும் என்ற அறிவிப்பைச் செய்தார்கள். தொழிற்சாலைகள் வரவேண்டும், நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், தொழிற்சாலைகள் தொழிலாளர்களுக்கு சிறைச்சாலை ஆகிவிடக்கூடாது என்கிற அந்தக் கவலையோடும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். தொழிலாளர் துறை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். நல வாரியங்களைப் பொறுத்தவரையிலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஹுண்டாய் தொழிற்சாலையைப்பற்றிச் சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்கின்ற 2,007 தொழிலாளர்களில்

*1,300 பேர் ஒன்றுபட்ட ஹுண்டாய் தொழிலாளர் நலச் சங்கம் என்று வைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தின் சார்பாக 18 (1) ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. ஆனால் 200 தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத்தான் சுட்டிக்காட்டி பேசிக்கொண்டிருக்கிறார்கள். மிகையான தொழிலாளர்கள் ஒன்றுபட்டு அந்த செட்டில்மென்ட்டுக்கு சம்மதித்துவிட்டார்கள். ஆனால், 200 தொழிலாளர்கள் மட்டும் அதற்கு சம்மதிக்காமல் பிரச்சினை நடந்து கொண்டிருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள் என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணத்தைக் காட்டி கையெழுத்தை வாங்குவதை நம்பி ஒரு பிரச்சினையைத் தீர்வுக்குக் கொண்டு வரமுடியாது என்று நான் சொல்லவிரும்புகிறேன். எங்காவது* Significant number of workers *பிரச்சினைகளிருந்தால் அரசு தலையிட்டு தீர்க்கவேண்டுமென்பது தொழிற்சாலை சட்டம். மெஜாரிட்டி, மைனாரிட்டி பிரச்சினை என்று அந்தச் சட்டத்தில் கிடையாது. ஆகவே எங்களுக்கு உதவவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*நல வாரியங்களிலே உறுப்பினர்களாக இருக்கின்ற முறைசாராத் தொழிலாளர்கள் மூன்று முறை, நான்கு முறை ஆஜராக வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒவ்வொரு முறையும் 100 ரூபாய், 200 ரூபாய் செலவழித்து வர இயலாது. ஒரேயொரு முறை ஆஜர் ஆகவேண்டுமென்று நீங்கள் திருத்தம் கொண்டு வாருங்கள் என்றுதான் நல வாரியத்தை நாங்கள் கேட்கிறோம். அப்படிச் செய்தால் நல வாரியங்கள் முடங்காமல் இருக்கும், இல்லாவிட்டால் நல வாரியங்கள் முடங்கிவிடும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்பொழுது*



*ஒரு முறை கூப்பிடுகிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது பேசிய மாண்புமிகு உறுப்பினர் பேசியபோது இரண்டு முறை, மூன்று முறை என்று சொன்னார்கள். அது தவறு. ஒரு முறை கூப்பிட்டு அவர்கள் வந்து பதிவு செய்யவேண்டுமென்பது கட்டாயத்தில் இருக்கிறது. ஆக, அந்த அடிப்படையில் ஒரு முறைதான் நாம் அவர்களை அழைக்கின்றோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முறைதான் என்று அமலுக்கு வந்துவிட்டால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அடுத்து, கிரானைட் ஊழலிலே கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் தனியார் நிறுவனங்களே இந்த மினரல் மற்றும் கனிம தொழிலில் இருக்கக்கூடாது. இப்பொழுது டெல்லியிலே கோல்-பிளாக் ஊழலிலே தனியாருக்குக் கொடுத்ததனுடைய விளைவு எவ்வளவு? எத்தனை இலட்சம், ஆயிரம் கோடிகள் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது என்று நாம் பார்க்கிறோம். ஆகவே, தனியாரை அறவே இந்த கனிமங்களில் இருந்து அகற்றி டாமின் நிறுவனத்தின் மூலமாக மட்டும்தான் கனிமங்களை எடுக்கவேண்டும். அவற்றை உரிய விலைக்கு விற்பனை செய்யவேண்டும். அதனுடைய மிகைப் பணம் முழுவதும் அரசுக்கும், சமூகத்திற்கும் வரவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். இப்பொழுது கையகப்படுத்தப்பட்டிருக்கிற கிரானைட் கற்களை விற்று அந்தப் பணத்தைக்கொண்டு நாம் பல திட்டங்களைச் செயல்படுத்தமுடியும். குறிப்பாக, பஸ் கட்டணம், மின் கட்டணம், பால் விலை உயர்வு போன்றவற்றை நாம் குறைக்கமுடியும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 3-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு பேசிக் கொண்டிருக்கிறார்கள். காரணம், அங்கே ஆய்வுப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சட்ட விரோதமாக எவ்வளவு கற்கள் எடுக்கப்பட்டன என்பதற்கான ஆய்வு அறிக்கை இன்னும் வரவில்லை. ஆய்வு அறிக்கை வந்ததற்குப் பிறகுதான் அதுகுறித்து முடிவெடுக்க முடியும். அதை எடுத்து விற்று, பால் கட்டணத்தையும், பஸ் கட்டணத்தையும் உயர்த்தியதைக் குறைக்க வேண்டுமென்று சொன்னதால்தான் அதைச் சொன்னேன்.

மற்றொன்று, டாமின் நிறுவனமே ஏற்று நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அதைப் பொறுத்தவரை, ஆய்வு அறிக்கையெல்லாம் வந்ததற்குப் பின்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக அதற்கு ஒரு பாலிசியை வெளியிடும். அப்பொழுது அதைப்பற்றிச் சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரானைட் விஷயத்தில் அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை சரியானது, பாராட்டுதலுக்குரியது. ஆனால், அதில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் வேலையில்லாமல் நீண்டகாலம் பட்டினியாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் ஏற்கெனவே நான் சொன்னேன். ஆய்வுப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆய்வுப் பணி முடிந்ததற்குப் பின்னால்தான் ஒரு நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொல்வீர்கள். நடவடிக்கை எடுத்தால், உடனடியாக தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள்,



அவர்களுக்கு உடனடியாக ஏதாவது வழங்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். தனியாருடைய கிரானைட் தொழிற்சாலையில் அரசு எப்படி அவர்களுக்கு உதவி வழங்க முடியும் என்பதை நீங்கள் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களையும்தான் சேர்த்துப் பார்க்க வேண்டும். தொழிலாளர்களை விட்டுவிட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

அதேபோல், இந்த கிரானைட் பிரச்சினையிலே **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால் இதன்மீது கருத்துச் சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ** மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வேகமாக செயல்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நடவடிக்கைகளில் ஏதாவது தொய்வு இருந்தால் நீங்கள் சொல்லலாம். நடவடிக்கை வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பலபேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்தே நீங்கள் ** வேண்டுமென்று கேட்பது எதற்காக என்பது புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் அடுத்த விஷயத்திற்குப் போகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** இந்த விவரங்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் பேசுகிறபோது ** இங்கே பேசினார். விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விசாரணை இன்னும் முழுமை பெறவில்லை. அதற்குள் ** என்று சித்தரிக்க வேண்டாம். எனவே, அந்தக் குறிப்புகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **சம்பந்தமாகப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சவுந்தரராசன் அவர்கள் ** இப்பொழுது இரண்டு, மூன்று வருடங்கள் ஆகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு நிமிடம் பொறுங்கள். ** குறித்துப் பேசிய அத்தனை பிரச்சினைகளும், அது சம்பந்தப்பட்ட வழக்கு உயர் நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினால் அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் அது நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



*பிற்பகல் 3-05*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வழிப்பறிகள், ஆதாயக் கொலைகள், கூலிப்படைகளினுடைய அட்டூழியம் அதிகரித்திருக்கிறது, நகரங்களில் முதியோரும், தனியாக வாழும் பெண்களும் நிம்மதியாக இருக்கமுடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காவல் துறையினுடைய குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் போதவில்லை. ஆகவே, கடுமையாக இதிலே அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வைக்கவேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

காவிரிப் பிரச்சினையில் அரசு எடுத்துக்கொண்டிருக்கிற எல்லா நடவடிக்கைகளையும் நான் வரவேற்கிறேன். நான் அந்த நடவடிக்கைகளோடு சேர்த்து அனைத்துக் கட்சி தூதுக் குழு ஒன்று பிரதமரைச் சந்தித்து C.R.A. முடிவை அமல்படுத்த மறுக்கிற கர்நாடக அரசுக்கு எதிராக, நிர்பந்தம் கொடுத்து அமல்படுத்த வலியுறுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே எந்தெந்தக் கட்சிகள் இந்தப் பிரச்சினையிலே ஒத்து வருகின்றன என்பதும் நமக்குப் புரியும். கர்நாடகத்திலே அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக உள்ளன. எங்களுடைய கட்சியைத் தவிர. சட்டப்படி என்ன நடவடிக்கையோ, C.R.A. என்ன சொல்கிறதோ, உச்ச நீதிமன்றம் என்ன சொல்கிறதோ, அதன்படி செயல்படவேண்டும் என்று சொன்ன ஒரே கட்சி எங்களுடைய கட்சிதான். அதனால், வெறியர்களால் ஏச்சுக்கும், பேச்சுக்கும் அங்கே ஆளாகிக் கொண்டிருக்கிறது. மீதிக் கட்சிகள் இன்றைக்கு ஒன்றாகச் சேர்ந்து பிரச்சினைகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நாம் இங்கே ஒரு அனைத்துக் கட்சி தூதுக் குழுவை அமைத்து டில்லி செல்லவேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

சில்லறை விற்பனையிலே அந்நிய முதலீட்டை அனுமதிக்க மாட்டேன் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கு ஒரு தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து நிறைவேற்றுவது உதவிகரமாக இருக்கும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

ஒட்டன்சத்திரம் தும்மிச்சம்பட்டியிலே தலித்துகளினுடைய நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அது குறித்து ஒரு G.O. போடப்பட்டது. ஆனால் அந்த G.O. இப்போது

காலாவதியாகிவிட்டது. ஆகவே, அந்த அரசாணையை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நகர்ப்புறங்களிலே பட்டா வழங்குவதிலிருந்த இடையூறுகளைப் போக்கக்கூடிய முறையில் ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த அரசாணை இப்போது காலாவதியாகிவிட்டது. இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு அந்த அரசாணையை நீட்டித்தால்தான் நாம் அந்தப் பட்டா வழங்குகிற பிரச்சினையை ஒரு முடிவிற்குக் கொண்டுவர முடியும். ஆகவே, அரசு அதுகுறித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெங்கு ஜுரப் பிரச்சினையிலே, ஏற்கெனவே மலேரியா இருந்த காலத்தில் எப்படி N.M.E.P. என்கிற ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டதோ அதைப்போல, கொசுவை அறவே ஒழிப்பதற்கு ஒரு சில ஆண்டுகள் தொடர்ந்து வீடு வீடாகச் சென்று N.M.E.P. திட்டக் காலத்தில் செய்யப்பட்டது போல, ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வரவேண்டும். சில நூறு கோடி ரூபாய் செலவானாலுங்கூட நமக்கு மிகப்பெரிய நிம்மதியும், நோயற்ற ஒரு வாழ்வும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Malaria Eradication Programme என்பது தேசிய அரசு சம்பந்தப்பட்டது. தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல அது. ஆனால், இந்த டெங்கு காய்ச்சலுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு யூனியனுக்கு 10 பேர் வீதம் 385 யூனியனுக்கு 3,850 பேர் மஸ்தூர் மட்டும் நியமித்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்னும் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வீர்கள்?

**திரு. அ. சவுந்தரராசன்:** நீங்கள் அடுத்து சொல்வதற்குள் முடித்துவிடுகிறேன். நீங்கள் எல்லாருக்கும் எவ்வளவு நேரம் கொடுத்தீர்கள் என்பதை நானும் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறேன். அமெரிக்காவில் தற்போது பெரிய, பெரிய தனியார் அடமான வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் எல்லாம் திவாலாகி திண்டாடிக் கொண்டிருக்கின்றன. இதை அறிந்த பிறகும், உணர்ந்த



பிறகும், மத்திய அரசு இந்தியாவிலே எல்லாவற்றிலும் தனியார்மயத்தைப் புகுத்துவோம், காப்பீட்டுத் துறையிலே அந்நிய மூலதனத்தைப் புகுத்துவோம், ஓய்வூதியத் துறையிலே F.D.I.-யைப் புகுத்துவோம் என்ற முறையில் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது, அறிவிப்புகளைச் செய்தவண்ணம் இருக்கிறது. சில்லரை வர்த்தகத்திலும் அந்நியர் என்று அறிவிப்பைச் செய்கிறார்கள். இவை அனைத்தும் இந்தியாவில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளையும், சிக்கல்களையும் உண்டாக்கும். ஆகவே, இந்த நவீன தாராளமயப் பிரச்சினைகளின்மீது மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கையை தமிழக அரசு ஆட்சேபிக்கிறது என்கிற வகையிலே ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே நாம் நிறைவேற்றுவது அவசியம் என்று கருதுகிறேன். மத்திய அரசாங்கத்தினுடைய இந்தப் போக்குகளுக்கு எதிராக இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட பல விஷயங்களைச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். ஆகவே, இந்த விஷயத்தில் ஒரு நடவடிக்கை தேவை. ஆகவே, ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசைப் பற்றி குறை சொல்கிறார். எப்போது பார்த்தாலும் குறை சொல்லிக்கொண்டு இருக்கிறார். அவருடைய இயக்கம் எப்போதும் போராடிக் கொண்டிருக்கிறது. ஆனால், அது பிரயோஜனம் இல்லாத போராட்டமாக இருக்கிறது. சுதந்திரத்திற்குப் பிறகு அவர்கள் போராடாத போராட்டமே இல்லை. ஆனால், எந்தத் திட்டத்தை மத்திய அரசு கொண்டுவருகிறதோ அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். நல்ல திட்டத்தையும் எதிர்க்கிறார்கள். கம்ப்யூட்டர் கொண்டு வந்தபோதும்கூட எதிர்த்தார்கள். இன்று எந்த நல்ல திட்டத்தை மத்திய அரசு மக்களுக்காகக் கொண்டுவருகிறதோ அதற்குப் போராட்டத்தை நடத்துகிறார்கள், எதிர்க்கிறார்கள். ஆனால், அது பிரயோஜனப்படுகிறதா என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதான் உங்கள் உறுப்பினர் பேசி முடித்தார். ஒரு கட்சியிலே இரண்டு பேருக்கு

*எப்படி வாய்ப்புத் தருவது? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். திருமதி விஜயதரணி அவர்கள்.*

*பிற்பகல் 3-10*

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில்லரை வர்த்தகத்தில் அன்னிய முதலீடு குறித்து பேசினார்கள். எந்தெந்த மாநிலத்திற்கு வேண்டுமோ அவர்கள் எடுத்துக்கொள்ளலாம். வேண்டாமென்று சொல்பவர்கள் விட்டுவிடலாம் என்ற ஒரு option-ம் அதிலே இருக்கிறது. ஆகையால், அதைப்பற்றி இவர் அதிகம் வருத்தப்பட வேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டகம் முதலில் தலையைத்தான் விடும். அதற்குப் பிறகு மொத்த கொட்டகையும் காலியாகும். இது காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியும். அதைத்தான் அவர்கள் இப்போது செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் பேசுகின்றபொழுது, நாங்கள் போராடுவதைப் பற்றிச் சொன்னார். சுதந்திரத்தையே நாங்கள்தான் வாங்கிக் கொடுத்தோம் என்று சொல்லிகொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சி, இப்போது சுதந்திரத்தை அங்குலம், அங்குலமாக விலை பேசி விற்றுக்கொண்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அயல் நாடுகளிலிருந்து எல்லா அயல் நாட்டு மூலதனத்தையும், தனியார் கம்பெனிகளையும் இங்கே கொண்டு வந்து நுழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்லிக்கொள்கிறபடி சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த நாங்களே, அதை விற்றுவிட்டுப் போய்விடுகிறோம் என்கிற முடிவோடு அவர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் இப்போதைய நடவடிக்கை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதைத்தான் இன்றைக்கு நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு விஷயத்திலும் பார்த்துக்கொண்டிருக்கிறது. நாங்களும் போராடிக் கொண்டிருக்கிறோம். சுதந்திரத்திற்காக 200 ஆண்டுகள் போராடினோம் என்பதை மறக்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*



**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் மட்டும் சுதந்திரத்திற்காகப் போராடவில்லை. இந்தியத் துணைக் கண்டத்திலே அன்று எவ்வளவு பேர் இருந்தார்களோ, அத்தனைபேரும் சுதந்திரத்திற்காகப் போராடினார்கள். அவர்கள் முன்னிலையில் நின்று தாங்கள் எடுத்த--காந்தியே காங்கிரசைக் கலைத்துவிட வேண்டுமென்று சொன்னார். அத்தகைய நிலைமை இருந்தது. அதனால், காங்கிரசுக்கு அந்த உரிமை முழுவதையும் தயவுசெய்து தோழர் கொடுத்துவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கோரிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் இப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டு வந்து உட்கார்ந்து கொண்டு பேசிக்கொண்டிருக்கிறார். நாங்களும் சாப்பிடப் போக வேண்டும். ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோடர்கள், ஆதிவாசி மக்கள், மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதியிலே, வனப் பாதுகாப்புச் சட்டத்தை மீறி அவர்களுக்கு சில பாதிப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. கற்பூர மரத்தை விதைத்து, யூக்கலிப்டஸ் மரத்தை அங்கே விதைத்து அவர்களுடைய வாழ்வில் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு தீர்வு வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Teachers' eligibility test-ஐப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அதற்கெல்லாம் பதில்

சொல்லவில்லை. நீங்கள் சொன்ன முழுவதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அதற்குப் பிறகு என்னுடைய ஒரே ஒரு வேண்டுகோள். இன்று கேரளத்தில் இவ்வளவுக்குப் பிறகும் ஒருவரை வேலைக்கு எடுத்துவிட்டு, ஐந்தாண்டுக்குள்ளாக அவர் அந்தத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். இல்லாவிட்டால் அவருக்கு வேலை போய்விடும் என்று அரசாணை போட்டு அமலாகிக்கொண்டிருக்கிறது. அதை இங்கே அமல்படுத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். அமல்படுத்தினால் இந்த மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்கிற ஒரு ஆலோசனையை மட்டும் நான் கூற விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் பேருந்துக் கட்டணத்தினுடைய விவரத்தை பற்றி ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்தார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நேற்று ஒரு கடிதத்தினுடைய நகல் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட இரண்டு மணி நேரத்திற்குள் துறையின் மேலாண்மை இயக்குநரிடத்திலிருந்து பெறப்பட்ட பதிலை உங்களிடத்தில் எடுத்து சொல்கிறேன்.

திண்டுக்கல் மண்டலம் மூலம் தேனி மாவட்டத்தில் தற்பொழுது 7 கிளைகள் வாயிலாக 424 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தமிழக அரசு 18-11-2011 அன்று முதல் அறிவிக்கப்பட்ட புதிய பேருந்துக் கட்டண உயர்விற்குப்பின், அரசு வழிகாட்டுதலின்படி, ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்த சாதாரண, LSS., விரைவு மற்றும் UD பேருந்துகளுக்கு அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டண விகிதத்தின்படியே கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகின்றன என்பதையும், கூடுதல் கட்டணம் ஏதும் தேனி மாவட்டத்தில் வசூலிக்கப்படவில்லை என்பதையும் 31-10-2012 அன்று கடிதத்தின் நகல் வழங்கப்பட்டவுடன் மேலாண்மை இயக்குநர் தன்னுடைய அறிக்கையில் நேற்றே தெரிவித்திருக்கின்றார்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்வது, எந்தப் பேருந்தில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதை அந்தப் பேருந்தின் எண்ணைக் குறிப்பிட்டு எழுத்துமூலம்



தெரிவித்தால், நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பேருந்தினுடைய நடத்துநர் அல்லது துறையினுடைய அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், உரையை முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அதுசம்பந்தமாக நாங்களும் விசாரித்து, விவரம் இருக்குமானால், உங்களுக்குச் சொல்கிறோம். இன்று ஐந்தாவது நாளாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்ற தகவலை நான் சொல்கிறேன். இது உண்மை என்றால், அதை நான் திரும்பப் பெறச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ணாவிரதம் என்ற கருத்தைச் சொன்னீர்கள். இதுவரை துறையினுடைய அதிகாரிகளுக்கோ, எங்களுக்கோ எந்தவித விவரங்களும் வரப்பெறவில்லை. இந்தப் பேருந்தில், இந்தக் கட்டணம் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது என்று எழுத்துமூலம் கொடுக்கப்படவில்லை. யாருக்கும் முன்னறிவிப்புக் கொடுக்காமல், அந்தத் துறையினுடைய மேலாண்மை இயக்குநருக்குக்கூட அந்தக் கடிதத்தை வழங்காமல், உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று சொன்னால், எப்படி எந்தப் பேருந்தில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து தெரிவிக்க வேண்டும். நிச்சயமாக அப்படி இல்லையென்று மேலாண்மை இயக்குநர்கூடத் தெரிவித்திருக்கிறார். நாங்களும் விசாரித்திருக்கிறோம். எந்த இடத்திலும் கூடுதலாக பேருந்துக் கட்டணங்கள் வசூலிக்கப்படவில்லை. 18-11-2011 அன்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் வழிகாட்டுதலின்படி என்ன கட்டணம் நிர்ணயிக்கப்பட்டதோ, அதே கட்டணம்தான் வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, எதையும் எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தப் பேருந்து என்பதைத் தெரிவிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

*பிற்பகல் 3-15*

**திரு. அ. சவுந்தரராசன்:** நன்றி. அடுத்து, தென் மாவட்ட கலவரப் பிரச்சினையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அங்கே கலவரம் என்ற வார்த்தையெல்லாம் வேண்டாமென்று சொன்னார்கள். அந்தக் கலவரம் இப்போது அடங்கியிருக்கிறது. இதுகுறித்து ஒரு விசாரணை நடத்தி, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதற்குப் பின்னால் இருக்கிற சூழ்ச்சிகளையும், சூதுகளையும், வாதுகளையும் நாம் கண்டுபிடித்தே ஆகவேண்டும். இது தொடர்ந்து நடக்கக்கூடாது. ஆகவே, அதற்கு ஒரு உயர்மட்ட விசாரணைக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலே கள்ளச்சாராயத்தின் பாதிப்புகள் குறித்து விளம்பரம் செய்வதற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. கள்ளச்சாராயம், நல்ல சாராயம் என்கிற பிரச்சினையெல்லாம் இல்லை. கள்ளச்சாராயத்தினுடைய கொடுமைகளை அகற்றுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுங்கள். அதே நேரத்தில், டாஸ்மாக் சாராயத்தைக் குடித்தாலும் என்ன நடக்கும் என்று அந்த பாட்டிலில் எழுதி வைத்தால் போதாது. அதற்கான விரிவான விளம்பரங்களையும், விரிவான பிரச்சாரங்களையும் நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்து, இளைஞர்களைக் காப்பாற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அதற்கென்று சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கென்று சட்டப்படியான நடவடிக்கைகளை, கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, இன்றைக்குக் கள்ளச்சாராயத்தை ஒழித்து வருகிறது. ஆனால், அதே நேரத்திலே, டாஸ்மாக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்ற இந்த மதுபானங்களினால்கூட என்ன தீங்கு



ஏற்படும் என்பது குறித்தெல்லாம் விரிவாக மக்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறோம். எங்கெல்லாம் மது விற்பனை செய்யப்படுகின்றதோ, அந்த இடங்களில் எல்லாம் 'குடி குடியைக் கெடுக்கும்' என்று எச்சரிக்கை பலகைகள் பொருத்தப்படுகின்றன. அதுமட்டுமல்ல; ஆங்காங்கு உள்ள மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, சிறப்பு விளம்பர முயற்சிகளை எல்லாம் எடுத்து, விளம்பரப்படுத்துவதோடு, குடியின் தீமைகளை மக்களிடம் விளக்குவதற்காக பல்வேறு விழிப்புணர்வு முகாம்களையெல்லாம் இன்றைக்கும் ஒரு பிரச்சார உத்தியாகவே அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை நமது மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. என்னுடைய உரையை இத்துடன் நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மிக்க நன்றி. (சிரிப்பு) மிக்க நன்றி.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(2-11-2012)* வெள்ளிக்கிழமை காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *3-17* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*19. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*20. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராஃபைட் நிறுவனத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

[2012 நவம்பர் 1

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*18. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2012-2013)*

*19. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*

*20. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*

*21. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*

*22. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)*